வீரகேசரி
பிரசுரம்

# பொன்னம்மாளின் பிள்ளைகள்

பொ. பத்மநாதன்



வாசகர்
பரிசுக்கூப்பன்

வீரகேசரி பிரசுரம்

59

பொன்னம்மாளின்
பிள்ளைகள்

பெயர் ..............................
விலாசம் ..............................
..............................
..............................
கையொப்பம் ..............................

2156

PONNAMMALIN PILLAIKAL
Written by: **P. Pathmanathan**
Prince Street,
Matale.

FIRST EDITION
JUNE – 1979

**PRICE Rs. 5-50**


*COPYRIGHTS*
RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI
PIRASURAM **66**

**Published by**
VIRAKESARI
P.O. Box 160, COLOMBO.

Sole Distributors:
*Express Newspapers (Ceylon) Ltd.*
185, GRANDPASS ROAD,
COLOMBO - 14.

# முன்னுரை



இக்கதையின் நாயகி பல ஆண்டுகளுக்கு முன்பே என் மனதினில் ஒரு இலட்சியப் பெண்ணாக ஜெனித்தவள். ஆனால், சில காலத்துக்கு முன்பு மட்டக்களப்புக்குப் போய் இரு வாரங்கள் தொடர்ச்சியாக இருக்க நேரிட்டபோது தான் உறக்க நிலையில் இருக்கும் கூட்டுப்புழு, அழகிய வண்ணத்துப் பூச்சியாக மாறுவது போல இவளின் வாழ்க்கையையும் என்னால் முழுமையாக உருவகிக்க முடிந்தது.

இரவின் ஆழ்ந்த மௌனமான சூழ்நிலையில் கல்லடிப் பாலத்தின்மேல் நிற்பது எனது விருப்பமான பொழுது போக்கு. அந்தச் சமயத்தில் முழுமையாக எனது மனதை ஆக்கிரமித்துக்கொண்டு நிற்பாள் இவள். தன்னை அழித்தழித்து இனிமையான சுகத்தைத் தரும் ஒரு உயர்தர ஊதுவத்தியைப் போல் தனது குடும்பத்திற்காகவே வாழ்ந்த இவளை எண்ணி நான் அடைந்த பெருமையும், ஆனந்தமும் கடைசியாக வடித்த கண்ணீருமே இந்நாவலாக உருவகித்திருக்கிறது.

இந்நாவல் எனது வழக்கமான பாணிக்குச் சற்று மாறுபட்டது. வாசகர்களாகிய நீங்கள் காட்டும் உற்சாகமும், எழுதப்போகும் விமர்சனங்களும்தான் எனது

அடுத்த நாவலுக்கு முன்னோடியாக அமையும். அந்தப் பொறுப்பை பணிவன்புடன் உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்

முடிவாக, இந்நாவலை வெளியிடும் வீரகேசரி ஸ்தாபனத்தாருக்கு—குறிப்பாக அதன் நிர்வாக அதிகாரி திரு. எஸ். பாலச்சந்திரன் அவர்களுக்கு என் நன்றியும், வணக்கமும் என்றும் உரித்தாக இருக்கும்.

**பொ. பத்மநாதன்**

7, குமார வீதி,
மாத்தளை,
13-7-78.


அடுத்த வெளியீடு!

பல்லாயிரக்கணக்கான வாசகர்களின்
இதயங்களைக் கொள்ளைகொண்ட

"நெஞ்சில் ஓர் இரகசியம்"

நாவலின் தொடர்ச்சி—

கருணாசேன ஜயலத்
சிங்களத்தில் எழுதியது.

தம்பிஐயா தேவதாஸ்
தமிழில் மொழிபெயர்த்தது.

'இறைவன் வகுத்த வழி'

(சமூக நாவல்)

வீரகேசரி பிரசுரம் - 67

# பொன்னம்மாளின் பிள்ளைகள்

மார்கழி மாதக் குளிர் எலும்புக் குருத்துகளை உறைய வைத்தது. பாக்கியம் உடலைச் சிலிர்த்துக் கொண்டு திரும்பிப் படுக்க முயன்றாள். அவளால் முடியவில்லை. அவளின் வயிற்றுக்குக் குறுக்காகக் கிடந்த ஒரு காலும், கழுத்தை வளைத்தபடி கிடந்த ஒரு கையும் அவளை அசையவிடாமல் செய்தன. பக்கவாட்டாக அவளை அழுத்தியிருந்த உடலின் பருமனும், கழுத்தின் மீது கிடந்த கையின் திரட்சியும் அருகில் அப்படிக் கிடப்பது யாரென்பதைப் பார்க்காமலேயே அவளுக்குப் புரிய வைத்தன.

பாக்கியம் மெல்ல அந்தக் கைகளை வருடினாள். அவளின் மனம் ஒருவகை நிறைவுணர்ச்சியால் குறுகுறுத்தது. அவளையறியாமலேயே அவள் புன்னகை செய்து கொண்டாள். நினைக்கும்போதே பாக்கியத்துக்குப் பூரிப்பாக இருந்தது. சுந்தரி பிறந்ததிலிருந்து, வளர்ந்ததுவரை அவளின்மடியில்தான். அன்னை என்றொருத்தி அருகிலிருந்தாலும்அம்மாவென்று அழும்போது இந்த அக்காவின் முகத்தைப் பார்த்துத்தான் அவள் அழுதிருக்கிறாள். அவளின்

இன்பம், துன்பம், நிறைவு, குறைவு எல்லாவற்றையுமே பகிர்ந்துகொள்வது இந்த அக்காதான். ''டங்!'' வலது புறத்துச் சுவரிலிருந்த பழங்காலத்து மணிக்கூடு ஒரு தடவை ஒலித்து ஓய்ந்தது. அப்பாவின் ஞாபகமாக இருக்கும் பொருட்களில் முதன்மையானது இந்த மணிக்கூடு தான். பாக்கியம் நேரத்தைப் புரிந்துகொண்டாள்.

நடுச்சாமம் கடந்து மூன்றரை மணி.

இது ஓரிரு வருடப் பழக்கமல்ல. பதினொரு வருடப் பழக்கம். விடியற்காலை மூன்றரை மணிக்கு ஒரு சில நிமிஷங்களுக்கு முன்பாகவே அவளின் தூக்கம் கலைந்துவிடும்.

''முருகா!'' என மனதுக்குள் ஒரு வினாடி தியானித்துக்கொண்டாள் பாக்கியம். அதற்குமேல் ஆறுதலாக இருந்து கடவுளை நினைத்துக்கொள்ளக்கூட அவளுக்கு நேரமில்லை. இனி இரவுபத்து மணிக்கோ, பதினொரு மணிக்கோ படுக்கப் போகும் வரைக்கும் பம்பரமாகச் சுழல வேண்டும். இதுவும் அவளின் பதினொரு வருடப் பழக்கம்.

சுந்தரியின் உறக்கம் கலையாதவாறு மெல்ல அவளின் கையையும் காலையும் விலக்கிவிட்டு எழுந்த பாக்கியம் தலைப்புறமாக தணித்து வைக்கப்பட்டிருந்த அரிக்கன் லாந்தரைத் தூண்டினாள். வெளிச்சம் பரவியதன் பின்புதான் சுந்தரி படுத்திருந்த அலங்கோலநிலை அவளுக்குத் தெரிந்தது. தலையணையில் முகம் பதியக் குப்புறப் படுத்துக் கிடந்தாள் சுந்தரி. அவள் அணிந்திருந்த பாவாடை இடுப்போடு சுருண்டு அலங்கோலமாகக் கிடந்தது.

பாக்கியம் புன்னகையோடு தங்கையின் பாவாடையை இழுத்துச் சீராக்கி விட்டாள். ஏதோ முனகியபடி சுந்தரி நிமிர்ந்து படுத்துக்கொண்டாள். அரிக்கன் லாந்தரின் வெளிச்சம் இப்போது அவளின் முகத்தில் தெளிவாக விழுந்தது. ஓரிடத்தில் ஒரு வினாடிகூடத் தரித்து நிற்காமல் சிற்றெறும்புபோல் எந்நேரமும் பரபரத்துத் திரிகிறவள் அவள். கடந்த இரண்டு நாட்களாக ஏதோ சோம்

பல் பட்டுக்கொண்டிருக்கிறாள். முகமும் சோபை இழந்து விட்டாற்போல் வெளிறிவிட்டது.

பாக்கியம் கவலையோடு தங்கையின் முகத்தைப் பார்த்த படி லாந்தரைக் கையிலெடுத்துக்கொண்டு எழுந்தாள். வயதுக்கு மீறிய சுந்தரியின் உடல் வளர்ச்சியில் யாராவது 'கண்ணூறு' பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தில் இரவு அவள் படுக்கமுன்பு மூன்று மிளகாயை எடுத்து 'பார்வை' வேறு பார்த்து விட்டாள். 'இனி ஒரு நூல் கட்டிப் பார்க்கலாமோ?'

''அக்கா!'' என்று அடுத்துப் படுத்திருந்த மீனாட்சி கூப்பிட்டாள். ''நேரமாச்சா?''— சிறு சத்தம் கேட்டாலும் அவளுக்கு தூக்கம் கலைந்து விடும்.

''இல்லை. மூன்றரை மணிதான். நீ தூங்கு'' தூக்கக் கலக்கத்தோடு தலையணையைஇழுத்து நெஞ்சோடுஅணைத்த படி மறுபடியும் உறங்கத் தொடங்கி விட்டாள் மீனாட்சி.

பாக்கியம் ஏதோ எண்ணத்தில் மீனாட்சியை சுந்தரியுடன் ஒப்பிட்டுப் பார்த்தாள். சுந்தரியை விட மூன்று வயது பெரியவள் மீனாட்சி. ஆனால், உருவ அமைப்பில் சுந்தரியைவிட மூன்று வயது இளையவள் போல் இருக்கிறாள். பொன்னுத்துரை அடிக்கடி கேலி பண்ணுகிறாற் போல் ''நராங்கல்'' உடம்பு அவளுக்கு.

மீனாட்சியை அடுத்து அவளின் மற்றைய தங்கைமார்கள்—லட்சுமி, வாணி, கீதா—மூவரும் ஒருவரின்மேல் ஒருவர் கைகளையும் கால்களையும் போட்டபடி குவியலாகக் கிடந்தார்கள். அவர்களை இழுத்து ஒவ்வொரு புறமாகப் படுக்கவைத்துவிட்டு கொல்லைப்புறம் போகப் புறப்பட்ட பாக்கியம் ஒரு வினாடி தயக்கத்தோடு மெல்ல முன்புற அறையருகே வந்து யன்னலின் ஊடாக உள்ளே பார்த்தாள். வாய் திறந்தபடி கட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தான் சுந்தரமூர்த்தி. இரவு படுக்க முன்பு அணிந்திருந்த அரைக்காற் சட்டையை மாற்றி சாரம் கட்டக்கூடச்

சோம்பல்பட்டு அப்படியே படுத்திருக்கிறான். தலையணை யின்கீழ் ஒரு ஓரமாக பளபளக்கும் ஒரு புத்தகத்தின் விளிம்புப் பகுதி தெரிந்தது. ஏதோ ஒரு துப்பறியும் கதைப்புத்தகம் அதென்பது பாக்கியத்துக்குத் தெரியும். அவளும் எவ்வளவோ கண்டித்துப் பார்த்து விட்டாள். அவன் இப்படியான புத்தகங்களை படிக்கும் வழக்கத்தை மட்டும் விட்டுவிடுவதாகத் தெரியவில்லை.

''அண்ணனைப் போல்தான் இவனும் வரப்போறானு?'' என்று கவலையோடு எண்ணியபடி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் பாக்கியம். குப்பென்று வீசிய பனிக்காற்று உடலைச் சில்லிட வைத்தது.

அதற்குமேல் தாமதிக்க அவளுக்கு முடியாது. விறு விறுவென்று கிணற்றடிக்குப் போனவள் பழைய பாத்திர மொன்றினுள் கிடந்த உமிக்கரியை எடுத்துப் பல் விளக்கி மற்றக் கடமைகளையும் முடித்துக்கொண்டு பதினைந்து நிமிஷத்துக்குள் உள்ளே வந்து விட்டாள்.

சுற்றுவட்டாரத்தில் எவ்வித அரவமுமில்லை. நாயொன்று ஊளையிடும் ஒலி இடையிடையே கேட்டது. பாக்கியத்தின் தாய் பொன்னம்மாளின் இருமல் சத்தமும் கேட்டது.

பாக்கியம் சமையலறைக்குள் பம்பரமாகச் சுழலத் தொடங்கினாள். ஒரு அடுப்பில் இடியப்பம், இரண்டு அடுப்புகளில் தோசை. இடியப்பம் பிழிவது, அடுப்பில் வைத்து எடுப்பது, தோசையைத் தட்டில் வார்ப்பது, எடுப் பது எல்லாமே யந்திரகெதியில் நடந்துகொண்டிருந்தன. ஒரே சுறுசுறுப்பு! இடியப்பங்களும் தோசைகளும் இரண்டு ஓலைப் பெட்டிகளில் நிறைந்து கொண்டிருந்தன.

பாக்கியம் ஒரு தடவை தேநீர் தயாரித்து தானும் குடித்துவிட்டு, தங்கைமார்களுக்காக 'கேற்றிலை' அடுப் பின் முன்புறச் சூட்டில் கொதிக்க வைத்திருந்தாள்.

''அக்கா!''

இடியப்பத் தட்டில் மாவைப் பிழிந்துகொண்டிருந்த பாக்கியம் திரும்பிப் பார்த்தாள். கைகளை வளைத்துச் சோம்பல் முறித்தபடி உள்ளே வந்து கொண்டிருந்தாள் மீனாட்சி.

''ஐஞ்சு மணியாச்சா?'' பாக்கியம் கேள்வியோடு இடியப்ப உரலை வைத்துவிட்டு சேலைத் தலைப்பால் நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

''உம்!''

''போய் முகத்தைக் கழுவிப்போட்டு வந்து சம்பலையும் இடிச்சு பாலையும் கற.''

மீனாட்சி மறுபடியும் ஒரு 'உம்' கொட்டி விட்டு கொட்டாவி விட்டபடி வெளியே சென்றாள்.

அந்த வீட்டில் இதுவும் ஒரு வழக்கம். மூன்றரை மணிக்குப் பாக்கியம் எழுந்து வேலைகளைக் கவனிப்பது போல் மற்றவர்களும் அவரவர் நேரம் வந்ததும் எழுந்து குறிப்பிட்ட வேலைகளைக் கவனிக்க வேண்டும். இரண்டு வயதுப் பெண் கீதாவுக்கு மட்டுமே இதிலிருந்து விதி விலக்கு.

மீனாட்சிக்கு சம்பல் இடிப்பது, மாடுகளில் பால் கறப்பது, பின்னர் அக்காள் பாக்கியத்திற்கு ஒத்தாசை வேலைகள் செய்து கொடுப்பது; சுந்தரிக்கு பாத்திரங்களைத் துலக்கும் வேலை, பின்னர் மாட்டுக் கொட்டிலைப் பெருக்கும் வேலை; சுந்தரமூர்த்திக்கு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துத் தொட்டிகளை நிரப்புவதும், மாடுகளுக்கு உணவு தேடுவதும்; லட்சுமிக்கும் வாணிக்கும் வீடு வளவுகளைக் கூட்டிச் சுத்தப் படுத்திவிட்டு வாடிக்கையாளர்களுக்கு பால் கொடுக்கும் வேலை—இவ்வாறாகஒவ்வொருத்தருக்கும் நியமிக்கப்பட்ட வேலைகள் உண்டு.

பாக்கியத்தின் கண்டிப்பான உத்தரவுக்குள் யாவரும் அடங்கினாலும் சில சமயங்களில் சுந்தரிக்கு மட்டும் விதி விலக்குக் கிடைப்பதுண்டு. ஆறரை மணிவரையும் அவள்

படுத்திருந்துவிட்டு அக்காவென்று வந்து கெஞ்சினுல் போதும் பாக்கியத்திற்கு அவளைக்கோபிக்க மனம்வராது. "உனக்கு வரவரச் சோம்பல் அதிகமாகிக்கொண்டிருக்கு" என்று செல்லமாக அதட்டிவிட்டு அவள் செய்ய வேண்டிய வேலையையும் தானே செய்துவிடுவாள்.

காகங்கள் கரைந்தபடி முற்றத்து வேப்ப மரத்தை முற்றுகையிடத் தொடங்கிவிட்டன. பொன்னம்மாள் எழுந்திருந்து உச்சஸ்தாயியில் இருமிக்கொண்டிருந்தாள்.

பாக்கியம் தேநீரைக் கலந்து ஒருகோப்பையில் ஊற்றி மீனுட்சியிடம் கொடுத்தாள்.

"இந்தா! கொண்டுபோய்க் குடு" யாருக்கென்று அவள் சொல்லவுமில்லை, மீனுட்சி அதைக் கேட்கவுமில்லை. தேநீரை வாங்கிக்கொண்டு அவள் வெளியே சென்முள்.

பாக்கியம் அன்னையை அம்மாவென்று அழைத்து பதினெரு வருடங்களுக்கு மேலாகிவிட்டன. அவளைப் பொறுத்தவரை தாய் மகளென்ற உறவு அந்த வீட்டில் ஒரு அர்த்தமற்ற நாடகமாகத்தான் நடந்து கொண்டிருந்தது. அவளுக்குப் பெற்றவளைப்பற்றிய கவலையுமில்லை, அனுதாபமுமில்லை, எந்தவித அன்புமில்லை. ஏதோ ஒரு தவிர்க்கமுடியாத கடமை—அவ்வளவுதான்.

ஒரே வளவுக்குள் இருந்தாலும் பொன்னம்மாள்இருக்கும் அறைகள் இரண்டும் அந்த வீட்டோடு சேராமல்தனியாக வலது புறத்து வேலியை ஒட்டினுற்போல் இருந்தன. எட்டுப்பத்து வருடங்களுக்கு முன்பு கையில் சிறிது பணம் இருந்தபோது நாலறை வீடாகக் கட்டத் தொடங்கிகட்ட முடியாமல் இரண்டறைகளோடு முடிந்த வீடது. பாக்கியம் இருக்கும் இந்த வீடு பழங்கால வீடு. நிலம் மட்டும் சீமெந்து போடப்பட்டது. களிமண்ணினுலான சுவர்கள். ஓலை மேய்ச்சல் கூரை.

அன்னை இருக்கும் பக்கம் பாக்கியம் செல்வது கிடையாது. இருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பது எப்போதா

வது எதிர்பாராமல்தான் நடக்கும். அந்தச் சமயம் பாக்கியம் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்...

சமையலறை வேலைகள் ஒருவாறு ஓய்ந்து விட்டன. தேங்காய் துருவிய சிரட்டைகளில் சம்பலை அளவாகப் போட்டு இடியப்பங்கள் ஒரு பெட்டியிலும், தோசைகள் வேறொரு பெட்டியிலுமாக அடுக்கி வைத்தாகி விட்டது. மீனாட்சி சமையலறைக்குள் அங்குமிங்குமாகக் கிடந்த பாத்திரங்களை ஒதுக்கிவிட்டுக் கூட்டத் தொடங்கியதும் பாக்கியம் வெளியே வந்தாள். மணி ஆறு பதினைந்து. சின்னப் பெண் கீதா கூட எழுந்துவிட்ட அந்த நேரத்தில் சுந்தரிமட்டும் தூக்கம் கலையாமல் கைகால்களை 'எறிந்தபடி' படுத்துக்கிடந்தாள்.

"படுத்தது போதுமடி. எழும்பு" என்று குனிந்து அவளின் தோளில் தட்டினாள் பாக்கியம். சிணுக்கத்தோடு மெல்லக் கண்களைத் திறந்த சுந்தரி, முகத்துக்கு நேரே தமக்கையின் முகத்தைப் பார்த்ததும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

"பாத்தியாடி நேரத்தை" பாக்கியம் சற்றுக் கோபத்துடன் சுவரிலிருந்த மணிக்கூட்டை அவளுக்குச் சுட்டிக் காட்டினாள். "ஆறு பதினைந்தாச்சு. உன்னைத் தட்டி எழுப்பவேண்டியிருக்கு. பெட்டைப் பொடியள் இப்பிடிப் படுத்தால் வீடு உருப்படுமா?"

"பஞ்சியாக் கிடக்கக்கா" சுந்தரி சிணுங்கிக் கொண்டே எழுந்து, படுத்த பாயைக்கூடச்சுருட்டி வைக்காமல் கொல்லைப்புறமாகச் சென்றாள்.

"பதினொரு வயசாச்சு. இன்னும் சின்னக் குழந்தையாகத்தான் இருக்கிறாள்" என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டே பாயைச் சுருட்டி ஓர் மூலையில் வைத்தாள் பாக்கியம்.

சுந்தரமூர்த்தி மாடுகளுக்கு பிண்ணாக்கு வைத்துவிட்டு வந்து உடம்பை வளைத்து நெளித்து ஏதோ உடல் பயிற்சி செய்து கொண்டிருந்தான். சுந்தரியைப்போலவே அவ

னது உடல்வாகும் பெரியது. பதின்மூன்று வயதுஇன்னும் ஆகவில்லை, பதினெட்டுவயதுப் பையனின் தோற்றம் அவனிடம் இருந்தது.

''நேக்கு கரி வாணும்'' என்று சிணுங்கிக்கொண்டே பாக்கியத்தின் அருகே வந்தாள் கீதா.

''வாடி. நான் பல்லை விளக்கிவிடுகிறன்'' பாக்கியம் அவளைத்தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு கிணற்றடிக்கு வந்தாள். சுந்தரி எங்கோ பார்த்தபடி துணிகள் துவைக்கும் கல்லின்மேல் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

''என்னடி! நீ இன்னும் பல்லுக்கூட விளக்கேல்லையா?''

திடுக்கிட்டுத் திரும்பிய சுந்தரி அவளைக் கண்டதும் அவசரமாக எழுந்து உமிக்கரியைக் கையில் எடுத்துக் கொண்டாள். பாக்கியம் அருகே சென்று அவளின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள்.

''காய்ச்சல் குணமாயிருக்கா?''

''இல்லையக்கா. பஞ்சியாக் கிடக்கு.''

''சரி. இன்றைக்கு நீ வேலையொன்றும் செய்ய வேண்டாம். நான் செய்யிறன்.''

வேலைச் சுமை குறைந்த மகிழ்ச்சி பளிச்சென்று சுந்தரியின் முகத்தில் தெரிந்தது.

''சரியக்கா'' என்று உற்சாகத்தோடு பல் துலக்க ஆரம்பித்தாள் சுந்தரி. இதற்குள் கீதா சிணுங்கத் தொடங்கிவிட்டாள்.

''நேக்கு கரி வாணும்.''

பாக்கியம் உமிக்கரியை எடுத்து அவளுக்குத்தானே பல் துலக்கிவிடப் போனாள். அவள் விடவில்லை. ''நேக்கு தா... நேக்குத்தா'' என்று தனது சின்னஞ் சிறிய கைகள் இரண்டையும் நீட்டியபடி முரண்டு பிடித்தாள். பாக்கியம் அவளை அழவைக்கப் பிரியப்படவில்லை. கரியைக் கீதாவின் இடது உள்ளங்கையில் கொட்டியபடி, ''சுந்தரீ! இவளுக்கும் முகத்தைக் கழுவி கூட்டிவா'' என்று சுந்தரியிடம்

கூறிவிட்டு வீட்டுக்குள் போகத் திரும்பினுள். "அக்கா!" என்று மீனுட்சி அழைப்பது கேட்டது. "பொன்னுத்துரை அண்ணு வந்திருக்கிறுர்."

"இதோ வந்திட்டன்" பாக்கியம் ஓட்டமும் நடையுமாக உள்ளே சென்றுள். பொன்னுத்துரை சைக்கிளை வெளியே நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே வந்துகொண்டிருந்தான்.

"முடிஞ்சுதா அக்கா?"

"ஓம்" பாக்கியம் சமையலறைக்குள் போய் இடியப்பங்கள் தோசைகள் வைத்திருந்த இரண்டு பெட்டிகளையும் எடுத்துக்கொண்டுவந்தாள்.

"பெரியம்மா எப்படி இருக்கிறு தம்பி?"

"அவ சங்கதிதான் தெரியுமே. ராத்திரிபூரா நெஞ்சுக் குத்தென்று கத்திப்போட்டு இப்ப எழும்பி வேலை நடக்குது. தினசரி நடக்கிற காரியந்தானேயக்கா இது. இனி அவவுக்கு ஒன்றுமே சொல்றதில்லையென்று விட்டிட்டன்" பொன்னுத்துரையின் பதிலில் சலிப்புத்தெரிந்தது. பாக்கியத்தின் கைகளிலிருந்த பெட்டிகளை வாங்கி சைக்கிள் 'கரியரில்' கட்டிக்கொண்டே தொடர்ந்து சொன்னுன்:

"இன்றைக்கு சோதினைக் காசு கட்டவேணுமென்று இருக்கிறனக்கா."

"இந்தத் தடவையாவது ஆண்டவன் கண்ணைத் திறக்கவேணும்" என்றுள் பாக்கியம் கவலையோடு. மூன்றும் தடவையாக இந்த முறையும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கப் போகிறுன் அவன்.

பொன்னுத்துரை அலட்சியமாக உதட்டைப் பிதுக்கியபடி சைக்கிளைத் தள்ளிக்கொண்டு புறப்பட்டான். வாசல் கதவோடு சாய்ந்து நின்றபடி கண்பார்வையிலிருந்து அவனது உருவம் மறையும் வரையும் பார்த்துக்கொண்டு நின்றுள் பாக்கியம். அடுத்து அவளது பார்வை வெகு தொலை

வில் குழந்தையொன்றின் கிறுக்கலைப்போல் கோடுகளா கத் தெரிந்த கல்லடிப்பாலத்தின் மீது லயித்தது.

## 2.

இளமைக்கால வாழ்க்கையைப்பற்றி எண்ணும்போது பாக்கியத்துக்கு இன்பக் கனவொன்று காண்பது போலி ருக்கும். அப்பாவுக்குச் செல்லப்பெண் அவள். ஆறேழு வயதிலும் அவரின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தொங்குவதும், அவரின் மடியில் படுத்திருந்து தேவ தைக்கதை கேட்பதும் ஞாபகத்தில் இருக்கின்றன.

அவர் ஓய்வாக வீட்டில் இருக்கும் போதெல்லாம் அவளை அருகில் வைத்திருந்து ''குட்டி! என்ரை செல்லக் குட்டி'' என்று கொஞ்சிக் கொண்டிருப்பார். அந்நேரங் களில்அவளைக் கல்லடிப்பாலத்துக்கு அழைத்துப்போவார். அந்த வாவியிலிருக்கும் பாடும்மீன்களைப் பற்றி அப்பா விடம் கேட்பதில் தீராத ஆவல் பாக்கியத்துக்கு. அவரும் சலிப்பில்லாமல் சொல்லுவார். பாலத்தின் மேல் நின்ற படி தடுப்புக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு கீழேயிருக் கும் வாவி நீரைப் பார்ப்பாள் பாக்கியம். அவளின் சின் னஞ்சிறிய இதயத்தில் பென்னம் பெரிய கற்பனைகளெல் லாம் மலரும். அப்பா கூறும் தேவதைக் கதையில் வரும் குட்டித்தேவதை போல் அவளும் மானசீகமாக இறக்கை களை விரித்துப் பறப்பாள். காற்றில் மிதந்துமிதந்து மெல் லக் கீழே போய் தண்ணீரில் தவழ்ந்தபடி பாடும் மீன் களின் கானத்தைக் கேட்டுக் கொண்டிருந்தால் எத்தனை ஆனந்தமாக இருக்கும்.

பாலத்திலிருந்து இறங்கிப் போகும் வரைக்கும் இத் தகைய கற்பனைகள் தான் பாக்கியத்தின் மனதை ஆட்

கொண்டிருக்கும். கட்டுக்கடங்காத பெருமிதமான மன நிலையில் அப்போதிருப்பாள் அவள்..

அதே போன்ற பெருமிதமான உணர்ச்சியொன்றை பொன்னுத்துரையோடு பழகும் சமயங்களிலும் அனுபவிப் பாள் அவள்.

மூன்றுவது வீட்டுக்காரன் என்பதைவிட அவளுக்கு எவ்வித உறவு முறையும் இல்லாதவன் அவன். பதினெரு வருடங்களுக்கு முன்புஅன்னையை வெறுத்தொதுக்கிவிட்டு பாக்கியம் சொந்தக் காலில் நிற்க ஆரம்பித்தபோது அவ ளுக்கு வயது பதின்மூன்று. பொன்னுத்துரைக்கு வயது ஒன்பது. பாட்டியின் துணையோடு வாழ்க்கை நடத்துவதற் கென்று அவள் ஒரு தொழிலை ஆரம்பித்திருந்தாலும் அவ னின் உதவி மட்டும் இல்லாமலிருந்தால் அவளின் வைராக் கியமெல்லாம் காற்றில் பறக்கும் சருகாக எப்போதோ அடிபட்டிருக்கும். இன்றுகூட சில சம்பவங்களை நினைத்துப் பார்க்கத் தொடங்கினுல் பாக்கியத்தின் கண்கள் கலங்கி விடும்.

அப்போது பதின்மூன்று வயதுச் சிறுமி அவள். பாட்டி யின் உதவியோடு இடியப்பம், தோசையெல்லாம் தயாரித் துக்கொண்டு அவள் தான் தலைச்சுமையாக வாடிக்கைக் கடைகளுக்குக் கொண்டு செல்வாள். வழமை போல் ஒரு நாள் கடையொன்றுக்கு இடியப்பங்கள் கொடுத்து விட்டு காசுக்காக காத்து நின்ற போது கடையில் வேலை செய் யும் பையனெருவன் யாருக்கோ கூறிய பகிடியொன்றைக் கேட்டுச் சிரித்துவிட்டாள். அவள் செய்த தவறு அவ்வளவு தான். கடைமுதலாளி ஏனே ருத்திரமூர்த்தியாகிவிட்டார்.

"இந்தா பிள்ளை" என்று பாக்கியத்தை அதட்டினர். "வந்தால் வந்த வேலையை முடிச்சுக் கொண்டு உன் பாட் டுக்குப் போயிடவேணும். பல்லை இளிக்கிறகிளிக்கிறவேலை வேண்டாம். நாலு பொடியள் வேலைசெய்யிற இடமிது?" அவர் இத்துடன் நிறுத்தியிருந்தாலாவது பாக்கியத்துக்கு ஓரளவு ஆறுதலாக இருந்திருக்கும். அவர் தொடர்ந்து

சொன்ன வார்த்தைகள் தான் சுடுகணைகளாக அவளின் சின்னஞ்சிறிய இதயத்தைப் பிளந்தன. ''பொன்னம்மாளுக்குப் பிறந்த குணம் அப்பிடியே தெரியுது. இந்த வயசிலேயே வலைபோடத் தொடங்கிட்டுது.'' எரிச்சலோடு காசை எடுத்து அவளின் முன்னே வீசி எறிந்தார் முதலாளி.

நெஞ்சில்பட்டு தெறித்து நிலத்தில் விழுந்து உருண்டோடிய நாணயங்களை பாக்கியம்பார்க்கவேயில்லை. அவள் அடிபட்ட நாயைப் போல தலைதெறிக்க அங்கிருந்து ஓடத் தொடங்கினாள். அவளின் உடலிலுள்ள ஒவ்வொரு மயிர்க் கண்களுமே பற்றி எரிவது போலிருந்தது. எங்கே விழுந்தாள்; எப்படியெழுந்தாளென்று அவளுக்குத் தெரியாது. எத்தனை பேர்கள் மீது மோதிக் கொண்டாள் என்றும் அவளுக்குத்தெரியாது.

''ஏனடி இப்பிடிப் பேய் பிடிச்சவளாட்டம் ஓடி வாறாய்'' என்று வீட்டுத் திண்டிலிருந்த பாட்டி அதட்டிய போது தான் அவளுக்குச் சுயநினைவு வந்தது. ஓவென்றலறியபடி பாயாகச் சுருண்டு அப்படியே அவளின் மடிக்குள் விழுந்து விட்டாள்.

அன்று அவள் அழுதது போல் வாழ்க்கையில் ஒருபோதுமே அழுததில்லை.

''பிள்ளை பெறாத மலட்டுச் சனியன் போலேயிருக்கு. அவன் சொன்னானென்றால் உனக்கென்ன? என் தங்கமல்ல, அழாதையடி'' என்று பாட்டியும் தன்னால் முடிந்தளவுக்குச் சமாதானம் கூறிப்பார்த்தாள். பாக்கியத்துக்கு மனம் ஆறவில்லை. பச்சைத் தண்ணீர் கூட அருந்தாமல் அன்று பூராவுமிருந்து அழுது கொண்டிருந்தாள். தற்கொலை செய்து கொண்டாலென்ன என்ற எண்ணம் கூட அன்றைக்கு அவளுக்குப் பல தடவை தோன்றிவிட்டது.

அந்தியில் பொன்னுத்துரையோடு அவனது தாயார் பவளமணி அம்மாள் அங்கு வரும் போதும் பாக்கியத்தின்

துயரநிலை மாறவில்லை. பாட்டி போய் விஷயத்தைக் கூறி யிருப்பாள் போலிருக்கிறது. பவளமணி அம்மாள் வந்ததுமே ''எழும்பி உட்காரு பிள்ளை'' என்று படுத்திருந்தவளை வலுக்கட்டாயமாக தூக்கி உட்கார வைத்து விட்டு ''கண்ட காவாலி எதையாவது கதைச்சானென்றால் நீ குறைஞ்சு போவியா?'' என்று அதட்டினாள். அடுத்து பாக்கியத்தின் அருகில் அமர்ந்து அவளின் முதுகை அன்போடு வருடினாள். பவளமணி அம்மாளுக்கு எப்போதுமே அவள் மேல் தனிப்பிரியம் உண்டு. பொன்னம்மாள் சில சமயம் பெற்றபெண்ணென்று கூடப்பார்க்காமல் பாக்கியத்துக்குச் செய்யிற கொடுமைகளைப்பார்த்துவிட்டு இந்தப்பிள்ளை என் வயிற்றில் வந்து பிறந்திருக்கக் கூடாதா என்று கூட ஏங்கியிருக்கிறாள் அவள்.

அன்றைக்கு பாக்கியத்தை உணவருந்த வைத்துவிட்டு தான் பவளமணிஅம்மாள் தனது வீட்டுக்குப் புறப்பட்டாள். போகமுன்பு ''பிள்ளை! நாளையிலேயிருந்து நீ ஓரிடமும் போகவேண்டாம். இவனெட்டை இடியப்பம் தோசையைக் குடுத்தனுப்பு'' என்று அருகே நின்றபொன்னுத்துரையைச் சுட்டிக்காட்டிச் சொல்லிவிட்டுப் போனாள்.

பாக்கியத்தின் மனதில் புத்துணர்ச்சி தோன்றுவது போலிருந்தது. அவள் ஆவலோடு பொன்னுத்துரையின் முகத்தைப் பார்த்தாள். அவன் உற்சாகத்தோடு துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தான்.

இச்சம்பவம் நடந்த மறுநாள் தொடங்கிய அந்தப் பணியை பொன்னுத்துரை இன்று வரை கைவிடவில்லை. அன்னை கூறியதற்காக ஆரம்பத்தில் பாக்கியத்துக்கு உதவிகள் செய்யத் தொடங்கியவன், பின் சுயவிருப்பத்தோடு செய்து வந்தான். இடையில் பாக்கியத்தின் பாட்டியார் காலமாகியதும் அவனின் ஆதரவும் நெருக்கமும்அதிகமாகி விட்டன. சுந்தரமூர்த்தி விபரம் தெரிந்த பையனானதன் பின்பு கூட வேலைகளை அவனுக்கும் பகிர்ந்து கொடுக்க

வேண்டுமென்று பொன்னுத்துரை எண்ணவில்லை. அவன் அந்தவீட்டில் ஒரு அங்கமாகி விட்டான்.

பாக்கியம் ஒரு முரட்டு பிடிவாதத்தோடு வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களை எதிர்த்து நீச்சல்போடத்துணிந்தவள். பொன்னுத்துரை அவளை நன்குஉணர்ந்துகொண்ட ஒருவன். இருவரும் இணைந்து உழைத்தபோது எந்தக் கஷ்டங்களுமே இலகுவானதாகி விட்டன.

பாக்கியம் தொடங்கிய வியாபாரம் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இத்தனை காலத்துக்குள் ஓரளவுக்குநிலையானதாகிவிட்டது. காலையில் இடியப்பம், தோசை என்பனவற்றைவிட மாலை நேரங்களின் வடை, முறுக்கு முதலிய பட்சண வகைகளும்செய்து வாடிக்கை கடைகளுக்கு அனுப்புவாள். கறவை மாடுகள் வேறு இரண்டு வாங்கியிருந்தாள். அவளால் கைநிறையப் பணத்தைச் சேர்க்க முடியாவிட்டாலும் அவளும் அவளின் தம்பி தங்கைகளும் மானமாக உடையணிந்து வயிறாரச் சாப்பிடவும் முடிந்தது. இடையில் ஓய்வாக இருக்கும் வேளைகளில் பீடிக்கு 'லேபல்' ஒட்டிக்கொடுக்கும் வேலையும் அவள்செய்வதுண்டு.

இப்போது அந்த வீட்டில் எந்தவித எதிர்ப்புமில்லாத தலைவி அவள் தான். அவளுக்கு வடிவேலு என்றொரு அண்ணனுண்டு. அவனும் பதினொரு வருடங்களுக்கு முன்பு அந்த வீட்டில் நடந்த பிரச்சினையை அவளைப் போலவே மூர்க்கமாக எதிர்த்தவன். அவள் பெண்; வீட்டிலிருந்து எதிர்த்தாள். அவன் ஆண்; வீட்டைவிட்டே ஓடிவிட்டான். அதன் பின் பல வழிகளிலும் வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டான் வடிவேலு. அவன் என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறானென்பது பாக்கியத்துக்குத்தெரியாது. எப்போதாவது ஒருநாள் வீட்டுக்கு வருவான். ஐம்பதோ நூறோ தங்கையின் கையில் கொடுப்பான். மறுநாள் போய்விடுவான். அவனை வீட்டில் தங்கும்படி பாக்கியம் வற்புறுத்துவதும் கிடையாது. வற்புறுத்தினால் அவன் தங்

கவும் மாட்டான். வீட்டிலுள்ள குறைகளைக்கூட பாக்கியம் தமையனிடம் சொல்வது கிடையாது. அவன் வந்தால் வரவு, போனால் செலவு அவ்வளவு தான்.

பாக்கியத்தின் மனதை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த ஆசை ஒன்றே ஒன்று தான். அவளின் ஒரே குறிக்கோளும் அதுதான். தங்கைமார்களையெல்லாம் சீரும் சிறப்புமாக மற்றவர்கள் வியக்கிறளவுக்கு வளர்த்து விடவேண்டும். பொன்னம்மாளின் பிள்ளைகள் தானே என்ற கிண்டல் பேச்சு யாருக்குமே வரக்கூடாது. இவ்வளவே தான்.

இதைத்தவிர பருவ உணர்ச்சிகளுக்கோ அல்லது வேறெந்த ஆசாபாசங்களுக்கோ அவள் இடம் கொடுத்தது கிடையாது. அவற்றிற்கு நேரமும் இருக்கவில்லை.

## 3.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு 'மணல்மேடு' என்ற கிராமம் மட்டக்களப்பில் எங்கேயிருக்கிறதென்று தெரிந்து கொள்வதாயின் சாதாரணமான மனிதர்களை விசாரித்துத் தெரிந்து கொள்வது சிரமம். தபால் நிலையத்துக்குச் சென்றுதான் அறிந்து கொள்ள வேண்டியிருக்கும். இன்று சிறு பிள்ளைகளைக் கேட்டால்கூட பட்டென்று பதில் கூறிவிடுவார்கள். அத்தனை பிரசித்தமாகிவிட்டது. இத்தனைக்கும் அக்கிராமத்தில் இருந்த முக்கியஸ்தர்கள் மூன்றே மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்களே.

ஒன்று பொன்னம்மாளின் குடும்பம், அடுத்தது முஸ்தாபாவின் குடும்பம், மூன்றாவது பொன்னுத்துரையின் தந்தையாரான வேலாயுதத்தின் குடும்பம்.

முதலில் 'மணல்மேடு' பிரசித்தமாவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்த மனிதர் வேலாயுதம்தான். பில்லி சூனியம், கைரேகை சாஸ்திரம், நாட்டுவைத்தியம் போன்றவை அவருக்குக் கைவந்த கலைகள். ஊரிலுள்ள பெரியவர்கள்கூட அவரைக்கண்டதும் தனிமரியாதையை அளிப்பார்கள். அவரின் வாட்ட சாட்டமான உருவத்தை விட பில்லி சூனியம் செய்வாரென்ற பயந்தான் எல்லோரிடத்திலும் அதிகமாக இருந்தது.

முஸ்தாபாவும் இவருக்கு சளைத்தவரல்ல. வியாபாரத்தில் ஆயிரமாயிரமாகப் புரட்டுகிறவர் அவர். மட்டக்களப்பு வியாபாரிகளுக்குள்ளேயே அவரின் வியாபாரத் தந்திரங்களுக்குத் தனியிடமுண்டு. "அவனு! அவன்தான் பாத்துக் கொண்டிருக்கவே கண்ணால் விழுங்கிறவனாச்சே" என்று வயிற்றெரிச்சலோடு சிலர் விமர்சிப்பார்கள். இத்தனைக்கும் பார்வைக்கு அப்பாவியைப் போன்ற மனிதர் முஸ்தாபா. சதைப்பிடிப்பே இல்லாத உடல், இருபக்கக் கன்ன எலும்புகளும் புடைத்துக் கொண்டு வெளியே தெரியும். அரை வழுக்கை விழுந்து விட்ட தலை. அடிக்கடி பொடி மட்டையிலிருந்து தூள் எடுத்து கடைவாய்ப் பற்களுக்குள் திணித்துக் கொண்டிருப்பார்.

மூன்றாவது குடும்பமான பொன்னம்மாளின் குடும்பமும் ஒரு வகையில் பிரசித்தமானதுதான். பொன்னம்மாள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். இருபத்தெட்டு வருடங்களுக்கு முன்பு அவள் இளம் பெண்ணாக இருந்தபோது, மட்டக்களப்பிலிருந்து பாய்வியாபாரத்துக்குப் போயிருந்த சிவலிங்கம் என்பவனோடு வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரியாமல் ஓடிவந்துவிட்டாள். ஆரம்ப காலத்தில் அவர்கள் மிகவும் அந்யோன்னியமாகக் குடும்பம் நடத்தினார்கள். நாலைந்து வருடங்களுக்குப் பின் இழுபறி தொடங்கி விட்டது.

சிவலிங்கம் ஓர் அப்பாவி மனிதர். பொன்னம்மாளின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசத் தெரியாதவர்.

''இந்தப் பெண்ணைப் பயலே அவள் சீலையிலே முடிஞ்சு போட்டாள்'' என்று சிவலிங்கத்தின் தாயார் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவர் காதுபட முணுமுணுத்திருக்கிறாள். அப்படியிருந்தும் சுந்தரி பிறந்த எட்டாவது மாதத்தில், அவரை வீட்டைவிட்டே விரட்டிவிட்டாள் பொன்னம்மாள். அதன் பின் சிவலிங்கத்தின் நண்பனாக இருந்த செல்லையா என்பவன், அடிக்கடி அந்த வீட்டுக்கு வந்து போனான். சிவலிங்கம் எப்போதாவது ஒருநாள் வந்து வெளியில் நின்றபடியே பிள்ளைகளைக் கூப்பிட்டுப் பார்ப்பார். பின்னர் போய் விடுவார்.

தாயார் புரியும் துரோகத்தையும் கொடுமைகளையும் பொறுக்கமுடியாமல் பொறுத்து, மனதினுள் குமைந்து கொண்டிருந்தாள் பாக்கியம். ஆனால், தாயாரை எதிர்க்கும் துணிவு வெளிப்படையாக அவளுக்கு வரவில்லை. வடிவேலு மட்டும் இடையிடையே வாய்காட்டிவிட்டு செம்யாக தாயிடமிருந்து உதைகள் வாங்குவான். சிவலிங்கத்தின் தாயாருக்கும் எதிர்த்துக் கதைக்கத் தைரியம் வரவில்லை. ஆண்முறுக்கில்லாத மகனின் பக்கம் பரிந்து பேசினால், அடுத்த கணமே மருமகள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவாளென்று அவளுக்கு நன்கு தெரியும். வயது போன காலத்தில் அனாதைப் பிணமாக றோட்டில் விழுந்து சாக அவளுக்குத் தைரியமில்லை.

ஒரு நாள் சிவலிங்கம் கார் விபத்தொன்றில் சிக்கி மாண்டுவிட்டார். பொன்னம்மாள் ஒப்புக்குக்கூட துக்கங் கொண்டாடவில்லை. உடனடியாக ஒரு விஷயத்தை செய்தாள். இடையிடையே வந்து போய் கொண்டிருந்த செல்லையாவை ஒரேயடியாக வீட்டில் நிறுத்திக் கொண்டு விட்டாள். ஒழிவு மறைவாக அவள் இதைச்செய்யவில்லை. தனது பிள்ளைகளை அழைத்து ''இனி இவர் இங்கைதான்

இருப்பார். நீங்களெல்லாம் அப்பாவென்று இவரைத்தான் கூப்பிட வேணும்'' என்ருள்.

அடங்கிக்கிடந்த எரிமலை திடீரென்று குமுறி வெடிப்பது போல, அன்றைக்கு அந்த வீட்டிலும் மிகப் பெரிதாக எதிர்ப்பு உண்டாகிவிட்டது. செல்லையாவின் கால்கள் அந்த வீட்டில் படக்கூடாதென்று வடிவேலும்பாக்கியமும் மூர்க்கத்தனமாக போராடினுர்கள். பொன்னம்மாளின் அடி உதைகள் எதுவுமே பயனற்றதாகிப் போய்விட்டன.

ஆனல், பொன்னம்மாள் பணியவுமில்லை, தனது தோல்வியை ஒப்புக்கொள்ளவுமில்லை. அவள் தன் விருப்பப்படியே செல்லையாவை வீட்டில் நிறுத்திக் கொண்டாள். எத்தனை நாட்களுக்குத்தான் முரண்டு பிடிக்கமுடியுமென்ற அலட்சியம் அவளுக்கு.

அவளது இந்தக் கணிப்புத் தவருகிவிட்டது. வடிவேலு வீட்டைவிட்டே ஓடிவிட்டான். பாக்கியமும் பிடிவாதமாகத் தனது முடிவைக் கூறிவிட்டாள்; ''இனி அம்மாவும் எங்களுக்குச் செத்தவள்தான். எங்களை நாங்களே பார்த்துக் கொள்ளிறம்.''

அன்றைக்கு அந்தச் சின்னஞ்சிறிய வயதில் எடுத்த முடிவை பாக்கியம் எந்தச்சந்தர்ப்பத்திலும்மறக்கவில்லை. எட்டுமாதக் குழந்தையாக இருந்த சுந்தரியை வளர்த்தது அவள் தான். பின்பும் தாயாருக்குப் பிறந்த பிள்ளைகளை அவளுக்கு முடியாத நிலை ஏற்பட்டபோது வளர்த்து வருவதும் அவள் தான். பெற்றவளை அவள் நஞ்சாக வெறுத்தாலும் செல்லையாவுக்கும் அவளுக்கும் பிறந்த பிள்ளைகளை அவளால் வெறுக்கமுடியவில்லை. மற்றைய சகோதரிகளைப் போலவே அவர்களையும் அவளே வளர்த்து வந்தாள்.

பொன்னம்மாளின் வாழ்க்கை காலகெதியில் தலைகீழாக மாறிவிட்டது. நன்ருக இருந்த அவளுக்கு நாலு வருடங்களுக்கு முன்பு இருமலொன்று வந்து, நாளடை

வில் அதுவே 'ஆஸ்த்மா' வியாதிக்கு வழிகோலி விட்டது. இடையிடையே அவளுக்குஇடுப்புவலி வேறு வந்தது.கடைசிக் குழந்தையான கீதா பிறந்ததோடு அவளின் நோய்களெல்லாம் அதிகமாகிவிட்டன.அழகு,ஆங்காரம்,தசைத்தினவு எல்லாமே அடங்கி ஒடுங்கி, அவள் ஒரு அடிபட்ட பாம்பாகிவிட்டாள்.

செல்லையாவும் வீட்டைவிட்டுப் போய்விட்டான். எந்நேரமும் மதுவருந்திவிட்டு ரோட்டோரங்களில் வாயில் வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டு போவது அவனின் வழக்கமாகிவிட்டது. இடையிடையே எப்போதாவது ஒரு தடவைவந்து பொன்னம்மாளோடு சண்டைபிடித்து நகையோ எதுவோ அகப்படுவதை அவளிடம் பிடுங்கிக் கொண்டுபோவான்.........

* * *

மீனாட்சி, சுந்தரி, லட்சுமி மூவரும் பாடசாலைக்குச் சென்றுவிட்டார்கள். கீதா முற்றத்து மண்ணிலிருந்து விளையாடிக்கொண்டிருந்தாள். பத்தரை மணிவரையும் வாணியோடிருந்து பீடிக்கு 'லேபல்' ஒட்டிவிட்டு குளிப்பதற்கென்று எழுந்தாள் பாக்கியம். ஐந்துவயதானாலும் இந்த லேபல் ஒட்டும் வேலையில் வாணி மிகவும் கெட்டிக்காரி. ஓய்வு நேரங்களில் லேபல் ஒட்டிவைத்தால், பீடி உற்பத்தி நிலையத்திலிருந்து வாரத்தில் இரண்டு தடவைகள் ஒரு பையன் வந்து இருப்பதைக் கணக்குப் பார்த்து எடுத்துப்போவான். முஸ்தாபாவின் ஏற்பாடு இது. இதனால் வாரத்தில் பத்துரூபா வரையில் பாக்கியத்துக்கு மிகுதியாக இருக்கும்.

பாக்கியம் குளித்து முடித்து தாயாருக்கு வெந்நீரும் கலந்து வைத்துவிட்டு வந்து சமையலைத் தொடங்கி முடிக்கும் போது நேரம் ஒரு மணிக்கு மேலாகிவிட்டது. கொல்லைப்புறப் பக்கம் சென்று மாடுகளுக்கு தண்ணீரும் வைத்து வைக்கோலும் பிரித்துப் போட்டாள்? காளைக் கன்றுக்குட்டி அவளின் காலோடு முகத்தைத் தேய்த்துவிட்டு முட்டப் பார்த்தது.

"சும்மா இரடா வடுவா" பாக்கியம் செல்லமாக அதட்டிய படி அதன் முதுகை நீவிவிட்டாள். தாய்மாடு எங்கோ பார்த்த பார்வையாகக் கத்திக்கொண்டிருந்தது.

"மாட்டைத் தேடுதுபோலை......" என்று எண்ணிக் கொண்டாள் பாக்கியம். பொன்னுத்துரை வரும் சமயத்தில் சொன்னால் அவன் இதற்கு ஒழுங்கு செய்வான்.

பாக்கியம் கைகளைக் கழுவிவிட்டு வந்து, வாணிக்கு சோறு போட்டுக் கொடுத்துவிட்டு கீதாவுக்கு பிசைந்து ஊட்டத் தொடங்கினாள். இந்தவேலை முடிவதற்குள் லட்சுமி பாடசாலையிலிருந்து வந்துவிட்டாள். அவள் ஒன்றரை மணிக்கு வருபவள். மீனாட்சியும் சுந்தரியும் நாலுமணிக்குப் பின் தான் வருவார்கள்.

பாக்கியத்துக்குப் பசி வந்துவிட்டது. தாயாருக்குக் கோப்பையில் சோறுபோட்டு வாணியிடம் அனுப்பிவிட்டு லட்சுமியோடு உணவருந்த உட்கார்ந்தாள்.

திடீரென்று செல்லையாவின் குரல் வெளியே கேட்கத் தொடங்கியது. எடுத்த முதல் கவளத்தை அப்படியே தட்டில் வைத்து விட்டு, கூர்மையாகக் கவனித்தாள் பாக்கியம். முன்னாலிருந்த லட்சுமி வாயினுள் போட்ட சோற்றை விழுங்கமுடியாமல் பயத்தினால் விழித்தாள். வெளியே விளையாடிக்கொண்டிருந்த கீதா "அக்கா" என்று திணறியவாறு ஓடிவந்து பாக்கியத்துக்குப் பின்னால் ஒளித்துக் கொண்டு நின்றாள். வாணியும் தலைதெறிக்கும் வேகத்தில் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

தங்கைமாரின் முகங்களில் தெரிந்த பயத்தைக் கவனித்தபோது, பாக்கியத்துக்கு தாங்கமுடியாத ஆத்திரம் உண்டாகியது. சிரமத்துடன் தன்னை அடக்கியபடி, "நீ சாப்பிடு லட்சுமி" என்று லட்சுமியின் முதுகில் தட்டினாள். தானும் ஒரு கவளம் சோற்றை எடுத்து வாயினுள்போட்டுக்கொண்டாள்.

ஆரம்பத்தில் செல்லையாவின் குரல் தான் கேட்டுக் கொண்டிருந்தது. முன்பின் முரணாக எதைஎதையோ

கூறிப் பொன்னம்மாளைத் திட்டினான் அவன். அவளால் தானும் அவனது வாழ்வு பாழானது. இல்லாவிடின் அவன் நன்றாக இருந்திருப்பானும். அவள் ஏதோ வசிய மருந்து போட்டு தன்னை மயக்கி எடுத்து விட்டாளாம். அவனது குற்றச் சாட்டுகள் நீண்டு கொண்டேயிருந்தன. இடையிடையே ஆபாசமான வார்த்தைகளையும் பிரயோகித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் செல்ல பொன்னம்மாளின் குரலும் உச்சஸ்தாயியில் கேட்கத் தொடங்கியது.

''நாசமாப் போறவனே. என்னை நிம்மதியாகச் சாக விடமாட்டாயா நீ?''

''நீ எங்கேயடி நிம்மதியாகச் சாகப்போறாய்? சிவலிங்கனை உயிரோடே தெருத்தெருவா அலையவைச்சு சாகடிச்சவளில்லையா நீ. அவன் தவறிப் போயா காரிலே விழுந்தான். இல்லையடி இல்லை. உன் ஆட்டத்தாலை ஊருக்கு முகம் கொடுத்து வாழமுடியாமே அவனு குறுக்கே விழுந்து செத்தான்.

சுரீரென்று நடு இதயத்தில் எதுவோ குத்திவிட்டாற் போல் உடலைச் சிலிர்த்துக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தாள் பாக்கியம். கையிலிருந்த சோற்றுக் கவளம் அவளையறியாமலேயே நழுவித் தட்டில் விழுந்தது. அவளது அப்பா காரில் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த காட்சி, அப்போது நடப்பதுபோல் அவளின் கண்களின் பிரமையாகத் தெரிந்தது. 'இப்படியும் இருக்குமோ?' என்று நெஞ்சு துடிக்க எண்ணிப்பார்த்தாள். ''அவமானம் தாங்கமுடியாமல் அப்பா தானாகத்தான் தற்கொலை செய்து கொண்டாரோ?''

பாக்கியத்துக்கு நினைத்துப் பார்க்கவே உடல் நடுங்குவது போலிருந்தது. விறுவிறுவென்று உணர்ச்சி பொங்கி, அவளை நிலைகுலையச் செய்து கொண்டிருந்தது.

வெளியே, செல்லையாவுக்கும் பொன்னம்மாளுக்கும் இடையில், வாக்குவாதங்களும் ஏச்சுப்பேச்சுக்களும்

வளர்ந்து கொண்டேயிருந்தன. சீதா பயமிகுதியால் கண்கள் சொருக கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தாள். லட்சுமியும், வாணியும் திருதிருவென்று விழித்தபடிபாக்கியத்தின் முகத்தையே பார்த்தபடி நின்முர்கள்.

பாக்கியத்துக்கு நிதானம் அடியோடு போய்விட்டது. சோற்றுக்கையை உதறிக்கொண்டு வெறிபிடித்தவள் போல் எழுந்தாள். எப்படி வெளியே வந்தாளென்பது அவளுக்கே தெரியாது.

''என்ன சத்தம் இங்கே?'' அவள் போட்ட கூச்சலில் பொன்னம்மாள் மட்டுமல்ல செல்லையாகூட ஒரு சில விநாடி நேரம் அசந்துவிட்டான்.

''இதோ பாருங்கோ'' என்று கத்தினுள் பாக்கியம்.

''இனி இந்த வீட்டிலே இப்படியொரு சண்டை நடந்தால் இரண்டு பேருமே ரோட்டிலேதான் போய் நிக்க வேண்டியிருக்கும். புரிஞ்சுதா?''

பொன்னம்மாள் மெல்லப் பின் வாங்கி தனது அறைக்குள் போய்ப் புகுந்து கொண்டாள். செல்லையா அடிபட்ட நாய்போல அலற ஆரம்பித்து விட்டான்: ''அடி வாய்க் கொழுப்புப் பிடிச்சவளே,உனக்கு இத்தினை திமிரா.''

பாக்கியம் பயங்கரமான ஒரு நிதானத்துடன் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். செல்லையா தனது தாயாரோடு தொடர்பு கொண்டதன்பின் அன்றுதான் முதல் முறையாக இப்படி அவனை நேருக்கு நேராகப் பார்க்கிருள் அவள். அவளின் கண்களின் எரியும் கொள்ளியின் சுவடுகள் தெரிந்தன.

''இதோ பார் கடைசியும் முதலுமா உனக்கு இன்றைக்குச் சொல்றன். இனி இந்த வீட்டிலே இப்படி உன்ரை குரல் கேட்டால் நீ பொலிசிலே போய்த்தான் இருக்கவேண்டியிருக்கும். வாறதென்ரு மரியாதையா வந்து மரியாதையாய் போ. உன்ரை பிள்ளையளைப்பார்க்க விரும்பினுப்பார். ஆனு, சத்தம்கித்தம் இருக்கக்கூடாது. புரிஞ்சுதா?''

நறுக்குத்தெறித்தாற்போல் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டு திரும்பி விரைவாக உள்ளே சென்று விட்டாள் அவள்.

''பாக்கிறனடி பாக்கிறன்'' என்று துள்ளிக் குதிக்கத் தொடங்கிவிட்டான் செல்லையா. ''பெட்டைச்சி என்னைக் 'கன்ரோல்' பண்ணப் போருளாம். நேத்துப் பெய்த மழைக்கு முளைச்ச காளான். உன்னை... உன்னை...'' தொடர்ந்து ஆபாசமான வார்த்தைகளால் அவளைத் திட்டினுன்.

முஸ்தாபாவின் வீட்டு மதில்சுவருக்கு மேற்புறத்தால் அவரின் மனைவியான சித்தி உம்மாவின்முக்காடிட்டதலை தெரிந்தது. செல்லையா சட்டென்று வாயைமூடிக்கொண்டு சாரைப் பாம்புபோல் மெல்ல அங்கிருந்துவெளியே நழுவி விட்டான். அவன் எந்த நிலையிலிருந்தாலும் வேலாயுதத்தையோ அல்லது முஸ்தாபாவின் வீட்டிலுள்ளவர்களையோ கண்டால் அடங்கி ஒடுங்கிவிடுவான்.

அவள் கண்பார்வையிலிருந்து மறையும் வரையும் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, அப்படியே சுற்றி வாசல் பக்கத்தால் பாக்கியத்தின் வீட்டினுள் வந்தாள் சித்தி உம்மா.

பாக்கியம் கையைக்கூடக் கழுவாமல் சுவரோடு சாய்ந்தபடி அமர்த்திருந்தாள். லட்சுமியும் வாணியும் மூலைக்கொருவராகப் பயந்தபடி நின்ருர்கள். கீதா பய மிகுதியாலேயே தூங்கிவிட்டாள்.

சித்தி உம்மா மெல்லப் பாக்கியத்தின் அருகே சென்று, அவளின் தோளில் கையை வைத்தாள்.

''பாக்கியம்!''

பாக்கியம் மெல்லத் திரும்பி அவளைப் பார்த்தாள். மளமளவென்று கண்களில் நீர் பொங்கத் தொடங்கியது.

''சீச்சீ... என்ன பிள்ளை இது?'' என்றுகடிந்துகொண்டாள் சித்தி உம்மா.'' உன்னை என்னவோ நினைச்சன். நீயா இப்படிச் சின்னப்பிள்ளையாட்டம் கண்கலங்கிருய்.''

பாக்கியம் சேலைத்தலைப்பால் அவசரமாகக் கண்களை துடைத்தபடி சிரிக்க முயன்முள்.

''இல்லையக்கா... ஏதோ மனசை விட்டிட்டன் இன்றைக்கு.''

''அவன்ரை குரல் கேட்டப்போ வழக்கம்போல வெறியிலே கதைக்கிருனென்று பேசாமே இருந்தன். பிறகு உன்ரை குரல் கேட்டப்போதான் மனம் பொறுக்க முடியாமை வந்து பார்த்தன். நீதான் ஒருநாளும் கதைக்க மாட்டியே பிள்ளை. இன்றைக்கு என்ன வந்தது உனக்கு?''

சித்தி உம்மாவுக்கு என்ன காரணத்தைச்சொல்வதென்ற தயக்கத்துடனும், எதையாவது கூறத்தானே வேண்டுமென்ற நினைவுடனும் ''வந்து... அக்கா...'' என்று ஆரம்பித்தவள், வெளியே காரொன்று வந்து நிற்கும் ஓசையைக் கேட்டதும் ''ஆரோ வாருப்போல இருக்கு'' என்று கூறிவிட்டு விரைந்து வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். அவளுக்குப் பகீரென்றது.

பச்சைநிறக் காரொன்று வெளியே நின்றது. அதன் பின் ஆசனத்திலிருந்து சுந்தரியும் மீனுட்சியும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பாடசாலை ஆசிரியை ஒருத்தி உள்ளே உட்கார்ந்திருந்தாள்.

பாக்கியத்துக்கு பயத்தினுல்உடல்வெடவெடவென்று நடுங்கத் தொடங்கிவிட்டது. அதை அதிகமாக்குவது போல் அவளைக் கண்டதும் சுந்தரி கைகளிலிருந்த பாடப் புத்தகங்களைக் கீழே போட்டுவிட்டு அழ ஆரம்பித்தாள்!

# 4

வேலாயுதத்தின் வீடு நாற்சார வீடு. நட்டநடுவாக சிறு முற்றம் போலிருந்த 'சீமேன்ட்' தரையில் எந்நேரத்திலும் மருந்துக்கு எடுக்கக்கூடிய வேர்களோ கொடிகளோ காய்ந்து கொண்டிருக்கும்.

வாசல் 'கேற்றின்' இருபுறங்களிலும் இரண்டு விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டிருக்கும். எஸ். வேலாயுதம்-நாட்டு வைத்தியர் என்று ஒன்றிலும், பிரபல மாந்திரீகர்-பில்லி சூனியங்கள் முதலியவை எடுக்கப்படும்என்று மற்றதிலும் எழுதப்பட்டிருக்கும்.

நாட்டு வைத்தியரென்று அருகிலுள்ள ஆட்களைத் தவிர காய்ச்சல், தலைவலிஎன்றுகூட வெளியாட்கள் அவரிடம் வருவதில்லை. ஆனால், இன்னொரு வகையில் மிகவும் வேண்டப்பட்டவர் அவர். சொல்லக்கூடாத, வரக்கூடாத வருத்தம் ஒரு ஆணுக்கோ பெண்ணுக்கோ வந்தால் அந்த நபர் உடனே வேலாயுதத்திடம் வரவேண்டியது தான். ஒரு மண்டல மருந்தோடு நோயை பறக்கவைத்து விடுவார் அவர். இரகசியநோய் இரகசியமாகவேபோய்விடும். இதைத் தவிர சில பணக்காரக்குடும்பங்களிலுள்ள பெண்களுக்கு ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் கர்ப்பம் உண்டாகி அது வேண்டாததாக இருந்தால் வேலாயுதத்திடம் வந்து ஒரு வேளை மருந்தை உண்டாலே போதும். எத்தனை மாதம் வளர்ச்சியடைந்த கருவாக இருந்தாலும் அதன் உயிர்த்துடிப்பு ஓய்ந்து வெளியே வந்துவிடும். இந்த வயதில் சில கன்னிப் பெண்களின் பெற்றோர்களுக்கு தெய்வம் போல் கைகொடுப்பவர் அவர்.

ஃ ஃ ஃ

மதிய உணவை முடித்து விட்டு வெற்றிலையைக் குதப்பியபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார் வேலாயு

தம். கவலையும் எரிச்சலுமாகப் பொன்னுத்துரையைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தார் அவர். காலையில் பவள மணி அம்மாள் அவனுக்குப் பரீட்சைக்குப் பணம் கொடுத் ததிலிருந்து அவர் 'கர்புர்'ரென்று தான் இருக்கிறார்.

''புத்தகத்தை கையாலேகூடத் தொட்டுப்பாக்க மாட் டார் துரை. வருஷா வருஷம் காசு கட்டுறதிலே மட்டும் குறைவில்லே'' என்று தொடங்கி பவளமணி அம்மாளிடம் ஒரு பாட்டம் கத்தித் தீர்த்துவிட்டார் அவர்...

''பெரியம்மா......'' வெளியேயிருந்து கேட்ட மீனாட்சி யின் குரல் வேலாயுதத்தின் சிந்தனையைக் கலைத்தது. திரும் பிப்பார்த்து விட்டு ''என்ன மீனாட்சி? உள்ளே வாவன்'' என்றார். மெல்லத் தயக்கத்தோடு உள்ளே வந்தாள் மீனாட்சி. அவளின் முகத்தில் புதுமையானதொரு மகிழ்ச் சிக்களை பரவியிருந்தது.

''பெரியம்மா இல்லியா பெரியையா?'' பாக்கியமும் அவளின் தம்பி தங்கைகளும் இந்த உறவு முறைகளால் தான் அவர்களை அழைப்பது வழக்கம்.

''குசினியிலே இருக்கிறாள். ஏன் என்ன விஷயம்?''

''பெரியம்மாகிட்டேயே சொல்றன்'' என்று சமைய லறையை நோக்கி ஓடினாள் மீனாட்சி.

அடுத்த சில நிமிஷங்களுக்குள் ''இந்தக்கூத்தைக்கேட் டியளா?'' என்று வியப்புடன் சேலைத்தலைப்பால் கைகளைத் துடைத்துக் கொண்டு வந்தாள் பவளமணி அம்மாள். ''சுந்தரி பெரிசா விட்டாளாம்.''

''சுந்தரியா?'' என்று வியப்புடன் கேட்டவேலாயுதம் அவள் கூறியதை நம்பமுடியாதவராக எழுந்து போய் வெற்றிலை எச்சிலை துப்பி விட்டு வந்து மறுபடியும் கேட் டார்: ''சுந்தரியா பெரிசா விட்டாளாம்?''

''ஓமங்கிறேன். விடியவிடிய இன்னும் பதினொரு வயசு கூட முழுசா ஆயிராது... உம்... அதுக்குள்ளே அவசரப் பட்டுப் போச்சு...''

''அவளா அவசரப்பட்டாள்...'' வேலாயுதம் சிரித்து விட்டு மீனாட்சியைப் பார்த்துக் கிண்டலாக வினவினார். ''அக்காக்காரி இவள் ஏன் இன்னும் வேண்டாமென்றிட்டு இருக்கிறாள்.''

பவளமணி அம்மாளுக்கு பின்புறம் வந்து நின்ற மீனாட்சியின் முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது. கூச்சத்துடன் உடலை வளைத்தபடி ''போங்கோ பெரியையா'' என்று சிணுங்கிவிட்டு அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள்.

''நான் போய்ப் பாத்திட்டு வரட்டா'' என்றாள்பவள மணி அம்மாள். வேலாயுதம் வெற்றிலைத் தட்டிலிருந்த புகையிலையில் ஒரு துண்டைக் கிள்ளி முகர்ந்து வாயினுள் போட்டவாறே தலையை ஆட்டினார்.

''உம்...போ.நேற்று நெய்ப்போத்திலொன்று வாங்கி வைச்சனே அதையும் நெல்லில் ஒரு பத்துக் கொத்தும் கொண்டு போய்க் குடு.''

''இனித் தான் பாக்கியத்துக்கு பொறுப்பு. இவளும் இப்பிடி ஆயிட்டாள் கெதியிலே. மீனாட்சியையும் எப்ப வென்று சொல்லேலாது...'' என்று கூறிக் கொண்டே உள்ளே நகர்ந்த பவளமணிஅம்மாளிடம் வேலாயுதம் கூறினார்:

''அவள் சமாளித்து விடுவாள்.கெட்டிக்காரப்பெண்''

பவளமணிஅம்மாள் பாக்கியத்தின் வீட்டுக்குப்போய்ச் சற்று நேரம் சென்றதன் பின்னரே பொன்னுத்துரை வீட்டுக்கு வந்தான். காலையில் பரீட்சைக்குக் கட்டப்பணத் தோடு போனவன் எங்கெல்லாமோ அலைந்து திரிந்துவிட்டு அப்போது தான் திரும்பி வருகிறான். பசி அவன் வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருந்தது. சைக்கிளை நிறுத்தி விட்டு கிணற்றடிக்குப் போய் கைகால்களைக் கழுவிக் கொண்டு திரும்பியவன் சமையலறைக்குப் போய் உணவைத் தானாகவே போட்டு உண்ண ஆரம்பித்தான். அன்னை தான் உணவு பரிமாறவேண்டுமென்ற அவசியமில்லை அவனுக்கு.

இளமைப் பருவத்திலிருந்தே தனக்கு வேண்டிய எதையுமே தானுகவே செய்து கொள்ளும் பழக்கம் அவனுக்கு.

உணவை முடித்துக் கொண்டு அவன் வரும் போது வேலாயுதம் தனக்குள்ளேயே பேசிக் கொள்பவர் போல் அவனுக்குக் கேட்குமாறு சொன்னுர்:

"சுந்தரி பெரிசா விட்டாளாம். கொம்மா அங்கை தான் போட்டாள்."

"சுந்தரியா?" என்று வியப்புடன் கேட்க வாயைத் திறந்தவன் தந்தையாருடன் நேருக்கு நேர் நின்று கதைக்கும் வழமையில்லாததால் ஒன்றும் கூறுமல் தனது அறையை நோக்கிச் சென்றுன்.

அவனது அறையினுள் நுழைந்ததுமே நேர் எதிரே சுவரோரமாகஇருக்கும் புத்தகம் வைக்கும் 'ஷெல்ப்' தான் கண்களில் படும். படிக்கிற பாடப்புத்தகங்களைவிட நாவல்கள் தான் அவனிடம் அதிகம். இலங்கை எழுத்தாளர்கள், இந்திய எழுத்தாளர்கள் என்ற பேதமில்லை அவனிடம். யார் எழுதியிருந்தாலும் நாவலென்றுல் போதும் அவனுக்கு. கடைக்கு விற்பனைக்கு வந்த முதல் நாளே காசு கொடுத்து அதைவாங்கி வந்து விடுவான்.

அந்த 'ஷெல்ப்'புக்கு அருகேயிருந்த கதிரையில் சென்று அமர்ந்த பொன்னுத்துரையின் மனதில்சுந்தரியின் நினைவு தான் சுழன்று கொண்டிருந்தது.

இன்றுவரை அவளை ஒரு சிறு குழந்தையாகத்தான் எண்ணிப் பார்த்திருக்கிறுன் அவன். உடலால் வளர்ச்சியடைந்திருந்தாலும் உள்ளத்தின் வளர்ச்சியில் சிறு பெண் அவள். காலையிலோ மாலையிலோ அவளின் வீட்டுக்குப் போகும் போதும் அவள் எதிர்ப்பட்டால் செல்லமாக அவளுக்குக் குத்தொன்று கொடுத்து விட்டு பதிலுக்கு அவளிடம் ஒன்றுக்கு நாலாகவாங்கும் வழக்கம்இன்னும் அவனுக்குப் போகவில்லை. பாக்கியத்தின் தங்கைமார்களுக்குள்ளேயே அவன் அளவுக்கதிகமாகவாயாடுவது சுந்தரியுடன் தான்.

''அக்காவுக்கு இனிக்கஷ்டம் தான்'' என்று எண்ணிக் கொண்டான் பொன்னுத்துரை. இப்போதே உறங்கும்சமயத்தைவிட மற்றநேரங்களில் ஓய்வென்பது சிறிதுமே இல்லாதவள் பாக்கியம். இந்தப் பொறுப்பும் இப்போது சேர்ந்து விட்டது. ஒரு வயதுக்கு வந்த பெண்ணை வீட்டில் வைத்திருக்கிறதென்றால் இலேசானதா?

பொன்னுத்துரை பெரிய மனிஷனைப் போல் கவலையோடு சிந்தித்துக்கொண்டிருந்தான். பாக்கியம் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினைகளுமே அவனுக்கு அந்நியமாகப்படுவதில்லை. தனது விஷயத்திலும் அதிகமான அக்கறையும் ஆவலும் அவனுக்கு அவைகளிலிருக்கும்.

பாக்கியம் அவன் வரையில் ஒரு புதுமைப் பெண். மதித்துப் போற்ற வேண்டிய ஒருத்தி. அபூர்வத்திலும் அபூர்வமாகப் பொன்னம்மாளுக்குப் பெண்ணாக வந்து பிறந்தவள். இல்லையெனில் இத்தனை துணிவாக வாழ்க்கையில் குறுக்கிட்ட கஷ்டநஷ்டங்களைச் சகித்து ஒரு நேர்மையான வாழ்வுக்குவித்திட்டிருப்பாளா?வேறு இடங்களிலென்றால் பெற்றவள் நடத்தை பிசகிவிட்டால் பெண் அவளுடன் சண்டைபிடித்துப் பார்த்து விட்டுப் பேசாமல் மௌனமாகியிருந்து வாழப் பழகிக்கொள்வாள். அல்லது தற்கொலை செய்து தனது எதிர்ப்பைக்காட்டத்துணிந்திருப்பாள். இன்றைய உலகில் இயல்பாக நடப்பது இவ்வளவு தானே?

பவளமணி அம்மாள் பாக்கியம் வீட்லிடிருந்துதிரும்பி விட்டதற்கு அடையாளமாக அவளின் குரல் வெளியே கேட்டது. அங்கே நடந்ததை சுவாரஸ்யமாகக் கணவனிடம் விபரித்துக்கொண்டிருந்தாள் அவள்.

சுந்தரி பாடசாலையிலேயே 'பெரியமனிஷி' யாகி அவளின் ஆசிரியை ஒருத்தி அவளை அழைத்து வந்திருந்தாளாம். வந்ததிலிருந்தே ஒரே அழுகைதானும்; ஏதோ நடக்கக்கூடாதது நடந்தது மாதிரி. எல்லோரும் தேறுதல் கூறி அப்போதுதானும் சிறிது சமாதானமாகியிருக்கிறாள்.

பவளமணி அம்மாள் இதைக்கூறி விட்டு இன்னொரு விஷயத்தையும் இரகசியமாகக் கணவனிடம் கூறினாள்:

''என்னங்க? சித்தி உம்மா வந்திருந்தாள். அவளின்ரை முகமே சரியில்லை. அவளின்ரை பிள்ளை பன்ரெண்டு வய சாகியும் இன்னும் பெரியவளாகாம இருக்கிறுளே அந்தக் கவலை போலே இருக்கு.''

உள்ளேயிருந்து இந்த உரையாடலைக் கேட்டுக்கொண் டிருந்த பொன்னுத்துரைக்குச் சிரிப்புத் தான் வந்தது. 'இப்படியும் ஒரு பொருமையா?'

இந்தச் சமயத்தில் யாரோ ஒருவர் சாஸ்திரம்பார்க்க வென்று வேலாயுதத்திடம் வரவே, பவளமணி அம்மாள் பேச்சைப் பாதியில் விட்டுவிட்டு எழுந்து உள்ளே போய் விட்டாள்.

போய்ச் சுந்தரியைக் கேலி செய்ய வேண்டுமென்றுஎண் ணிக் கொண்டு எழுந்து வெளியே வந்தான் பொன்னுத் துரை. சாஸ்திரம் பார்க்க வந்திருந்த மனிதர் வேலாயுதத் தின் முன்னுல் உட்கார்ந்திருந்தார். மெலிந்த கூன்விழுந்த அவரின் உடல்தோற்றம் பொன்னுத்துரையின் நெஞ்சை உறுத்துகிறுற்போலிருந்தது. ஏதோ ஒரு கஷ்டத்தைக்கூறி அழுது விட்டு ஐந்து ரூபா பணத்தையும் தாரை வார்க்க வந்திருக்கிறுர் இந்த மனிதர் என்று எண்ணிக் கொண்டே வெளியே நடந்தான் பொன்னுத்துரை. தகப்பனுரின் சாஸ்திர ஞானத்தில் அத்தனை அவநம்பிக்கை அவனுக்கு.

'கேற்'றைத்திறந்து கொண்டு வெளியே வரும்போது சுந்தரமூர்த்தி எதிர்த்தாற் போல் வருவதைக் கவனித் தான் பொன்னுத்துரை. முன்புறமாக வாரிச் சுருட்டப் பட்ட அவனது தலையின் 'ஸ்டைலை'யும் அரைக்கால் சட் டையை அரைவாசியாக்கித் தைத்தது போல் தொடை களை இறுகப்பற்ற அவன் அணிந்திருந்த கால்சட்டையின் அலங்கோலத்தையும் பார்த்தும் பார்க்காதவன் போல் வேகமாக நடந்தான் பொன்னுத்துரை. சில நாட்களா

கவே சுந்தரமூர்த்தியிடம் ஏதோ மாறுதல்கள் தெரிவது போல் அவனுக்குத் தோன்றியது. ஆனாலும், அதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்ற வில்லை......

பொன்னுத்துரையைக் கண்டதும் பாக்கியத்தின் முகமே பெருமையால் சிரிப்பது போலிருந்தது. அருகே வந்து கேட்டாள்:

''தம்பி! விசேஷம் கேள்விப்பட்டியா?'' பொன்னுத் துரை சிரித்தபடி தலையை ஆட்டினான். அப்போது தான் பின்னால் வந்த சுந்தரமூர்த்தியும் உள்ளே வந்து கொண் டிருந்தான். பாக்கியம் அவனிடமும் கூறினாள்:

''சுந்தரி பெரியவளாயிட்டாளடா சுந்தர்!'' சுந்தர மூர்த்தியின் முகத்தில் எந்தவித மாறுதலும் தெரிய வில்லை. 'கல்லுளி மங்கன்' போல் தன்பாட்டுக்கு உள்ளே போய்விட்டான் அவன்.

''என்னக்கா ஒரே அழுகையா அழுதாளாமே?'' என்று விசாரித்தான் பொன்னுத்துரை.

''அதை ஏன் கேக்கிறாய் தம்பி. காரிலே வந்திறங்கி அவள் அழத்துடங்க எனக்கு உயிரே போட்டுது. பிறகு பாத்தால் இது.''

''இப்ப எங்கை போட்டாள் அவள்?''

''பின் பக்கம் விட்டிருக்கு. போய்ப் பாரேன். உம்... தேத்தண்ணி போடப் போறன். உனக்கும் போடவா?'' தேநீர் விஷயத்தை அவள் சிறிது தயக்கத்துடன் தான் கேட்டாள்.

''அதுக்கென்ன தாவேன்'' என்று பதில் கூறும்போது தான் இவள் ஏன் ஒரு நாளும் இல்லாத வழக்கமாக இப் படித் தயங்குகிறாளென்று அவனுக்கு வியப்புத் தோன்றி யது. பாக்கியம் அதைப் புரிந்து கொண்டவளாகக் கூறி னாள்:

''கன்னித் துடக்கு வீடு. அதுதான் கேட்டன்.''

''நல்ல துடக்குத் தான் போ.'' பொன்னுத்துரை சிரித்துவிட்டு சுந்தரியைத் தேடிக்கொண்டு பின்புறம் சென்றான்.

கொல்லைப்புறக் கதவோடு சாய்ந்தபடி இருந்த சுந்தரி அவனைக் கண்டதும் தலையைக் குனிந்து கொண்டாள். அழுதழுது வீங்கிப்போயிருந்த அவளின் முகத்தில் அப்போதும் அழுகைக்குறி தெரிந்தது. அவளைக் கேலி செய்ய மனம் வராமல் பொன்னுத்துரை மௌனமாகத் திரும்பி விட்டான்.

## 5

ஒரு வாரமாக சுந்தரமூர்த்தியுடன் இரண்டு புதிய நண்பர்கள் சேர்ந்திருந்தார்கள். ஒருவன் பெயர் பாரூக், மற்றவன் கந்தசாமி.

பாரூக் முஸ்தாபாவின் தூரத்து உறவுக்காரன். முஸ்தாபாவின் வீட்டுக்கு வந்திருந்த போது அங்கு வந்த சுந்தரமூர்த்தியோடு பேச ஆரம்பித்தவன் பத்து நிமிஷ நேரத்திற்குள் அவனோடு அட்டையாகவே ஒட்டிக்கொண்டுவிட்டான். மறுநாளே தனது நெருங்கிய நண்பன் கந்தசாமியையும் சுந்தரமூர்த்திக்கு அறிமுகம் செய்து வைத்து, வெகு விரைவிலேயே மூவரும் இணைபிரியாத நண்பர்கள் போலாகி விட்டார்கள்.

சுந்தரமூர்த்தி இயல்பாகவே வெகுளித்தனம் மிகுந்தவன். சிறிது நெருங்கிக் கதைத்து விட்டாலே மனதிலுள்ள இரகசியங்கள் யாவற்றையுமே வெளியே கூறிவிடுவான். இவனின் இத்தகைய குண நலன்தான் பாரூக்குக்கும், கந்தசாமிக்கும் இவன் மீது ஒரு காரியசித்தமான ஒட்டுதலை உண்டாக்கியதோ தெரியவில்லை. இல்லையெனில் அவர்களை விட ஆறேழு வயது இளையவனான சுந்திரமூர்த்தியோடு அத்தனை நெருக்கமாகப் பழகியிருக்க மாட்டார்கள்.

சிநேகிதமான இரண்டாம் நாளே சுந்தரமூர்த்தியை 'ஹோட்டல்'லுக்கு அழைத்துப் போய் இனிப்புப் பட்ச

ணங்களும், 'ரீ'யும் வாங்கிக் கொடுத்தார்கள். சுந்தர மூர்த்திக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. இத்தனை பெரிய உப சாரங்கள் அவனுக்குக்கிடைப்பதென்றால்...! போதாததற்கு கந்தசாமியும், பாருக்கும் 'ஹிப்பி ஸ்டைல்'லில் வளர்த் திருந்த தலைமுடியின் அழகும், கன்னப்புறக் 'கிருதா'வின் கம்பீரமும் அவனை அளவுக்கதிகமாக வசீகரித்தன.

அன்றைக்கு ஹோட்டலிலிருந்து வெளியே வந்ததும் மூவரும் உப்போடைக்கும் காந்தி பூங்காவுக்கும் இடையே யிருந்த ரோட்டில் நடக்க ஆரம்பித்தார்கள். கடைசியாகப் பார்த்த சினிமாப் படமொன்றில், கதாநாயகன் எப்படி பயங்கரமான எதிரிகள் ஐவரை 'கராட்டி' அடிமூலம் அடித்துத் துரத்தினுன் என்பதைப் பற்றி விபரித்துக் கூறிக்கொண்டிருந்தான் கந்தசாமி. பாருக் சிகரெட் ஒன் றைப் பற்ற வைத்து அவனிடம் கொடுத்துவிட்டு இன் ஞென்றைப் பற்றி சுந்தரமூர்த்தியின் பக்கம் நீட்டினுன். சுந்தரமூர்த்தி பதறிப்போய் விட்டான்.

''எனக்கு இதெல்லாம் பழக்கமில்லை, வேண்டாம்...''

''சும்மா குடி சுந்தர்'' என்று அவனின் தோளில் தட் டிக்கொடுத்தான் கந்தசாமி. ''இதுக்கெல்லாம் பழக்கம் வேணுமா?''

''அக்காவுக்குத் தெரிஞ்சால் கொன்று போடுவாள்'' என்றுன் சுந்தரமூர்த்தி நடுக்கத்தோடு.

''இங்கை அவள் வரப்போறுளா?'' கந்தசாமி அலட் சியமாகச் சமாதானம் கூற, பாருக்கும் குறுக்கிட்டுக் கூறி ஞன்.

''சுந்தர்! எங்களின்ரை சிநேகிதன் சிகரெட் குடிக்கி றேல்லையென்றுல் எங்களுக்கும் வெக்கக்கேடு.'' அதற்கு மேல் மறுக்க முடியாமல் பாருக்கிடமிருந்து சிகரெட்டை மெல்லவாங்கிக் கொண்டான் சுந்தரமூர்த்தி. சிகரெட்டை வாயில் பொருத்திக் கொள்ளும் போது பயத்துடன் தெரிந்தவர்கள் யாரேனும் வருகிறுர்களோ வென்று

சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டான். கந்தசாமி அவனது தோளின் மீது வலது கையைப் போட்டுக்கொண்டான்.

''சும்மா பயப்பிடாமல் குடி சுந்தர்''

சுந்தரமூர்த்தி சற்றுத் தைரியம் வந்தவனாக மெல்ல ஒரு இழுப்பு இழுத்தான். மறுவினாடி அடிவயிற்றிலிருந்து இருமல் பொங்கிக்கொண்டுவந்தது. மார்பைப் பிடித்தபடி நாலு தடவைகள் இருமித் தீர்த்தான். கண்களிரண்டிலும் நீர் சுரந்து விட்டது.

''சுந்தர் அவசரப்படாமல் மெல்ல இழுக்க வேணும்... இப்பிடி...'' பாரூக் ஒரு தடவைக்கு இரண்டு தடவைகள் புகை இழுத்துக் காட்டினான். கந்தசாமி இருவரையும் வேடிக்கை பார்த்தபடி வாயைக் குவித்து சிகரெட் புகையில் வளையங்களை உண்டாக்கிக்கொண்டிருந்தான்.

நாலைந்து தடவைகள் முயற்சி செய்ததன் பின்பு சிகரெட் எப்படிப் புகைப்பதென்று கற்றறிந்து விட்டான் சுந்தரமூர்த்தி. ''நீ கெட்டிக்காரன்தான்'' என்று சிலாகித்தான் பாரூக். ''மற்றவையளுக்கென்றால் நாள்கணக்கிலே செல்லும். உனக்கு நொடிக்குள்ளே தெரிஞ்சிட்டுதே'' சுந்தரமூர்த்திக்கு உச்சி குளிர்ந்து விட்டது. தனது கெட்டிக்காரத்தனத்தை மேலும் அவர்களுக்கு நிரூபிக்க இன்னொரு சிகரெட்டை தானாகவே கேட்டு வாங்கிப் பற்ற வைத்துக்கொண்டான். இடையே—

கந்தசாமியைப் போல் அவனும் புகைவளையங்கள் விட்டபோது அதுசரிவரவில்லை.

''இதுக்குப் பழக்கம் வேணும் தம்பி'' என்று சிரித்தான் கந்தசாமி.

அன்றும் சரி, மறுநாளும் சரி சுந்தரமூர்த்தி விரும்பி சிகரெட் புகைத்தானென்று கூறமுடியாது. ஆனால், மூன்றாம் நாள் அவனுக்கு அந்த ஆவலே உண்டாகிவிட்டது.

அன்று மூவரும் கல்லடிப் பாலத்தின் மீது, அதன் தடுப்புக் கம்பிகளின் மீது சாய்ந்தபடி நின்று பேசிக்

கொண்டிருந்தார்கள். சிகரெட் புகையில் வளையங்களை உண்டாக்கி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கந்தசாமி சட்டென்று அருகில் நின்ற பாரூக்கின் தோளில் இடித்த படி அவனின் காதில் ஏதோ கிசுகிசுத்தான். அடுத்து இரு வரும் கொல்லென்று சிரித்தார்கள். சிகரெட் புகையின் இதமான சுவையில் ஆழ்ந்து போயிருந்த சுந்தரமூர்த்தி திடுக்கிட்டு அவர்களைப் பார்த்தான்.

''சரக்குகள் வருகுது'' என்று பாலத்தின் மீது நடந்து வந்த இரண்டு கட்டைக் கவுண் போட்ட பெண்களைக் காட்டி கண்களைச் சிமிட்டினான் கந்தசாமி.

'சரக்கு' என்ற பாஷை சுந்தரமூர்த்திக்குப் புரிய வில்லை. அவன் ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டி ருக்க அந்தப் பெண்களும் அருகே வந்து விட்டார்கள். கந்தசாமி சிகரெட் புகையை அவர்களின் பக்கமாக ஊதி விட்டு சீட்டியடித்தான். இருவரும் திரும்பிப் பார்த்து விட்டு சிரித்தபடி தங்களுக்குள் எதையோ கூறிக்கொண்டு சென்றார்கள்.

''நாலு நாட்கள் மெனக்கட்டால் இந்தச் சரக்குகள் சுருண்டு போடும்''. கந்தசாமி அலட்சியமாக தனது அனுமானத்தைக் கூறும்போதுதான் 'சரக்கு' என்ற பதத் தின் பொருள் சுந்தரமூர்த்திக்குப் புரிந்தது.

''பெட்டையளைச் சரக்கெண்டா சொல்றது?'' என் றான் வியப்புடன்.

''இது தெரியாதா உனக்கு?'' இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அதன்பின், கந்தசாமி எத்தனையோ அந்தரங்கமான விஷயங்களையெல்லாம் விளக்கமாகச் சுந்தரமூர்த்திக்கு விபரித்தான். காதலில் தொடங்கி ஆண்-பெண் உடலுறவு வரையில் எதையுமே அவன் தவிர்க்கவில்லை.

''இதொன்றும் உனக்குத் தெரியாதா?'' என்றான் பாரூக் அனுதாபத்துடன்.

இல்லையென்ற பாவனையில் தலையசைக்கும் போதே சுந்தரமூர்த்திக்கு அவமானமாக இருந்தது.

''எல்லாம் கெதியிலே தெரிஞ்சு கொள்ளலாம்'' என்று அவனைத் தட்டிக்கொடுத்தான் கந்தசாமி. ''என்னெட்டை இரண்டு புத்தகமிருக்கு. எல்லாம் ஒரே படம். நாளைக்குக் கொண்டு வந்து காட்டிறன். பாத்தாயென்றால் எல்லாம் விளங்கிப்போம்.''

கந்தசாமி இதைக் கூறியதுடன் நின்றுவிடவில்லை. மறுநாள் குறிப்பிட்ட அந்த இரண்டு புத்தகங்களையுமே கொண்டு வந்து சுந்தரமூர்த்தியிடம் கொடுத்தான். வெளி நாடுகளிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டுவரும் ஆபாசப் புத்தகங்கள் அவை. ஆண், பெண் உறவை அப்பட்டமாகச் சித்திரிக்கும் நிர்வாணப் புகைப்படங்கள் அவற்றிலிருந்தன.

முதலில் ஒரு புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கும்போது சுந்தரமூர்த்திக்கு அருவருப்பாகவும் கூச்சமாகவும் இருந்தன. ஆனால், தொடர்ந்து படங்களைப் பார்த்துக் கொண்டிருக்க இந்த உணர்வுகள் அற்றுப் போய் அவைகளில் ஆர்வம் ஏற்படத் தொடங்கிவிட்டது. போதாததற்கு கந்தசாமி இவைகளுக்கு வேறு விளக்கம் கூறிக் கொண்டிருந்தான்.

''நாளைக்கு 'அடல்ஸ் ஒன்லி ஷோ'வொன்று போடுறார்கள். பார்த்தால் நல்லது'' என்று திடீரென்று ஆரம்பித்தான் பாரூக். கந்தசாமி உற்சாகத்தோடு தலையை ஆட்டினான்.

''ஓமடா, இவனையும் கூட்டிப்போனா நல்லது...... என்ன சுந்தர் நீயும் வருவாய்தானே?''

''அடல்ஸ் ஒன்லி' என்றா என்ன?'' என்றான் சுந்தரமூர்த்தி அசிரத்தையாக. அவனது கவனமெல்லாம் கைப் புத்தகங்களிலிருந்த படங்களில் இருந்தது.

''இது கூட உனக்குத் தெரியாதா? பதின்மூன்று வயசென்கிருய்... வேறே என்ன தெரியும் உனக்கு?'' கந்தசாமி சலிப்புடன் முகத்தைச் சுளித்து விட்டு, 'அடல்ஸ் ஒன்லி' என்பதன் அர்த்தத்தையும், அப்படியான சினிமாப் படங்களில் எத்தகைய காட்சிகளைக் காட்டுவார்கள் என்றும் விபரித்தான். சுந்தரமூர்த்திக்கு திடீரென்று கவலையொன்று வந்துவிட்டது. ''என்னைப் பாக்க விடுவினமா அதை?'' என்ருன். கந்தசாமி அலட்சியமாகக் கூறிஞன்:

''அடல்ஸ் ஒன்லி' என்றுதான் போடுறது சுந்தர். ஆனல், பத்து வயதுப் பொடியனும் போய்ப் பாக்கலாம். சிலவேளை முதல்நாள் 'ஷோ'வுக்கு கொஞ்சம் கடுமையாநிப்பாங்கள். பிறகு கூட்டம் குறைஞ்சதும் எல்லாஞ் சரியாப் போகும்...''

''அப்ப போவம்'' என்ருன் சுந்தரமூர்த்தி உற்சாகத்துடன்.

''போகலாந்தான்...'' பாருக் ஒரு இழுப்புடன் சுந்தரமூர்த்திக்குத் தெரியாமல் கந்தசாமியைப் பார்த்து கண்களைச் சிமிட்டி விட்டுத் தொடர்ந்தான். ''ஆனல், காசுதான் கையிலே இல்லாமலேயிருக்கு.''

''அதுக்கென்னடா! சுந்தரெட்டைச் சொன்ஞ கொண்டு வாருன்... என்ன சுந்தர்?'' சுந்தரமூர்த்திக்குப் பகீரென்ருலும் முகத்துக்கு முன்பு முடியாதென்று கூற அவமானமாயிருந்தது.

''கொண்டு வாறன்'' என்ருன். அக்காளின் பெட்டியிலிருக்கும் அவளின் சேமிப்புப் பணம் அவனது ஞாபகத்துக்கு வந்தது.

அன்று அங்கிருந்து வீட்டுக்குப் புறப்படும் போது கந்தசாமி சுந்தரமூர்த்தியிடம் கூறிஞன்:

''நாளைக்கு உனக்கொரு புத்தகம் கொண்டு வந்து தாறன் சுந்தர்.''

''என்ன புத்தகம்?''

''எல்லாம் இந்த விஷயத்தைப் பற்றித்தான்...'' கந்தசாமி இதைக் கூறிவிட்டுக் கண்களைச் சிமிட்ட, பாரூக் 'ஓ... ஹோ... ஹோ...' வென்று பலமாகச் சிரித்தான். சுந்தரமூர்த்தியும் தன்னையறியாமலேயே அந்தச் சிரிப்பில் சேர்ந்து கொண்டான்.

## 6.

காலையில் வந்திருந்த போது, சினைப்படுத்தும் இடத்துக்கு பாக்கியத்தின் மாட்டைக் கொண்டு போவதற்காக சீக்கிரம் திரும்பி வருவதாக அவளிடம் கூறிவிட்டுப் போயிருந்தான் பொன்னுத்துரை. ஆனல், வாடிக்கைக் கடைகளுக்குப் போய்விட்டுத் திரும்புவதற்குச் சுணங்கிவிட்டது. இடையில் தெரிந்த நண்பனெருவன் வேறு கண்டுவிட்டான். அவனேடு பேசிவிட்டுத் திரும்பும் போதே எட்டு மணிக்கு மேலாகிவிட்டது.

பொன்னுத்துரை சைக்கிளை வேகமாக மிதித்தபடி வந்து கொண்டிருந்தான். மாடுகள் சினைப்படுத்துகிற சின்னத்தம்பியாரின் வீட்டுக்குச் செல்வதற்கு மூன்று மைல் தூரம் நடக்க வேண்டும். வெயில் அதிகமாகிவிட்டால் சுடுமணலின் உஷ்ணம் ஆளை வறுத்தெடுத்து விடும்.

முஸ்தாபாவின் வீட்டுக் 'கேற்'றருகில் அவரின் மகளான சித்தி பரீதா நின்று இரு காகங்கள் கால்களினுல் ஒன்றையொன்று பற்றியபடி சண்டை பிடிப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள், பொன்னுத்துரை சைக்கிளின் வேகத்தைத் தளர்த்தியபடியே, ''இன்றைக்குப் பள்ளிக்கூடம் இல்லையா பிள்ளை?'' என்று அவளிடம் விசாரித்தான். சித்தி பரீதா நழுவிக் கிடந்த முக்காடை சீராக்கிக் கொண்டே கூறினுள்;

"இல்லையண்ணே இன்றைக்குச் சோதினை, பின்னேரந் தான் எனக்குப் பாடமிருக்கு."

"நல்லா எழுதி முதல் பிள்ளையா வரோணும்... என்ன?" அவள் வெட்கத்துடன் முகத்தைத் தாழ்த்திக் கொள்ள பாக்கியத்தின் வீட்டுப் படலையை சைக்கிளில் இருந்தபடியே இடது காலினால் திறந்துகொண்டு உள்ளே வந்தான் பொன்னுத்துரை.

"என்ன தம்பி! உடனே வாற நேரம் இதுதானா?" என்று சிரித்தபடி விசாரித்தாள் முற்றத்தில் நின்ற பாக்கியம். கீதாவுக்கு குளிக்க வார்த்துவிட்டு, அவளின் சட்டைகளை கழுவிக் கொண்டு வந்து அப்போது கொடியில் போட்டுக்கொண்டிருந்தாள் அவள்.

"நடேசு வழியிலே வந்திட்டானக்கா. கதைக்கத் தொடங்கினா லேசிலே விடமாட்டான் அவன்..."

"உன்னைப்போலதானே உன்ரை சிநேகிதனும் இருப்பான்" என்று மறுபடியும்சிரித்த பாக்கியம், 'புல்ஸ்காப்' பேப்பரும் கையுமாக மீனாட்சி பரீட்சைக்குப் போகும் ஆயத்தத்தோடு லட்சுமியுடன் உள்ளேயிருந்து வருவதை பார்த்துவிட்டு, "எல்லாம் மறக்காமல் எடுத்தியா மீனாட்சி" என்று விசாரித்தாள்.

"ஓமக்கா..."

பொன்னுத்துரையின் பார்வை மீனாட்சியின் நெற்றியில் பட்டையாகப் பூசப்பட்டிருந்த திருநீற்றுப் பூச்சில் பதிந்தது. கேலியாகக் கேட்டான்:

"சாமியை நல்லாக் காக்கா பிடிச்சிருக்காப்போலே இருக்கே?"

மீனாட்சி வெட்கத்துடன் உடம்பை வளைத்தபடி, "அக்கா போட்டு வாறன்" என்று பாக்கியத்திடம் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள். பாக்கியம் ஒரு அன்னையின் வாஞ்சையோடு தங்கையின்முதுகைத் தட்டிக்கொடுத்தாள்.

''கவனமா எழுதி வழக்கம் போல முதல் பிள்ளையா வரோணும். என்ன?'' மீனாட்சி உற்சாகமாகத் தலையாட்டி விட்டுச் சென்றாள்.

லட்சுமியும் அவளும் கண்பார்வையிலிருந்து மறையும் வரையும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றாள் பாக்கியம். அடுத்து அவளின் பார்வை கல்லடிப் பாலத்தின் மீது லயித்தது. கண்களில் இன்பக் கன வொன்றைக் காண்பது போன்ற மலர்ச்சியான பிரமை. முகத்தில் அந்தப் பெருமிதமான உணர்ச்சி...

''மீனாட்சி கவனமாப் படிக்கிறாள். இல்லையாக்கா?'' பாக்கியம், பொன்னுத்துரையின் கேள்வியால் கவனம் கலைந்தவளாக ''உம்... உம்...'' என்று அவனைப் பார்த் தாள். ''என்ன தம்பி சொன்னாய்?''

''மீனாட்சி நல்லாப் படிக்கிறாளென்று சொன்னன்.'' பாக்கியம் பெருமையோடு தலையை ஆட்டினாள்.

''ஓம் தம்பி... இவளை நல்லாப் படிக்க வைக்கப் போகிறன். எனக்கிருக்கிற ஒரே ஆசை அதுதான். இவள் படிச்சு இந்தக் குடும்ப மானத்தை தூக்கி நிறுத்தோணும், பொன்னம்மாளின் பிள்ளையள்தானே என்று இன்றைக்கு கேலியாப் பாக்கிறவையெல்லாம் நாளைக்கு வாயடைச்சு நிக்கோணும். இந்த ஒன்று மட்டும் என்ரை உயிர் இருக் கேக்கை நடந்திட்டால் காணும். அடுத்த நிமிடமே நான் நிம்மதியாக உயிரை விட ஆயத்தம்.''

பொன்னுத்துரைக்கு உள்ளமெல்லாம் உணர்ச்சி மிகு தியால் கரைவது போலிருந்தது.

''கட்டாயம் நடக்குமக்கா'' என்றான் குரல் தழு தழுக்க. ''வேறெ எதுக்காக இல்லாட்டிலும் உன்ரை ஏக் கத்துக்கும், ஆசைக்குமாவது அது கட்டாயம் நடக்கும்...''

சர்ரென்று வெளியே காரொன்று வந்து நிற்கும் ஓசை இருவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. கார்க் கதவு திறந்து மூடும் சத்தத்தைத் தொடர்ந்து ஒரு

சிறு சூட்கேஸோடு படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்துகொண்டிருந்தான் வடிவேலு.

''வா வடிவேலு'' என்றான் பொன்னுத்துரை. வழக்கத்தை விட பாக்கியத்துக்கு அன்றைக்கு அண்ணனைக் காணும் போது மகிழ்ச்சி அதிசமாக இருந்தது. அருகே விரைந்து சூட்கேஸை அவனது கையிலிருந்து வாங்கிய படியே, ''சுந்தரி பெரியவளாயிட்டாளண்ணை'' என்றாள்.

''சுந்தரியா?'' வடிவேலு வியப்போடு கேட்டான். இயற்கையிலேயே கடுகடுவென்றுஇருக்கும் அவனது முகத்தில் கூட அச்சமயம் சிறிது மலர்ச்சி தெரிந்தது.

''ஓமண்ணை, இன்றைக்கு ஐஞ்சு நாளாச்சு. நாளையின்றைக்கு ஏழாம் நாள். தண்ணிவாக்கலாமென்றிருக்கிறன். நீ வருவியோ மாட்டியோ என்று யோசிச்சுக் கொண்டிருந்தன்.''

பேசிக்கொண்டே மூவரும் வீட்டினுள் வந்து விட்டார்கள். பொன்னம்மாள் இருமிவிட்டு, 'கடவுளே!' என்றுபெருமூச்சு விடுவது கேட்டது.

வடிவேலு அவளைப் பற்றி எதுவும் விசாரிக்கவில்லை. சுந்தரியை அருகே அழைத்துப் பார்த்தான். சூட்கேஸைத் திறந்து ரப்பர் வளையல்களும், கிளிப்புகளும் அவளுக்குக் கொடுத்தான். இனிப்புப் பொட்டணமொன்றும் எடுத்துக் கொடுத்தான். ஒருபுறமாக நின்று அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த வாணியையோ, கீதாவையோ அவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. செல்லையாவின் தொடர்பில் தாயாருக்குப் பிறந்தபிள்ளைகளைக்கண்டாலே அவனுக்கு ஆகாது.

''நான் பிறகு வாறன் வடிவேலு'' என்று புறப்பட்டான் பொன்னுத்துரை.

''சிவப்பி மாட்டை ஒருக்கால் சின்னத்தம்பியாரிடம் கொண்டு போவேணும். போட்டுவாறன்.''

பாக்கியம் உள்ளே போய் ஐந்து ரூபா நோட்டொன்றை எடுத்து வந்து பொன்னுத்துரையிடம் கொடுத்தாள்.

''போனமுறையும் முதல் தடவை குழப்பி இரண்டாம் முறையும் ஐஞ்சு ரூபா குடுத்தது. சின்னத்தம்பியாரிடம் சொல்லு.''

தலையசைத்துவிட்டுப் பொன்னுத்துரை போனதன் பின், ''செல்லையன் இப்போ வாறேல்லையா இங்கை?'' என்று பாக்கியத்தை விசாரித்தான் வடிவேலு. அச்சமயத்தில் அவன் முகத்தைப் பார்க்கவே விகாரமாகத் தோன்றியது, ''இடைக்கிடை வாறான்'' என்று எரிச்சலோடு கூறிய பாக்கியம், தொடர்ந்து தமையனிடம் ஒரு வாரத்துக்கு முன்பு செல்லையா வந்து கண்டபடி ஏசியதையும், தான் அவனை எதிர்த்துக் கதைத்ததையும் கூறினாள். வடிவேலு கோபத்தோடு பற்களைக் கடித்தபடி மீசையை முறுக்கிக் கொண்டான்.

## 7.

பொன்னுத்துரை சின்னத்தம்பியாரின் வீட்டிலிருந்து திரும்பும் போது உச்சிவேளைக்கு மோலாகிவிட்டது. போன வேலை உடனே முடிந்துவிட்டாலும் சின்னத்தம்பியாரோடு உலக விவகாரங்கள் கதைத்துக் கொண்டிருந்ததில் நேரம் சென்றதே தெரியவில்லை அவனுக்கு. அவனுடைய பெரிய பலவீனமே இதுதான். யாரோடும் பேச ஆரம்பித்தானென்றால் எல்லா வேலைகளையுமே மறந்துவிடுவான் அவன்.

மணல் மேட்டுப் பகுதியை நெருங்கி வருவதற்குள் வெயில் சூட்டினால் கால்களிரண்டும் வெந்துவிட்டது போல் ஆகிவிட்டது. பாக்கியத்திடம் மோர் வாங்கிக்

குடித்துவிட்டு போய்ப் படுத்துறங்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டு வந்தவன் ஒழுங்கைத் திருப்பத்தில் திரும்பும் போது செல்லையா இரைந்து கத்திக் கொண்டிருப்பதைக் கேட்டுவிட்டு எரிச்சலோடு பிடரியைச் சொறிந்தான்.

''இந்த அறுவானுக்குக் காலநேரமே தெரியிறேல்லை''

முஸ்தாபா வீட்டு வாசலில் கேற்றைப் பிடித்தபடி நின்றசித்தி உம்மா அவனைக் கண்டதும், ''நீ இப்பதான் வாறியா?'' என்றாள் பரபரப்போடு. செல்லையனுக்கு இன்றைக்கு நல்ல வாங்கு வாங்கிவிட்டான் வடிவேலு. அது தான் நாயாட்டமா இப்பிடிக் கிடந்து கத்திறான்.

பொன்னுத்துரைக்கு யோசனை வந்துவிட்டது. வடிவேலுவின் முரட்டுக் குணத்தைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும். முஸ்தாபாவின் வீட்டிற்கு முன்புறமாக வளர்ந்திருந்த பூவரசம் மரத்தில் மாட்டின் கயிற்றைக் கட்டிவிட்டு பாக்கியத்தின் வீட்டை நோக்கி விரைந்தான்.

அம்மாவென்று கத்திவிட்டு கயிற்றை இழுத்துப் பார்த்தது சிவப்பி மாடு.

செல்லையா வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிக் கொண்டிருந்தான்.

''என்னை கைநீட்டி அடிச்சிட்டாயில்லே. இருந்து பாரடா உன்னையும் அந்தப் பெட்டைச் சிறுக்கியையும் என்ன செய்யிறேனென்று. இரண்டு பேரையும் கூண்டுக்குள்ளே கொண்டு போய் நிறுத்தாட்டி என் பெயர் செல்லையனுமில்லை; என்ரை அம்மா என்னை நல்லதனமாப் பெத்துக்கவுமில்லை''... தொடர்ந்தும் அவன் கத்திக் கொண்டேயிருந்தான்.

பொன்னம்மாள் பிள்ளைகளை ஒழுங்காகப் பெற்றுக் கொள்ளவில்லையாம். ஒவ்வொரு பிள்ளையையும் ஒவ்வொருத்தனுக்குப் பெற்றவளாம், வசியம் போட்டு ஆட்களைப் பிடிக்கிற குடும்பமாம் அந்தக் குடும்பம்......

காதுகொடுத்துக் கேட்கவே பொன்னுத்துரைக்குச் சகிக்க முடியாமலிருந்தது. படலையைத் திறந்து கொண்டு மெல்ல உள்ளே சென்றான்.

முற்றத்து வேப்பமரத்தின் கீழ் நின்றான் செல்லையா. சட்டையணியாத அவனது மார்பில் இரத்தம் வடிந்து போயிருந்தது. மூக்கும் உதடுகளும் கொழுக்கட்டையாக வீங்கிப் போயிருந்தன.

பொன்னுத்துரையைக் கண்டதும் செல்லையாவின் ஆவேசம் அதிகரித்துவிட்டது. பைத்தியக்காரனைப் போல் கை கால்களை வேகமாக ஆட்டியபடி இரையத் தொடங்கினான்.

பொன்னுத்துரை அவனைப் பார்த்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. வடிவேலுவோ, பாக்கியமோ அங்கு நிற்கிறார்களோவென்று இலேசாக அவதானித்து விட்டு உள்ளே சென்றான்.

வடிவேலுவை அறையினுள் தள்ளிப் பூட்டிவிட்டு வெளியே காவலுக்கு நின்ற பாக்கியத்துக்கு அவனைக் கண்டதும் அழுகை வந்துவிட்டது. சுந்தரி,லட்சுமி,வாணி மூவரும் பயத்தோடு திருதிருவென்று விழித்தபடி சுவரோரமாக நின்றார்கள். கீதா தரையில் கிடந்து அழுது கொண்டிருந்தாள். ''வடிவேலு எங்கையக்கா?'' என்று பாக்கியத்தினருகே வந்து மெல்ல விசாரித்தான் பொன்னுத்துரை. அவள் வாயினால் பதில் கூறாமல் கையினால் அறைக்குள் இருப்பதாக ஜாடை காட்டிவிட்டு அவனைத் தனியே ஒருபுறமாக அழைத்துப் போய்க் கூறினாள்:

''இவ்வளவு நேரமா கதவைத் திறவடி, கதவைத் திறவடி என்று கதவை அடிச்சுப்போட்டு இப்பதான் ஓய்ஞ்சு போயிருக்கிறான் அண்ணன். நீ போய் அந்தச் சனியனை எங்கையாவது இழுத்துக் கொண்டுப்போய் விட்டிட்டு வா. இல்லாட்டி அண்ணனை இன்று பூரா பூட்டித் தான் வைச்சிருக்கோணும். அவனுக்கிருக்கிற ஆத்திரத்

துக்கு இனிச் செல்லையனைக் கண்ணுக்கு முன்னாலே கண்டானென்டால் கழுத்தைப் பிடிச்சு முறிச்சுப் போடுவான்,''

''நீ பயப்படாதேயக்கா. நான் நிக்கிறன்தானே?''

பொன்னுத்துரை இதைக் கூறி வாய் ஓய்வதற்குள் பொன்னம்மாளின் அறைப்பக்கம் கூச்சலும் குழப்பமும் ஆரம்பமாகிவிட்டன.

''தேவடியாள் நாயே, எல்லாம் உன்னாலேதானடி. வசியம் போட்டு என்னை மயக்கிப்போட்டு என்னை இப்ப வந்தான் வரத்தானுக்கு வைச்சிருக்கப் பாக்கிறாய். இல்லாட்டி நேற்றுப் பிறந்த 'சேங்கு' எனக்கு கைநீட்டி அடிக்குமா? இன்றைக்கு உன்னை என்ன செய்யிறன் பார்'' தொடர்ந்து பளார்! பளாரென்று அடிகள் விழும் சத்தமும் கேட்டன.

''ஐயோ...! குறுக்காலே போவான் என்னைக் கொல்றானே'' என்று வீரிட்டாள் பொன்னம்மாள்.

வெளியே ஓடிப்போய்ப் பார்ப்போமென்று பொன்னுத்துரை எண்ணுவதற்குள் படாரென்று அறைக் கதவுக்கு உதைவிழும் சத்தம் கேட்டது. பூட்டியிருந்த கதவு எப்படித்தான் திறந்து கொண்டதோ தெரியவில்லை. வெறிபிடித்தவன்போல் வெளியே பாய்ந்து வந்தான் வடிவேலு. அவனின் கண்களும் முகமும் ஜிவுஜிவென்று சிவந்துபோயிருந்தன. தாடைகள் இறுகி அவனைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

சட்டென்று பொன்னுத்துரை தாவி அவனைப் பிடித்துக் கொள்வதற்குள், ''நில்லண்ணை!'' என்று கத்திக் கொண்டு பாக்கியம் அருகே வருவதற்குள் வடிவேலு வெளியே பாய்ந்து தாயாரின் அறைக்குள் நுழைந்து விட்டான். அவனது கைகளும் கால்களும் மின்னலாகச் செயல்பட்டன. இரண்டு அறைகள், ஒரு உதை. செல்லையா காற்றுப்போன பலூனாகச் சுருண்டு விழுந்து விட்டான்.

''இவனைக் கொல்லோணும்'' என்று நடுங்கிக்கொண்டே கத்தினுள் பொன்னம்மாள். மகன் துணைக்கு வந்திருக்கிறு னென்று அவளின் மனதில் ஒரு அற்ப தெம்பு. வடிவேலு வின் வலது புறங்கை பளீரென்று அவளின் முகத்தில் பதிந் தது.

''எல்லாம் உன்ரை ஆட்டத்தாலதானடி வந்தது நாயே'' பொன்னம்மாள் அலறக்கூடத் தெம்பில்லாமல் தொப்பென்று அப்படியே இருந்து விட்டாள்.

பொன்னுத்துரையும் பாக்கியமும் ஓடிவந்து ஆளுக் கொரு பக்கமாக வடிவேலுவின் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டார்கள்.

''என்னை உயிரோட சாகவைக்கத்தான் இன்றைக்கு நீ வந்திருக்கிருய்'' என்று தமையனின் மேல் எரிந்து விழுந்தாள் பாக்கியம். வடிவேலு ஆத்திரம் தணியாத வனுகத் திமிறிக் கொண்டே கத்தினுன்;

''என்னை விடடி. இன்றைக்கு இவனைக் கொன்று புதைக்கிறன்''.

''பொறு வடிவேலு...பொறு'' என்று கெஞ்சினுன் பொன்னுத்துரை.

இதற்குள் மெல்லத் தட்டுத்தடுமாறியபடி மெல்ல எழுந்து கொண்டான் செல்லையா. அவனது ஆவேசமும், மதுவெறியும் எங்கேபோய் ஒளிந்து கொண்டனவோ தெரியவில்லை.

''நான் இனிமே இந்தப் பக்கம் வந்தா ஏன் நாயே என்றுகேளடி'' என்று பொன்னம்மாளைப் பார்த்து முனகி விட்டு தள்ளாடியபடியே வெளியே செல்லத் தொடங்கி ஞன்.

பொன்னுத்துரைக்கு இதன்பின்பே நிம்மதியான மூச்சு வந்தது. அடிவாங்கிய நாயை அலறிக்கொண்டு ஓடு வதுபோல செல்லையா போவதை வேடிக்கையாகப் பார்த் தான். இனித் திரும்பவும் அங்கு வரும் துணிவு அவனுக்கு வராதென்று பொன்னுத்துரைக்கு நிச்சயமாகத் தோன்றி யது.

# 8.

நாலைந்து மாத இடைவெளிக்குள் சுந்தரமூர்த்தி வெகுவாக மாறிப் போயிருந்தான். கந்தசாமியினதும் பாருக்கினதும் நட்பு அவனை அப்படி ஆக்கியிருந்தது. காலையில் பாடசாலைக்கென்று செல்பவன் அங்கு போகாமல் இவர்களுடன்தான் ஊர்சுற்றிக் கொண்டிருப்பான். பாக்கியமும் தம்பியைத் திருத்தவேண்டுமென்று முடிந்த வரைக்கும் பாடுபட்டாள். அவனைக் கட்டிப்போட்டு வைத்து, அடித்து, கண்களுக்கு மிளகாய்த் தூள் போட்டு எல்லாமே செய்து பார்த்து முடியாமல் கடைசியில் கால்களில் விழுந்து மன்றாடாத குறையாகக்கெஞ்சியும் பார்த்து விட்டாள். எதுவுமே அவனிடம் பலனளிப்பதாகத் தெரியவில்லை.

தம்பியாரும் அண்ணன்காரனைப்போல்தான் வீட்டுக்கு உதவாத ஒருவனாகி விடுவானோவென்று பாக்கியம் பயந்து கொண்டேயிருந்தாலும் பொன்னுத்துரை ஒரு நாள்வந்து சுந்தரமூர்த்தி யாரோ இரு காவாலிப் பொடியளுடன் சிகரெட் குடித்தபடி படமாளிகையில் நிற்கிறானென்று கூறியபோது அவளால் அன்றைக்கு அந்த அதிர்ச்சியைச் சகிக்கமுடியாமல் போய்விட்டது. அன்று அதன் பின் அவளுக்கு வேலைகள் எதுவுமே செய்ய முடியவில்லை. சுந்தரமூர்த்தியை எதிர்பார்த்து வெளித்திண்டிலேயே உட்கார்ந்திருந்தாள். அவளின் கைக்கெட்டும் தூரத்தில் விறகுக் கட்டையொன்றும் கயிற்றுச் சுருளொன்றும் கிடந்தன.

சுந்தரமூர்த்தி வீட்டுக்குத் திரும்பும்போது நன்றாக இருள் சூழ்ந்துவிட்டது. மீனாட்சி, தாவாரக் கிடுகு மட்டையில் கட்டித் தொங்கவிட்டிருந்த அரிக்கன் லாந்தர், பாக்கியத்தின் முகத்தின் முன்னால் காற்றில் இலேசாக ஆடிக்

கொண்டிருந்தது. பின்புறச் சுவரில் அவளின் நிழல் நீண்டு குறுகியது. படலையைத் திறந்துகொண்டு சுந்தரமூர்த்தி உள்ளே வரும்போது அவளின் கண்களில் நெருப்பின் சுடர் தெரிந்தது.

''எங்கையடா போட்டு வாருய்?'' சுந்தரமூர்த்தியின் பயம் அவனது முகத்திலேயே தெரிந்தது.

''சோதினை...சோதினை...படிக்கப்போனனுன்'' என்று மென்று விழுங்கினுன்.

பாக்கியம் எழுந்த வேகமும் தெரியவில்லை. ஓங்கி அவனது கன்னத்தில் அறைந்தவேகமும் தெரியவில்லை. நாள்பூராவும் கைவலிக்க வேலைகள் செய்பவள் அவள். இரும்புச் சலாகையால் அடிவிழுந்தாற் போலிருந்தது.

''அம்மா!'' என்றலறியபடி இடது காதைப் பொத்திக் கொண்டான் சுந்தரமூர்த்தி. அவனது கையிலிருந்த பாடப் புத்தகங்களெல்லாம் தரையில் விழுந்து சிதறின.

பாக்கியத்திடம் காளியின் ஆவேசம் தெரிந்தது. அவனது தலைமயிரைப் பிடித்துத் தரதரவென்று இழுத்து வந்து தாவாரக் கம்போடு தள்ளிவிட்டு கயிற்றுச் சுருளால் மளமளவென்று அவனை அதனுடன் சேர்த்துக் கட்டினுள். விறகுக் கட்டையை வலது கையில் எடுத்துக்கொண்டாள். வெளியே ஓடிவந்து பார்த்து விட்டு அழ ஆரம்பித்த தங்கைமார்களை அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

''எங்கேடா போட்டு வாருய்?'' துப்பாக்கிக் குண்டின் வேகம் குரலில் தெரிந்தது.

''ப...ட...த்...து...க்...கு''

''சிக்கிரட் குடிச்சியா?'' பயமிகுதியால் சுந்தரமூர்த்தியின் விழிகளிரண்டும் பிதுங்கிவிடும் போலிருந்தன. நடுக்கத்துடன் தலையைக் குனிந்து கொள்ள முயன்ருன்.

''சொல்லடா'' என்று உறுமினுள் பாக்கியம். ''சிக்கிரட் குடிச்சியா?''

''உம்...''

பாக்கியத்தின் கையிலிருந்த விறகு கட்டை அவனை நோக்கி வேகமாகத் திரும்பியது. கண்மூக்கென்று பார்க்காமல் கைவந்தவாறு அவனை அடிக்கத் தொடங்கிவிட்டாள். மீனாட்சியும் சுந்தரியும், ''அடியாதை அக்கா அடியாதை அக்கா'' என்று கதறி அழுதது அவளின் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை. கையிலிருந்த கட்டையை வீசிவிட்டு அவள் ஓய்ந்தபோது அரை நினைவுடன் கயிற்றில் சரிந்து தொங்கிக் கொண்டிருந்தான் சுந்தரமூர்த்தி.

தொடர்ந்து ஒரு வாரமாக வேலாயுதத்திடம் மருந்து வாங்கி உடல் புண்களை ஆற்றிக் கொண்டதன் பின்தான் சுந்தரமூர்த்தியினால் பழையபடி நடமாட முடிந்தது. பாக்கியம் அவனை அருகிலமர்த்தி வைத்துக்கொண்டு அவனின் முதுகைத் தடவியபடி அவன் மனதில் படுமாறு கூறினாள்;

''நீயும் கொண்ணனைப்போல கெட்டழிஞ்சு என்ரை வயித்தெரிச்சலைக் கிளப்பாதேயடா. நீ ஒருத்தனாவது ஒழுங்காயிரு. நான் பெட்டைச்சியடா. பதின்மூன்று வயசிலேயிருந்து மாடா உழைச்சி இந்தக் குடும்பத்தைக் கட்டியிழுக்கிறன். நான் மனம் நொந்து கண்ணீர் விட்டால் நீங்களெல்லாம் நாளைக்கு ரத்தக் கண்ணீர் தானடா விடவேணும். ஒழுங்கா நல்ல பிள்ளையா படிப்பிலே கவனமா இரு. அந்த ஒன்றே எனக்குப் போதும். பொன்னம்மாவின்ரை பொடியங்கள் இரண்டும் காவாலியளெண்டுஊர் சொல்லக்கூடாது. எங்களைப் பெத்தவள் எடுத்த பேரே பத்துச் சந்ததிக்குக் காணும்...புரிஞ்சுதா?'' சுந்தரமூர்த்தி நல்ல பிள்ளையாக வேகமாகத் தலையை ஆட்டினான்.

ஆனால், ஒரு வாரமாவதற்குள் மறுபடியும் அவனைப் படமாளிகையில் கண்டதாக பொன்னுத்துரை வந்து கூறியபோது பாக்கியத்தின் மனதில் கொஞ்சநஞ்சமிருந்த

நம்பிக்கையும் அற்றுப் போய்விட்டது. இந்த இடையில் மீனாட்சி வேறு பெரிய பெண் ஆகிவிட்டது அவளின் பொறுப்பை அதிகரிக்க வைத்துவிட்டது; 'தலைபுழுத்த நாயாக' அவதிப்பட்டுக் கொண்டிருந்தவள் வடிவேலு வீட்டுக்கு அந்தத் தடவை வந்திருந்தபோது மனதில் குமைந்துகொண்டிருந்த ஆத்திரத்தையெல்லாம் அவன் மேல் கொட்டிவிட்டாள்.

"வீட்டுக்கு மூத்த பிள்ளை நீ. நீ ஒழுங்காக இருந்திருந்தா மற்றவன் இன்றைக்குத் தறுதலையாத் திரிவானு? நானும் இப்பிடி மாடாட்டம் கஷ்டப்படுவேனு? என்னைத் தான் கைகழுவு. நான் 'குமரென்றது மறந்து போச்சு. ஒன்றுக்கு இரண்டா குழந்தைப் பிள்ளையள் வயசுக்கு வந்து நிக்குதுகளே, கொஞ்சமாவது யோசிக்கிறியா? நீ இருபத்தெட்டு வயசாகியும் கொம்புக்கு மண்ணெடுத்துக் கொண்டு திரியிருய். அதைப் பார்த்து மற்றது பதின் மூணு வயசிலேயே முளைச்சுப்போயிருக்கு..." "வாயைப் பொத்தடி நாயே" என்று கத்தினுன் வடிவேலு. முன் புறமிருந்த கதிரையைத் தூக்கிச் சுவரின் மேல் அடித்து நொறுக்கினுன். "ஞாயம் பேச வந்திட்டாளாம் ஞாயம். ஏதோ உலகத்தையே இவள் தான் தலையிலே சுமக்கிறதா எண்ணம். இனி இந்த வீட்டுப் படலையை நான் திறந்தா ஏன் நாயென்று கேளடி..."

வடிவேலுபோய்விட்டான். அவன் அந்தக் குடும்பத்து உறவைக் கத்தரிப்பதற்கு ஒரு சாட்டுத் தேடிவிட்டானென்று பாக்கியத்துக்கு தோன்றியது. இதற்காக அவள் அதிகமாக மனதை அலட்டிக்கொள்ளவில்லை. நெருக்வுமே நெருங்கிய ஒட்டுறவு இல்லாமல் இருந்தவன்தானே வடிவேலு.

இதன் பின்பு சுந்தரமூர்த்தியின் படிப்பை நிறுத்தி விட்டு முஸ்தாபாவின் கடையில், அந்தத் தொழிலாவது பழகிக் கொள்ளட்டுமென நிறுத்தி வைத்துப் பார்த்தாள். அந்த முயற்சியும் ஒரு வாரத்துக்கு மேல் நீடிக்கவில்லை.

"இவன் கடையிலே இருந்தால் இருக்கிற பொடியங்களும் கெட்டுப் போவாங்கள்" என்று வந்து கூறிவிட்டார் முஸ்தாபா. அவனுக்கு நண்பர்கள் அதிகமாம். அடிக்கடி அவனைத்தேடி வருகிறார்களாம். இதைத் தவிர தினசரி பத்துச் சிகரெட்டுக்கு மேல் இரகசியமாக களவாடிக் கொண்டு போய்க் குடித்துவிடுகிறானும்.

முஸ்தாபா இவ்விவரங்களை பாக்கியத்திடம் கூறிவிட்டு கடைசியில் தனதுஆலோசனையையும் அவளிடம் கூறினார்.

"பிள்ளை! இந்த ஊரிலேயிருந்து இவன் திருந்தமாட்டான். திருந்த இவன்ரை சிநேகிதப் பொடியன்களும் விடமாட்டாங்கள். எங்காவது கண்காணாத இடத்துக் கடையளுக்குத்தான் இவனை அனுப்போணும். அப்பதான் ஒழுங்கிலே வருவான். நீ விரும்பினுச் சொல்லு கொழும்புப் பக்கத்திலே எனக்குத் தெரிஞ்ச கடையளிருக்கு. அதிலேயொன்றுக்கு அனுப்புவம்"

சுந்தரமூர்த்தியின் இளவயதும், பிறந்ததிலிருந்து கைகளுக்குள் அவனை வைத்திருந்து வளர்த்த பாசமும் பாக்கியத்தின் மனதைப் பேதலிக்க வைத்தாலும் அவனது எதிர்கால நன்மையை உத்தேசித்து முஸ்தாபாவின் திட்டத்துக்கு இணக்கம் தெரிவித்தாள்.

அடுத்த ஒரு வாரத்தினுள் சுந்தரமூர்த்தியைக் கொழும்பிலுள்ள தனது நண்பரொருவரின் கடைக்கு அனுப்பி வைத்தார் முஸ்தாபா. பொன்னுத்துரையின் பரீட்சை முடிவும் அதே வாரம் தான் வெளியாகியிருந்தது......

# 9.

பொன்னுத்துரை மூன்றாவதுதட்வையாக அந்த முறையும் பரீட்சையில் தேற்றத் தவறிவிட்டான். அன்று அவனது வீட்டினில் ஒரு பிரளயமே நடந்து விட்டது.

"நீ கொடுக்கிற இடந்தானடி இந்தக் கழுதை இப்பிடிக் குட்டிச்சிவராய் போவுது" என்று தொடங்கி பவளமணிஅம்மாளை வறுத்தெடுத்துவிட்டார் வேலாயுதம். கடைசியில் அவளுக்கு நெஞ்சுவலி ஆரம்பித்து நெஞ்சைப் பிடித்தபடி படுத்ததன் பின்தான் அவரின் வேகம்அடங்கியது.

"படிச்சாத்தானே பாஸ்பண்றது. இது என்னடாண்டா, எவன் எவன் விழுந்து கிடக்கிறனெண்டு பாக்கிறது. ஓடிப்போய் தர்மபுத்திரராட்டம் உதவி செய்யிறது. படிக்கிற பிள்ளைக்கு இதா தொழில். பிறகு பாஸ் எப்பிடி வரும்" என்று கடைசி அர்ச்சனையையும் வழங்கிவிட்டு, மகனை அழைத்து நேரடியாகவே வினவினார்: "இனிஎன்ன செய்யிற உத்தேசம் உனக்கு?" இதற்குரிய பதிலை பொன்னுத்துரை ஏற்கனவே தயாராக வைத்திருந்தான்.

"முஸ்தாபா நாநாவோடேபோயிருந்து கடை யாபாரம் பழகப்போறேன்."

"அதுக்கு இவ்வளவு காசு செலவழிச்சு படிக்கத் தேவையில்லையே" வேலாயுதம் எரிச்சலோடு முணுமுணுத்து விட்டு "போய் அவரோடே கதைச்சுப் பார்" என்றார்.

பொன்னுத்துரை மறுவார்த்தை கூறாமல் புறப்பட்டான். அன்று ஏதோ தேவையாக முஸ்தாபா கடைக்குப் போகாமல் வீட்டினில்தான் நிற்கிறாரென்று அவனுக்குத் தெரியும்.

சித்திபரீதா முன்விறாந்தையிலிருந்து தலையணை உறை ஒன்றில் 'பூ'வேலை செய்துகொண்டிருந்தாள். தையலென்

ருல் அவளுக்கு வெகு பிரியம். பொன்னுத்துரை வருவதைப்பார்த்ததும் நழுவிக்கிடந்த முக்காட்டைச் சரிசெய்தபடி எழுந்தாள்.

''வாங்கண்ணே''

''வாப்பா இல்லையா பிள்ளை?''

''இருக்கிறார்'' என்றவள், உள்ளே திரும்பி தகப்பனுரை அழைத்தாள்.''வாப்பா! வாப்பா! பொன்னுத்துரை அண்ணுச்சி வந்திருக்கு.''

''இருக்கச்சொல்லு, வாறன்'' குரலோடுமுஸ்தாபாவும் வெளியே வந்தார். சித்தி பரீதா தலையணை உறையுடன் உள்ளே சென்றுவிட்டாள்.

''இரு தம்பி'' முஸ்தாபா கதிரையொன்றை பொன்னுத்துரையிடம் சுட்டிக்காட்டிவிட்டு தானும் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டார். ''என்ன விஷயம்?''

பொன்னுத்துரை விஷயத்தைக் கூறினுனே இல்லையோ அவர் உற்சாக மிகுதியால் அவன் தோளில் ஓங்கி ஒரு தட்டே தட்டிவிட்டார்.

''இதுதான் புத்திசாலித்தனம் தம்பி. பத்தாயிரம் ரூபாச் செலவழிச்சு புத்து வருஷமாப் படிச்ச படிப்புக்கு தொழில்தேட பத்து தடவையள் எம்.பி.யின்ரை வீட்டை அலையிறதைவிட யாபாரத்தை பழகினுயென்று பத்து நிமிஷத்திலே பத்தாயிரம் ரூபா எப்பிடி உழைக்கலாமெண்டு தெரிஞ்சுகொள்ளலாம்.''

உண்மையிலேயே பத்து நிமிஷங்களில் பத்தாயிரம் ரூபா உழைக்கலாமோ என்னவோ, அவர் பத்து நிமிஷங்களில் பேசிய பேச்சு மட்டும் பத்து லட்சம் கற்பனைகளை மனதுக்கு ஊட்டக்கூடியதாக இருந்தது.பொன்னுத்துரை மறுநாளிலிருந்தே உற்சாகத்துடன் வியாபாரத்தில் புகுந்து கொண்டான்.

'மூர்த்தி சிறியதானுலும் கீர்த்தி பெரியது' என்பது போல் முஸ்தாபாவின் கடை வெளிப் பார்வைக்குச் சிறியதாகத் தோன்றினுலும் அங்கே நடைபெறும் வியாபாரங்கள் மிகவும் பெரியவை. கடையினுள் கால்கள் வைக்கு

முடியாதவாறு விற்பனைப் பொருட்கள் நிரம்பியிருந்தன. ஏற்கனவே அங்கு நாலு சிப்பந்திகள். பொன்னுத்துரையுடன் ஐந்தாகியும் யாருக்குமே ஒரு நிமிஷம்கூட ஓய்வெடுக்க முடிவதில்லை. ஓய்வு கிடைத்தாலும் உட்கார இடமில்லை. இந்தச் சூழல் பழக்கத்தில் வரவே பொன்னுத்துரைக்கு ஒரு வாரம் பிடித்தது.

பத்து நிமிஷங்களுக்குள் பத்தாயிரம் ரூபா உழைக்க முடியுமென்று பெருமையடித்தவர் முஸ்தாபா. ஆனால், அந்த வியாபாரத்தில் பத்து நிமிஷங்களுக்குள் பத்தாயிரம் பொய்களையும் பத்தாயிரம் உருட்டுப்பிரட்டுகளையும் செய்யவேண்டியிருக்குமென்ற இரகசியத்தை அவர் கூறவில்லை.

பொன்னுத்துரைக்கு கண்களைக் கட்டி காட்டில் விட்டதுபோலிருந்தது.

சிறுவயதிலிருந்தே பொய் கூறிப் பழக்கமில்லாதவன் அவன். எதையுமே வெளிப்படையாகவே பேசும் சுபாவம் அவனுக்கு. இப்போது இத்தனை வயதான தன் பின் மனச்சாட்சியின் மென்னியை முறித்துவிட்டு பொய்பேச அவனால் முடியவில்லை.

முஸ்தாபா கடைக்கு வந்து பட்டடையில் உட்கார்ந்தாரென்றால் உண்மை பேசவே அவருக்கு மறந்துவிடும். இந்த மனிதர் கூச்சநாச்சம் சிறிதுமில்லாமல் எப்படி இத்தனை பொய்களையும் பேசித் தொலைக்கிறாரோவென்று பொன்னுத்துரை வியந்துகொள்வதுண்டு. இதைப்பற்றி அவரே ஒருநாள் அவனிடம் விளக்கம் கூறினார்.

''தம்பி! உண்மையைக் கதைக்க நினைக்கிறவன் 'மகாத்மா' என்று கழுத்தில் 'போர்ட்' போட்டுக்கொண்டு இருந்திடவேண்டியதுதான். இந்தக் காலத்திலே அவனால் பிழைக்கமுடியாது. அதிலும் இந்த தொழிலுக்கு வந்திட்டா மெய்யோ, பொய்யோ எதுவோ கேக்கிறவையள் நம்புகிறாப்போல கதைக்கோணும். யாபாரத்திலே அரிச்சுவடியே இதுதான். இல்லாட்டி பத்து வருஷத்துக்கு

முந்தி பத்து ரூபாவோடே தொடங்கிய இந்த யாபாரம் இத்தனை தூரம் செழிப்பா வந்திருக்குமா?''

அவரின் இவ்வறிவுரையை தன்னால் எக்காலத்திலுமே கைக்கொள்ள முடியாதென பொன்னுத்துரைக்கு நன்கு தெரிந்திருந்தாலும் வந்த ஆரம்பத்திலேயே அவரோடு பிரச்சினைகொள்ளக் கூடாதென்று மௌனமாக இருந்து விட்டான். ஆனாலும், அந்தக் கடையில் நடைபெறும் சில நிகழ்ச்சிகள் அதிர்ச்சி ஊட்டுவனவாகத்தான் இருந்தன. கதைப் புத்தகங்களை வாசித்து வாசித்து கற்பனை வாழ்விலேயே நடமாடிக்கொண்டிருந்தவனுக்கு நிஜ வாழ்க்கையில் மனிதர்கள் செய்யும் தில்லுமுல்லுகளைக் காணக்காண மனப் பதட்டமாகவும், கொதிப்பாகவும் இருந்தது. இப்படியும் மனிதர்களால் நடக்கமுடியுமாவென்று சில சமயங்களில் மலைத்தான் அவன்.

முஸ்தாபாவின் கடையிலுள்ள விற்பனைப் பொருட்களில் பெரும்பகுதி கட்டுப்பாட்டு விலைக்கு உள்ளடங்கியவை. முஸ்தாபாவும் கட்டுப்பாட்டு விலைகள் குறித்த அட்டைகளையே அந்தந்தப் பொருட்கள் இருக்குமிடத்தில் பொருத்தி வைத்திருந்தார். ஆனாலும் என்னவோ அவைகளை அவர் விற்கும் விலை கூடியவிலைதான்.

இப்படியான குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் உண்டென வானொலி மூலமும், பத்திரிகைகள் வாயிலாகவும் உணவுக் கட்டுப்பாட்டு இலாகா அறிவிப்புச் செய்வதை பல தடவைகளில் அவதானித்திருக்கிறான் பொன்னுத்துரை. முஸ்தாபா எப்படித் துணிகரமாக இச் சட்டங்களை மீறுகிறாரென்று அவனுக்கு வியப்பாயிருந்தது. ஆனால், சிலநாட்களுக்குப்பின் உண்மை தெரிந்தபோது அவனுக்கேற்பட்ட அதிர்ச்சி கொஞ்சநஞ்சமல்ல.

கடை வீதியிலுள்ள பெரிய வியாபாரிகள் எல்லோரும் சேர்ந்து தலைக்கு இவ்வளவு பணமென்று ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தைச் சேர்த்து விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளில் முக்கியமான ஒருவருக்கு மாதா மாதம்

கொடுத்துவிடுவார்கள். இதற்குப் பொறுப்பாக இருப்பவர் முஸ்தாபாதான். இதன்பின் விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் கடைவீதிப்பக்கம் ஏன் வரப்போகிறார்கள்?

இப்படியொரு புத்திசாலித்தனமான திட்டம் ஒன்றை சாப்புச்சட்ட விதிமுறைகளுக்கு எதிராகவும் வியாபாரிகளில் சிலர் பிரயோகித்தார்கள்.

காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஆறு மணிவரையும்தான் கடைகளைத் திறந்து வைத்திருக்கலாமென்பது விதிமுறை. மற்ற நேரங்களில் சிப்பந்திகளுக்கு ஓய்வு கொடுத்துவிடவேண்டும். ஆனால், கடைகளில் காலை ஆறு மணியிலிருந்து இரவு எட்டுமணிவரைக்கும் சர்வசாதாரணமாகவே திறந்து தொழில் நடந்துகொண்டிருக்கும். எப்போதாவது தொழில் கந்தோர் அதிகாரிகள் பரிசோதனைக்குப் புறப்பட்டார்களென்றால் அங்கே வேலை செய்யும் 'ப்யூன்' உடனே முஸ்தாபாவுக்கு இரகசியத் தகவல் கொடுத்து விடுவான். பத்து நிமிஷங்களுக்குள் கடை வீதியிலுள்ள கடைகளெல்லாவற்றிற்குமே இச் செய்தி பரவி விடும். அதிகாரிகள் வரும்போது கடைகள்யாவும் சட்ட திட்டத்துக்கமையப் பூட்டப்பட்டிருக்கும். 'ப்யூனை' பின்பு தனியாக முதலாளிகள் கவனித்துக்கொள்வார்கள்.

இப்படியாக, ஒவ்வொரு உண்மைகளையும் உணர்ந்து கொள்ளும்போது பொன்னுத்துரைக்குக் கசப்புமாத்திரைகளை விழுங்கிக்கொள்வது போன்ற உணர்ச்சியாக இருக்கும். முரண்படும் மனச்சாட்சியை அடக்கியடக்கி நாட்களைக் கடத்திக்கொண்டிருந்தவன் கடைசியில் ஒருநாள் பொறுமையை அடியோடு இழந்து விடும் சந்தர்ப்பமொன்றுக்கு ஆளாகி விட்டான்.

வாரத்தில் மூன்று நாட்கள் வெளியிடத்து சிறுசிறு வியாபாரிகள் கடைகளுக்கு வரும் தினங்களாதலால் அந்த நாட்களில் வியாபாரம் அதிகமாக இருக்கும். அன்று புதன்கிழமை; வியாபாரிகள் வரும் இரண்டாவது நாள்.

காலையிலிருந்து ஒரு நிமிஷம்கூட ஓய்வெடுக்க முடியாமல் விற்பனை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

மணி பத்தரையிருக்கும். அரிசி விற்பனைத் தரகன் ஒருவன் ஓடிவந்து முஸ்தாபாவின் காதில் கிசு கிசுத்தான்; ''கொழும்பில் அரிசி 'மாக்கெற்' மூடைக்கு இருபதுரூபா திடீரென்று அதிகரித்திருக்கின்றதாம்.''

வினாடி நேரத்துக்குள் முஸ்தாபா சுறுசுறுப்பாகிவிட்டார். கடையிலுள்ள தொலைபேசி எங்கெல்லாமோ வேலை செய்தது. அடுத்த அரைமணி நேரத்துக்குள் மட்டக்களப்புக் கடைகளிருந்த அரிசி மூடைகளில் பாதி முஸ்தாபாவின் கிட்டங்கி அறைக்கு வந்து விட்டன. அரிசிவிலை நிதானத்தில் வரும்வரை அரிசி சில்லறைக்கும் விற்பனை செய்யவேண்டாமெனக் கூறிவிட்டார் முஸ்தாபா. அதுவரை விற்பனைக்கென்று வெளியே வைக்கப்பட்டிருந்த மூடைகளும் மளமளவென்று உள்ளே போய்விட்டன.

'அரிசி இல்லை' என்ற அறிவித்தல் அட்டையொன்று கடையின் முன்புறம் தொங்கப்போடப்பட்டது.

இந்த அமர்க்களம் முஸ்தாபாவின் கடையில் மட்டுமல்ல, ஒரு சில மணிநேரங்களுக்குள் ஊரெல்லாம் பரவிவிடும் 'கொள்ளை நோய்'போல் கடைவீதியெங்குமே பரவிவிட்டது. மத்தியானம் பன்னிரண்டு மணிக்குப் பின் எல்லாக் கடைகளிலுமே 'அரிசி இல்லை' என்று எழுதப்பட்டிருந்த அட்டைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

முஸ்தாபாவின் கெட்டித்தனத்தை பொன்னுத்துரையினால் ரசிக்க முடியவில்லை. மற்றைய கடைகளிலுள்ள அரிசி மூடைகளை வாங்கிக்கொண்டது அவரின் வியாபாரக் கெட்டித்தனமாக இருக்கலாம். ஆனால், சில்லறைக்கு விற்பனை செய்வதையும் நிறுத்திவிட்டால் தினசரி அரிசி வந்து வாங்கும் பாவனையாளர்கள் அரிசிக்கு எங்குபோவார்கள்? இதைத்தான் உள்ளூர எண்ணிக் குமுறிக் கொண்டிருந்தான் பொன்னுத்துரை.

அரிசி தேவையென்று யாரோ ஒரு ஏழைப் பெண் வெளியே வந்து நின்ருள். கடைவாயிலில் நின்ற சிப்பந்தி ஒருவன் முதலாளி'விசுவாசத்'தோடு இருகைகளையும் விரித்துக் காட்டினுன்.

''அரிசி இல்லே, முடிஞ்சு போச்சு.''

''ஐயா!...ஐயா!...'' என்று கெஞ்சினுள் அவள். ''உங்களுக்குப் புண்ணியங் கிடைக்கும். ஆஸ்பத்திரியிலே கிடக்கிற புள்ளேக்கு பத்தியம் போடோணும். நானும் தினக் கூலிக்குப் போய் மாடாட்டம் உழைச்சிட்டு இப்பத்தான் வாறன். எடுக்கிற காசை எடுத்திட்டு ஒரு சுண்டு அரிசியாவது தாங்க...''

''இல்லேயென்ருல் போறதுதானே'' என்று உள்ளேயிருந்து சத்தம் போட்டார் முஸ்தாபா. அவள் போகவில்லே. இரு கையுமெடுத்து அவரைக் கும்பிட்டாள்:

''ஐயா! உங்கடை காலிலே விழுந்து கேக்கிறனய்யா. ஒரு சுண்டு அரிசியாவது தாங்க. அரிசி விக்கிற எல்லாருமே ஒன்ரு இல்லேயெண்டா ஏழையள் நாங்க எங்கே போறது?''

''கடலுக்கை போய் விழுகிறது'' என்று இரக்கமில்லாமல் கத்திஞர் முஸ்தாபா. பொன்னுத்துரையால் அதற்குமேல் சகிக்க முடியவில்லே. விறுக்கென்று அவரருகே சென்ருன்.

''ஒரு பேணி அரிசி குடுத்தாக் குறைஞ்சாபோடுவம்''

''வாயை மூடு நீ'' என்று எரிந்து விழுந்தார் முஸ்தாபா. அவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

அவரை எதிர்த்து வாதிடுவது பொன்னுத்துரைக்கு புத்திசாலித்தனமான செயலாகத் தெரியவில்லே. குட்டையில் ஊறிய மட்டையைப் போல் அத்தகைய வாழ்க்கையில் ஊறிப்போனவர் அவர்.

அந்த ஏழைப்பெண் வேறுகடையை நோக்கி ஓடத் தொடங்கினுள். முஸ்தாபா கோபம் சிறிது தணிந்தவராக பொன்னுத்துரையைப் பார்த்துக் கூறினுர்:

''ஒரு நாளும் இடையிலே குறுக்கிட்டு முட்டாள் தனமாகக் கதைக்கக் கூடாது. யாவாரத்திலே புத்தியா நடக்கோணும்.''

பொன்னுத்துரை அவருக்குப் பதிலெதுவும் கூறவில்லை. கூறவும் அவன் விரும்பவில்லை. மௌனமாக உள்ளே போய் தனது சேட்டை எடுத்து அணிந்து கொண்டுவந்தான். அவர் அருகில் வந்து அமைதியாகச் சொன்னான்:

''என்னை மன்னித்துக்கொள்ளுங்கோ நாநா. என்னாலே இந்த நெளிவு சுழிவுகளை பழகிக்கொள்ள முடியேல்லை. பழகிக்கொள்ள எனக்கு விருப்பமுமில்லே. நான் போறன்.''

அவர் அதிர்ச்சியோடு அவனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். பின்பு வருத்தத்துடன் கூறினார்: ''நீ ஒரு பிழைக்கத் தெரியாத பிள்ளை.''

பொன்னுத்துரை எரிச்சலோடு வெளியே வந்தான். கடையோரமாயிருந்த கழிவுக் கால்வாயில் காறித் துப்பி விட்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

## 10.

காலப் பெருவெள்ளத்தில் ஒரு சிறுதுளி அசைந்து இடம்மாறியது போல் நாலைந்து வருஷங்கள் இடையே ஓடி மறைந்து விட்டன. இந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் மணல் மேட்டில் வசிக்கும் மனிதர்களிடையே காரியசித்தமான பல மாறுதல்கள் தோன்றியிருந்தன.

அடிக்கடி நெஞ்சுவலியென்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் பவளமணி அம்மாள் ஒருநாள் திடீரென்று அதே வலியோடு காலமாகி விட்டாள். இருக்கும் இடமே தெரியாமல் இருபது வருடங்களாக அந்த வீட்டினுள்

இருந்தவள் இல்லாமல் போனதன் பின்தான், அவள் வாழ்க்கையில் சுமந்த சுமைகள் எத்தகையதென்பது அவளின் கணவனுக்கோ ,மகனுக்கோ புரிந்தது.

அப்பாவும் மகனும் ஒருவருக்கொருவர் முகம் பார்த்துப் பேசிக்கொள்ளும் வழக்கமில்லை. அந்நியோன்னியமாக அன்பைக் காட்டும் குணமுமில்லை. எந்நேரமும் இடுகாட்டின் மௌனம் தான் அந்த வீட்டினில் தெரிந்தது.

சமையல் வேலை அங்கே பெரிய பிரச்சினையாகி விட்டது. ஆரம்பத்தில் பாக்கியம்தான் வந்து சமையல் செய்து வைத்து விட்டுப் போய்க்கொண்டிருந்தாள். அவள் மனமாரவே இந்த உதவியைச் செய்தாலும் பொன்னுத்துரையினுல் அதை ஆட்சேபிக்காமல் இருக்க முடியவில்லை. வழமையிலேயே மூன்றரை மணிக்கு தூக்கத்தை விட்டு எழவேண்டிய ஒரு கட்டாயத்திலுள்ள அவள் இதன் பின் இரண்டரை மணிக்கே தினமும் எழுந்து விடுகிறுளென்று மீனுட்சி ஏதோ பேச்சுவாக்கில் சொன்னபோது அவனுல் பொறுக்க முடியவில்லை. உடனடியாகவே சென்று பாக்கியத்திடம் கூறிவிட்டான்.

''அக்கா நாளையிலேயிருந்து நீ சமைக்க வேண்டாம்.''

''ஏன்?'' பாக்கியம் சந்தேகத்துடன் கேட்டாள்.

''நான் சமைக்கப் போறன்.''

''நீயா?'' பாக்கியம் விழுந்து விழுந்து சிரித்தாள். பின்பு, அவன் கோபப்படப் போகிறுனென்ற பயத்துடன் விநயமாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டாள்:

''உனக்கேன் இந்த ஆசை? என்ரை சமையல் உனக்குப் பிடியாட்டி இங்கையிருக்கிற பெட்டையளிலே ஒன்றைக் கூட்டிப்போய் சமைப்பியன்.''

''அதில்லையக்கா. நான் சும்மா இருக்கிற ஆள் தானே? சமைக்கப் பழகினு நல்லது தானே. கடைசியா எனக்கு வாறவளுக்காவது நிம்மதியாயிருக்கும்.''

பாக்கியத்துக்குச் சிரிப்பு வரவில்லை. அவன் மறுப்புக் கூறுகிற தீவிரத்தைக் கவனித்துவிட்டு, "தம்பி எனக்குச் சிரமமா இருக்குமென்று யோசிக்கிறியா?" என்றாள்மனத் தாங்கலுடன். "அப்பிடியென்ரு அது உன்ரை தவறான யோசனை. எனக்கு எந்தச் சிரமமுமே இல்லை. என்னை அன்னியமா நினைக்காட்டி உனக்கு இந்த யோசனை வந்திருக்காது. சமைச்சுத்தாடி அக்காவென்று நீயே வந்து கேட்பாய்?"

"அப்பிடி நான் நினைச்சாத்தானே இந்தக் கதையெல்லாம்..." என்று அவளின் வாயை அடைத்து விட்டான் பொன்னுத்துரை.

மறுநாளே அவன் சுறுசுறுப்பாகச் சமைக்க ஆரம்பித்துவிட்டான். ஆரம்பித்ததன் பின்தான் அந்த வேலையிலுள்ள சிரமங்கள் அவனுக்குப் புரிந்தன. சமையல் முடிவதற்குள் நாலு தடவைகள் விரலை நெருப்பில் சுட்டுக்கொண்டாகிவிட்டது. வலது காலில் கஞ்சி கொட்டிவிட்டது. சட்டி பானைக் கரியெல்லாம் அணிந்திருந்த சாரத்திலும், உடம்பிலும் சுத்தமாக வந்து விட்டது. புற லட்சணங்கள்தான் இவைகளென்றால் அகலட்சணங்கள் இன்னும் அநியாயமாக இருந்தன. சோறு களி போல் இருந்தது. கறிகள் வாயில் வைக்கவே முடியவில்லை. ஒன்றில் தூள் காரம். ஒன்றில் உப்புக்காரம்.

பொன்னுத்துரைக்கு அழுகையே வந்துவிட்டது. அன்றைக்குத் தகப்பனார் தன்னை வறுத்தெடுக்கப் போகிறாரென்று பயந்து கொண்டிருந்தான். ஆனால், வேலாயுதம் இவ்விஷயத்தில் மிகவும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டார். மகனை அவர் ஒரு பேச்சுக்கூடப் பேசவில்லை. அன்றே போய் இராசம்மா என்ற உறவினப் பெண் ஒருத்தியை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். நடுத்தர வயதைக் கடந்துவிட்ட பெண் இராசம்மா. எவ்வித ஆதரவுமில்லாமல் தனியேயிருந்து ஒருவேளை உணவுக்குக் கஷ்

டப்பட்டுக்கொண்டிருந்த அவளுக்கு வேலாயுதம் வீட்டில் சமையலைக் கவனித்துவிட்டு நேரத்துக்கு நேரம் வயிருரச் சாப்பிட்டுக்கொள்வது இராஜபோகமாக இருந்தது. வந்த ஓரிரு வாரங்களுக்குள்ளேயே அந்த வீட்டில் ஒரு விசுவாச முள்ள கிழட்டு நாயாகிவிட்டாள் அவள்.

முக்கியமான பிரச்சினையொன்று இப்படிச் சுமுகமாகி விட்டது. பொன்னுத்துரைக்கிருந்த அடுத்த பிரச்சினை தொழில் பிரச்சினைதான்.

முஸ்தாபாவின் கடையை விட்டு விலகியதன் பின் நாலைந்து தனியார் துறைகளில் வேலைபார்த்து விட்டான் அவன். ஒன்றுமே சரிப்படவுமில்லை, உருப்படவுமில்லை. மாதச் சம்பளத்துக்கு வேலை செய்பவன் முதலாளியின் நாணயத்தைப் பற்றி விமர்சனம் செய்யப்போனுல் எப் படித் தொழில் பார்க்கிறது?

பொன்னுத்துரைக்கும் வியாபாரம் சம்பந்தமான தொழில்களே வெறுத்துப் போய்விட்டது. இன்னெரு வனுக்குக் கீழ் நின்று பார்க்கும் தொழிலெதுவும் தனக்குச் சரிப்பட்டு வராதென்று தீர்மானமாகப் புரிந்து கொண்டான் அவன். கடைசியாக அவனது நண்பனெரு வன் காரொன்று வாங்கி வாடகைக்கு ஓட்டும்படி ஆலோ சனை கூறினுன்.

பொன்னுத்துரை இதைப் பற்றித் தகப்பனுருடன் கதைப்பதற்கு தூதாக அனுப்பியது இராசம்மா கிழவி யைத்தான். இராசம்மா போய் விபரத்தைக் கூறியதும் வேலாயுதத்துக்கு ருத்திரமூர்த்தியின் ஆவேசம் வந்துவிட் டது.

''எல்லாத்தையும் முடிச்சுப் போட்டு துரை இப்ப இதுக்கு வெளிக்கிட்டிருக்கிருராக்கும்'' என்று எரிந்து விழுந்தார். இராசம்மா போன சுவடு தெரியாமல்திரும்பி வந்து சமையலறைக்குள் ஒளித்துக்கொண்டாள்.

வேலாயுதத்தின் கோபம் இரண்டு நாட்களாகக் குறையவில்லை. மகனைக் கண்டபோதெல்லாம் எரிச்சலோடு

முணுமுணுத்துக்கொண்டேயிருந்தார். மூன்றாவது நாள் என்ன எண்ணிக்கொண்டாரோ போய் முஸ்தாபாவோடு ஆலோசனை செய்து விட்டு வந்து 'எதையாவது செய்து தொலை' என்ற ரீதியில் பொன்னுத்துரைக்குக் கார் வாங்க அனுமதி வழங்கிவிட்டார்.

அடுத்த ஒரு மாதத்துக்குள் பொன்னுத்நுரை ஒரு காரின் உரிமையாளனாகிவிட்டான். ஒரு தொழிலாளியாகவும் அதே வேளையில் அவனே முதலாளியாகவும் இருந்து தொழிலைச் செய்வது அவனுக்கு வெகு இலகுவாக இருந்தது. அவன் உற்சாகத்துடன் உழைக்க ஆரம்பித்தான்.

## 11.

இந்த நாலைந்து வருஷ இடைக்காலத்தில் முஸ்தாபா மிகவும் மாறிப் போயிருந்தார். அவரின் அரை வழுக்கை விழுந்த தலை முழு வழுக்கையாகி உடலும் பாதியாக இளைத்து விட்டது. மனக்கவலையல்ல அவருக்குப் பணக் கவலை! இத்தனைக்கும் இருந்ததைவிட நாலு பங்கு அதிகமான பணம் அப்போது அவரிடம் சேர்ந்திருந்தது.

தோலைக் கடித்து இரத்தம் உடலிலிருந்து வெளிவர வர அதனை அதிகமாக உறிஞ்சிக் குடிக்கும் மலைப் பகுதி அட்டைகளைப் போன்று அவரும் புதுப்புது வழிகளையும், யுக்திகளையும் கையாண்டு மனிதர்களைச் சக்கையாக்கத் தொடங்கினார். இரவில் அவருக்குச் சரியான தூக்கம் வருவதில்லை. எந்நேரமும் அவருக்குப் பணம் பண்ணும் யோசனைதான். பணத்துக்காக எந்த குறுக்கு வழிகளிலும் செல்லத் தயாராக இருந்தார் அவர். அவரின் நல்லநேரத்துக்கு சட்ட திட்டங்களும் அதிகாரத்திலுள்ளவர்களின் பலவீனத்தால் அவரிடம் நாய்க்குட்டியாக வாலைக் குழைந்தன.

அவரின் மனைவிக்கு அவரின் போக்கில் தவறெதுவும் தெரியவில்லை. மாறாக ஒன்றுக்குப் பத்தாகப் பணம் பெருகுகிறதே யென்ற ஆனந்தம் அவளுக்கு. அவளும் யோசனையுடன் சில காரியங்களைச் செய்தாள். வேப்பிலைக் கொத்தைப் போல இருக்கும் ஒரேயொரு பெண்ணுக்கு கண் நிறைந்த கணவனையும், மனம் நிறைந்த வாழ்வையும் தேடிக் கொடுக்க வேண்டாமா?

முதலில் வீட்டின் முற்பகுதியை உடைப்பித்து நவீன பாணியில் கட்டுவித்தாள், அடுத்து ஒரு செல்வந்த வீட்டுக்குத் தேவையான அத்தனை தளபாட, அலங்காரச்சாமான்களும் அந்த வீட்டுக்கு வந்துசேர்ந்தன. நகைகளும், உடைகளும் பெட்டி பெட்டியாகக் குவிந்தன. ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி சேர்த்த பணம் அங்கு சுகபோக வாழ்வுக்கு அத்திவாரமிட்டது.

சித்தி பரீதாவும் மளமளவென்று வளர்ந்திருந்தாள். கண்களும் முகமும் எந்தச் சமயத்திலும் பூவாக மலர்ந்து சிரித்துக்கொண்டிருக்கும். கவலையென்றதே இன்னதென்று தெரியாதவள் அவள். ஒரு சிட்டுக்குருவியின் உற்சாகம் எந்த வேளையிலுமே அவளிடம் இருக்கும்.

பருவமடைந்ததன் பின்னர் முஸ்லிம் சமூகப் பெண்களுக்குக் கட்டுப்பாடு அதிகம். ஆனாலும் சித்தி பரிதாவின் விஷயத்தில் அத்தனை கெடுபிடிகள் இருக்கவில்லை. அவளின் முகம் சிறிது சோர்ந்து போய்விட்டால்தான் அவள் வாப்பாவுக்கும் உம்மாவுக்கும் உயிர் பிரிவது போலாகிவிடுமே. சித்தி பரீதா பாக்கியத்தின் தங்கை சுந்தரியோடு ஜி. சி. ஈ. வரை படித்து விட்டு சித்தியடைய முடியாமல் தானகவே படிப்பை நிறுத்திக்கொண்டுவிட்டாள்.

சித்தி உம்மா மும்முரமாக மகளுக்கு மாப்பிளை பார்க்க ஆரம்பித்தாள். பணம் அதிகமாயிருக்கும் வீட்டுப் பெண்களுக்குத் திருமணம் பேசும் போது உண்டாகக் கூடிய சிக்கல்கள் அங்கும் உண்டாகின. பெண் வீட்டினர்

டாக்டர், என்ஜினியர் என்று அந்தஸ்தைப் பார்த்தனர். மாப்பிள்ளை வீட்டினர் வீடு வாசல் ரொக்கமென்று பொருளையும் பணத்தையும் பார்த்தனர். கல்யாணமாகாமல் வீட்டிலிருக்கும் தங்கைமார்களுக்கு சீதனம் கொடுப்பதற்கென்று இனமாக ரொக்கப் பணம் வேறு புள்ளி விபரத்துடன் கேட்டனர். மொத்தத்தில் திருமணமென்பதே இரண்டு கெட்டிக்கார வியாபாரிகள் நடத்தும் ஒரு வியாரம் போலிருந்தது.

குறைந்தது பத்து இடங்களுக்கு மேல் முயற்சி செய்து பார்த்து விட்டாள் சித்தி உம்மா. ஒன்றுமே மனத்திருப்தியாக அமையவில்லை. இவர்கள் விரும்பினால் மாப்பிள்ளை வீட்டார் வீம்பைக் காட்டினார்கள். அவர்கள் விரும்பினால் இவர்கள் வீம்பைக் காட்டினார்கள்.

சித்தி பரீதாவுக்கு வீட்டினுள் வெறுமனே வளைய வந்து அலுத்து விட்டது. சுந்தரி நெசவு நிலையமொன்றுக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். அங்கு நடக்கும் 'முஸ்பாத்திகளை' அவள் வந்து தினசரி கூறும்போது சித்தி பரீதாவுக்கு ஏக்கமாக இருக்கும். ஆனால், நெசவு நிலையத்துக்கு அவள் போக அவளின் பெற்றோர்கள் விடமாட்டார்கள். அவளுக்கு அந்தப் பொழுது போக்கில் ஈடுபாடு மில்லை.

கடைசியாகச் சுந்தரிதான் அவளுக்கு ஒரு ஆலோசனை கூறினாள். பணக்கார அம்மாளொருத்தியின் மேற்பார்வையில் நடாத்தப்படும் தையல் பயிற்சி நிலையமொன்று 'ரவுனு'க்கு அருகாமையில் இருந்தது. சுந்தரி, சித்தி பரீதாவைப் போன்ற வயதுப் பெண்களே அங்கு மாணவிகளாயிருந்தனர். அங்கு போகலாமென்று சுந்தரி கூறிய போது சித்தி பரீதாவுக்கு உற்சாகம் வந்து விட்டது.

அன்றிரவே தாயாரை நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள் சித்தி பரீதா. வயதுக்கு வந்த பெண்ணை அங்கெல்லாம் அனுப்புவதற்கு சித்தி உம்மாவுக்கு அடியோடு

இஷ்டமேயில்லை. ஆனால், முஸ்தாபா விபரத்தை அறிந்ததும் வெகு சுலபமாக அதற்கு அனுமதி கொடுத்துவிட்டார்.

"அதுக்கென்ன சுந்தரியும் போறாள் தானே? குழந்தை போய் வரட்டன்."

அடுத்தமாத முதல் திகதியிலிருந்து அந்தப் பதினேழு வயதுக் 'குழந்தை' தையல் வகுப்புக்குச்செல்லத் தொடங்கியது.

வீட்டிலிருந்து பிரதான றோட்டு வரையும் சுந்தரியும் சித்தி பரீதாவும் ஒன்றாகவே செல்வார்கள். அதன் பின் சுந்தரி நெசவு நிலையத்துக்கு வலது புறமாகவும், சித்தி பரீதா நேர் எதிரே இடது புறமாகவும் பிரிந்து செல்ல வேண்டும்.

இருவரும் தினசரி காலையில்ஒன்றாகவே வீட்டிலிருந்து புறப்படுவார்கள். இரண்டு இளவயதுப்பெண்கள் சேர்ந்து போகும் போது இருபது ஆண்கள் சேர்ந்து போகும் கலகலப்பிருக்கும். சித்தி பரீதாவும் அந்த வர்க்கத்தின் ஒருத்திதானென்றாலும் வீட்டுக்கு வெளியே வந்து விட்டாளென்றால் குனிந்த தலை நிமிரமாட்டாள் அவள். தையல் பயிற்சி நிலையம் இருக்கும் இடத்துக்குப் போய்ச் சேரும் வரை பேசாமடந்தைதான். முக்காட்டை நன்றாக இழுத்து விட்டுக்கொண்டு விறுவிறுவென்று செல்வாள்.

ஆனால், சுந்தரிக்கு வாய் ஓயாத வாய். சித்தி பரீதாவின் கலகலப்பும் சேர்ந்து இவளிடம் தொற்றிக் கொண்டது போல் பிரதான றோட்டுச் சந்தியில் பிரிந்து செல்லும் வரை எதையாவது கதைத்துக்கொண்டே வருவாள். போகிற வருகிறவர்களின் பார்வை இவர்களையே மொய்த்துக் கொண்டிருக்கும்.

சித்தி பரீதாவை விட சுந்தரி ஒரு வயது குறைந்தவளானாலும் சிறு வயதிலிருந்தே அவளின் உடல்வாகும் பெரியது. தோற்றமும் கவர்ச்சிகரமானது. இப்போது

பருவ அழகும் சேர்ந்து அவளை ஒரு தன்னிச்சையாக வளர்ந்த காட்டுப் புஷ்பம் போல் ஆக்கியிருந்தது. அவளின் பேச்சு, சிரிப்பு, நடையுடை பாவனைகளெல்லாமே ஒவ்வொரு அழகைச் சிந்தின. அவை போதாதென்று வீட்டில் தமக்கையிடம் அவளுக்கிருந்த சலுகைகள் வேறு அவளிடம் ஒரு இயல்பான துடுக்குத்தனத்தை வளர்த்திருந்தன.

வீட்டில் காலைநேரத்தில் செய்யும் வேலைதான் சுந்தரிக்கு. நெசவுக்கு போய்த் திரும்பினுளென்ருல் ஒரு துரும்பைக் கூடத் தொட்டு அசைக்கமாட்டாள் அவள்.

''இடுப்பெல்லாம் வலிக்குதக்கா'' என்று சிணுங்கினுளென்ருல் போதும் பாக்கியத்துக்கு அவளைக் கோபிக்கக் கூட மனம் வராது. ''சரி தொலை'' என்று விட்டு விடுவாள்.

மீனுட்சி ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டு வீட்டிலேயே இருப்பதால் பாக்கியத்தின் வீட்டு வேலைகளில் ஒரு பகுதி குறைந்திருந்தது. சுந்தரியைப் போல் விளையாட்டுச் சுபாவமுள்ளவளல்ல அவள். அவளிடம் அடக்கம் அதிகம். வீட்டுப் பொறுப்பும் அதிகம்.

ஒரு தடவையிலேயே மீனுட்சி ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து சர்வகலாசாலைப் படிப்புக்கு தேர்வான போது இருக்கிற கஷ்டங்களைப் பார்க்காமல் அவளைத் தொடர்ந்து படிப்பிக்க வேண்டுமென்றுதான் பாக்கியத்துக்கு விருப்பமாயிருந்தது. அதற்கு மறுத்தது மீனுட்சிதான்.

''அக்கா! நான் யூனிவசிற்றிக்குப் போய் பி. ஏ. பாஸ் பண்ணிப்போட்டு வந்தும் இன்றைக்கு இருக்கிற மாதிரிக்கு ஜி. சி. ஈ. யோடே பாக்கிற வேலையைத்தான் பாக்க வேண்டியிருக்கும். அதிலும் இப்பிடியே இருந்து வேலையளுக்கு அப்பிளிக்கேசனைப் போட்டுப் பாக்கிறது நல்லது.

ஏதாவது தோதான வேலைகிடைக்காமலா போப் போகுது?''

இப்படியொரு வெளிப்படையான காரணத்தை மீனாட்சி தமக்கையிடம் கூறியிருந்தாலும், அவள் படிப்பைப் பாதியில் நிறுத்துவதற்கு உள்ளூர ஆழ்ந்த காரண மொன்றிருந்தது.

ஒரு நாள் சித்தி உம்மா பாக்கியத்துடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது பேச்சுவாக்கில் விசாரித்தாள்:

''என்ன பாக்கியம்! கடைசி வரைக்கும் நீ இப்பிடித் தானா இருக்கிற யோசினை? கல்யாணம் காட்சியென்று ஒன்றுமே இல்லையா உனக்கு?''

மீனாட்சி அச்சமயம் அவர்களின் அருகில்தான் நின்றாள். தமக்கை என்ன பதில் சொல்வாளென்று கேட்க அவளுக்கு ஆவலாயிருந்தது. திரும்பிப் பாக்கியத்தின் முகத்தைப பார்த்தாள்.

பாக்கியத்தின்முகத்தில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை.

''எனக்கொரு கல்யாணமா?'' என்று சிரித்தவள் மீனாட்சியின் தோளில் வலது கையை வைத்தபடி சொன்னாள்: ''அக்கா எனக்குத்தான் கல்யாணம் செய்யாமலேயே இவளோடே சேர்த்து ஐந்து பிள்ளையள் இருக்கே''

எவ்வித மனக்கிலேசமும் இல்லாமல் பாக்கியம் சிரித்துக்கொண்டே இப்படிக் கூறினாலும் மீனாட்சியின் நெஞ்சில் சுருக்கென்று வலியெடுப்பது போலிருந்தது. அவளும் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒருபெண்தானே. ஒரு பெண்ணின் வாழ்வு எப்படியெல்லாம் நிறைவுபெற வேண்டுமென்று அவளுக்குப் புரியாதா? இருந்தாலும் விபரந் தெரியாத வயதிலிருந்தே பாக்கியம் ஒரு தாயாக இருந்து தங்கைமார்களை வளர்த்த தன்மையால் அவளுக்கும்சில அபிலாஷைகள் இருக்குமென்பதை அத்தனை காலமும் எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டாள் மீனாட்சி. அன்று

சித்தி உம்மா கேட்டதன் பின்தான், அக்காவும், கன்னி கழியாமல் இருக்கிறுளென்ற வேதனையான உண்மை அவளின் நெஞ்சை உறுத்தியது. அன்றைக்கே அவள் தனக்குள் ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்து விட்டாள், தமக்கைக்கு ஒரு வாழ்வை அமைத்துக் கொடுக்கும் சக்தி இல்லாவிட்டாலும் அவளுக்குக் கொடுக்கும் சிரமங்களை முடிந்த வரையில் குறைத்துக்கொள்ள வேண்டும்.

மீனுட்சி படிப்பைத் தொடராமல் பாதியில் நிறுத்தியது இந்த எண்ணத்தோடுதான். தினசரி அரசாங்க வர்த்தமானியைப் பார்ப்பது அவளின் பழக்கமாகிவிட்டது. ஏதாவதொரு நாணயமான வேலைக்குப்போய்விடவேண்டுமென்று அவளுக்கு அளவு கடந்த ஆவலாயிருந்தது. பொன்னுத்துரை எப்போது வீட்டுக்கு வந்தாலும், ''அண்ணு ஹசற்றைப் பார்த்தியளா?'' என்பதுதான் அவளின் முக்கிய கேள்வியாக் இருக்கும். அந்த வேலைக்குப் பொறுப்பாளன் அவன்தான்.

பாக்கியத்துக்கு, மீனுட்சி இப்படி ஒரு காரணத்துக்காகத்தான் படிப்பை நிறுத்திளுள் என்பது தெரியாது. தெரிந்திருந்தால் இரண்டு அறைகள் கன்னத்தில் கொடுத்து அவளின் படிப்பைத் தொடர வைத்திருப்பாள். பாக்கியத்தைப் பொறுத்தவரை பெண்மைக்குரிய பருவக் கிளர்ச்சிகள் யாவும் இந்த இருபத்தொன்பது வயதுக்குள்ளேயே அற்றுப்போய்விட்டன. தாய் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்து அந்த உணர்ச்சிகளையே தீவிரமாக வெறுத்தவள் அவள். அவளின் மனதில் நிறைந்திருந்த உணர்ச்சி ஒன்றே ஒன்றுதான். அவளை ஆட்டிப்படைத்ததும் அதுதான். தாய்மை உணர்ச்சி அது.

முன்பெல்லாம் இரவில் படுத்ததுமே வேலைக் களைப்பினுல் உறங்கிவிடுவாள் பாக்கியம். இப்போது தூக்கமே சில சமயங்களில் அவளுக்கு வருவதில்லை. மளமளவென்று

வளர்ந்திருக்கின்ற தங்கைமார்களைப் பற்றித்தான் அவ ளின் கவலைகளெல்லாம்.

அப்போது லட்சுமியோடு வீட்டில் மூன்று பெண்கள் வயதுக்கு வந்தவர்களாகிவிட்டார்கள். கீழேயிருப்பதுவும் இரண்டும் பெண்கள். ஒன்றைக் கஷ்டப்பட்டுக் கரைசேர்ப் பதற்குள் அடுத்தது அந்த இடத்தை நிரப்பி விடும். ஐந்து பெண்களைப் பெற்ருல் அரசனும் ஆண்டியாகிவிடுவான் என்பார்கள். இவள் இப்போதே ஆண்டியிலும் ஆண்டி. அத்தனை காலமும் இரவு பகலாகப் பாடுபட்டும் மூவா யிரத்துச் சொச்ச ரூபாவுக்குமேல் அவளினுல் பணத்தைச் சேர்க்க முடியவில்லை.

அடுத்த வீட்டுச் சித்தி உம்மா கைநிறையப்பணத்தை யும், அழகான ஒரு பெண்ணையும் வைத்துக்கொண்டே திருமணம் பேசுவதற்குப் படும் கஷ்டம் பாக்கியத்துக்கும் தெரியும். இவள் மூவாயிரத்து சொச்ச ரூபாவையும், மூன்று வயதுப் பெண்களையும் வைத்திருப்பவள். அண் ணனே தம்பியோ உதவிக்கிருந்தால் பாக்கியத்துக்கு மனக்கலக்கம் இருந்திருக்காது. ஆனுல், இரு வழிகளி லுமே உதவியென்பது அடியோடில்லாதவள் அவள். வடி வேலு கடைசியாகச் சண்டை பிடித்துக்கொண்டு போன தன்பின் வீட்டுக்கு வருவதையே நிறுத்திவிட்டான். சுந் தரமூர்த்தி வருஷத்துக்கு ஒரு தடவையோ இரு தடவை களோ கொழும்பிலிருந்து வருவான். அவனைத் திருப்பி அனுப்புவதற்குப் பாக்கியம்தான் பணம் கொடுக்க வேண் டிய நிலையாயிருக்கும்.

மொத்தத்தில், வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்கள் பாக்கியத்தை முழுவேகத்துடன் அழுத்திக்கொண்டிருந் தன.

## 12.

**"டங்!"** மணி ஒன்று. கண்களை இறுகமூடிக் கொள்வதிலிருந்து முருகா முருகாவென்று மனதுக்குள் ஜெபிப்பதுவரை இரவு வந்து படுத்த நேரத்திலிருந்து எல்லா முயற்சிகளையுமே செய்து பார்த்துவிட்டாள் பாக்கியம். உஹூம்... உறக்கம் அவளின் பக்கத்தில் கூட வரவில்லை.

பாக்கியம் ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டபடி தலைப்புறமாகத் தணித்து வைக்கப்பட்டிருந்த அரிக்கன் லாந்தரை தூண்டினாள். பின்பு படுத்திருந்தபடியே தலையைமட்டும் தூக்கி அருகருகே உறங்கிக்கொண்டிருக்கும் தங்கைமார்கள் ஐவரையும் பார்த்தாள்.

மீனாட்சி வழமைபோல் முழங்கால்கள் இரண்டையும் வயிற்றுப்புறம் மடித்தபடி ஒருக்கழித்துப் படுத்திருந்தாள். சுந்தரியும் வழக்கம்போலவே தலையணையில் முகம் புதையக் குப்புறப் படுத்திருந்தாள். சின்னப்பெண் கீதா கூட தூங்கும்போது ஒழுங்காகத்தான் தூங்குவாள். வயது பதினேழாகியும் சுந்தரிக்கு மட்டும் பழைய பழக்கம் மாறவில்லை. அவள் அணிந்திருந்த நீட்டுப் பாவாடை முழங்காலுக்கு மேலாக விலகிப்போயிருந்தது. திரட்சியான அவளது கால்கள் இரண்டும் பாம்பின் உடலைப் போல் அந்த மங்கிய லாந்தரின் ஒளியில் மினுமினுத்தன. கூந்தல் ஒரு புறம் காடாகக் கவிந்து போயிருந்தது. உடலைப் போலவே அவளின் கூந்தலுக்கும் தனி வளர்ச்சி. எழுந்து நின்றாளென்றால் முழங்காலுக்குக் கீழாகத் தொங்கும்.

பாக்கியத்தின் பார்வை அடுத்துப் படுத்திருந்த அவளின் மேல் தான் பதிந்திருந்தது. இருதயத்தை ஏதோ ஒரு இராட்சதக்கரம் பிடித்துக் கசக்குவதுபோன்ற வேதனையான உணர்ச்சி. பாக்கியம் பெருமூச்சோடு லாந்தரைக் கூடத் தணித்து வைக்கத் தோன்றுமல் பழையபடி படுத்துக் கொண்டாள். கண்களில் மண்விழுந்து உறுத்துகிறுற்போல் நீர் சுரந்து உறுத்தியது.

''எனக்கு வெள்ளனப் பைத்தியந்தான் பிடிச்சுப் போச்சு'' என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்

எந்த வழியிலும் சமாதானமடைய முடியாமல் அவளின் மனம் தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தது,

இத்தனைக்கும் அன்றைக்குப் பிரமாதமான நிகழ்ச்சியெதுவும் நடந்து விடவில்லை. இதுநாள்வரை ஒரு நாளாவது சுந்தரியை மனம்நோக ஒரு வார்த்தை பேசாதவள் அன்றைக்குக் கைநீட்டி அவளை ஒரு அடி அடித்துவிட்டாள். விஷயம் இவ்வளவுதான்.

பாக்கியம் வீட்டுப் பொறுப்பை ஏற்று இன்றைக்குப் பதினுறு பதினேழு வருடங்களாகி விட்டன. ஒருநாள்கூட தங்கைமார்களில் ஒருத்தியையாவது அவள் அடித்தது கிடையாது. கண்டிப்புடன் அவள் ஒரு பார்வை பார்த்தாலே போதும். ஒவ்வொருவரும் நடுக்கத்துடன் ஒவ்வொரு மூலையில் நிற்பார்கள்.

அன்று சுந்தரிக்கும் வாய் சற்று அதிகமாகித்தான் விட்டது. இல்லாவிடில் கதைக்குக் கதையாகத் தமக்கையாரோடு கதைத்திருக்கமாட்டாள் அவள்.

பாக்கியத்துக்கு மறுபடியும் பெருமூச்சு வந்தது. சுந்தரி நெசவு நிலையத்திலிருந்து பின்னேரம் வந்த குதூகலத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டாள். 'அக்கா! அக்கா!' என்று அவள் குழந்தையைப்போல் குழைந்த குழைவென்ன, வழமையில் நாரிவலி இடுப்புவலி என்று சிணுங்குபவள் அன்றைக்குத் தானுகவே ஒவ்வொரு வேலை

யாக இழுத்துப்போட்டுக்கொண்டு செய்த பதவிசு என்ன? ''அக்கா! எனக்குக் கொஞ்சம் வேலை தாவேன்'' என்று வேறு கேட்டு வைத்தாள்.

''என்னக்கா! இவள் இன்றைக்கு ஒரேயடியா வழி யிருள்'' என்று இரகசியமாக வினுவினுள் மீனுட்சி. பாக் கியம் சிரித்தாள்.

''பொறன் பாப்பம்''

புதிதாக ஏதோ சட்டைத்துணி வாங்க விரும்பித்தான் சுந்தரி இத்தனை பதனமாக நடந்து கொள்கிருளென்பது பாக்கியத்தின் கணிப்பு. நெசவு நிலையத்துக்குப் போக ஆரம்பித்ததன் பின் ஏற்கனவே இருதடவைகள் தமக்கை யிடம் வந்து கெஞ்சி இருதடவைகள் புதுத்துணிகள் எடுப் பித்திருக்கிருள் சுந்தரி. பாக்கியத்துக்கு எல்லாத் தங் கைமார்களுக்குள்ளும் அவளின்மேல்தான் பிரியம் அதிக மென்ருலும் அவர்களுக்குள் பாரபட்சமாக அவள் எதை யும் செய்வதில்லை. ஆனுல், இடையில் இருதடவைகள் இப்படிச்சுந்தரிக்குச் சட்டைத் துணிகள் வாங்கிக்கொடுத்த தற்கு அவள் கண்கலங்கினுல் பொறுக்கமுடியாதென்ற அன்புணர்ச்சிதான் உண்மையான காரணமென்ருலும், பத்து இருபது சமவயதுப் பிள்ளைகள் ஒன்ருகப் போகும் ஒரு இடத்தில் இவளும் மற்றவர்களைப்போல் நாகரிகமாக உடையணிந்து கொள்ள ஆசைப்படுவது இயல்புதானே என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக்கொள்வாள் பாக்கியம். ஆனுல், இந்தத் தடவை சுந்தரியின் இஷ்டத்துக்கு விடுவதில்லையெனத்தீர்மானமாக எண்ணிக் கொண்டாள் அவள்.

இதுவே ஒரு கெட்ட பழக்கமாகத் தொடர்ந்து வளர்ந்து விடுமென்ற பயம்மட்டுமல்லாமல், மற்றைய தங்கைமார்களெல்லாம் அக்கா ஒரவஞ்சனையாக நடக்கிரு ளென்று நினைத்து விடுவார்களோவென்று பயமாகவும் இருந்தது.

இரவு ஒன்பது மணிவரையும் ஒரு நிமிஷங்கூட ஓய்வில்லாமல் பம்பரமாகச் சுழன்று எல்லா வேலைகளையும்செய்து முடித்துவிட்டு உணவருந்த உட்கார்ந்தபோது சுந்தரி தயக்கத்துடன் மெல்ல அவளருகே வந்து நின்றாள். தமக்கை அந்த நேரம்தான் அமைதியான மனத்துடன் இருப்பாளென்பது அவளுக்கு நன்கு தெரியும்.

''அக்கா!''

''உம்...'' பாக்கியம் ஒரு 'உம்' மட்டும்தான் கொட்டினாள். தங்கையை அவள் நிமிர்ந்தே பார்க்கவில்லை. சோற்றைத் தட்டில் போட்டுக் கொள்வதற்காக அகப்பையை எடுத்துக் கொண்டாள்.

மீனாட்சி கூடத்திலிருந்து தங்கைமார்களை அதட்டி உருட்டி பாடசாலைக் கணக்குகளைப் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

''நான் கறியைப் போடுகிறனக்கா'' என்று அகப்பையை எடுத்துக்கொண்டாள் சுந்தரி. பாக்கியத்துக்குச் சிரிப்பு வந்துவிட்டது. உள்ளூரத் தங்கையின் சாகஸத்தை ரசித்தபடியே, அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், ''போதுமடி நீ காக்கா பிடிச்சது'' என்று அதட்டியபடி அவளின் கையிலிருந்த அகப்பையைப் பிடுங்கிக்கொண்டாள். ''நான் கறியை எனக்களவாப் போட்டுக் கொள்றன். நீ வந்த காரியத்தைச் சொல்லு. என்ன விஷயம்?''

''அக்கா!...'' என்று தயக்கத்துடன் மென்று விழுங்கினாள் சுந்தரி. ''எனக்கொரு மணிக்கூடு வாங்கித்தாறியா?''

பாக்கியம் தூக்கிவாரிப்போட்டவளாக அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

''மணிக்கூடா?'' உண்மையிலேயே அவள் அதிர்ந்துதான் போய்விட்டாள். சுந்தரி நகத்தைக் கடித்தபடி தலையைக் குனிந்துகொண்டு நின்றாள். தன்னைவிட அதிகமாக வளர்ந்து போயிருக்கிற அவளைப் பார்க்கப் பாக்கியத்துக்கு அந்த நேரம் ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. 'கொஞ்சமாவது வறுமை தெரியுதா?'

வாய்திறந்தால் கண்டபடி அவளைத் திட்டவேண்டி யிருக்குமென்ற எண்ணத்துடன் தலையைத் தாழ்த்திக் கொண்டு மளமளவென்று சோற்றைப் பிசைய ஆரம்பித் தாள்.

சுந்தரி கடைக்கண்ணுல் அவளைப் பார்த்தாள்.

''என்னக்கா வாங்கித் தாறியா?'' பாக்கியத்தின் பொறுமை போய் விட்டது.

''போடி நாயே அங்காலே'' என்று கத்திஞள்.

''இருக்கிற கேட்டிலே உனக்கு மணிக்கூடு கேக்குதா?''

சுந்தரியின் முகம் சுருங்கிவிட்டது. ஆத்திரமும் அழு கையுமாக தமக்கையை பார்த்து விட்டு விறுக்கென்று முகத்தை வேறு புறமாகத் திருப்பிக்கொண்டாள். அவளை யறியாமலேயே வார்த்தைகள் நாவில் வந்துவிட்டன.

''எப்பவும் பட்டினிப்பானைதானே எங்களுக்கு''

பாக்கியத்தின் மான உணர்ச்சியில் ஓங்கி ஒரு அறை விழுந்தது போலிருந்தது.

''நில்லடி'' என்று ஆவேசத்தோடு சோற்றுக்கையை உதறிக் கொண்டு எழுந்தவள், எச்சில் கையென்பதைக் கூடப் பார்க்காமல் சுந்தரியின் தோள்களை உடும்புப்பிடி யாகப் பிடித்துத் தனது பக்கம் திருப்பிஞள். ''என்னடி சொன்ஞய்! நான் பட்டினிப்பானை இறக்கிறேஞ?''

சுந்தரி வெலவெலத்துப் போஞள். ஆஞலும் அவளின் மனப் புகைச்சல் அடங்கவில்லை.

''மணிக்கூடு கட்டக்கூடாதா?'' என்று முணுமுணுத் தாள். பாக்கியம் வெடித்தாள்.

''கட்டலாமடி நாயே. அதுக்கும் வசதி வேண் டாமா?''

''அதுதான் எங்களுக்கு ஒருநாளும் வராதே. நெடு கவும் பட்டினிப்பானை தானே?''

சுந்தரி கூறி வாய்மூடவில்லை. பளீரென்று அவளின் இடது கன்னத்தில் ஒருஅறை விழுந்தது. பாக்கியம் வெறி

பிடித்தவளைப்போல் அவளின் பிடரியில் கையை வைத்து வெளியே நெட்டித்தள்ளினாள்.

"போய்த் தொலையடி சனியனே... சீச்சீ... நன்றி கெட்ட மூதேவியள். மாடா உழைச்சுப் பாத்தாலும் உணர்ச்சி வராதாம்." அவள் போட்ட கூச்சலில் மீனாட்சியும், மற்றத் தங்கைமார்களும் வெலவெலத்துப்போய் கப்சிப்பென்று அடங்கிவிட்டனர். சுந்தரி சிறு குழந்தைபோல் ஓவென்று கதறியழத் தொடங்கிவிட்டாள்.

அவளின் அழுகை ஓயும்வரை பாக்கியம் சமையலறையிலிருந்து வெளியே வரவில்லை. அதன் பின் அவள் உணவருந்தவுமில்லை; உணவருந்த அவளால் முடியவுமில்லை. போட்ட சோற்றை அப்படியே மூடிவைத்துவிட்டுதலையை இரு கைகளாலும் பிடித்தபடி சுவரோடு சாய்ந்தபடி இருந்தவள் பதினொருமணி அடித்ததன் பின்னரே எழுந்து வெளியே வந்தாள்.

சுந்தரி அழுதபடியே தூங்கிப்போயிருந்தாள். மற்றைய தங்கைமார்களும் உறங்கிவிட்டார்கள். மீனாட்சி மட்டும் தூங்கவில்லை. முகட்டுவளையைப் பார்த்தபடி படுத்திருந்த அவள், தமக்கையைக் கண்டதும் திரும்பி ஒருக்களித்துப் படுத்துக்கொண்டாள். சுந்தரிக்கு அடித்தது அவளையும் வேதனைப்படுத்திக் கொண்டிருக்கென்று பாக்கியத்துக்கு நன்கு புரிந்தது.

"முருகா" என்று வாய்விட்டே முணுமுணுத்துவிட்டு வழமைபோல் சுந்தரியின் அருகில் படுத்துக்கொண்டாள். அந்த நேரத்திலிருந்து இந்த நேரமாகிவிட்டது. இன்னும் தூக்கம்தான் வரவில்லை அவளுக்கு...

"அக்கா!...ம்...ம்...அ...க்......கா!" கண்களை இறுக மூடியபடி தூங்க் முயன்றுகொண்டிருந்த பாக்கியம் திகைப்படைந்தவளாகச் சட்டென்று தலையைத்தூக்கிப் பார்த்தாள். சுந்தரிதான் வாய் பிதற்றிக்கொண்டிருந்தாள். தூக்கத்தில் அவளின் கைகள் யாரையோ தேடுவன போல் பாயில் அங்குமிங்குமாக அலைந்தன. மெல்லப்

புரண்டுவந்து பாக்கியத்தின் வயிற்றின் குறுக்கே வலது காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டாள். அவளின் வலது கை, பாக்கியத்தின் கழுத்தை வளைத்துக்கொண்டது.

இத்தனை வயதாகியும் அவளின் இந்தப் பழக்கம் மாறவில்லை. அவள் அணிந்திருந்த பாவாடை இப்போது இடுப்புவரை விலகிப்போயிருந்தது.

பாக்கியத்தின் உள்ளம் நெகிழ்ந்து கரைந்தது. தங்கையின் பாவாடையை இழுத்துச் சீர்செய்துவிட்டு அவளின் முதுகுப் புறத்தை மெல்ல வருடினாள். கைக்கு அகப்படாமல் இரண்டாகப் பிளந்திருப்பதுபோல் அவளின் முதுகுப் புறம் அகலமானதாக இருந்தது.

சுந்தரி தூக்கத்தில் கனவு ஏதாவது கண்டாளோ என்னவோ மறுபடியும், "அக்கா..." என்று ஏதோ தொடர்பில்லாமல் வாய்பிதற்றியபடி பாக்கியத்தின் மார்பினில் குழந்தைபோல் முகத்தை ஒடுக்கிக்கொண்டாள்.

பாக்கியத்திடம் ஏற்பட்ட மனக்கசிவு அதிகமாகியது. மெல்லத் தங்கையின் கன்னப்புறத்தைத் தடவிப் பார்த்தாள். பிறகுதான் கீழ்ப்புறத்திலுள்ள சுந்தரியின் இடது கன்னத்தில்தான், தான் அடித்ததென்று அவளுக்கு நினைவு வந்தது. மெல்ல அவளின் தூக்கம் கலையாதவாறு அவளின் காலையும் கையையும் விலக்கி அவளை மல்லாக்காகத் திருப்பிப் படுக்கவைத்துவிட்டு லாந்தரை அருகிலெடுத்துப் பார்த்தாள். கன்னத்தில் கைவிரல் அடையாளங்களெதுவும் தெரியவில்லை. இருந்தும் பாக்கியத்தின் நெஞ்சில் நெருஞ்சிமுள் புகுந்து விட்டாற்போல் வலியெடுத்தது. கொழுகொழுவென்று இளமையின் பூரிப்பினால் மினுமினுத்துக் கொண்டிருந்த தங்கையின் அந்தக் கன்னத்தையே சிறிதுநேரம் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தவள், தாய்மையின் நெகிழ்ச்சியோடு மெல்லக் குனிந்து முத்தமிட்டாள். பின்பு, லாந்தரைப் பழையபடி தணித்து தலைப்புறத்தில் வைத்துவிட்டுசுந்தரியை அணைத்த

தபடி படுத்துக்கொண்டாள். மனப்பாரம் சிறிதுகுறைந்து விட்டதுபோல் தோன்றியது.

எப்படியும் அவளுக்கொரு கைக்கடியாரம் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டாள் பாக்கியம். மற்றைய சகோதரிகளுக்கு இச்செயல் ஓரவஞ்சனையானதாகத் தோன்றுமென்று தெரிந்திருந்தாலும், கை நீட்டி அடித்த தனது மனதுக்கு அப்படிச் செய்யாமல் நிம்மதி உண்டாகாதென்று அவளுக்கு நன்கு புரிந்தது.

மறுநாளே வாங்கிக் கொடுத்துவிடலாம் என்றாலும் பாக்கியத்திடம் அவ்வளவு பணம் அப்போது கைவசம் இருக்கவில்லை. ஐம்பது ரூபாவும் ஏதோ சில்லறைக் காசும் தான் பெட்டியிலிருக்கென்று அவளுக்குத் தெரியும். அவளின் மற்றைய சேமிப்புப் பணமெல்லாவற்றையும் யாரிடமாவது வட்டிக்குக் கொடுக்கும்படி சித்திஉம்மாவிடம் கொடுத்துவிட்டாள். உடனடியாகப்போய் அந்தப்பணத்தில் இவ்வளவு தாவென்று அவளிடம் கேட்க முடியாது.

பாக்கியத்துக்கு திடீரென அடிப்பெட்டியில் கிடக்கும் வளையலைப் பற்றிய நினைவு வந்தது. சின்ன வயதில் அவளின் தகப்பனார் அவளுக்குச் செய்துபோட்ட வளையல்களில் ஒன்றது. எப்போதோ அது இரண்டாக ஒடிந்து விட்டாலும் அப்பாவின் ஞாபகமாக இருக்கட்டுமென்றுஅதை அப்படியே வைத்திருந்தாள். இச் சமயத்தில் பாக்கியம் தனக்குத் தானே ஒரு சமாதானத்தைக் கூறிக்கொண்டாள்: 'வளையல் இருந்துதான் அப்பாவின் ஞாபகம் வரவேணுமா? நெஞ்சும் நினைவும் காணாதா?'

பாக்கியம் ஒரு வார்த்தை கேட்டால் உடனடியாகப் பணம்தர பொன்னுத்துரையும், சித்தி உம்மாவும் ஆயத்தமாக இருந்தார்கள். அவளுக்கு உதவிசெய்யும் சமயம் எப்போது வருமென்று காத்திருப்பவர்கள் அவர்கள். ஆனால், அவள் தான்அதைஅடியோடு விரும்பவில்லை. வட்டிக்குக் கொடுக்கும்படி சித்தி உம்மா விடமே பணத்

தைக் கொடுத்துவிட்டு அவளிடமே கடனுகக் கேட்பது மரியாதையான செயலாக இருக்காது. பொன்னுத்துரையைக் கேட்கலாம். அவனும் கொடுப்பான். திருப்பிவாங்க மாட்டான். முன்பு ஒருசமயம் ஏதோவொரு அவசரத்துக்கென ஐம்பது ரூபா வாங்கிவிட்டு பின்பு கால்களில் விழாத குறையாகக் கெஞ்சியும் அவன் அந்தப்பணத்தைத் திரும்ப வாங்க மறுத்துவிட்டான். அவன் தினசரி செய்யும் உதவிகளுக்கே ஏழேழு ஜன்மங்களெடுத்துப் பிரதியுபகாரம் செய்தாலும் தீர்க்கமுடியாதென்று நினைக்கிறவள் பாக்கியம். அவனிடம் பொருட் கடனும்பட அவள் விரும்பவில்லை.

பாக்கியம் யோசனையோடு எப்போது உறங்கினுளோ தெரியாது. காலையில் வழமைபோல் மூன்றரை மணிக்கே எழுந்து வேலைகளைக் கவனித்தாள். அவளையடுத்து மீனுட்சி, சுந்தரி, லட்சுமி யாவருமே எழுந்து தத்தமது வேலைகளைச் செய்தார்கள். பொன்னம்மாள் சிரமத்துடன் கமறிக்கமறி இருமிக்கொண்டிருந்தாள். சில நாட்களாகவே அவளின் உடல்நிலை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருந்தது.

சுந்தரியின் முகம் மலர்ச்சியில்லாமல் 'உம்' மென்றிருந்தது. மீனுட்சி சுபாவத்திலேயே மௌனமானவள். அன்று அதிகமௌனமாகிவிட்டாள். பொன்னுத்துரை ஆறரை மணிபோல் அங்கு வரும்வரையும் இந்த மௌன நிலை மாறவில்லை.

பொன்னுத்துரை சைக்கிளை வெளியில் நிறுத்திவிட்டு உள்ளே வரும்போதே மீனுட்சியின் பெயரைக் கூறித்தான் அழைத்துக் கொண்டு வந்தான். அவன் வலது கையில் விண்ணப்பப் படிவமொன்று இருந்தது.

''மீனுட்சி!''

''இதோ வாறனண்ணு'' என்று சமையலறைக்குள் இருந்து வெளியே வந்தாள் மீனுட்சி. பொன்னுத்துரை விண்ணப்பப் படிவத்தை அவளின் பக்கமாக நீட்டினுன்.

''இந்தா! எஸ். எஸ். ஸி. யோடே அன்சேட்டிவிக்கற் ரீச்சர் வேலைக்குக் கேட்டிருக்கிருங்கள். தெரிஞ்ச பொடியனொருதன் ராத்திரி இந்த அப்பிளிக்கேஷன் போமைத் தந்தான்''... மீனாட்சி ஆவலுடன் அதை வாங்கிப் பரபரவென்று படித்துப் பார்க்கத் தொடங்கினாள்.

பாக்கியம் இடியப்பம், தோசை கொண்டு செல்லும் இரண்டு பெட்டிகளுடனும் சமையலறைக்குள்ளிலிருந்து வந்தாள். அதேவேளையில் தலையைச் சீவியபடியின் புறத்திலிருந்து சுந்தரியும் வந்துகொண்டிருந்தாள்.

''என்ன சுந்தரி! முகம் சிரிச்சாப்போலே இருக்கே. விளக்கெண்ணெய் புட்டி முகத்திலே கவிண்டுபோச்சா?'' என்று கிண்டலாக அவளை வம்புக்கு இழுத்தான் பொன்னுத்துரை. சுந்தரி வழமைபோல் துடுக்குத்தனமான பதிலெதுவும் சொல்லவில்லை. உதிர்ந்து சீப்பில் சிக்கிக் கொண்ட தலைமயிர்களை சுட்டுவிரலில் சுருட்டி எடுத்தபடி வெடுக்கென்று திரும்பி அறைக்குள் போய்விட்டாள்.

''இவளுக்கு இன்றைக்கு என்ன வந்திட்டுது?'' என்று திரும்பிச் சிரிப்புடன் பாக்கியத்தை விசாரித்தான் பொன்னுத்துரை.

''வெளியிலே வா சொல்றன்'' பாக்கியம் மெல்லக் கூறி அவனை முன்புற வேப்பமரத்துக்குக் கீழ் அழைத்து வந்து முதல் நாள் இரவு நடந்த நிகழ்ச்சியை அவனிடம் சொன்னாள். பின்பு கேட்டாள்:

''உனக்கு இன்றைக்கு நேரம் வாறப்போ எனக்கொரு உதவி செய்வியா?''

''என்ன கேள்வியக்கா, சொல்லன் செய்யிறன்.''

''என்னெட்டை பழைய வளையலொன்று கிடக்கு. இரண்டா உடைஞ்சது. அதை வித்துத்தாறியா?''

''ஏன்! மணிக்கூடு வாங்கவா?'' பாக்கியம் நேரடியாக இதற்குப் பதில் கூறவில்லை. சுற்றிவளைத்து ஒரு கதையைச் சொன்னாள்.

''பிரியோசனமில்லாமல் கிடக்கிறதுதானே தம்பி அது.. மணிக்கூட்டை வாங்கினல் பொருளுக்கும் பொருளாயிடும். அவளின்ரை ஆசையும் நிறைவேறிப்போம்.''

கையில் பணமில்லாமல் தான் அவள் இப்படியொரு சமாதானத்தைத் தேடுகிருளென்று பொன்னுத்துரைக்கு உடனே புரிந்துவிட்டது. பாக்கியம் தொடர்ந்துமெல்லிய குரலில் கூறினுள்:

''மீனுச்சி மூத்தவள். அவளுக்கு வாங்காமல் இவளுக்கு வாங்கினல் அவள் ஏதாவது மனவருத்தமா நினைப்பாளோ என்றுதான் பயமாக்கிடக்கு.''

''ஏன் வேற வளையல் இல்லையா?'' பொன்னுத்துரை சட்டெனத் தன்னையறியாமல் கேட்டுவிட்டான்.

''ஏன் இப்பிடிக் கேக்கிருய்?'' என்ருள் பாக்கியம் சந்தேகத்துடன்.

''ஒன்றுமில்லை சும்மாதான் கேட்டன்.'' பொன்னுத்துரை மழுப்பிவிட்டு பெட்டிகளைச் சைக்கிள் கரியலில் வைத்துக்கட்டிக் கொண்டு புறப்பட்டான். பணம் வேண்டுமெனத் தன்னிடம் ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் பாக்கியம் வளையலை விற்க எண்ணியதை நினைக்க அவனுக்கு உள்ளூரத் துன்பமாயிருந்தது. அவன் மனதுக்குள் ஒரு தீர்மானம் செய்துகொண்டான்.

## 13

வாடிக்கைக் கடைகளுக்கு முறுக்கு, வடைகள் முதலிய பட்ஷண வகைகள் எடுத்துப் போகும் வழமையான அந்தி நேரத்தில் தான் மறுபடியும் பாக்கியத்தின் வீட்டுக்கு வந்திருந்தான் பொன்னுத்துரை.

மீனுட்சி வெளித்திண்டிலிருந்து லட்சுமிக்கும் வாணிக்கும் ஏதோ பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்

தாள். வேப்பமரத்தின்கீழ் தனியே நின்று மாங்கொட்டை போட்டு விளையாடிக் கொண்டிருந்த கீதாவை திமிறத் திமிற இழுத்து விளையாட்டாகத் தூக்கிக் கொண்டு வந்த பொன்னுத்துரை அவளை பொத்தென்று தரையில் நிற்க வைத்து விட்டு மீனாட்சியிடம் கேட்டான்:

''சுந்தரி எங்கை மீனாட்சி?''

''அறைக்குள்ளே இருக்கிறாளாக்கும்'' என்ற மீனாட்சி தொடர்ந்து கூறினாள்: ''அப்பிளிகேஷன் போமை நிரப் பிப் போட்டனண்ணை. நாளைக்கே அதை அனுப்பிப்போடோ ணும்.''

''அதுக்கென்ன... ... நீ முதலிலே போய் சுந்தரியைக் கூட்டிக் கொண்டு வா. உனக்கும் அவளுக்கும் இன்றைக்கு ஒவ்வொரு 'பிறசென்ற்' தரப்போறன்.''

''பிறசென்ரு?'' மீனாட்சி அவனை வியப்புடன் பார்த் தாள். ''என்னண்ணை அது.'' ''நீ ஓடிப்போய் அவளையும் கூட்டிக்கொண்டு வா வன் சொல்றன்.''

அவன் ஏதோ வேடிக்கை செய்யப் போகிறானென்ற எண்ணத்துடன் ''பிறகு ஏமாத்தக்கூடாதண்ணை'' என்று சிரித்தபடி எழுந்து உள்ளே சென்றாள் மீனாட்சி.

''எனக்கு பிறசென்ற் இல்லையா?''என்று பொன்னுத் துரையுடன் முரண்டினாள் கீதா. அவள் அவனுக்குச் செல் லப்பெண்.

''உனக்கில்லாததா குட்டி'' பொன்னுத்துரை அவளை அருகில் இழுத்து கன்னத்தில் செல்லமாகக் கிள்ளினான். ''என்ன வேணும் சொல்லு. வாங்கித் தாரன்.''

''வந்து...... வந்து...'' அவள் கண்களை மலர்த்தியபடி யோசித்துக் கூறுவதற்குள், ''என்னவாம் சொல்றாள் தம்பி இவள்'' என்று வினவியவாறே சமையலறைக் குள் ளிலிருந்து வந்த பாக்கியம் அவனருகே வந்ததும் மெல் லிய குரலில் கேட்டாள்: ''தம்பி! வளையலைக் கொண்டு வரட்டா?''

பொன்னுத்துரை இதற்குப் பதில் கூறுமல், மீனுட்சி சுந்தரியின் முதுகுப்புறத்தைப் பிடித்துத்தள்ளிக்கொண்டு வலுக்கட்டாயமாக அழைத்து வருவதைப் பார்த்து விட்டு ''என்ன மீனுட்சி கேடை தள்ளிறியா'' என்முன் வேடிக்கையாக. மீனுட்சி அவளை விட்டுவிட்டு அவனருகே ஓடி வந்தாள்.

''இப்ப சொல்லண்ணு. என்ன பிறசென்ற் தரப்போருய் எங்களுக்கு.''

''பிறசென்ரு! என்ன தம்பி அது?'' என்ருள் பாக்கியம் வியப்புடன்.

பொன்னுத்துரை அப்போதும் அவளுக்குப் பதில்கூற வில்லை. கீதாவின் கைகளை விட்டு விட்டு சேட் பையினுள் அதுவரை மறைவாக வைத்திருந்த கடதாசிப் பொட்டலமொன்றை வெளியே எடுத்துப் பிரித்தான். வித்தைக் காரனைச் சுற்றிக் கொண்டு சனங்கள் ஆவலோடு நிற்பது போல பாக்கியத்திலிருந்து கீதா உட்பட யாவரும் அவனைச் சுற்றிக்கொண்டு நின்றனர். சுந்தரிகூடக்கோபத்தை மறந்தவளாக அருகே ஓடி வந்து மீனுட்சியின் தோளுக்கு மேற்புறத்தால் எட்டிப்பார்த்தாள். உள்ளே பெண்கள் அணியும் சிறுகைக்கடிகாரங்கள் இரண்டிருந்தன.

''ஹாய்......!'' என்று துள்ளிக்குதித்தாள் சுந்தரி. ''மணிக்கூடா?'' ஒரு விஞடியில் அவளின் முகம் பூவாக மலர்ந்து விட்டது.

பாக்கியத்துக்கு அவன் நோக்கம் புரிந்து விட்டது.

''என்னதம்பி இதெல்லாம்'' என்று கோபத்துடன் அதட்டிஞள்.

பொன்னுத்துரை அதைக்காதுகளில் வாங்கிக் கொள்ளாதவன் போல் ''இந்தா சுந்தரி''என்று ஒன்றை எடுத்து சுந்தரியிடம் கொடுத்தான். அவள் அதை ஆவலுடன் வாங்கிக் கொண்டதும் மற்றதை மீனுட்சியிடம் கொடுப்பதற்காக எடுத்தான். பாக்கியம் அதற்குள் குறுக்கே வந்து நின்று அவனைக் கோபத்துடன் பார்த்தாள்.

''தம்பீ! நீ செய்யிறது கொஞ்சமுமே நல்லாயில்லை.''

''தம்பி என்கிறாய். பிறகென்ன நல்லா இல்லாமல்'' என்று அவளை அதட்டிவிட்டு மீனாட்சியிடம் கைக்கடிகாரத்தைக் கொடுத்தான் பொன்னுத்துரை. ''இந்தா மீனாச்சி'' மீனாட்சி வாங்கவில்லை. அவள் பயத்துடன் தமக்கையின் முகத்தைப் பார்த்தாள்.

''என்ன பாக்கிறாய் அக்காவை. பிடி இதை நீ.'' பொன்னுத்துரை அவளின் வலது கரத்தைப்பிடித்து கைக்கடியாரத்தைப் பலவந்தமாகத் திணித்தான்.

பாக்கியத்துக்குஅதற்கு மேல் என்ன செய்கிறதென்று புரியவில்லை. அங்கே நிற்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. விறுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு சமையலறைக்குள் சென்றுவிட்டாள்.

''அக்கா இப்பிடித்தான் முதலிலே கோபித்துக்காட்டுவாள். பிறகு சரியாவிடுவாள். நீங்கள் பயப்பிடாமல்கட்டி நல்லா இருக்கா என்று பாருங்கள்'' பொன்னுத்துரை சுந்தரிக்கும், மீனாட்சிக்கும் சமாதானம் கூறிவிட்டு மெல்லச் சமையலறைக்குள் சென்றான்.

மீனாட்சிக்கு தயக்கம் கொஞ்சமும் தீரவில்லை. சுந்தரி விறுவிறுவென்று கடியாரத்தை இடது கையில் கட்டிக் கொண்டு அழகு பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

பொன்னுத்துரைக்கு நிச்சயமாகத் தெரியும். பாக்கியம் கட்டாயம் கோவிப்பாளென்று. அவனுனபடியால் தான் அவள் அத்தனை தூரம் பொறுமையைக் கடைப்பிடித்தாள். வேறு யாராகவுமிருந்தால் உரியதொகையைப் பிடிவாதமாகத்திருப்பிக்கொடுத்திருப்பாள். அல்லது கைக்கடியாரங்கள்இரண்டையுமே முகத்திலறைவதுபோல்திருப்பிக்கொடுத்திருப்பாள். அத்தனை தன்மானம் மிகுந்தவள் அவள்.

சமையலறைச் சுவரோடு சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த பாக்கியம் பொன்னுத்துரையைக் கண்டதும் முகத்

தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டாள். பொன்னுத் துரை சிரித்துக்கொண்டே அவளின் அருகில் வந்து நின் ருன்.

''என்னக்கா!கோபமா?'' பாக்கியம் பதில்கூறவில்லை.

''அக்கா...'' என்று அவளின் தோளில் தட்டிப்பார்த் தான். அப்போதும் அவள் அசையவில்லை.

''சரி நான் போட்டுப் பிறகு வாறனக்கா!'' பொன் னுத்துரை ஒரு பக்கமாக வைக்கப்பட்டிருந்த பட்ஷணப் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்படத் திரும்பினுன். பாக்கியம் விறுக்கென்று எழுந்து அவனின் முன்னுல் வந்து நின்ருள்.

''கொஞ்சம் நில். நான் உன்னேடே கதைக்கோ ணும்.''

''சரி சொல்லு.'' பொன்னுக்துரை பெட்டியை வைத்துவிட்டுச் சிரித்தபடி அவளைப் பார்த்தான்.

''நீ ஏன் இன்றைக்கு மணிக்கூடு வாங்கிவந்தாய்.அது வும் இரண்டாக.''

''என்ரை தங்கை மாருக்குத் தான்.''

''விளையாடாதே'' என்று கோபத்துடன் அவனை அதட்டினுள் பாக்கியம். ''எங்களை நெடுகனமே கடமைப் படுத்திற யோசனையா உனக்கு?''

''இதிலே என்னக்கா கடமையும், கிடமையும்'' பொன்னுத்துரை சமாதானப்படுத்தப்பார்த்தான். அவள் விடவில்லை. ஒரே தீர்மானமாகக் கூறினுள்:

''தம்பி! நீ என்ன சொன்னுலும் சரி நான் கேக்க மாட்டன். மணிக்கூடு இரண்டின்ரையும் செலவைச் சொல்லு. இன்றைக்கென்ருலும் சரி, நாளைக்கென்ருலும் சரி, இல்லை இரண்டொரு மாதத்துக்கப்புறமாச் சரி நான் அந்தத் தொகையைத்தரோணும்.''

பொன்னுத்துரைக்குச் சுருக்கென்று கோபம் வந்து விட்டது. ''சரியக்கா. நான் சொல்றன். நீ தா. ஆனுல்,

அதுக்குப் பிறகு அக்காவென்று நான் இங்கை வருவே னென்று நீ நினைக்கக்கூடாது.''

பாக்கியம் விக்கித்துப் போய் விட்டாள். சில விநாடி கள் அவளுக்குப் பேச்சே வரவில்லை. அவளின் கண்களும் உதடுகளும் அழத்துடித்தன.

''என்ன பேச்சடா தம்பி இது?'' என்றாள் குமுறும் குரலில். அடுத்த விநாடி பொலபொலவென்று கண்ணீர் உகுக்கத் தொடங்கிவிட்டாள் அவள்.

பொன்னுத்துரையின் கோபம் வந்த வேகத்தில் போய்விட்டது. ''அக்கா......அக்கா......அழாதையக்கா'' என்று கெஞ்சியபடி அவளின் கைகளைப் பிடித்துக்கொண் டான். ''இதோ பார். எனக்கு உன்னையும் இந்தக் குடும் பத்தையும் விட்டா வேறே ஆர் இருக்கினம் அன்பாய் பழக. நீயும் என்னை அந்நியனுட்டம் நினைச்சுக் கதைச்சா எனக்குக் கோபம் வராமல் இருக்குமா?''

பாக்கியத்தின் நெஞ்சு உருகித் தவித்தது. அடிமனதி லிருந்து கிளர்ந்தெழும் தாய்மை உணர்ச்சியை அவளால் அடக்கமுடியவில்லை.

''தம்பீ...'' என்று பாசம் பொங்கத் தழு தழுத்த குர லில் அழைத்தாள். ''தம்பீ! மனுஷருக்கு ஏழு பிறப்புகள் இருக்கென்று சொல்லுவினம். நான் பிறக்கிற ஒவ்வொரு பிறப்பிலேயும் நீ எனக்கு உடன் பிறந்தவனாப் பிறக்கோ ணும். இல்லையென்றால்... இல்லையென்றால்... ஒரு பிறப்பி லேயாவது நீ எனக்குப் பிள்ளையாப் பிறக்கோணும்.''

பொன்னுத்துரை பாகாக உருகிவிட்டான். கண்களி ரண்டும் வேகமாகக்கலங்கி நிறைந்தன. தேவாலயச்சன்னி தானத்தில் நிற்கும் பவித்திரத்தோடு அவளின் கைகள் இரண்டையும் எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். ஒரே தாய் வயிற்றில் பிறக்காவிட்டால் தானென்ன சகோ தரத்துவமும் தாய்மையும் கலந்த ஒரு புனிதமான அன்பு இருவரின் மனதிலும் நிறைந்திருந்தது......

மறுநாள் வழமையான நேரத்தைவிட பத்து நிமிஷங்கள் முன்பதாகவே நெசவு நிலையத்துக்குப் போவதற்கென்று புறப்பட்டாள் சுந்தரி. கையில் அணிந்திருக்கும் புதுக்கடியாரத்தை அங்கு போய்க்குறைந்தது பத்துப்பேர்களிடமாவது காட்டிப் பெருமைப்பட வேண்டாமா? போகும் போது சித்திபரீதாவிடம் கூட அவள் தம்பட்டம் அடித்துக் கொள்ளத்தவறவில்லை. அவளுடைய பொன்னுத்துரை அண்ணு அவளுக்கென்று ஸ்பெஷலாகத் தேடி வாங்கிய ஸ்பெஷல் கடியாரமாம் அது.

பிரதான ரோட்டு வரையும் வழவழவென்று பேசிக்கொண்டு வந்த சுந்தரி சட்டென்று எதையோ கவனித்துவிட்டவளாக "இன்றைக்கும் இரண்டும்வந்திருக்குதுகளடி" என்றாள் அடங்கிய குரலில். சித்திபரீதா திகிலோடு நிமிர்ந்து மெல்லப்பார்த்தாள்.

பிரதான ரோட்டுச் சந்தியில் அவர்களை எதிர்பார்த்துக் காத்திருப்பது போல் இரு வாலிபர்கள் நின்றார்கள். ஒருவனை அவர்களுக்கு நன்கு தெரியும். சித்திபரீதாவின் உறவினனான பாருக் தான் அவன். மற்றவன் பெயர் கந்தசாமி என்பது அவர்களுக்குத் தெரியாது. சுந்தமூர்த்தியின் பழைய நண்பர்கள் இவர்களென்பது அவர்களுக்குத் தெரியாது.

சுந்தரியையும் சித்திபரீதாவையும் கண்டதும் பாருக்கும் கந்தசாமியும் அவசரம் அவசரமாக தலையைத் தடவி முகத்தைத் துடைத்து சேட் 'கொலரை' இழுத்து என்னென்னவோ சேஷ்டைகளெல்லாம் செய்தார்கள். அடுத்து புகைப்படத்துக்குப் 'போஸ்' கொடுப்பவர்கள் போல் உதடுகளில் புன்னகை தவழ நின்று அவர்களைக் கண்கொட்டாமல் பார்த்தார்கள்.

கடந்த இரண்டு நாட்களாகத் தான் இந்த உபத்திரவம் ஆரம்பமாகியிருந்தது. முதல் நாள் அவர்கள் அங்கு நின்ற போது சுந்தரியோ சித்திபரீதாவோ அதிக கவனமெடுக்கவில்லை. ஆனல், மறுநாள் இருவரும் பிரதான

சந்தியில் பிரிந்து நெசவுசாலைக்கும் தையல் பயிற்சி நிலையத்துக்குமென்றும் செல்லும் போது அவர்களும் ஆளுக்கொரு பக்கமாக இவர்களைப் பின்தொடர்ந்த போது தான் சந்தேகம் தோன்றியது. அந்தச் சந்தேகமும் இப்போது இருவரையும் கண்டதும் உறுதியாகிவிட்டது.

''வீட்டிலே போய் வாப்பாட்டைச் சொன்னு உதை தான் வந்து குடுப்பார்'' என்று எரிச்சலோடு சுந்தரியின் காதில் முணுமுணுத்தாள் சித்திபரீதா.

''அதோட உன்னையும் நிப்பாட்டி விடுவாரே.'' சித்தி பரீதாவுக்குச் சுந்தரி கூறுவது உண்மையாகவே தோன்றியது. அதைத்தான் முதலில் அவளின் வாப்பா செய்வார்.

''பொன்னுத்துரை அண்ணுகிட்டே சொல்லுவமா?'' என்று கேட்டாள். சுந்தரி அலட்சியமாக அவளைப் பார்த்தாள்.

''இதுக்கெல்லாம் வாப்பாவும் அண்ணுவும் எதுக்கு. காலிலே எதுக்குச் செருப்புப்போட்டுக் கொண்டு வாறம்.''

சித்திபரீதா வெலவெலத்துப் போய் விட்டாள். சுந்தரி தொடர்ந்து கூறினுள்:

''இருந்து பாரடி நீ. சமயம்வரட்டும். ஒரு கழுதைக்கு பளாரென்று ஒன்று போடுறன். அதோடே இரண்டும் பிடரியிலே கால்பட ஓடுங்கள்.''

அதற்குள் சந்தியை அண்மித்துவிட்டதால் அந்த இருவருக்கும் கேட்டு விடுமென்ற பயத்துடன் ''சத்தம் போடாதேயடி'' என்று கிசுகிசுத்தாள்சித்திபரீதா. சுந்தரி அவளை அலட்சியமாக ஒருபார்வை பார்த்துவிட்டுசந்தியில் திரும்பி நெசவு நிலையத்தை நோக்கி நடக்க, சித்திபரீதா பயத்துடன் தனது பாதையில் விறுவிறுவென்று செல்லத் தொடங்கினுள். கந்தசாமியும் பாரூக்கும் ஆளுக்கொரு பக்கமாக அவர்களைப் பின் தொடர ஆரம்பித்தனர்.

# 14.

விடியற்காலை நேரம் நாலரை ஐந்து மணிக்குள் இருக்கும். இருள் பிரிந்து நிலம் வெளிக்கவில்லை. மூஸ் தாபா வீட்டுச் சேவல் கோழி விடாமல் கூவிக்கொண் டிருந்தது.

''பொன்னுத்துரை...? பொன்னுத்துரை!'' என்று பாக்கியம் அழைக்கும் குரல் கேட்டது. அரைத் தூக்கமும் அரை விழிப்புமாகப் படுத்திருந்த பொன்னுத்துரை பதட் டத்துடன் துள்ளி எழுந்து வெளியே ஓடி வந்தான். அதற் குள் ''ஆரது?'' என்று குரலோடு வேலாயுதமும் அவன் பின்னே வந்துவிட்டார்.

கேற்றுக்கு வெளியே பாக்கியம் அரிக்கன் லாந்த ரோடு நிற்பது தெரிந்தது, பொன்னுத்துரை பரபரப் போடு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

''என்னக்கா!''

''அம்மாக்கு ஒரு மாதிரியா இருக்குத் தம்பி'' முதல் நாள் அங்கே போய்விட்டு வரும்போது பொன்னம்மா ளின் அறைப் பக்கம் முனகல் சத்தம் கேட்டது, பொன் னுத்துரையின் நினைவுக்கு வந்தது. வழக்கம்போல் ஆஸ்மா நோய் வந்திருக்கிறதாக்குமென எண்ணிக் கொண்டு அலட்சியமாக வந்துவிட்டான் அவன்.

''என்னவாம்?'' என்று விசாரித்தார் பின்னால் வந்து நின்ற வேலாயுதம். பாக்கியம் விபரத்தை அவரிடம் கூறி விட்டு, ''வந்து ஒருக்கால் பாக்கிறியளா பெரியையா?'' என்றாள். ''சரி நீ போ, நான் வாறன்'' அவர் மருந்துப் பெட்டி எடுப்பதற்காக உள்ளே செல்ல பொன்னுத்துரை பாக்கியத்தோடு கூட நடந்தான்.

''அம்மாவுக்கு என்னக்கா செய்யுது?''

"நான் போய் பாக்கேல்லை" என்றாள் அவள் அசட்டையுடன்.

"நேற்று முத்தா அனுங்கிக்கொண்டு கிடந்தாள். ராத்திரி அதுக்காக மீனாட்சியையும் லட்சுமியையும் உதவிக்குப் படுக்க அங்கை விட்டிருந்தன். மீனாட்சிதான் கொஞ்சத்துக்கு முந்தி வந்து சொன்னாள். கூப்பிடக் கூப்பிட அசையாமே கிடக்கிறாளாம்..."

அன்னையின் விஷயத்தில் பாக்கியத்தின் மனம் கல்லாகி விட்டதென்பது பொன்னுத்துரைக்கு நன்கு தெரிந்ததுதான். அது நியாய உணர்ச்சியின் அடிப்படையில் நடந்ததெனவும் அவனுக்குத் தெரியும். இருந்தும், அந்த ஆபத்தான சமயத்திலும் அவள் அலட்டிக்கொள்ளாமல் விபரத்தைக் கூறிய முறை என்னவோ போலிருந்தது அவனுக்கு.

தாயாரின் அறையருகே வந்ததும் பாக்கியம் வெளியிலேயே நின்றுகொண்டாள். பொன்னுத்துரை மௌனமாக உள்ளே சென்றான். எத்தனையோ வருஷ இடைவெளிக்குப்பின் அன்றைக்குத்தான் அவனும் அந்தஅறைக்குள் செல்கிறான்.

பொன்னம்மாள் நினைவில்லாமல் பாயோடு பாயாகக் கிடந்தாள். ஒரு காலத்தில் தசைத்தினவின் முறுக்கோடு மெழுகுப் பொம்மைபோல் அழகாக இருந்தவள் இப்போது வற்றலாகித் துவண்டுபோயிருந்தாள். கண்களிரண்டும் உட்குழிந்து, கன்னஎலும்புகள் புடைத்து விகாரமாக வெளியே தெரிந்தன. மூச்சுவிடும்போது வயிற்றுப் பகுதி மட்டும் சிறிது அசையாவிடின் பிணத்துக்கும் அவளுக்கும் வேற்றுமை இருக்காது.

அவளின் தலைப்புறமாக அரிக்கன் லாந்தரொன்று கண்ணாடியில் புகைபடிய எரிந்துகொண்டிருந்தது. பொன்னுத்துரை பொன்னம்மாளின் முகத்தை ஊன்றிக்கவனித்துவிட்டு சுவர் ஓரமாக நின்ற மீனாட்சியின் அருகே சென்று

நின்று கொண்டான். சுந்தரி மறுபுறத்தில் தூங்கிவழிந்த படி உட்கார்ந்திருந்தாள்.

மீனாட்சி மெல்ல பொன்னுத்துரையின் காதருகே கேட்டாள்;

''அண்ணா! அம்மா செத்துப்போடுவாளா?'' குரலில் துளி கூடக் கவலையில்லை. 'தெரியவில்லை'யென்ற பாவனையில் அவளுக்கு உதடுகளைப் பிதுக்கிக் காட்டினான் பொன்னுத்துரை. அவனது தாயார் இறந்தன்று மீனாட்சியும் பாக்கியமும் அன்று பூராவுமே பச்சைத் தண்ணீர் கூட அருந்தாமல் கதறி அழுதுகொண்டிருந்த காட்சி ஏனோ அவன் நினைவில் தோன்றியது.

வேலாயுதம் பத்து நிமிஷங்களுக்குள் மருந்துப் பெட்டியோடு அங்கு வந்து விட்டார். பொன்னம்மாளின் கை நாடியைப் பரிசீலித்துவிட்டு அவர் நெற்றியைச் சுருக்கிய விதமே உள்ள நிலைமையைப் புரியவைப்பதுபோலிருந்தது. சில விநாடிகள் மௌனமாகச் சிந்தித்துவிட்டு சிவப்பு நிறமான மருந்துத் தூளொன்றை தேனோடு கலந்து பொன்னம்மாளின் நாவில் தடவிவிட்டார். பின்பு மருந்துப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு வெளியே சென்றார். பாக்கியத்துடன் அவர் கதைப்பது உள்ளேயிருந்த பொன்னுத்துரைக்கும் மீனாட்சிக்கும் தெளிவாகக் கேட்டது.

''பிள்ளை! இனிப் பிரயோசனமில்லை. ஆகவேண்டியதை ஒழுங்குபடுத்த வேண்டியதுதான். ஒருக்கால் அவளுக்கு நினைவு வந்தாலும் வரும். நீ எதுக்கும் சுந்தரமூர்த்திக்கு ஒரு தந்தி அடிப்பி. அனேகமா இன்னும் நாலைஞ்சு மணித்தியாலத்துக்கு மேலே தாங்காது...''

பாக்கியம் தலையை ஆட்டினாள்.

''சரி பெரியையா''

''வடிவேலு எங்கை இருக்கிறானெண்டு தெரியுமா?''

''தெரியேல்லே''

"பொன்னுத்துரையைக் கொண்டு அதையும் ஒருக்கா பார். செல்லையனுக்கும் ஒரு வார்த்தை சொல்லோணும். பத்துப் பதினைஞ்சு வருஷமா இவளோடே இருந்தவன் அவன். நாளைக்கு நாலு பேர் குறைசொல்ல இடங் கொடுக்கக் கூடாது.

பாக்கியம் இதற்குப் பதில் கூறவில்லை. கீழே எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாந்தரைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"சரி. உன்ரை புத்திக்குச் சரியானதை யோசிச்சுச் செய். நான் போட்டுப் பிறகு வாறன். மற்ற எல்லா உதவி களையும் நான் செய்வன். அதுக்கு நீ பயப்படவேண் டாம்" வேலாயுதம் போய்விட்டார்.

பொன்னுத்துரை உள்ளேயிருந்து வந்தான். "அக்கா! சுந்தரமூர்த்திக்கு நேரத்தோடே தந்தியடிக்க வேணும். கொள்ளி வைக்கப்போறவன் அவன்தானே" என்றான்.

பாக்கியத்தின் கண்களில் திடீரென்று ஒரு குரூரம் தெரிந்தது.

"இவள் செய்த பாவத்துக்கு பெத்த மகன்தானு கொள்ளி வைக்கவேணும்? ஏன் அந்தச் செல்லையனை இழுத் துக் கொண்டு வந்து கொள்ளியை வையடா என்று லென்ன? இவளின்ரை ஆவியென்ன நிம்மதி இல்லாமே தவிக்கப்போகுதா?"

அவளின் பேச்சு பொன்னுத்துரைக்கு அடியோடு பிடிக்கவேயில்லை. என்னவானாலும் பத்து மாதங்கள் சுமந்து பெற்றதாய் அவள். இறக்கும் தறுவாயில் கூட அவளை வஞ்சம் தீர்க்க வேண்டுமா? சட்டென்று முகச்சுளிப் புடன் அறைக்குள் செல்லத் திரும்பினான் பொன்னுத் துரை. பாக்கியம் அதற்குள் அவன் கையொன்றை எட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"கொஞ்சம் நில். அக்காள் ஏன் இப்பிடிக் கல்மனசா இருக்கிறாளென்று உனக்கு வெறுப்பாயிருக்கா?" பொன்

னுத்துரைக்கு நேருக்கு நேர் அதை ஆமோதிக்க முடியாம லிருந்தது.

''அப்படியில்லையக்கா...'' என்ருன் தயக்கத்துடன்.

பாக்கியத்தின் கண்கள் ஒரு விஞடிக்குள் கலங்கி நீரினல் நிறைந்தது.

''நீ பொய் சொல்லவேண்டாமடா தம்பி'' என்ருள் தழுதழுத்த குரலில். ''நீ என்ன நினைக்கிருயென்று எனக்குப் புரியுது. ஆஞ, நான் கல்மனசுக்காரி இல்லையடா. உன்னைவிட எனக்கு இரக்கம் கூட இருக்கு. ஆஞ, அம்மாவின்ரை விஷயத்திலே என்ரை மனசு கல்லாகி எவ்வளவோ வருஷமாச்சு. அவள் பெத்த பிள்ளையளையும் வைச்சுக் கொண்டு நடு வீட்டுக்கே வேசியாட்டம் ஆடினவளடா. எத்தினை நாள் மீஞட்சியையும் சுந்தரியையும் கொல்லைப் புறத் தாவாரத்துக்குள்ளே கொண்டுபோய் வைச்சுப் படுத்திருப்பன் தெரியுமா? தம்பி! உன்ஞலே என்ரை மன நிலையைச் சரியாப் புரிஞ்சு கொள்ள முடியுமோ தெரியேல்லை. நான் ஒன்றைமட்டும் சொல்றன்- பெற்றதாய்தான் அவள். ஆஞ, நான் இன்றைக்கு அவளுக்கா அழுகிறதென்ருல் மன முருகி அழேலாது. சும்மா ஓவென்று கத்தோணும். அப்பிடி நடிக்க எனக்கு விருப்பமில்லே. புரியுதா உனக்கு?''

''என்னை மன்னித்துக்கொள்ளக்கா'' என்று தயங்காமல் பாக்கியத்திடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்''

''நானே உன்னைத் தம்பா நினேச்சுப் போட்டன்.''

உள்ளே பொன்னம்மாள் முனகும் சத்தம் கேட்டது. அடுத்துப் பரபரப்போடு மீஞட்சி வெளியே வந்தாள்.

''அம்மாவுக்கு நினைவு வருகுது''

பொன்னுத்துரை உள்ளே ஓடிச் சென்று பார்த்தான். பொன்னம்மாளின் உடலில் இலேசான அசைவுகள் தெரிந்தன. கண்மடல்கள் மெல்லத்துடித்தன. உதடுகள் தெளிவில்லாமல் எதையோ முனகின.

பொன்னுத்துரை சட்டென்று குனிந்து அவளின் வாயருகே காதை வைத்து அவள் என்ன கூறுகிறாளென்று கேட்கமுயன்றான். சில நிமிஷ நேரங்களுக்குப் பின்னரே அவனால் கிரகிக்க முடிந்தது.

''பா...க்...கி...ய...ம்''

பொன்னுத்துரைக்கு நெஞ்சு பாகாக உருகியது. மீனாட்சியும் சுந்தரியும் அவனுக்கு இரு புறங்களிலும் ஒட்டினாற்போல் நின்றபடி தாயின் முகத்தைப் பார்த்தார்கள். அவர்கள் வேடிக்கை பார்ப்பதுபோல் பொன்னுத் துரைக்குத் தோன்றியது.

''பாக்கியம்'' என்று மறுபடியும் முனகியபடி மெல்ல மெல்லக் கண்களைத் திறந்தாள் பொன்னம்மாள். அணையப் போகும் சுடரின் ஒளி அவளின் கண்களில் தீர்க்கமாகத் தெரிந்தது.

பொன்னுத்துரைக்கு அதற்குமேலும் மனம் பொறுக்க வில்லை. விறுவிறுவென்று பாக்கியத்திடம் சென்றான்.

''அக்கா! உள்ளே வா ஒருக்கால்'' பாக்கியம் நெற்றி சுருங்க அவனைப் பார்த்தாள்.

''ஏன்?'' அவளின் மனதில் படுமாறு சொன்னான் பொன்னுத்துரை.

''அக்கா! மறக்கமுடியாத தவறு செய்தவளெண்டா லும், உன்னைப் பத்துமாதம் சுமந்து பெத்த தாய் அவள். இன்னும் ஒரு நிமிஷம் இருக்கிறாளோ, ஒரு மணித்தியாலம் இருக்கிறாளோ தெரியேல்ல. உன்ரை பேரைச் சொல்லித் தான் வாய்புலம்பினாள். எல்லாத்தையும் மறந்திட்டு வந்து என்னென்று கேள்...''

பாக்கியம் தலையைச் சொறிந்தபடி கீழே எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாந்தரைப் பார்த்தாள். பழைய சம்பவங்களின் கசப்பு அவளது கண்களில் தீயாகச் சுவாலை விட்டது.

''அக்கா!'' என்று அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான் பொன்னுத்துரை. ''உனக்காக

வேண்டாமக்கா, உன்ரை அம்மாவுக்காகவும் வேண்டாம், எனக்காக, நீ எனக்குச் செய்யிற உதவியா நினைச்சுக் கொண்டு வா. நீ இப்ப அவளை அம்மாவா நினைக்கவேண் டாம். ஒரு அனுதையா நினைச்சாக்காணும்''.

பாக்கியம் ஒரு நீண்ட பெருமூச்சுடன் அவனைப்பார்த் தாள். பின்பு, ''உனக்காக வாறேன்'' என்று முணு முணுத்து விட்டு அவன் பின்னே அறைக்குள் வந்தாள்.

பொன்னம்மாளின் கண்கள் எங்கோ நிலைகுத்தியிருந் தன. மந்திரம் ஜபிப்பது போல் உதடுகள் பாக்கியத்தின் பெயரை முனகிக்கொண்டிருந்தது. பாக்கியம் அவளின் முகத்தைப் பார்க்காமல் அரிக்கன் லாந்தரைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்த விட்டில் பூச்சியொன்றைப் பார்த் தாள். அடுத்த வீட்டில், முஸ்தாபா ''ஆண்டவனே!'' என்று கூறிக்கொள்வது கேட்டது.

மீனாட்சியும், சுந்தரியும் தமக்கையின் முகத்தையே இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சற்று முன்புதான் தூக்கத்தை விட்டெழுந்து லட்சுமியோ டும் வாணியோடும் அங்கே வந்திருந்த கீதா கூட வேடிக்கை பார்ப்பதுபோல் அக்காவைப் பார்த்தாள்.

''அக்கா! என்னென்று அம்மாவைக் கேள்'' என்று பாக்கியத்தின் காதருகே குனிந்து கிசுகிசுத்தான் பொன் னுத்துரை.

பாக்கியத்தின் முகம் கல்லைப் போலிருந்தது. முடியா தென்ற பாவனையில் வேகமாகத் தலையசைத்தாள். இரத் தமும் சதையுமாக தகப்பனார் காரில் அரைபட்டு இறந்து போய்க் கிடந்த காட்சி அவளின் கண்களின் முன்னால் படம் போல் தெரிந்தது.

''கேள் அக்கா'' என்று கெஞ்சினான் பொன்னுத்துரை.

''இப்ப நீ வாயை மூடிக்கிட்டு பிடிவாதமா இருந்தா பிறகு ஒரு சமயம் நீ இதுக்காக வருத்தப்படவேண்டி வந் தாலும் வரும்''.

பாக்கியம் அசையக்கூட இல்லை. கெஞ்சி அவளைச் சம்மதிக்க வைப்பதற்குள் பொன்னம்மாளின் உயிர் போய் விடலாமென்று பொன்னுத்துரைக்குப் பயமாக இருந்தது.

''சொன்னால் கேள். இரக்கா குப்பிடு'' என்று அதட்டி பலவந்தமாக அவளின் கையைப் பிடித்து இருக்க வைத்து விட்டு, ''அக்கா! உனக்காக வேண்டாம். எனக்காக இரண்டு வார்த்தை கேள்'' என்றான்.

பாக்கியம் மனமில்லாமலேயே தாயாரின் முகத்தைப் பார்த்தாள். ஏறக்குறைய பதினேழு பதினெட்டு வருடங்களுக்குப் பின்பு அன்றுதான் இத்தனை நெருக்கத்தில் நேருக்கு நேராகப் பார்க்கிறாள் அவள். கப்பென்று தொண்டைக்குழிக்குள் எதுவோ வந்து அடைத்துக் கொள்வது போலிருந்தது. என்ன உணர்ச்சி அதுவென்று பாக்கியத்துக்குப் புரியவில்லை.

பொன்னம்மாளின் உதடுகள் யந்திரமாக அசைந்து கொண்டிருந்தன.

''பாக்கியம்...! பாக்கியம்...!'' பாக்கியம் வெகு பிரயாசைப்பட்டு தனது நாவை இயக்கினாள்.

''என்னம்மா?'' பொன்னம்மாளின் உடல் அதிர்ச்சியினால் ஒரு தடவை குலுங்கிப் பின் விறைத்தது. பரபரவென்று அவளின் கண்கள் யாரையோ தேடுவன போல் சுழன்றன.

''அம்மாவென்று கூப்பிடக்கா'' என்று அவளை ஊக்கினான் பொன்னுத்துரை. அவளும் அழைத்தாள்;

''அம்மா!'' பொன்னம்மாளின் பார்வையில் ஒரு தெளிவு தெரிந்தது.

''பாக்கியம்!'' என்று நாக்குழறத் திணறினாள். குபீரென்று அவளின் கண்களில் நீர் பொங்கி இரு பக்கக் கன்னங்களிலும் கோடாக வழிந்தது.

பாக்கியத்தின் முகத்திலிருந்த இறுக்கம் தளர்ந்து கொண்டிருந்தது. தன்னையறியாமலேயே தாயாரின் முகத்தை வெறிக்கப் பார்த்தாள்.

பொன்னம்மாளின் கைகள் அங்குமிங்கும் மெல்ல நகர்ந்தன. பொன்னுத்துரை சட்டென்று அதன் காரணத்தைப் புரிந்து கொண்டவனாக பாக்கியத்தின் வலது கரத்தையெடுத்து அவளின் இடது கைக்குள் திணித்தான்.

பொன்னம்மாளின் உடல் சிலிர்த்து நடுங்கியது. விம்மல் வெடிப்பது போல் அவளின் கண்டத்திலிருந்து ஒரு சிறு சத்தம் கேட்டது. அவ்வளவுதான். அவளின் துடிப்பு ஓய்ந்து ஒடுங்கிவிட்டது.

பாக்கியம் மலங்க மலங்கத் தாயாரின் முகத்தைப் பார்த்து விழித்தாள். அவளின் உதடுகள், புருவங்கள், கன்னச் சதைகள் எல்லாமே துடித்தன.

''அக்கா!'' என்று அவளின் கையைப் பயத்துடன் பிடித்தாள் மீனாட்சி.

''அம்மா செத்துப் போட்டாளா?''

பாக்கியம் பதில் கூருமல் அழத்தொடங்கினாள். பதின்மூன்று வயதிலிருந்து அவளின் மனதில் வேரூன்றி வளர்ந்திருந்த வெறுப்பும் வீம்பும் அந்தக் குறுகிய நேரத்துக்குள் எப்படிக் கரைந்து மறைந்ததோ, அது அவளுக்கே தெரியாது.

## 15.

ஒருவகையில் பார்த்தால் பொன்னம்மாள் அதிர்ஷ்டசாலிதான். உயிரோடு இருந்தபோது பிள்ளைகளின் மனதில் மலையாக வளர்த்த வெறுப்பை உயிர் பிரியும் தறுவாயில் கிடைத்த சில நிஷ நெருக்கத்திலேயே பெருமளவுக்குக் குறைத்துவிட்டாள் அவள்,

ஆயினும் அவர்களை இத்துன்பம் அதிகமாகப்பாதித்து விடவில்லை. பாக்கியம் இரண்டு நாட்களுக்குள்ளேயே வழமையான மனநிலைக்கு வந்து விட்டாள். அத்தனை நெருக்கத்தில் தாயாரின் உயிர் பிரிந்த அதிர்ச்சியும், கடைசி நேரத்தில் பாவமன்னிப்புக் கேட்பதுபோல் அவள் நடந்து கொண்ட முறையால் ஏற்பட்ட மனக்கசிவும் அவளை அந்தச் சமயத்தில் கலங்க வைத்தாலும், அவள் இறந்தது நல்லதாகவே பாக்கியத்துக்குத் தோன்றியது. குடும்பத்தின் அவமானச் சின்னம் மறைவது இருக்கிற கெட்ட பெயர் குறைய ஒரு வழிதானே?

பாக்கியத்தின் மனதில் கொஞ்ச நஞ்சக் கவலை இருந்தாலும், அதைத் துடைத்தெறிந்து விடுகிறாற்போல் அடுத்த வார முதல் பகுதியில் மீனாட்சி விண்ணப்பித்திருந்த தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் தொழிலுக்கு அவளை நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி அழைத்திருந்தார்கள்.

அன்றைக்குப் பாக்கியத்துக்கிருந்த குதூகலம் வாழ்வில் ஒரு நாளுமே இருந்ததில்லை. மீனாட்சிக்கு வேலையே கிடைத்து விட்டாற்போன்ற பிரமை அவளுக்கு. உடனேயே பொன்னுத்துரையோடு அவளை அனுப்பி மாமாங்கப் பிள்ளையார் கோயிலுக்கு அர்ச்சனையும் செய்வித்தாள்.

''தம்பீ! என்ரை நம்பிக்கையை இவள் காப்பாத்திப் போட்டாள்'' என்று பொன்னுத்துரையிடம் அடிக்கடி பெருமையுடன் கூறிக்கொண்டாள். அவளுக்குக் கால்கள் தரையில் பாவவில்லை.

பொன்னுத்துரைக்கு அவளின் உற்சாகத்தைப் பார்க்கக் கவலையாகத்தான் இருந்தது. நடைபெறப்போகும் நேர்முகப் பரீட்சையில் மீனாட்சி சிலசமயம் தவற நேர்ந்து விட்டால் அந்த ஏமாற்றம் பாக்கியத்தை ஒரேயடியாக வாட்டி வதைத்து விடுமென்று அவனுக்குத் தோன்றியது.

ஆனால், அவன் பயந்தது போல் எதுவும் நடந்துவிடவில்லை. மீனாட்சி நேர்முகப் பரீட்சையிலும் தோற்றி

அடுத்த இரண்டு கிழமைகளுக்குள் வேலைக்கான உத்தரவு மனுவும் அவளுக்கு வந்திருந்தது. அக்கரைப்பற்றிலுள்ள பாடசாலையொன்றுக்கு அவளை நியமித்திருந்தார்கள்.

ஆசிரியை வேலையைப் பார்ப்பதற்கு மீனாட்சி அக்கரைப்பற்றிலேயேதான் தங்கவேண்டியிருக்குமெனத் தெரிந்தபோது பாக்கியத்தின் சந்தோஷத்தில் பாதி போய்விட்டது. அக்காவாகப் பிறந்தவள் அன்னையாகத் தவித்தாள். மீனாட்சியைத் தனியாக அங்கே விடுவதிலும் அந்தத் தொழிலையே விட்டாலென்ன என்று அவளுக்கு எண்ணத் தோன்றியது. பொன்னுத்துரையோடு இதைப்பற்றிக் கவலையோடு கதைத்தபோது அவன் அவளைத் தேற்றினான்.

''அக்கரைப்பற்றென்ன ஒரு தூரமாக்கா. நினைச்சா காரிலே ஒன்று ஒன்றரை மணித்தியாலத்திலை அங்கே போட்டு வந்தும் விடலாம். கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் என்று அந்நிய இடம் வராமலிருந்துதே, அதுக்காகச் சந்தோஷப்படு. எத்தனை பேருக்கு, குடிக்க நல்ல தண்ணியில்லாத காட்டுப்பகுதி கிடைச்சிருக்குத் தெரியுமா?''

''தனியா எப்பிடி இருப்பாள் இவள்'' என்றாள் பாக்கியம் முனங்குவதுபோல. ''இஞ்சையே பொழுதுபட்டுப் போச்சென்றா பின்னுக்குபோகேக்கைகூட ஆரும் ஒராள் கூடப்போவோணும். கொஞ்சமும் மனத் தைரியம் இல்லாதவள்.

''தனியா ஏனக்கா இருப்பான்? நாலு பெம்பிளைப் பிள்ளையள் ஒன்றா இருக்கிற ஒரு இடமாவோ, இல்லை கௌரவமான ஒரு வீடாவோ பாத்து இருக்க ஒழுங்கு பண்ண வேண்டியது தானே... கிழமைக்கொருக்கா இங்கை வந்து நின்றிட்டும் போகலாம்...''

பாக்கியத்துக்கு பரிபூரண சமாதானம் ஏற்படாவிடினும் வேறு வழியில்லாமல் தனது சம்மதத்தைத் தெரிவித்தாள்.

மறுநாள், பொன்னுத்துரை மீனுட்சியை அக்கரைப் பற்றுக்கு அழைத்துப்போய் பாடசாலையையும் பார்த்து, தெரிந்த நண்பன் ஒருவனைக்கொண்டு அதற்குஅருகிலேயே அவள் தங்குவதற்கு வீடொன்றும் ஒழுங்கு செய்துவிட்டு மறுநாள் பாக்கியத்தையும் அழைத்துப்போய் அந்தஇடத்தைக் காண்பித்தான்.

சிவகுரு என்ற சிங்கப்பூர் பென்ஷனியர் ஒருவரின் வீடது. அவரும் அவரது மனைவியாரும் மட்டும்தான்அங்கு இருந்தார்கள். சிங்கப்பூர் பென்ஷனியர்களுக்கே இயல்பாகவுள்ள கண்டிப்புடன் கூறினுர் அவர்.

''நீங்கள் தரப்போற காசை நினைச்சு நான் இங்கே இடந்தரேல்லை. நாலு பிள்ளையள் இருந்த வீடிது. இப்ப ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு தொழிலோடே வெளி நாட்டுக்குப் போட்டாங்கள். நானும் அவளும் தான் ஒரு தரையொருத்தர்கடுவன் பூனையாட்டம்பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியிருக்கு. வீட்டிலே இளவயசுப் பிள்ளையொன்றிருந்தா பெத்த பிள்ளையளைப் பாக்கிறது மாதிரிச் சந்தோஷமா இருக்குமென்றுதான் இப்ப இடம்தாறம். கட்டு மட்டா நல்ல பிள்ளையா இருக்கோணும். கொஞ்சம் ஒழுக்கக்குறைவு இருந்தாலும் அடுத்தநாளே வீட்டைவிட்டு வெளியாலே அனுப்பிப் போடுவன். என்னைப் பிறகு குறைசொல்லக்கூடாது.''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாமய்யா'' என்ருள் பாக்கியம் சட்டென்று. ''நான் வளத்த பிள்ளை அவள். கீறின கோட்டைத் தாண்டிற பழக்கம் அதுக்கில்லை...''

''அப்பசரி'' என்று தலையை ஆட்டினுர் சிவகுரு. அதன் பின்புதான் அவரின் முகத்தில் சிரிப்பின் சாயல் தெரிந்தது.

அன்றைக்கு அங்கிருந்து புறப்படும் போது பாக்கியத்துக்கு மிகுந்த மனத்திருப்தியாக இருந்தது. எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் அவளுக்கு அதிகமாகி இருந்தது.

## 16.

சுந்தரமூர்த்தியுடன் நண்பர்களாக இருந்த காலத்தை விட கந்தசாமியும் பாருக்கும் இப்போது வெகுவாக நடையுடை பாவனைகளில் மாறிப்போயிருந்தார்கள். எந்நேரமும் மடிப்புக் கலையாத உடைகள், பேசும்போது தமிழும், ஆங்கிலமும் கலந்த மணிப்பிரவாள நடை, கையில் விடாமல் புகைந்துகொண்டிருக்கும் சிகரெட், மாதம் ஆயிரம் ரூபா வருமானமுள்ளவர்களிடமும் அத்தனை அமர்க்களம் இருக்காது.

முதன் முதல் பாருக்குக்கு உதவியாகவென்று வந்தவன்தான் கந்தசாமி. ஏதோ ஒரு முறையில் மதனியாக வேண்டிய சித்திபரீதாவை காதல் செய்துவிடவேண்டுமென்ற அவனது ஆசைக்கு உதவி செய்தால், பின்பு முஸ்தாபாவின் திரண்ட சொத்துகளுக்கு அவன் உரிமையாளனாக வரும்போது தன்னையும் கவனித்துக்கொள்வான் அவனென்ற அபிலாஷையுடன்தான் வந்திருந்தான் கந்தசாமி. ஆனால், சித்தி பரீதாவுடன் சேர்ந்து வந்த சுந்தரியைக் கண்டதும் பாருக்குக்காக மட்டும் மெனக்கெடுவது சுய நஷ்டமாக அவனுக்குத் தோன்றியது. அன்றே அவன் பாருக்கிடம்கூறிவிட்டான். ''மச்சான்! நீ உன்ரை ஆளைக் கவனி. நான் மற்றதைச் சுருட்டிப் பாக்கிறன்'' என்று.

சுந்தரியின் முகக் கவர்ச்சியை விட அவளின் உடற் கவர்ச்சிதான் கந்தசாமியை அதிகமாகக் கவர்ந்தது.பந்தயக் குதிரைபோல் அவள் ஓயிலாக நடந்துசெல்லும்போது அவளின் அழகுகளின் ஒவ்வொரு அசைவும் அவனைக் கிறுங்க வைத்தன. எத்தனையோ பெண்களோடுதொடர்பு வைத்த அவனுக்கு இவளை அடையாவிட்டால் அனுபவித்தவை எல்லாமே அர்த்தமற்றதாகிவிடும்போல் தோன்றியது.

ஆயினும், அவசரத்தைக் காட்டாமலே காரியங்களைப் பார்த்தான் அவன். சற்று இசகு பிசகாகப் போய்விட்டால் அவள் கன்னத்தைப் பழுக்கவைத்துவிடுவாளென்று அனுபவஸ்தனான அவனுக்கு நன்கு புரிந்திருந்தது. தினசரி காலையிலும், அந்தியிலும் அவன் சுந்தரியைப் பின் தொடர்ந்து சென்றாலும் மிகவும் கண்ணியமாகவே பின் தொடர்ந்தான். வழக்கம்போல் சீட்டியடிக்கவோ, சினிமாப் பாட்டுப் பாடவோ எதுவும் செய்யவில்லை அவன். சிகரெட்டை மட்டும் வெகு நாகரீகமாகப் புகைத்துக் கொள்வான். அந்த ஸ்டைலுக்கு சினிமாப்பட நடிகர்கள் கூட அவனிடம் பயிற்சிக்கு வரவேண்டும்.

சுந்தரியும் வெகு முறுக்காகவே அவனிடம் நடந்து கொண்டாள். கந்தசாமியை ஒரு சிறு துரும்பாகக்கூட அவள் மதிக்கவில்லை. அவன் அதை உணர்ந்துகொள்ள வேண்டுமென வெகு அலட்சியமாகவும் நடந்துகொண்டாள். நேருக்கு நேர் அவன் எதிர்ப்பட்டால் அவனை எரித்துவிடுவதுபோல் முறைப்பாக ஒரு பார்வை பார்ப்பாள். கந்தசாமியும் அசையமாட்டான். சந்தர்ப்பமொன்று கிடைத்துவிட்டாற்போல் கவர்ச்சியாக ஒரு சிரிப்புச் சிரிப்பான். சுந்தரிதான் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்ளவேண்டியிருக்கும்.

இந்த நாடகங்கள் தினசரி தொடர்ந்துகொண்டேயிருந்தன.

''எப்பத்தான் இந்தச் சனியங்களின்ரை தொல்லை தீருமோ தெரியேல்லை'' என்று எரிச்சலோடு முணுமுணுத்துக்கொள்வாள் சித்தி பரீதா. சுந்தரிக்கென்றால் இது ஒரு எரிச்சல்படக்கூடிய விஷயமாகத் தோன்றவில்லை. அழகும் கவர்ச்சியும் அவர்களிடம் இருப்பதால்தானே நாய்க்குட்டிகளைப் போல் பின்னால் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

நெசவு நிலையத்துக்குப் போகும்போது தன்னை அலங்கரிப்பதில் விசேஷ அக்கறை காட்டத் தொடங்கினாள்.

சமயம் பார்த்துக் கிடைத்ததுபோல், மீனுட்சி முதல் மாதச் சம்பளம் எடுத்ததும் சந்தோஷமாக அவளுக்குக் கொடுத்த பத்து ரூபா வேறு அவளுக்கு உதவியாயிருந்தது. கண்களுக்கு மையும், நகங்களுக்கு மையும் வேறு வேருக வாங்கி முகத்துக்குப் பவுடரும் வாங்கிக்கொண்டாள்.

இதனுல் கந்தசாமியை அவள் காதலிக்கிருளென்ற அர்த்தமல்ல. அவள் அழகைப்பற்றி அவளுக்கு ஒரு சுய திருப்தி கலந்த பெருமை. அவ்வளவு தான். கந்தசாமியுடன் சேர்ந்து இன்னும் நாலுபேர்கள் கூடப் பின்தொடர்ந்திருந்தாலும் அதற்காகக் கர்வப்பட்டிருப்பாள் தான் அவள்.

சித்திபரீதாவின் நிலே அவளுக்கு நேர் விரோதமாயிருந்தது. பிரதான ரோட்டுத் திருப்பத்திலிருந்து தையல் நிலேயத்துக்குப் போகும்வரைக்கும் அவளுக்கு உயிரே இல்லாததுபோல் இருக்கும். ரோட்டால் போகிற வருகிற காரோ பஸ்சில் ஏதோஒன்று திசைதிரும்பி பின்னுல்வருகின்ற அந்தப் பாவி பாரூக்கை அடித்து வீழ்த்தக்கூடாதாவென்று ஆசைப்பட்டாள் அவள். ஆனுல், அந்தப் பாவியும் விழவில்லே. கார் பஸ்சும் திசை திரும்பவில்லே.

பாரூக் சிறுவயதிலிருந்தே கந்தசாமியோடு நட்போடு இருந்தாலும் அவனிடமுள்ள திறமையில் ஒரு துளிகூட இவனிடம் இருக்கவில்லே. எந்தப் பெண்ணேடு எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று இவனுக்குத் தெரியாது. ஒரு சமயம் பஸ் தரிப்பு நிலேயத்தில் நின்ற ஒரு இளம் பெண்ணிடம் அடி கூட வாங்கியிருக்கிறுன். அப்படியிருந்தும் சூட்சுமங்கள் அவனுக்குத் தெரிவதில்லே.

சித்தி பரீதாவைப் பின்தொடர்ந்து செல்லும்போது ரோட்டில் யாரும் இல்லாவிட்டால் அவளின் பெயரைச் சொல்லி நொடிக்கொரு தடவை அழைப்பான். அல்லது ஏதுமொரு சினிமாக் காதல் பாடலொன்றின் விரசமான இரண்டடிகளே அவனுக்குப் பிடித்தமான பிரபல நடிகர்

ஒருவரின் அபிநயத்துடன் பாடுவான். அந்தச் சமயங்களில் ஓட்டமும் நடையுமாகத்தான் விரைந்து செல்வாள் சித்திபரீதா. அவன் செத்துத் தொலையக்கூடாதா என்றுதான் அந்தச் சமயங்களில் ஏங்குவாள் அவள். 'யாராவது கவனித்தால் அவளையும் தப்பாக எண்ணிவிடமாட்டார்களா?'

கடைசியில், பாரூக்கின் தொந்தரவைச் சகிக்கமுடியாமல் சுந்தரியிடம் தீர்மானமாகச் சொல்லிவிட்டாள் சித்திபரீதா: ''இனி என்னுலே பொறுக்கமுடியாதடி சுந்தரி. ஒன்றிலே பொன்னுத்துரை அண்ணுச்சிக்குச் சொல்லி இவனுக்கு நாலு உதை வாங்கிக்கொடுக்கோணும். இல்லாட்டி தையல் வகுப்பை நிப்பாட்டிஞலும் காரியமில்லையென்று வாப்பாக்கிட்டே சொல்லோணும்.''

''நீ சரியான ஒரு பயந்தாங்கொள்ளியடி'' என்று சிரித்தாள் சுந்தரி. ''அவன் பைத்தியக்காரன் கிடக்கிறுன் என்றிட்டு நீ உன் பாட்டிலேயே இருக்கவேண்டியதுதானே. எனக்குப் பின்னுலேயும் ஒரு கழுதை தினமும் வருகுதுதானே? நானும் உன்னைப்போல பயப்பிடுறேணு?''

சித்திபரீதாவுக்கு ரோஷம் பொத்துக்கொண்டுவந்தது. வெடுக்கென்று சொன்னுள்:

''நான் ஒன்றும் பயப்பிடேல்லையடி மற்றவையள் பாத்தா என்ன நினைப்பினமென்று யோசிக்கோணும்.''

''மண்ணுங்கட்டி. மற்றவையளைப்பத்தி எங்களுக்கு என்னடி?'' என்று அலட்சியமாக அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு சித்திபரீதாவுடன் நடந்து சென்றுகொண்டிருந்தவளுக்கு திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. அவளைப் பின்தொடரும் அந்தக் காவாலியை டக்கென்று ஒரு நாளைக்கு மறித்து முகத்திலடித்தாற்போல் நாலு கேள்விகளைக் கேட்டு அவனை ஒரு கலக்குக் கலக்கினுலென்ன?

அப்படியொரு காட்சியைக் கற்பனை செய்துபார்க்கவே சுந்தரியின் உள்ளமெல்லாம் கிளுகிளுத்தது. தன்னையறியாமலேயே புன்னகை செய்துகொண்டாள்.

''ஏனடி விசரி மாதிரிச் சிரிக்கிறாய்?'' என்று மெல்ல வினவினாள் சித்திபரீதா. பிரதான றேட்டுச் சந்தியை அப்போது நெருங்கிக்கொண்டிருந்ததால் அவளுக்கு வாய் விட்டுச் சாதாரணமாகக் கதைக்கவே பயமாக இருந்தது.

''ஒன்றுமில்லை. பிறகு சொல்றேன்டி'' என்று மழுப்பிவிட்டாள் சுந்தரி. அப்போதே உண்மையைக் கூறிவிட்டால் சுவாரஸ்யம் கெட்டுப்போய்விடுமென்று அவளுக்குத் தோன்றியது.காரியத்தைச் செயலில் காட்டி விட்டுக் கூறினால் தானே நாலு நாட்களுக்குத் தொடர்ந்து சொல்லிச் சொல்லிச் சிரிக்கலாம்......

வழமைபோல் சந்தியில் கந்தசாமியும் பாரூக்கும் நின்றார்கள். சுந்தரியும் சித்திபரீதாவும் பிரிந்துசெல்லத் தொடங்கியதும் வழமைபோலவே அவர்களும் பின்தொடர ஆரம்பித்தார்கள்.

சுந்தரியின் இருதயம் வேகமாகப் படபடத்தது. சற்றுத் தூரம் வந்ததும் மெல்லக் கவனித்தாள். முன்புறமோ, பின்புறமோ ஆள் நடமாட்டமில்லை. சட்டென்று திரும்பியவள், ''ஏய் மிஸ்டர்!'' என்றாள் அதட்டலாக. கந்தசாமி வெலவெலத்துப்போய்விட்டான். இந்தத் தாக்கல் அவன் சற்றும் எதிர்பாராதது, ''என்ன ஒவ்வொருநாளும் பின்னாலே பின்னாலே வாறாய்.உடம்பு எப்பிடியிருக்கு?''

கந்தசாமி நொடிக்குள் தன்னைச்சமாளித்துக்கொண்டு விட்டான். அவனும் இப்படி எத்தனை மிரட்டல்களைக் கேட்டவன். ''உடம்புக்கென்ன நல்லாத்தானிருக்கு'' என்றான் புன்னகையோடு. ''ஆமா, என்னை விட உங்களுக்குத்தான் உடம்பு நல்லாயிருக்கு...ச்ஷா!... வேல்ட் பியூட்டிக் குவீன் பிச்சை வாங்கவேணும் உங்ககிட்டே. எத்

தனை பியூட்டியாகவும், கவர்ச்சியாகவும் இருக்கிறியள் தெரியுமா?''

திடீரென்று சுந்தரிக்கு குளிர்ந்த நீரில் மூழ்கி மூச்சுத் திணறுகிறாற்போலிருந்தது. அவளின் துடுக்குத்தனமும், வெடுக்கு வெடுக்கென்ற பேச்சும் எங்கோ போய் ஒளித்துக்கொண்டதோ தெரியவில்லை. தன்னை மறந்தவளாக அவனது முகத்தை வெறித்துப் பார்த்தாள். பளிச்சென்ற அவனது பல்வரிசையும், சுருண்டு முன்புறம் தொங்கிய தலைமுடியின் அழகும் அப்படியே நெஞ்சோடு வந்து ஒட்டிக்கொள்வது போலிருந்தது.

ஆள்காட்டிக் குருவியொன்று 'கிரீச்'சென்று கத்தியவாறு ரேட்டுக்குக் குறுக்கே பறந்துசென்றது. தொலை தூரத்தில் லொறியொன்று உறுமிக்கொண்டுவரும் ஓசை கேட்டது.

சுந்தரி கனவிலிருந்து திடீரென்று விழித்துக்கொண்டது போன்ற அதிர்ச்சியோடு நெசவு நிலையத்தை நோக்கி விறுவிறுவென்று நடக்கத்தொடங்கினாள். பின்னால் தொடர்ந்துவந்துகொண்டிருந்த கந்தசாமி அவளின் நெஞ்சிலும் சிரித்துக்கொண்டு நின்றான்......

## 17.

வாழைச்சேனைக்கு ஒரு வாடகை ஓட்டத்துக்குக் காரில் போய்விட்டுத் திரும்பி வரும்போது சற்றுக் குழப்பமானதொரு மனநிலையில் இருந்தான் பொன்னுத்துரை. இடையில் வடிவேலுவைச் சந்தித்ததுதான் இதற்குக்காரணம்.

வாழைச்சேனை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் ஒரு பெண்ணோடு நின்றிருந்தான் வடிவேலு. முன்னைவிட சற்று அதிகமான உடல் தோற்றம், இரு புறக் கன்னங்

களிலும் வழியும் கிருதா, முறுக்கிவிடப்பட்ட பெரிய மீசை, முயலும் சிங்கமும் படங்கள் போட்ட ஒரு சேட்டும், 'பற்றிக்' சாரமொன்றும் அணிந்திருந்தான். நாலைந்து வருட இடைவெளிக்குள் அவன் தோற்றம் வெகுவாக மாறிவிட்டாலும், பொன்னுத்துரை சட்டென்று அவனை அடையாளம் கண்டு கொண்டவனாகக் காரை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கினான். அவனுக்கு இதொரு அருமையான சந்தர்ப்பமாகத் தோன்றியது. பாக்கியம் திட்டிவிட்டாளென்று வடிவேலு கோபித்துக்கொண்டு போனதன் பின் அவனைக் கண்டு சமாதானம் கூற வேண்டுமென எத்தனை நாட்கள் தேடி அலைந்திருக்கிறான் பொன்னுத்துரை.

காரை விட்டு இறங்கி விடுவிடுவென்றுசென்ற பொன்னுத்துரை தயக்கத்துடன் மெல்ல நடையைத் தளர்த்தினான். வடிவேலுவுக்கு அருகே நின்ற பெண்ணை அதுவரை அவன் கவனத்திலெடுக்கவில்லை. அப்போதுதான் கவனித்தான். அவள் உரிமையோடு நின்ற நெருக்கமே அவள் அவனுக்கு யாராக இருக்குமென்று புரிய வைத்தது. வலது கையில் குழந்தையும் இடது தோளில் அழகுப் பையுமாக அவள் எங்கோ வேடிக்கை பார்த்தபடி நின்றாள். அவளது இடது கரம் வடிவேலுவின் தோளில் யதார்த்தமாகப் பதிந்து போயிருந்தது.

ஒரே பார்வையிலேயே அவள் ஒரு சிங்களப் பெண் என்று புரிந்து கொண்டான் பொன்னுத்துரை. போய்க் கதைப்போமா அல்லது திரும்பி விடுவோமா என்று தயக்கத்துடன் அவன் யோசித்து முடிவெடுப்பதற்குள் வடிவேலுஏதேச்சையாக அந்தப் பக்கம் திரும்பி விடவே அவனால் பின்வாங்க முடியாமல் போய்விட்டது.

''எப்படி வடிவேலு? சௌக்கியமா,'' என்று கேட்டபடி அருகே சென்றான்.

வடிவேலுவின் முகத்தில் மருந்துக்காவது மகிழ்ச்சியைக் காணவில்லை. மாறாக ஒரு வரட்டுத்தனம்தான்

தெரிந்தது. முகம் கொடுத்து உரையாடக்கூட அவன் விரும்பவில்லையென்று புரிந்தது.

"நீயா?" என்ருன் அலட்சியமாக. பின்பு பஸ் நிலையத்துக்குக் குறுக்காக ஓடிக்கொண்டிருந்த ஒரு கிழட்டு நாயை வெகு அக்கறையாகப் பார்ப்பவன் போல் பார்த்தான்.

பொன்னுத்துரைக்கு எரிச்சல்தான் வரப் பார்த்தது. சிரமத்துடன் தன்னை அடக்கியபடி சகஜமாகக் கேட்பவன் போல் கேட்டான்:

"ஏன் வடிவேலு வீட்டுப் பக்கமே வராமல் விட்டிட்டாய்?"

"அங்கை என்னத்துக்கு? அந்தக் கொழுப்புப் பிடிச்சவளைப் பாக்கவா?" அவன் பட்டென்று கேட்ட கடுமையில் சுற்றி நின்றவர்களில் சிலர் அவர்களைத் திரும்பிப் பார்த்தார்கள். அருகில் நின்ற அந்தச் சிங்களப் பெண்ணும் வேடிக்கை பார்ப்பது போல் பார்த்தாள்.

"தாத்தா" என்று அவளின் கையிலிருந்த குழந்தை வடிவேலுவின் பக்கம் தாவியது.

பொன்னுத்துரைக்கு அதற்குமேல் அங்கு நிற்கவும் பிடிக்கவில்லை. அவனேடு கதைக்கவும் பிடிக்கவில்லை.

"சரி, நான் வாறன் வடிவேலு" என்று பேச்சை முடித்துக்கொண்டு திரும்பி விறுவிறுவென்று போய்க் காரில் ஏறிக்கொண்டான்.

"ஆர் அவர்?" என்று அந்தப் பெண் வடிவேலுவிடம் சிங்களத்தில் விசாரிப்பது கேட்டது. அதற்கு வடிவேலுவின் பதிலைக் கேட்பதற்குள் காரைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டுவிட்டான் பொன்னுத்துரை.

வடிவேலு உடன் பிறந்த சகோதரங்களை மட்டுமல்ல அந்தப் பாசத்தையே மனதிலிருந்து அடியோடு களைந்தெறிந்து விட்டானென்று அந்தக் குறுகிய நேரத்துக்குள் புரிந்து கொண்டான் அவன். அவனைக் கண்ட விபரத்தை

பாக்கியத்திடம் போய்க் கூறுவதா விடுவதா என்பது தான் பொன்னுத்துரைக்குக் குழப்பமாக இருந்தது.

பாக்கியம் இயல்பிலேயே சகோதர பாசம் அதிகமானவள். சகிக்க முடியாத கவலையினால் உண்டான ஆத்திரத்தில் ஏதோ ஒரு நாள் கண்டபடி தமையனைத் திட்டிவிட்டாலும் அதுக்காக எத்தனையோ நாட்கள் அவள் மனம் வருந்திக் கலங்கியதைக் கண்டிருக்கிறான் பொன்னுத்துரை. இன்றைக்கு அவனைக் கண்டதென்று கூறினால் மிகவும் சந்தோஷமடைவாள் அவள். ஆனால், அவன் நடந்து கொண்ட முறையை அவளிடம் கூற முடியாது. ஆறிக் கொண்டிருக்கும் ரணத்தை மறுபடியும் கீறிப் புதுப்பித்தது போலாகிவிடும்.

வடிவேலுவைப் பற்றி நினைக்கவே பொன்னுத்துரைக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. கசப்போடு தனக்குள் எண்ணிக்கொண்டான். 'பெண்ணாகப் பிறந்த ஒருத்தி எல்லாச் சுகத்தையும் மறந்திட்டு மாடாட்டம் உழைச்சுக் கிட்டிருக்கிறாள். இது குடும்பத்திலே மூத்ததாய்ப் பிறந்தும் பொறுப்பில்லாமே திரியிறது காணாதென்று வயசு வந்த குமர் வீட்டிலே மூன்றிருக்க மூ,ன்றாஞ் சாதிக்காரி ஒருத்தியோடே குழந்தையும் கையுமாக நிக்குது....'

வீட்டுக்கு வந்து சேரும் வரை பொன்னுத்துரையின் மனக்கசப்பும் எரிச்சலும் குறையவில்லை.

இராசம்மாக் கிழவி கால்களை நீட்டியபடி விறாந்தைத் தூணோடு சாய்ந்திருந்து பெட்டி முடைந்து கொண்டிருந்தாள். வேலாயுதம் வழமையாக அந்த வேலைகளில் படுத்திருக்கும் சாய்வு நாற்காலி வெறுமையாகக் கிடந்தது.

காரை நிறுத்திவிட்டு பாக்கியத்தின் வீட்டுக்குப்போய் வருவதற்கு நினைத்திருந்த பொன்னுத்துரை சாய்வு கதிரையைப் பார்த்து விட்டு, ''அப்பா எங்கை ஆச்சி?'' என்று வினவிக்கொண்டே விறாந்தைப் படிகளில் ஏறினான். ''பாக்கியம் வீட்டை போலே கிடக்கு.'' இராசம்மா கூறி

விட்டு கால்கள் இரண்டையும் மடக்கியபடி விரலைச் சொடுக்குப் போடத் தொடங்கினுள்.

பொன்னுத்துரை எதிர்பார்த்த பதில்தான் இது. ஆரம்ப காலத்தில் அவனை வியப்படைய வைத்து பின்பு பழகிப் போய்விட்ட விஷயம் இது, அவனுக்கு அறிவு தெரிந்த காலந்தொட்டே தகப்பனுர் வேறு வீடுகளுக்கு அடிக்கடி போவதையோ, அக்கம் பக்கத்திலுள்ளவர்களோடு கூட அந்நியோன்னியமாக பேசிப் பழகுவதையோ காணுதவன் அவன்.

''இந்த மனிஷன் மனிஷர்களை வேணுமென்று நடக்கிறதேயில்லை'' என்று தாயார் உயிரோடிருக்கும்போது சில சமயங்களில் சலித்ததையும் கேட்டிருக்கிருன் அவன். அப்படியான அவனது அப்பாதான் இப்போது தலைகீழாக மாறிப்போயிருந்தார்.

பொன்னம்மாளின் மரணச் செலவுகளை அன்றைய தினம் முன்னின்று ஏற்றுக்கொண்டது அவர்தான். பின்பு பாக்கியம் எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து மொத்தமாகத் திருப்பிக் கொடுக்க வந்த போது அவர் முற்ருக வாங்கிக்கொள்ளவில்லை. "என்ன பிள்ளை இது! நாங்கள் அன்னியம்மாதிரிக் கணக்குப் பாக்கிருய்'' என்று கோபித்துவிட்டு, அவளின் மனம் நோகக் கூடாதென்பதற்காக ஒரு பகுதி பணத்தைத்தான் அவளிடமிருந்து பெற்றுக்கொண்டார் அவர்.

அன்று மட்டுமல்ல, தொடர்ந்தும் பாக்கியத்தின் விஷயங்களில் மிகவும் கருணையோடுதான் நடந்து கொண்டார் வேலாயுதம்.

''கிழட்டு நாயென்ருலும் வீட்டுக்கு ஒரு காவலைப் போல பொன்னம்மாள் இருக்கிற வரையும் இருந்தாள். இப்ப குமருகள் மட்டும் இருக்கிற வீடது'' என்று அடிக்கடி பச்சாதாபப்பட்டு சும்மா இருக்கும் சமயங்களில் இராசம்மாவைப் போய்வரச் சொல்வார். தானும் இடை

யிடையே போய் சிறிது நேரம் அங்கு நின்றுவிட்டு வரு வார்.

''அப்பாக்குக் கூட இப்படியான ஒட்டுறவுத் தன்மை யள் இருக்கா'' என்று ஆரம்பத்தில் வியந்திருக்கிறுன் அவன். பிறகு நாட் செல்லச் செல்ல அவனே தனக்கொரு சமாதானத்தைக் கூறிக்கொண்டான். 'அம்மா செத்தாப் புறம் முதல் முதலா ஒரு பெரிய துக்கத்தையும் அனுபவித் துக்கொண்டு பேசி ஆற வீட்டிலேயும் ஆளில்லாமல் இருக் கிறவர் அப்பா. இந்த நிலைமைதான் மற்றவையளின்ரை துன்பத்தை பங்கு போடிற ஒரு பக்குவ நிலையை அவருக் குக் கொடுத்திருக்கு. அதாலேதான் இப்பிடி ஓடியோடிப் போறுர்...'

இதைவிட வேறு காரணமெதுவும் அவனுக்குப் புரிய வில்லை. பாக்கியத்துக்கு இதுவும் ஒரு ஆறுதலைக் கொடுக் க்க் கூடியதென்று அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

''ஆச்சி கோப்பி கொஞ்சம் தாறியா?''என்று கேட்டு விட்டு அறைக்குள் சென்றுன் பொன்னுத்துரை. இரா சம்மா எழுந்து போகும் போது முக்கி முனகிக்கொள்வது கேட்டது. சில காலமாகவே மாறி மாறி ஏதுமொரு நோயி ஞல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறுள் அவள்.

பொன்னுத்துரை உடையை மாற்றிச் சாரமொன்றை கட்டிக்கொண்டு மேசையிலிருந்த அன்றைய தினசரியை எடுத்துப் பார்த்தான்! பார்த்து முடிப்பதற்குள் இராசம் மாள் கோப்பியோடு வந்துவிட்டாள்.

கோப்பியை அருந்தும் போது முகட்டு வளையில் வலை பின்னிக் கொண்டிருந்த சிலந்தியொன்றில் அவனது பார்வை பதிந்தது. தவறிப் போய் அந்தச்சிலந்தி விழுந்து நூலில் தொங்கிய போது அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

ஒரு உயரத்தை வைத்து மேலே ஏறிப்போய் அதைத் தூக்கி விடுவோமாவென்று நினைத்தான். அடுத்த விஞடி

அவனுக்கே அவனது யோசனை படு முட்டாள்தனமாகத் தோன்றியது. தவறிக் கை விரல்களில் ஏதாவது பட்டு விட்டால் சிலந்தி வலை என்னாகும்? அவன் போய்த் தூக் கும் வரை சிலந்திதான் நிற்கப் போகிறதா? பொன்னுத் துரை யோசனையோடு பார்த்துக்கொண்டிருக்கும் போதே அந்தச் சிறு சிலந்தி கிடுகிடுவென நூலிலேயே போய் வலையில் தாவிக்கொண்டது.

வெளியே வேலாயுதம் வந்துவிட்டதற்கு அடையாள மாக அவரின் குரல் கேட்டது, பொன்னுத்துரை வெளியே வந்து பாக்கியத்தின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங் கினான். பூவரசம் மரக் கிளையொன்றில் வாலை ஆட்டிய படி 'ணங்... ணங்...' என்று கத்திக்கொண்டிருந்த அணில் ஒன்று அவனைக் கண்டதும் தாவி ஓடியது.

வீட்டு மதில் சுவருக்கு மேற்புறத்தால் தலையை நீட் டியபடி அடுத்த பக்கம் நின்ற சுந்தரியோடு ஏதோகதைத் துக்கொண்டிருந்த சித்தி பரீதா, பொன்னுத்துரையைக் கண்டதும் முக்காட்டைச் சீராக்கியபடி புன்னகை செய் தாள். 'இந்தப் பெண்தான் எத்தனை அழகாக வளர்ந்து விட்டாள்' என்று உள்ளூர வியந்து கொண்டே, ''என்ன பிள்ளை நெசவுக்குப் போகேக்கையும் கதைக்கிறியள்.வரேக் கையும் கதைக்கிறியள்...— இங்கேயும் நின்று கதைக் கிறியள்... அப்பிடி என்னதான் கதை கிடக்கு உங் களுக்கு?'' என்று வேடிக்கையாகக் கேட்டான். சித்தி பரீதா வெட்கத்துடன் தலையை உள்ளே இழுத்துக் கொள்ள, ''உனக்கென்ன நாங்கள் கதைச்சால்'' என் றாள் சுந்தரி வெடுக்கென்று. துடுக்குத்தனமும், பொய்க் கோபமுமாக அவள் உதடுகளைப் பிதுக்கிய விதம் அவளின் முகத்துக்கு அழகாக இருந்தது. பொன்னுத்துரை சிரித் துக்கொண்டே அருகில் வந்து அவளின் தலையில் செல்ல மாகத் தட்டினான்.

''உனக்கு வாய்க் கொழுப்பு அதிகமாத்தான் போச்சு.''

''நாளைக்கு மீனாட்சி அக்கா வாறாளாமண்ணை.''

''கடிதம் வந்துதா?''

''ம்...''

''அப்ப நாளைக்கு அக்காவின்ரை அர்ச்சனையை எதிர் பாக்கலாமென்று சொல்லு'' என்று சிரித்தான் பொன்னுத்துரை. சுந்தரியும் சிரித்தபடி தலையை ஆட்டினாள்.

''கட்டாயம் நடக்குமண்ணை...''

பொன்னுத்துரையைக் கண்டதுமே வெளித் திண்டிலிருந்து வாணியிடம் தலையைக் காட்டிப் பேன் எடுப்பித்துக்கொண்டிருந்த கீதா அவசரமாக எழுந்து உள்ளே நழுவினாள். அவனிடம் அகப்பட்டால் இரண்டு கன்னப்புறங்களிலும் கிள்ளு வாங்கவேண்டியிருக்கும்,

''சனியனுக்கு தலையெல்லாம் பேன் புழுத்துப் போச்சு?'' என்று முகத்தைச் சுளித்தபடி எழுந்தாள் வாணி.

''உனக்குக் குறைவாக்கும்'' பொன்னுத்துரை சிரித்தபடி அவளின் தோளில் தட்டிவிட்டு வீட்டுக்குள் வந்தான்.

பாக்கியம் தன்னைக் கண்டதும் மீனாட்சியைப் பற்றித்தான் ஏதும் கூறுவாளென்று அவனுக்குத் தெரியும். அக்கரைப்பற்றுக்குப் போன ஆரம்ப நாட்களில் வாரம் ஒரு தடவை வந்து விட்டுப் போகும் மீனாட்சி, இப்போதெல்லாம் மாதத்துக்கு ஒரு தடவை கூட வருவது அருமையாயிருந்தது. இடையில் பாக்கியம் பொறுமை இழந்து ஒரு கடிதம் போட்டால் மட்டும் அடுத்த வார லீவுக்கு அவளை எதிர்பார்க்கலாம்.

பொன்னுத்துரை எதிர்பார்த்தபடியே சமையலறைக்குள்ளிருந்து அவனது குரலைக் கேட்டுவிட்டு வெளியேவந்த பாக்கியம், ''தெரியுமா தம்பி! நாளைக்கு மீனாச்சி வாறாளாம்'' என்றாள்.

''சுந்தரி சொன்னாளக்கா...''

''என்ரை கவலை இதுகளுக்குப் புரியிறேல்லை'' என்று அவனுக்கு மட்டும் கேட்குமாறு மெல்லக் கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டாள் பாக்கியம், ''வயசு வந்த பெண்ணைக் கண்காணாத இடத்திலே விட்டிட்டு இருக்கிறனென்று எப்ப பாத்தாலும் மனங் கிடந்து பதறுது. இதுகளுக்கு அது புரிஞ்சாத்தானே? கிழமைக் கொருக்கா வந்தாலாவது கொஞ்சம் ஆறுதலா இருக்கும்... உம்...''

பொன்னுத்துரைக்குக் கண்களில் நீர் சுரந்துவிடும் போலிருந்தது. தன்னையறியாமலேயே அவளைக் கண் கொட்டாமல் பார்த்தான். முகம் வியர்த்துக் களைத்து தலை கலைந்து பறந்து உடல் சோர்ந்து களைத்து... பொன்னுத் துரையின் இருதயத்தில் நெருஞ்சி முள்ளொன்று உருள் வது போலிருந்தது. கிழிந்து தையல் போடப்பட்டிருந்த ரவிக்கையின் தோட்புறமும், சாயம் போய்விட்டசேலையின் கோலமும் கண்களை உறுத்துகிறாற் போலிருந்தது. 'இவள் ஒரு நிமிஷமாவது தன் சுகத்தைப் பற்றி நினைக்கக் கூடாதா?' என்று ஏக்கத்தோடு எண்ணிக்கொண்டான் அவன்.

பாக்கியம் அவனது சிந்தனையின் போக்கை அறிய வில்லை. ''தம்பி நாளைக்கு மீனாச்சி வர ஒரு சங்கதி சொல் லப் போறன்'' என்று ஆரம்பித்தவள் ஒருபுறமாக இருந்து வெகு அக்கறையாக விரல் நகங்களுக்கு சாயம் பூசிக் கொண்டிருந்த சுந்தரியைக் கவனித்துவிட்டு, ''போடி போய் அடுப்பிலே சோறுவச்சன். அவிஞ்சுபோச்சா என்று பார்'' என்று விரட்டினாள். சுந்தரி ஏதோ முனகியபடி எழுந்து சென்றாள்.

''இவள் வேறே தலையிடி'' என்று முணு முணுத்தாள் பாக்கியம். ''எந்த நேரமும் ஸ்டைல் பண்ணவே இவ ளுக்கு நேரம் சரியாக் கிடக்கு; நெசவுக்கு விட்டுக்கெடுத் துப் போட்டன் போலே கிடக்கு.''

''சின்னப் பிள்ளைதானேயக்கா'' என்று அவளுக்காக பரிந்துவிட்டு, ''மீனாச்சிக்கு என்ன கதை சொல்லப்

போருய்? என்று விட்ட கதையை நினைவூட்டினுன் பொன்னுத்துரை.

''அவளின்ரை செலவு போக மிச்சச் சம்பளக் காசை அப்பிடியே தபால் கந்தோரிலே போடச் சொல்லப் போறன். அப்படிச் சேத்தாலாவது அவளுக்கு ஒரு கல்யாணக் காட்சியென்று வரேக்கை ஒரு பெரிய பெலமா இருக்கும்.''

''அதுவும் நல்லதுதானக்கா.''

''இப்பிடி வா'' என்று வெளியே வேப்பமரத்துக்குக் கீழ் அவனை தனியாக அழைத்துச் சென்ருள் பாக்கியம். ''தம்பீ! சித்தி பரீதாவின்ரை உம்மா நேற்றுச் சொன்னு. ஆரோ ஒரு கிளறிக்கல் மாப்பிளை இருக்கிருனும். முஸ்தாபா நாதாவுக்கு தெரிஞ்ச ஆக்களாம். பெண் குணசாலியா இருந்தால் வீடும் காசு ஐயாயிரமும் காணுமெண்டாளும். காசைத்தான் இருக்கிற காசோடே கடனை உடனைப் பட்டு சமாளிக்கலாம். வீட்டைக் குடுத்திட்டு இருக்கிற பொடிச்சியளை நான் எங்கே கொண்டு போய் வைச்சிருக்கிறது... ஆம்பிளைச் சகோதரங்களிலை ஒன்ருவது ஒழுங்காயிருந்தா கொஞ்சமாவது நிம்மதியாயிருந்திருப்பன். இது இரண்டும் மூளை கெட்ட முண்டங்கள்...ம்... பாக்கியம் பெருமூச்சுடன் நிறுத்திய போது பொன்னுத்துரைக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாகவும் கவலையாகவும் இருந்தது. வடிவேலுவைக் கண்டதைக் கூறுவோமா என்று நினைத்ததும் அடியோடு அவன் மனதை விட்டு போய்விட்டது.

## 18.

சுந்தரி-கந்தசாமி காதல் விவகாரம் மிகவும்உச்ச நிலையை அடைந்திருந்தது. கந்தசாமி தனக்கிருந்த ஞானத்தையெல்லாம் படிப்படியாகக் கையாண்டான். அவன் சுந்தரியிடம் பிரயோகித்த முதல் ஆயுதம் முகஸ்துதி. அவளின் அழகைப் பற்றி புகழ்ந்தே அவள் மனதில் பலவீனமான ஒரு பகுதியைஇலகுவாக வென்றுவிட்டான் அவன்.

அதன் பின்பு பார்வையும் சிரிப்புமாக இருவரின் பழக்கங்கள் சில நாட்களுக்குத் தொடர்ந்து கொண்டிருந்தன.

சுந்தரி அவளாகத் தனது மனக்கிடக்கையை வெளிப்படுத்துவாளென கந்தசாமி ஒருவாரம், இரண்டு வாரங்களைப் பொறுமையாக இருந்து பார்த்தான். அவள் மௌனமாக இருக்கவே அவன் நேரடியாகவே களத்தில் இறங்கிவிட்டான்.

அடுத்த நாள் சுந்தரி நெசவு நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த போது மாங்கொட்டையொன்று பறந்து வந்து அவளின் நெஞ்சின் மீது பட்டு நிலத்தில் விழுந்தது.

சுந்தரி திகைப்புடன் பார்த்தாள். கந்தசாமி ரோட்டோரமாக படத்தில் வரும் கதாநாயகனைப் போல் எடுப்பாக நின்று கொண்டு அந்த மாங்கொட்டையை எடுக்கும்படி ஜாடை காட்டினான். சுந்தரிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளுக்குப் பயமாகவுமிருந்தது. முன்னும் பின்னும் யாராவது வருகிறார்களோவென்று அவசரம் அவசரமாகப் பார்த்துவிட்டு அவசரமாகக் குனிந்து அதை எடுத்துப் பார்த்தாள். மாங்கொட்டையின் உள்வளைவான பகுதிக்குள் கடித மடிப்பொன்று தெரிந்தது. அந்தப் பகுதியில்ஒரு இடைவெளியை உண்டாக்கி கடிதத்தைச்சொருகி

வைத்திருக்கிறுன் அவன். சுந்தரி அவனது புத்தி சாதுரியத்தில் அப்படியே மயங்கிவிட்டாள்.

அதன் பின்பு அடிக்கடி இருவரின் பக்கமும் மாங்கொட்டைகள் பறந்தன. சிலவேளைகளில் கடிதங்கள் புத்தகங்களின் மூலமாகவும் கைமாறின. கந்தசாமி கடிதம் எழுதுவதில் கூட தனக்கே உரிய புத்திசாதுரியத்தைக் கையாண்டான்.

ஆரம்பத்தில் நட்போடு பழகுபவன் போல் எழுதினுன். பின்பு மெல்ல மெல்லக் கடிதம் எழுதும் முறையை மாற்றி காதல் உணர்ச்சியைத் தூண்டத் தொடங்கினுன். கடைசியில் ஆண் பெண்ணென்று ஆண்டவன் மனிதர்களை உலகில் படைத்ததே இதற்காகத் தான் என்பது போல் ஆபாசச் சஞ்சிகையிலுள்ள சில இடங்களைக் கோடிட்டுச் சுட்டிக்காட்டி எழுதினுன்.

இதற்குத் தோதாக அவன் அனுப்பும் புத்தகங்களுமிருந்தன. முதலில்யாரோ ஒரு பெரியவரின் சுயசரிதைப் புத்தகத்தில் ஆரம்பித்து அடுத்துத் துப்பறியும் நாவல்களுக்குத் தாவி கடைசியாகவெளிநாட்டிலிருந்து இரகசியமாககடத்தப்பட்டு வரும் ஆபாசச்சஞ்சிகைகளைக்கொடுக்க ஆரம்பித்தான். முன்பு சுந்தரமூர்த்தியின் மனதைப் பைத்தியமாக ஆட்டிப்படைத்த புத்தகங்கள் இவை......

சுந்தரி அவன் போலக் கடிதங்களை எழுதவோ புத்தகங்களைக் கொடுக்கவோ செய்யாவிட்டாலும் அவனைத் தினசரி பார்க்கத் துடிக்கும் ஆவலிலும் நெசவு நிலையத்துக்கு வரும்போதும் போகும் போதும் அவளிடம் தோன்றும் பரபரப்பிலும் வேகம் அவளின் பக்கமும் குறையவில்லை என்று புரிந்தது......

இதற்குள் பாரூக்கின் விவகாரம் சுத்த மோசமாக இருந்தது. சித்திபரீதா நெருப்பாக இருந்தாள். கந்தசாமி சொல்லிக் கொடுத்த அறிவுரைகளையெல்லாம். பிரயோகித்து அவன் தலைகீழாக நின்றும் கூட அவள் துளியும்

மசியவில்லை. அவளது மனதில் வெறுப்பு மலையாக வளர்ந்ததோடல்லாமல் ஆரம்பத்தில் அவனிடமிருந்த பயம் கூடக்குறைந்து விட்டது அவளுக்கு.

''ஒரு கழுதை அது. தினமும் பின்னாலே பின்னாலே வந்து சுத்திப் போட்டுப் போகுது. அதின்ரை மூஞ்சியும் முகரக் கட்டையும்......'' என் சுந்தரியிடம் கேலி பேசிச் சிரிக்கிற அளவுக்கு அவளுக்குத் தைரியம் வந்துவிட்டது.

சுந்தரி, கந்தசாமிக்கெழுதிய கடிதத்தில் வேடிக்கையாக சித்தி உம்மா இப்படிச் சொல்கிறாளென்றும் வேடிக்கையாகக் குறிப்பிட்டிருந்தாள். படித்துப் பார்த்ததும் கந்தசாமிக்கு உற்சாகம் தாங்கவில்லை. கடிதத்திலிருந்த அந்தப் பகுதியை பாரூக்கிடம் வாசித்துக் காட்டி விட்டு விழுந்து விழுந்து சிரித்தான். ''நீ ஒரு ஆம்பிளை தானா?'' என்று வேறு கேலி செய்தான்.

பாரூக்குக்கு சித்திபரீதா கைநழுவிப் போகிறாளே என்பதைவிட அவள் கூறிய வார்த்தைகள் தான் நெருப்பாக நெஞ்சைச் சுட்டன. அதுவும் எத்தனை அவமானகரமாக நெருங்கிய நண்பனுக்கே தெரிய வந்திருக்கின்றது. இனி மேல் சுந்தரிக்கு முன்னால் தான் செல்ல முடியுமா அல்லது கந்தசாமிக்கு முன்னால் தான் வீரம் ஏதாவது பேச முடியுமா?

பாரூக் ஆத்திரத்தோடு பற்களை நறநறவென்று கடித்து விட்டு கந்தசாமியிடம் சபதமொன்றுபோட்டான்.

''இருந்து பாரடா மச்சான். பலவந்தமா அவளை நான் ஒருநாளைக்குத் தூக்கிக்கிட்டுப் போய் மானத்தை வாங்கி என்ரை காலடியிலே விழுந்து கதற வைக்கேல்லை என்ரை பேர் பாரூக்கில்லை.''

''அப்பிடிச்சொல்லடா குட்டி ராஜா''என்றுஅவனைத் தட்டிக் கொடுத்தான் கந்தசாமி.

இதன்பின் பாரூக் சித்திபரீதாவை எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை. அவன் அதிகமாகப் பிரதான றோட்டுச்சந்திக்கு வருவதுமில்லை. வாரத்துக்கு ஒரு தடவையோ

இரு தடவைகளோ வருவான். அதுவும் சந்தியில் நின்று சித்தி பரீதா வந்து கண் பார்வையிலிருந்து மறையும் வரையும் வில்லன் பார்வை பார்ப்பான். அவன் இப்போது கதாநாயகனல்ல வில்லன். சித்தி பரீதாவைக் கல்யாணம் செய்யவேண்டுமென்று அவனுக்கிருந்த ஆசை போய்விட்டது. அவளைத்தனியாக மடக்கிக் கொண்டு போய்விடவேண்டும் என்பதில் தான் அவன் சிந்தனை பூராவும் இருந்தது. ஒரு நாளைக்காவது அவளை மானபங்கப்படுத்தி அவள் கதறி அழுவதைப் பார்த்துவிட்டால் அவனது நெஞ்சக் கொதிப்புச் சாந்தியாகி விடும்.

கந்தசாமிக்கு காதலில் சுவாரஸ்யம் குறையத் தொடங்கியது. சுந்தரியின் கைகளைக்கூடத் தொடமுடியாத நிலையில் தவமிருப்பதுபோல் தினசரி காலையிலும் அந்தியிலும் சந்தியில் நின்று கடிதங்களை மட்டும் பரிமாறிக் கொள்வதில் என்ன சந்தோஷம் இருக்கின்றது? அடுத்த கட்டத்துக்குத் தாவவேண்டாமா?

கந்தசாமி ஒரு கடிதத்தில் தனது விருப்பத்தைக்குறிப்பிட்டு அவளுக்கு எழுதினான். 'நாங்கள் இருவரும் ஒரு படத்துக்குப் போவோமா?' —சுந்தரியின் பதில் நறுக்குத் தெறித்தாற் போல் வந்தது.

''அந்த வேலை மட்டும்வேண்டாம். அக்கா அறிந்தால் உயிரோடு புதைத்து விடுவாள்.''

இதற்குச் சளைப்பவனா கந்தசாமி.

'அக்காவுக்குப் பயப்படுகிறவள் காதல் செய்யக் கூடாது' என்று இரத்தினச்சுருக்கமாக ஒருதுண்டில்எழுதி மாங்கொட்டைக்குள் வைத்து அவளிடம் வீசிவிட்டு நாலைந்து நாட்கள் சந்திப்பக்கமே வராமல் இருந்து விட்டான்.

ஆறும் நாள் பாருக்கைப் போலவே வில்லன் மூஞ்சியோடு சந்தியில் வந்து நின்றவன், சுந்தரி வரும் போது அவளின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆனால்,

தனது அலட்சியத்தால் அவளின் முகம் எத்தனை தூரம் மாற்றமடைந்திருக்கிறதென்பதை மட்டும் அவளறியா வண்ணமே நோட்டமிட்டுக்கொண்டான்.

அடுத்த நாள் அவன் எதிர்பார்த்த பதிலோடு சுந்தரி வீசியமாங்கொட்டை அவனது காலடியில் விழுந்தது.

சிநேகிதிகளோடு படம் பார்க்கப் போவதாகக் கூறி அக்காவிடம் கெஞ்சிக்கூத்தாடி அனுமதி கேட்டு வைத்திருக்கிறேன். வருகிற ஞாயிற்றுக்கிழமை நீங்கள் விரும்புகிற தியேட்டருக்கு வருகிறேன். கோபத்தையெல்லாம் மறந்து வழமையான அன்போடு கடிதம் போடவும்.

கந்தசாமிக்கு உற்சாகம் பிடிபடவில்லை. அந்தக்கடிதத்தைக் கொண்டுபோய் பாரூக்குக்கு வாசித்துக் காண்பித்துவிட்டு சுந்தரிக்கே முத்தம் கொடுப்பது போல் கடிதத்துக்கு ஒரு முத்தம் கொடுத்தான்.

''எந்தச் சரக்கென்றாலும் மச்சான் நான் சொன்னாக் கேக்கும். இல்லாட்டிப் போடி கழுதையெண்டு விட்டுப் போடுவன்'' என்று ஜம்பமாக வேறு கூறிக் கொண்டான்.

ஒன்றும் கூறாமல் பாரூக் மௌனமாக நின்றாலும் உள்ளூர அவனின் மனம் உலைக்களமாகக் கொதித்துக் கொண்டிருந்தது. ''எனக்கும் வெகுநாளாகுது அந்தத் திமிர் புடிச்சவளை மடக்க'' என்று தனக்குள் கறுவிக்கொண்டான்.

ஞாயிற்றுக்கிழமை, குறிப்பிட்ட படமாளிகையில் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு மணிநேரம் முன்பாகவே வெகு அமர்க்களமாக உடையணிந்து கொண்டுசென்றிருந்தான் கந்தசாமி. அங்கே அன்றைய காட்சிக்குப் போடப்பட்டிருந்த படம் வெகுகாலத்துக்கு முன்புவந்த புராணப் படங்களில் ஒன்று. மொத்தமாக முப்பதுபேர்கள்கூட அந்த நேரக் காட்சிக்கு வரவில்லை. கந்தசாமிக்குத் தோதான சூழ்நிலை இது தானே.

படம் ஆரம்பிக்கச் சில நிமிஷ நேரங்களுக்கு முன்பாகத்தான் நெசவு நிலையச் சிநேகிதி ஒருத்தியோடு பயந்து பயந்து வந்து சேர்ந்தாள் சுந்தரி.

சினேகிதியைக் கண்டதும் கந்தசாமியின் முகம் சுருங்கி விட்டாலும் அவன் சட்டென்று சமாளித்துக் கொண்டான். கிடைக்கிற சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்தத் தெரிந்தவன் அவன். அலட்சியமாக இரண்டு நோட்டுகளை வீசி படமாளிகையின் கடைசி ஆசனத்தில் இருக்கத்தக்கதாக மூன்று பிரவேசச் சீட்டுகளை எடுத்து இருவரையும் உள்ளே அனுப்பிவிட்டு மணி அடித்துப் படம் ஆரம்பமாகியதன் பின்தான் அவன் உள்ளே வந்தான்.

காதல்செய்வதைவிட காதல் செய்பவர்களைச்சேர்த்து வைப்பதில் சிலருக்கு ஆனந்தம் அதிகம். அந்த வகையைச்சேர்ந்தவள் சுந்தரியின் சிநேகிதி. கந்தசாமிஉள்ளே வந்ததும் மிகவும் நாகரீகமானவள் போல் இருவரையும் ஒன்ருக விட்டுவிட்டு அதே வரிசையிலுள்ள கடைசி ஆசனமொன்றில் போய் உட்கார்ந்து கொண்டாள் அவள். ஆயினும் அவளின் பார்வை என்னவோ திரையின் பக்கமே செல்லாமல் அவர்களின் பக்கமாகத் தான் அந்த இருளிலும் சுழன்று கொண்டிருந்தது.

கந்தசாமிக்கு மிகவும் அருமையானதொரு சந்தர்ப்பம் இது. தனிமையான சூழ்நிலை. நெருக்கத்தில் ஒரு பெண். அதுவும் காதலி. சும்மா இருப்பானு அவன்.

முதலில் அவனது வலதுகை சுந்தரியின் தோளின்மீது விழுந்தது. அவள் நடுக்கத்தோடு ஒதுங்கியபடி ''இதொண்டும் வேண்டாம்'' என்று மூச்சு வாங்குவது போல் திணறினுள். ஒரு அசட்டுத் துணிச்சலோடு வந்து விட்டாளேயல்லாது அவளின் உடலிலுள்ள ஒவ்வொரு மயிர்க்கால்களும் பயத்திஞல் விறைத்துக் கொண்டுதானிருந்தது. தமக்கை இதை அறிந்தாளென்ருல் தானும் உயிரோடு இருக்கமுடியாது, அவளும் உயிரோடு இருக்கமாட்டாள் என்று அவளுக்கு நன்கு தெரியும்.

கந்தசாமி அவளின் பயத்தை அடியோடு லட்சியம் செய்யவில்லை.

''சுந்தரிக்குட்டீ! இன்றைக்கு நீ எத்தனை அழகா இருக்கிறாய் தெரியுமா?'' என்று கிசுகிசுத்தபடி அவளின் தோளோடு மெல்லச் சரிந்து கொண்டான். வலது கை பாம்பாக அவளைச் சுற்றி வளைத்தது.

ஆண்மையின் ஸ்பரிச சுகம் தமக்கையைப் பற்றிய பயத்தைச் சுந்தரியின் மனதிலிருந்து மெல்ல மெல்லக் கரைக்கத் தொடங்கி விட்டது. உணர்ச்சி அலைகள் உள்ளமெங்கும் தீக்கங்குகளாகப் பரவ அந்த மங்கிய ஒளியில் கந்தசாமியின் முகத்தை வெறிக்கப்பார்த்தாள். பூனையின் கண்களைப் போல் அவளின் கண்கள் பளபளத்தன.

கந்தசாமிக்குத் துணிச்சல் அதிகமாகிவிட்டது. சுந்தரியின் முதுகுப்புறமாக ஊர்ந்து கொண்டிருந்த அவனின் கை, அவளின் முன்புறமாகத் திரும்பியது. அதன் பின்பு, நேரம் போனதே அவர்கள் இருவருக்கும் தெரியவில்லை. சுந்தரியின் சிநேகிதி புராணப்படக் காட்சி நடந்து கொண்டிருந்த அந்தப்படமாளிகையில் அப்பட்டமான ஒரு 'அடல்ஸ் ஒன்லி'க் காட்சியைக் கண்கள் வலிக்கப் பார்த்துக்கொண்டிருந்தாள்......

இதன் பின்பு கந்தசாமி எழுதும் கடிதங்களைவிட சுந்தரியின் கடிதங்களின் 'வேகம்' அதிகமாயிருந்தது. கைகளில் கிடைத்த களிமண்ணைப் பயன்படுத்தத் தெரிந்த குயவனைப் போல் கந்தசாமியும் அவளின் மனநிலையை தான் விரும்பியவாறு பதப்படுத்தி எடுத்துவிட்டான். தமக்கையை எண்ணிச் சுந்தரி கலங்கினாலும் பருவ உணர்ச்சிகளின் வேகம் அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாயிருந்தது.

கந்தசாமி படமாளிகையில் அரைகுறையாகக்கிடைத்த இன்பத்தைப் பூரணமாக ஒருநாளைக்காவது அனுபவிக்க வேண்டுமென்று துடிக்கத் தொடங்கிவிட்டான்.

தெசவுக்கு வருவது போல் ஒருநாளைக்கு என்வீட்டுக்கு வருகிறாயா? என்று கடிதத்தில் எழுதிக் கேட்டிருந்தான்

அவன். அவனது வீட்டிலிருப்பது வயதான அன்னைஒருத்தி தான். அவளை அந்தச் சமயத்தில் வெளியே எங்காவது அனுப்பிவைக்கலாம். சூதுவாது தெரியாதவள் அவள்.

ஆனால், சுந்தரி இத்திட்டத்துக்கு அடியோடு மறுத்து விட்டாள். அவள் வயதுப் பெண்களில் ஒருத்தியாவது அங்கிருந்தால் போகலாம். யாரும் அதிகம் சந்தேகப்படமாட்டார்கள். அப்படியில்லாமல் ஆண்பிள்ளை மட்டும் தனியே இருக்கும் வீடொன்றுக்குப் போனால் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களால் விஷயம் ஒரு நாளிலேயே அம்பலமாகி விடாதா?

இதைத் தவிர்த்து முன்போல் ஒரு சந்தர்ப்பத்தைஉண்டாக்கி அவனைப் படமாளிகையில் சந்திக்கவும் சுந்தரிக்கு விருப்பமில்லை. அடியோ நுனியோ எதுவோ அனுபவிப்பதை பூரணமாக அனுபவித்து விடவேண்டும் என்றுதான் அவளுக்கு ஆவலாக இருந்தது. கந்தசாமியும் சமயம் பார்த்து அவளின் உணர்ச்சித் தீய்க்கு நெய் வார்ப்பவன் போல் சில ஆபாசப்படங்களுள்ள சஞ்சிகையொன்றையும் அனுப்பி ஒரு சிறு குறிப்பையும் உள்ளே எழுதி வைத்து அனுப்பியிருந்தான். 'உன்னால் என் வீட்டுக்கு வரமுடியாவிட்டால் நீ ஒரு இடத்தைக் குறிப்பிடு. இரவு எந்தநேரமென்றாலும் நான் வந்து சந்திக்கிறேன்.'

காலையில் நெசவு நிலையத்துக்குப் போகும்போது கந்தசாமி கொடுத்த இந்தக் குறிப்பு அன்று பூராவுமே சுந்தரியைக் குழப்பமடைய வைத்துக் கொண்டிருந்தது. அந்தியில் திரும்பி வரும் போதும் எங்கே அவனை வரும்படி கூறுகிறதென்று தெரியாமல் மனக்கிலேசத்துடனும் எரிச்சலுடனும் தான் வந்தாள் அவள்.

வீட்டில் லட்சுமி, வாணி, கீதா மூவரோடும் நின்று தாயாரின் அறைகளிலுள்ள சாமான்களை ஒதுக்கித் துப்புரவாக்கிக்கொண்டிருந்தபாக்கியம், சுந்தரியைக் கண்டதும் ''உடுப்பை மாத்திக்கொண்டு கெதியிலை வா. வேலை கிடக்கு'' என்றாள். பொன்னம்மாள் இறந்ததன் பின்

அன்றைக்குத் தான் அந்த அறைகளைச் சுத்தம் செய்ய அவளுக்கு நேரம் கிடைத்திருக்கிறது.

சுந்தரிக்கு எரிச்சலான எரிச்சல்.

"சனியங்கள் சும்மா இருக்கவிடாதுகள்" என்று முணுமுணுத்தபடி போய் மாற்றுடை அணிந்து கொண்டு வந்தாள். அறை வாயிலருகே வரும் போதுதான் மின்னல் பொறி கிளம்புவது போல அருமையானதொரு யோசனை அவளுக்குத் தோன்றியது. அவரை இந்த அறைக்கு வரச் சொன்னால் என்ன? வித்தாகத் தோன்றிய யோசனை நொடிக்குள் மளமளவென்று மரமாக வளர்ந்து விட்டது. அக்காவோ மற்றச்சகோதரிகளோ கண்டுவிட்டால் ஆபத்தாகி விடுமென்ற பயத்தை இளமையின் வேகம் ஜீரணித்துக்கொண்டது. நடு இரவில் அக்கா தங்கைகளென்ன வேறு யார் தான் காணப் போகிறார்கள் என்று சுந்தரி தன்னையே சமாதானப்படுத்திக்கொண்டாள். அதிலும் அப்போது முன்னிருட்டுக் காலம்.

இதன் பின்பு சுந்தரியின் எரிச்சல் எப்படி மாயமாக மறைந்ததோ தெரியவில்லை. வெகு உற்சாகமாக வேலைகளைக் கவனித்தாள்.

மறுநாள் நள்ளிரவில் சுந்தரியும் கந்தசாமியும் அந்த அறைகளிலொன்றில் சந்தித்துக் கொண்டனர். ஆண்மையின் அவசரமும் பெண்மையின் பலவீனமும் அந்தவெறும் 'சீமெண்ட்' தரையில் ஒன்றாக ஐக்கியமாகி ஓய்ந்தொடுங்கியது. வெறும் தரையின் ஜில்லிப்பை உணர இருவருக்கும் வெகுநேரம் பிடித்தது.

அன்றைக்கு ஆரம்பமான அந்த இரகசிய சந்திப்பு ஒரு நாளோடு மட்டும் நின்றுவிடாமல் வாய்ப்புக்கிடைத்த நேரங்களிலெல்லாம் தொடர்ந்துகொண்டேயிருந்தது......

## 19.

காலையில் படுக்கையை விட்டு எழுந்த நேரத்திலிருந்து பரபரத்துக்கொண்டிருந்தான் பொன்னுத்துரை. கல்முனையில் இருக்கும் அவனது நெருங்கிய நண்பனொருவனுக்கு அன்றைக்குத் திருமணம். அவசியம் வருவதாக அவனிடம் வாக்களித்திருந்தான் பொன்னுத்துரை. எட்டரை மணிக்கு முகூர்த்த நேரம். அரைமணி நேரம் முன்பதாகவாவது போகவேண்டாமா?

பாக்கியத்தின் வேலையைக் கவனிப்பதற்காகக் காலையில் வாடிக்கைக் கடைகளுக்குப் போய்விட்டுத் திரும்பும்போது மணி ஏழு பத்துக்கு மேலாகிவிட்டது. வரும் வழியிலேயே வேப்பங் குச்சியொன்றால் பல் துலக்கிக்கொண்டு தான் வந்தான் அவன்.

வீட்டு முன் விறாந்தையில் இராசம்மாக் கிழவியை அருகிலிருத்தி ஏதோ குசுகுசுவென்று இரகசியமாகக் கதைத்துக் கொண்டிருந்த வேலாயுதம், பொன்னுத்துரை கேற்றைத் திறந்துகொண்டு வருவதைப் பார்த்ததும் டக்கென்று பேச்சை நிறுத்தியவராக முகவாய்க்கட்டையைச் சொறிய ஆரம்பித்தார். இராசம்மா பாதிப் பற்கள் இல்லாத தனது வாயைத் திறந்து ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

பொன்னுத்துரை இவைகளைக் கவனித்தாலும் அவனுக்கிருந்த அவசரமான மனநிலையில் ஒன்றையும் கருத்தூழமாக நோக்கவில்லை. சைக்கிளை வைத்துவிட்டு ஓட்டமும் நடையுமாகப் பின்புறம் போய் நாலு வாளிகளை அள்ளி வார்த்துக் குளிப்பை முடித்துக்கொண்டு அரை மணி நேரத்துக்குள் காலை ஆகாரத்தை முடித்து உடை அணிந்துகொண்டு காரில் புறப்பட்டுவிட்டான்.

குறித்த முகூர்த்த நேரத்தில் நண்பனின் திருமணம் வெகு அமர்க்களமாக நடைபெற்றது. தெரிந்த நண்பர்கள் பலரும் வந்ததால் பகிடியும் கிண்டலுமாக மணமக்களை வறுத்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். நண்பர்களுக்கென்று மட்டும் விசேஷமானதொரு விருந்தொன்றும் அங்கு ஏற்பாடாகியிருந்தது. போத்தல் பிரியர்களுக்குத் தோதான விருந்து.

பொன்னுத்துரை மது அருந்தாவிட்டாலும் பாதியில் விட்டுவிட்டு வரமுடியாமல் கடைசியில் அங்கிருந்து புறப்படும்போது அந்தி நேரமாகிவிட்டது.

அவன் வருவதற்குத் தாமதமாகிவிட்டதால் பாக்கியம் அன்றைக்கு வடை முறுக்கு முதலிய பட்சண வகைகளை வாணியிடம் கொடுத்து வாடிக்கைக் கடைகளுக்கு அனுப்பிவிட்டாள்.

''ஒரு நாளைக்குக் கொஞ்சம் சுணங்கினால் பொறுத்துக்கொள்ள மாட்டாங்களா கடைக்காரங்கள். ஏன் பிள்ளையளை அனுப்பினாய்?'' என்று பாக்கியத்தைக் கோபித்துவிட்டு, திருமண வீட்டில் நண்பர்கள் செய்த கலாட்டாக்கள் சிலதை அவளிடம் கூறிச் சிரித்துக்கொண்டிருந்தான். லட்சுமி, வாணி, கீதா மூவரும் உணவருந்திவிட்டு உறங்கத் தொடங்கியதன் பின்புதான் அங்கிருந்து கிளம்பினான் அவன்.

அவனுக்கு வீட்டில் ஒரு அதிசயம் காத்துக்கொண்டிருந்தது. வழமையாகப் பாதிச் சாமம் வரைக்கும் நித்திரை கொள்ளாமல் சாய்வு கதிரையில் படுத்திருக்கும் அவனது தகப்பனார் அறைக்குள் போய்ப் படுத்திருந்தார். எட்டு மணிக்கே பின்புற விறாந்தையில் சுருண்டு படுத்துவிடும் இராசம்மாக் கிழவி மட்டும் கொட்டக் கொட்ட விழித்தபடி விறாந்தையில் உட்கார்ந்திருந்தாள்.

''என்னாச்சி! தூக்கம் வரேல்லையா இன்றைக்கு?'' என்று வினவியபடி உள்ளே வந்த பொன்னுத்துரை அவளின் பதிலை எதிர்பாராமலேயே சேட்டைக் கழற்றிக்

கொண்டுபோய் அறையினுள் போட்டுவிட்டு வந்தான். ஏதோ ஒரு சங்கதி இருக்கென்று அவனது உள்ளுணர்வுக்குத் தட்டுப்பட்டது.

''சாப்பிட வாவன் தம்பி'' என்றாள் இராசம்மா வெகு அருமையாக.

அடுத்த வியப்பான அதிர்ச்சி பொன்னுத்துரைக்கிது. இதுகாலவரை அவள் சமைத்து வைப்பாளேயல்லாது ஒரு நாள்கூட வந்து பரிமாறியதில்லை. அவன் அதை எதிர் பார்ப்பதுமில்லை.

பொன்னுத்துரை அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சமையலறைக்குள் சென்றான். ஒருவேளை பணம் ஏதாவது தேவைப்பட்டுத்தான் அவள் இப்படிக் குழைகிறாளோ என்றும் அவனுக்கு யோசனை ஓடியது. 'அப்போ அப்பாவும் ஏன் வழக்கத்துக்கு விரோதமாக நடந்து கொள்கிறார்?'

பொன்னுத்துரை தனக்குள் சிந்தித்துக்கொண்டிருக்க, இராசம்மா வெகு சுறுசுறுப்பாகத் தட்டில் சோறு கறிகளெல்லாம் போட்டு அவன் முன்னே வைத்துவிட்டுத் தானும் எதிரே உட்கார்ந்து கொண்டாள். அவளை எதையோ கூற நினைத்துத் தயங்கிக் கொண்டிருக்கிறாளென்று பொன்னுத்துரைக்கு நன்கு புரிந்தது. நேரடியாகவே அதைக் கேட்கப் பிரியப்படாமல், ''உடம்பெல்லாம் எப்பிடியிருக்காச்சி?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தான்.

''அதையேன் கேக்கிறாய் தம்பி?'' இராசம்மா பெருமூச்சோடு இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டாள்.

''உடம்பு நிலை கொஞ்சமுமே நல்லாயில்லை. நாளுக்கு நாளாப் பலகீனமாயிக்கிட்டிருக்கு. இடுப்பு வலி மாறினா நாரி வலி, நாரி வலி மாறினா இடுப்பு வலி என்று ஏதாலும் ஒன்று மாறிமாறி வருகுது. உன்ரை அப்பா... அந்த மகாராசனும் தினத்துக்கு ஒரு மருந்தா தந்து பாக்கிறார். அது கேட்டால்தானே?...ம்... எதைச் செய்துதானென்ன?

வயசும் போய்க்கொண்டிருக்குப் பார்'' கூறி முடித்து விட்டு மறுபடியும் பெரிதாக ஒரு பெருமூச்சு விட்டாள் இராசம்மா. பொன்னுத்துரை ஒவ்வொன்றுக்கும் தலையாட்டியபடி உணவருந்திக்கொண்டிருந்தான்.

இராசம்மா சற்றுநேரத்துக்கு இருந்துவிட்டு, ''தம்பீ'' என்று அவனது இடது கையில் மெல்லத் தொட்டாள்.

''என்னை இனிமே நம்பிக் கொண்டிருக்கேலாது. இந்த வீட்டுக் காரியங்களைப் பாக்க ஒராளைப் பாக்கோணும்.''

சட்டென்று அவளை நிமிர்ந்து பார்த்தான் பொன்னுத்துரை. அவள் சொல்லவேண்டிய கதையை அப்போது தான் ஆரம்பிக்கிறுளென்று அவனுக்குப் புரிந்தது.

''அதுக்கு என்னுச்சி செய்வம்?'' என்றுன்.

''வீட்டுக்கு உரிமையோட ஒரு பொம்பிளை வரோணும் தம்பி. அதுதான் லட்சுமீகரம்...ம்...'' இராசம்மா தயக்கத்தோடு நிறுத்தியபோது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது போன்ற உணர்ச்சியாக இருந்தது. அப்பாவும் ஆச்சியும் இரகசியம் பேசிய சமாச்சாரம் அவனுக்குப் புரிந்துவிட்டது. அவனுக்கொரு திருமணத்தைச் செய்து பார்க்க அப்பா விரும்புகிறுர் போலிருக்கிறது.

விறுவிறுவென்று பொன்னுத்துரையின் உடலெல்லாம் ஏதோவொரு உணர்ச்சி பொங்கிப் பரவுவது போன்றிருந்தது. நெஞ்சு படபடவென்று துடித்தது. சிரமத்தோடு தன் பரபரப்பை அடக்கிக்கொண்டு சர்வசாதாரணமாகக் கேட்பது போல் கேட்டான்:

''இப்ப அதுக்கென்ன அவசரமாச்சி?'' இராசம்மா தைரியம் வந்தவளாகச் சிரித்தாள்.

''அவசரப்படாமே எப்பிடி இருக்கிறது? இப்பவே அப்பாவுக்கு ஐம்பது வயசாச்சு...'' தீயில் தவறி விழுந்துவிட்டவன் போல் துடித்துக்கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தான் பொன்னுத்துரை: 'என்ன சொல்கிறுள் அவள்?'

இராசம்மா அவனது அதிர்ச்சியைக் கவனிக்கவில்லை. ஏதோ ஒரு நியாயத்தை வலியுறுத்திக் கூறுகிறுற்போல் தொடர்ந்து கூறினுள்:

''தம்பீ! ஐம்பது வயசென்ருலென்ன? இன்னும் ஐம்பது வருஷத்துக்குக் குத்துக்கல்லாட்டம் இருப்பார் அவர். இந்தக் குடும்ப நிலைக்கு இப்பிடியொரு நினைவு அவருக்கு வந்ததே ஆண்டவன் செயலெண்டுதான் சொல்லோணும். ம்...அந்தப் பெண்ணும் கன்னி கழியாமலே இருந்து கொண்டிருக்குது. நீ ஒரு வார்த்தை சொன்ன,அவ கட்டாயம் கேப்பா...''

பொன்னுத்துரையின் நெஞ்சின் நடு மத்தியில் நெருப்புக் கோளமொன்று விழுந்து தீச்சுடர்களை உடலிலுள்ள ஒவ்வொரு அணுக்களிலும் பாய்ச்சத் தொடங்கியது. இராசம்மாவின் முகத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டே, ''எந்தப் பெண்ணைச் சொல்ருய்?'' என்ருன் அடங்கிய குரலில்.

''அவதான் பாக்கியம்.''

அடுத்த விணடி என்ன செய்தோமென்பதே பொன்னுத்துரைக்குத் தெரியவில்லை. உணவுத் தட்டு பறந்து போய் எதிர்ப்புறச் சுவரோடு படாரென்ற சத்தத்தோடு அடிபட்டு விழுந்தது. முரட்டுத்தனமாக அவளின் இடது கையை எட்டிப்பிடித்து இழுத்தான் அவன்.

''இதோ பாராச்சி! அவர் கல்யாணங் கட்ட ஆசைப்பட்டா எந்த நாயையாவது கட்டிக்கொள்ளட்டும். நான் ஏனென்று கேக்கேல்லை. ஆன, பாக்கியக்காவின்ரை கதை மட்டும் இன்னெருக்கா இந்த வீட்டிலே தொடங்கின எனக்குக் கொள்ளி வைக்கவேண்டிய நிலைதான் வரும். புரிஞ்சுதா?'' இராசம்மா நடுக்கத்தோடு தலையை ஆட்டினள்.

பொன்னுத்துரை எச்சில் கையைக்கூடக் கழுவவில்லை. அந்த நினைப்புமில்லை அவனுக்கு. எழுந்து புயல்போல் வெளியே வந்து கால்போன போக்காக நடக்கத் தொடங்கினன்.

# 20.

வெறி பிடித்த ஒருவனைப் போல சென்றுகொண்டிருந்தான் பொன்னுத்துரை. ஆத்திர மிகுதியால் அவனுக்குத் தன்னிலையே மறந்துகொண்டிருந்தது. அடிக்கடி வலது கையை முஷ்டியாக்கி இடது உள்ளங் கையில் ஓங்கி ஓங்கிக் குத்தினான். பற்களை நறநறவென்று கடித்தான். பிடரியை வேகமாகச் சொறிந்தான். இன்னும் என்னென்னவோ எல்லாம் செய்தான். அந்த நிலைமையில் யார் அவனைப் பார்த்தாலும் அவனுக்கு மூளை பிசகிவிட்டதென்றுதான் கணக்கெடுப்பார்கள். ஓடிப்போய் தகப்பனாரின் நெஞ்சில் உதைத்துக் கீழே விழுத்தி அவரின் மென்னியைப் பிடித்து நெரிக்கவேண்டுமென்று அவனுக்கு வேகமாக இருந்தது.

''தூ!......தூ!......'' என்று காறித் துப்பினான். 'மனிஷனா அவர்? வெறும் மிருகம்...உஹூம்...அதுவுமில்லை. மிருகத்திலேயும் கடைகெட்ட ஒரு அயோக்கியப் பிறவி.'

கால்கள் ஓயும்வரையும் அலைந்து திரிந்துவிட்டு திரும்பும்போது இரவு பன்னிரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. கல்லடிப் பாலத்தில் வந்ததும் அதன் ஒரு பக்கத் தடுப்புக் கம்பியின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டான். நிசப்தமான நேரமது. ஆங்காங்கு போடப்பட்டிருந்த மின்சார லைற் கம்பங்களிலிருந்து ஒளி சன்னமாகப் பரவிக்கொண்டிருந்தாலும் கண்களுக்கு எட்டிய தூரம் வரைக்கும் எந்த மனித ஜீவனும் இல்லாதது ஒரே அந்தகாரமாக இருந்தது. கீழே வாவியில் நீர் சலசலக்கும் ஓசைதான் இடையிடையே மௌனத்தை இலேசாகக் கலைத்தது.

வலது உள்ளங்கை தலையில் அழுத்தும்படி விரல்களை மயிர்களுக்குள் புகுத்தி பிடரி வரை தலையைக் கோதிய

படி சற்று நேரத்துக்கு அப்படியேயிருந்த பொன்னுத்துரை சட்டென்று மனம் நெகிழ்ந்தவனாகக் கண்கலங்கத் தொடங்கினான். மளமளவென்று கண்ணீர் பொங்கி இரு புறக் கன்னங்களிலும் வழிந்தோடியது. அந்த வேளையில் அவன் தன்னையே வெறுத்துக் கொண்டான். 'போயும் போயும் இப்படியொரு மனிதருக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கிறேனே?'

தகப்பனார் பொன்னம்மாள் இறந்ததன் பின்பு அடிக்கடி அங்கு போய் இழைந்திழைந்து பழகியதை நினைக்க குமட்டிக்கொண்டு வந்தது. 'அத்தனையும் அவரின் திட்டமிட்ட செயல்கள். எத்தனை அயோக்கியத்தனமான திட்டங்கள்?'

பாக்கியத்துக்குத் தெரிந்தால் என்ன எண்ணுவாள் அவள் என்று நினைக்கும்போதுதான் பொன்னுத்துரையின் உள்ளம் பதறித் துடித்தது. ஆற்றாமையோடு உச்சி மயிரைப் பற்றி இழுத்துக்கொண்டான். அப்படியே கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டாலென்ன என்றுகூட எண்ணினான் அவன்.

'பாக்கியக்காக்கு இந்தக் கதை தெரிஞ்சா, அவவின்ரை முகத்திலே முழிக்கமுடியுமா?' என்று முனகியபடி பச்சைக் குழந்தைபோல் விம்மி விம்மி அழுதான். எப்போதோ இறந்துபோய்விட்ட அன்னையையும் அந்தச் சமயத்தில் ஏக்கத்துடன் நினைத்துக்கொண்டான்.

பாலத்துக்கு வலது புறமாக இருக்கும் வேதக் கோயிலின் பக்கம் யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது. பொன்னுத்துரை அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தான். இருட்டிலிருந்து திடீரென்று முளைத்தெழுந்து வருவதுபோல் இரண்டு பெண்கள் சுவரோரமாக நடந்து வந்துகொண்டிருந்தார்கள். எப்போதோ கேட்ட மோகினிப் பேய்களின் கதைதான் பொன்னுத்துரைக்குச் சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. ஒரு வினாடி எல்லாத் துன்பங்களையும் மறந்தவனாகக் கம்பியிலிருந்து கீழே குதித்திறங்கிப் பார்த்தான்.

மோகினிப் பேய்களல்ல அவர்கள்.சாதாரணப் பெண்கள்தான்.அதுவும் இளவயதுப் பெண்கள்.லைற் வெளிச்சத்தில் பொன்னுத்துரையைக் கண்டுவிட்டு இருவரும் அவசரமாக அருகே வந்தார்கள். பளிச்சென்று தெரியுமாறு அவர்கள் முகங்களில் பூசியிருந்த மட்டரகப் பவுடர் பூச்சும் அவர்களின் விவஸ்தையற்ற சிரிப்பும் 'பறவைகள் இரை தேடுகின்றன' என்ற உண்மையைப் பொன்னுத்துரைக்குப் புரியவைத்தன. அதற்குள் வந்தவளில் ஒருத்தியே பளிச்சென்று கேட்டாள்:

''வாறியா?ஐஞ்சு ரூபாத்தான்.''

''தூ!'' என்று எரிச்சலோடு காறித் துப்பிவிட்டு விடுவிடுவென்று நடக்கத் தொடங்கினான் பொன்னுத்துரை.

''நாரியெலும்பு இல்லாத பொண்ணைப்பயல் போலே கிடக்கு...'' என்று இரை தவறிய ஆத்திரத்தில் ஒருத்தி கூவுவதும், அடுத்தவள் 'கெக்கலி' கொட்டிச் சிரிப்பதும் பிடரியில் அறைவது போல் அவன் காதுகளில் விழுந்தன. பேயினால் துரத்தப்பட்டவன் போல் ஓட்டமும் நடையுமாகச் சென்றான் அவன்.மனதில் ஏற்கனவேயிருந்த வெறுப்பும் கசப்பும் நூறு மடங்கு அதிகமாகிவிட்டதுபோல் இருந்தது.

சந்தியைக் கடந்து ஒழுங்கைத் திருப்பத்தில் இறங்கும்போது முன்புறமிருந்து யாரோ வருவதுபோல் தெரியவே சட்டென்று தயங்கி நின்றான் பொன்னுத்துரை. ஒழுங்கையில் லைற் இல்லாததால் வருவது யாரென்பது தெரியவில்லை.அவன் மனதில் பொறியாக ஒரு சந்தேகம்.

'அப்பாதான் தேடி வருகிறாரோ?'

எதிர்த் திசையிலிருந்து வந்த உருவமும் சட்டென்று நின்றுவிட்டது தெரிந்தது.ஒருசில விநாடிகளுக்கு ஒரு சங்கடமான மௌனம். சொறி நாயொன்று எங்கிருந்தோ ஊளையிட்டது.

''ஆரது?'' என்று அதட்டினான் பொன்னுத்துரை. தகப்பனாராக இருந்தால் தன் கோபத்தைத் தெரிந்து கொள்ளட்டுமென்ற எண்ணம்.

வந்தது வேலாயுதமல்ல, கந்தசாமி. சுந்தரியை இரகசியமாகச் சந்தித்துவிட்டு வருகிறான் அவன். பொன்னுத்துரையின் குரலைக் கேட்டதும் பயத்தினால் குப்பென்று அவன் உடலெல்லாம் வியர்த்துவிட்டது. அவனிடம் சிக்கிக் கொண்டால் உண்மை அம்பலமாகிவிடுமென்பது மட்டுமல்ல சக்கையாக உதைகள் வாங்கவேண்டியிருக்கும் என்று அவனுக்கு நன்கு தெரியும். ஒரு விநாடியைக்கூட அவன் வீணாக்க விரும்பவில்லை. குபீரென்று தாவி பொன்னுத்துரையை ஒருபுறமாகத் தள்ளிவிட்டு ஓட ஆரம்பித்தான். நிலைகுலைந்து விழுந்த பொன்னுத்துரை சமாளித்துக் கொண்டு எழுந்திருப்பதற்குள் இருளில் சென்று மறைந்து விட்டான் அவன்...

அன்றிரவு பூராவும் பொன்னுத்துரை உறங்கவில்லை. கந்தசாமி தள்ளியதில் கீழே விழுந்து வலது முழங்கை மூட்டில் சிராய்ப்பு ஏற்பட்டிருந்தாலும் அவன் அந்த நிகழ்ச்சியை முக்கியமானதொரு விஷயமாகக் கணிக்கவில்லை. யாரோ ஒருவன் திருடுவதற்கு வந்து நோட்டம் பார்த்து விட்டுப் போகிறானென்பது அவனது எண்ணம். மணல்மேட்டிலேயே திருடக்கூடிய ஒரே இடம் முஸ்தாபாவின் வீடு தான். பணமோ பொருளோ ஏராளமாக அங்கே தான் இருந்தன. காலையில் அவரிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ளலாமென்று அப்போதே தீர்மானித்துவிட்டான் அவன்.

பொன்னுத்துரையின் தூக்கத்தை அப்போது தகப்பனாரின் குரூரமான ஆசைதான் கெடுத்துக்கொண்டிருந்தது.

காலையில் எழுந்திருந்தபோது அவன் முகம், முகமாக இல்லை. கண்ணாடியில் பார்த்தபோது அவனுக்கே என்னவோபோலிருந்தது. கிணற்றடிக்குப் போய் அந்தக் காலை வேளையிலேயே தண்ணீரை அள்ளி அள்ளித் தலையில் வார்த்தான். இதனாலாவது மனக் கொதிப்புச் சற்றுத் தணிந்துவிடாதா என்ற ஏக்கம் அவனுக்கு. ஒருதடவைக்கு

நாலு தடவைகள் முகத்துக்குச் சவர்க்காரமும் போட்டுக் கொண்டான். பாக்கியத்துக்கு முன்னால் போய் நிற்கும் போது ஒன்றுமே நடவாதது போல் நடிக்கவேண்டாமா?

ஆனால், அவன் போனபோது பாக்கியம் ஒரே பார்வை யிலேயே அவனின் முகமாறுதலை அவதானித்துவிட்டாள். இடியப்பம் தோசைப் பெட்டிகள் இரண்டோடும் சமைய லறைக்குள்ளிருந்து வந்தவள் அப்படியே அவைகளை நிலத் தில் வைத்துவிட்டு, ''என்ன தம்பி ஒரு மாதிரியா இருக்கி றாய்?'' என்றாள் பதட்டத்துடன்.

''ஒன்றுமில்லையே.'' பொன்னுத்துரை சிரிக்க முயன் றான். அழுகையை விடக் கேவலமாக இருந்தது அது. அவ ளின் முன்னால் நின்றால் வாயைக் கிளறி உண்மையைத் தெரிந்துகொண்டுவிடுவாளென்ற பயத்தோடு, ''பெட்டி களை எடுத்துத் தாக்கா. நேரமாகுது'' என்றான்.

''அதொன்றும் அவசரமில்லை.'' பாக்கியம் வெடுக் கென்று கூறிவிட்டு அவனை நெருங்கி வந்தாள். ''சொல்லு என்ன விஷயமென்று. உன்ரை முகமே சரியில்லை இன் றைக்கு.''

''இரா முழுதும் சரியான தலையிடியக்கா'' என்று மன தைக் கல்லாக்கிக்கொண்டு புளுகினான் பொன்னுத்துரை.

''கன நேரமா நித்திரை வரேல்லை. அதுதானுக்கும் முகம் இப்பிடிக் கிடக்கு.''

பாக்கியம் அவசரமாக அவனது நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். உண்மையிலேயே நெற்றி சுட்டுக் கொண்டுதானிருந்தது.

''அந்த இராசம்மாக் கிழவிக்கு ஒரு கஷாயம் போட் டுத் தரக்கூட நேரம் கிடைக்கேல்லையா?'' என்று இராசம் மாவைத் திட்டிவிட்டு, ''பெரியையாவிடம் ஏதாவது மருந்து வாங்கிச் சாம்பிடாதேயன் தம்பி'' என்றாள்.

பொன்னுத்துரைக்கு நெஞ்சுக் குழியை யாரோ இறுக் குவது போலிருந்தது. 'இப்பிடிப் பெரியையா, பெரியையா

என்று அழைக்கிற பெண்ணைத்தானே அந்த அயோக்கியர்.........'

"தம்பீ! இப்பவும் தலையிடி இருக்கா?" என்று பரிவோடு வினவினாள் பாக்கியம். பொன்னுத்துரை சிரமத்தோடு உணர்ச்சி வேகத்தை நெஞ்சுக்குள்ளேயே ஜீரணித்துக்கொண்டான்.

"இல்லையக்கா."

"கொஞ்சம் நின்றுகொள். தேத்தண்ணி போட்டுத் தாறன். குடிச்சிட்டுப் போகலாம்." பாக்கியம் அவனது பதிலையும் எதிர்பார்க்காமல் ஓட்டமும் நடையுமாமச் சமையலறைக்குள் சென்றாள். பொன்னுத்துரை இரக்கத்தோடு அவளைப் பார்த்துவிட்டு, பெட்டிகளை வெளியே தூக்கிவந்து சைக்கிள் கரியரில் வைத்துக் கட்டினான்.

கிணற்றடியிலிருந்து துவைத்த ஈரப் பாவாடை சட்டைகளோடு முன்புறம் வந்த சுந்தரி அவனைக் கண்டதும் அவைகளை அப்படியே கயிற்றுக் கொடியில் போட்டுவிட்டு அவனுக்கு அருகே வந்தாள்.

"அண்ணா! இன்றைக்கு எனக்கொரு உதவி செய்வியா நீ?"

"சொல்லன்."

"அண்ணா!" என்று குழந்தையைப் போல் கெஞ்சியபடி அவனது கையைப் பிடித்தாள் சுந்தரி. "என்ரை 'சான்டில்' இரண்டும் பிய்ஞ்சு போச்சண்ணா. காலுக்குப் போடுறதுக்கு ஒன்றுமேயில்லை. கொண்டுபோய் சரிப்பண்ணிக்கொண்டு வந்து தாறியா?"

பொன்னுத்துரை அவளுக்குப் பதில்கூறாமல "ஸ்ஸ்...ஆ..." என்று முனகியபடி கையை உதறிக்கொண்டான். சுந்தரி பிடித்தது இரவு கையில் காயம்பட்ட இடத்தை.

"என்னண்ணா அது?" என்று சுந்தரி பயந்து விலக, தேநீர்க் கோப்பையோடு உள்ளேயிருந்து வந்த பாக்கியமும் அதே கேள்வியைக் கேட்டாள்:

''என்ன தம்பி அது?''

பொன்னுத்துரை இடது கையால் தேநீர்க்கோப்பையை வாங்கிக்கொண்டே, ''ஒரு சின்னக் காயமக்கா'' என்று வலது கையை மடித்து முழங்கைப் புறத்தை அவளிடம் காட்டினன். ''இரவு சின்ன விஷயமொன்று நடந்து போச்சு...'' தொடர்ந்து இரவு வரும்போது ஒழுங்கையில் நடந்த நிகழ்ச்சியை அவளிடம் கூறினன் அவன்.

பாக்கியம் பதறிப் போய்விட்டாள்.

''கள்ளனென்ருல் கத்திகித்தி வைச்சிருந்திருப்பானே?'' என்று நடுக்கத்துடன் கூறியவள், ''அந்த நேரம் எங்கே சுத்திவிட்டு வந்தாய் நீ?'' என்றும் கோபித்துக்கொண்டாள்.

பொன்னுத்துரைக்கு இந்தக் கதையை வளர்க்கப் பிரியமில்லை. ''படத்துக்கு போட்டு வந்தனக்கா'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு தேநீர்க்கோப்பையை அவளிடம் கொடுத்துவிட்டு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வெளியே வந்ததன் பின்தான் சுந்தரியின் ஞாபகம் அவனுக்கு வந்தது.

கள்ளன் கதையைக் கூற ஆரம்பித்ததும் சுந்தரி நடுக்கத்தோடு அங்கிருந்து நழுவி வீட்டினுள் போய்விட்டதைப் பொன்னுத்துரை அவதானிக்கவில்லை. அந்தச் சமயம் அவள் உள்ளே நெருப்பின் மீது நிற்பதைப் போல் தவித்துக் கொண்டிருக்கிருளென்றும் அவனுக்குத் தெரியாது. பிறகு வந்து அவள் கேட்டதைச் செய்து கொடுப்போமென்ற எண்ணத்தோடு சைக்கிளில் ஏறிப் புறப்பட்டான் பொன்னுத்துரை.

சுந்தரி கொடியில் போட்டுவிட்டுப் போன உடைகளின் மீது காகமொன்று பறந்துவந்து உட்கார்ந்து எச்சமிட்டுவிட்டு ஊஞ்சல் ஆட ஆரம்பித்தது.

## 21.

பொன்னுத்துரை தகப்பனுருடன் ஒரு 'மௌனப் போர்' செய்து கொண்டிருந்தான். அன்றைய நிகழ்ச்சிக்குப் பின் அவன் வீட்டில் உணவருந்துவதுமில்லை, தேநீர் கோப்பி குடிப்பதுமில்லை.

காலையில் பாக்கியத்தின் வியாபாரத்துக்கு வாடிக்கைக் கடைகளுக்குப் புறப்பட்டானென்றுல் மறுபடியும் பின்னேரம் அவள் தயாரிக்கும் பட்சண வகைகளைக் கொண்டுபோவதற்காகத்தான் வருவான். தெரிந்த கடையொன்றில் மூன்று நேர உணவுக்கும் ஏற்பாடு செய்திருந்தான். எந்நேரமும் காரோடு 'ரவுனி'ல்தான் நிற்பான். வீட்டுக்கு அவன் வருவது இரவுப் படுக்கைக்கு மட்டும்தான். இப்படி நடந்தாலாவது தகப்பனுர் மனம் வருந்தித் திருந்தமாட்டாரா என்ற எண்ணம் அவனுக்கு.

பாக்கியத்துக்கு முதல் ஐந்து நாட்களும் எந்த விபரமுமே தெரியாது. சுந்தரமூர்த்தி கடிதமொன்று அனுப்பி அதற்காக இரண்டு மூன்று நாட்களாக எரிச்சல் பட்டுக்கொண்டிருக்கிருள் அவள். ஐயாயிரம் ரூபாய் பணம் தனக்குத் தந்து உதவினுல் ஒரு கடை வியாபாரத்தைத் தொடங்கி ஐந்து வருடங்களுக்குள் அதைப்போல் ஐந்து பங்கு தேடிவிடலாமென்பதுபோல் குறிப்பிட்டிருந்தான் அவன். படித்து முடித்ததுமே கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்து விட்டாள் பாக்கியம். அப்படியிருந்தும் கோபம் அடங்காமல் பொன்னுத்துரை வந்தபோதும் இதைப் பற்றிக் கூறினுள்;

''தம்பீ! என்ரை தம்பித்துரை ஐயாயிரம் ரூபாக் காசுக்கு எழுதியிருக்கிருன். அக்காள் ஏதோ கிணத்துக்குள்ளே அள்ளிருளோ அல்லாட்டி கொல்லைப்புற மரத்திலே காசை எடுக்கிருளென்ற யோசினை போலிருக்கு.

தலைக்குள்ளே என்னவும் கிடந்தாத்தானே யோசினையும் வரும். இது சுத்தக் களிமண் மண்டை.''

வழமையாக இப்படியான நேரங்களில் அவளுக்கு ஆறுதல் கூறிச் சமாதானப் படுத்துகிற பொன்னுத்துரை அன்று மௌனமாகப் போனபோது கூட பாக்கியம் சந்தேகக் கண்களோடு பார்க்கவில்லை. மன எரிச்சலைக் கதைத்துக் குறைத்துவிட்ட திருப்தியோடு தன் காரியங்களைக் கவனிக்கப் போய்விட்டாள் அவள்.

ஆரும் நாள் காலையில் இராசம்மா அவளைத் தேடி வந்தபோதுதான் பாக்கியத்துக்கு உள்ள நிலைமை புரிந்தது.

''பொன்னுத்துரை இங்கைதாஞ சாப்பிடுருன்?'' என்று வந்ததும் வராததுமாக விஞவிஞள் இராசம்மா.

''என்ன கேக்கிருய்?'' என்ருள் பாக்கியம் குழப்பத்தோடு. ''பொன்னுத்துரையா! எப்ப சாப்பிட வந்தான் இங்கை?''

''இங்கேயும் சாப்பிடேல்லையா?'' இராசம்மாக் கிழவி தலையில் கையை வைத்துக்கொண்டாள். பாக்கியம் பதறிப் போய்விட்டாள்.

''என்ஞச்சி நடந்தது?'' என்ருள் பரபரப்போடு. இராசம்மா அழாக் குறையாகக் கூறிஞள்:

''வீட்டிலே அவன் சாப்பிட்டு ஐஞ்சு நாளாச்சு''.

''ஐஞ்சு நாளா?'' இப்போது பாக்கியம் தலையில் கையை வைத்துக் கொண்டாள்.

''தகப்பனேடை ஏதோ கோபம். கேக்கக் கேக்க வேண்டாம் என்றிட்டான். நானும் தகப்பனும் இங்கை சாப்பிடுகிருஞக்கும் என்றிட்டு பேசாமே இருந்திட்டம். இன்றைக்கு மனங்கேளாமல் கேக்க வந்தன்.''

''ஐஞ்சு நாளைக்கு முதலே இதைக் கேக்க வராதேயன்'' என்று அவள் மேல் எரிந்து விழுந்துவிட்டு, ''இப்ப வீட்டிலை அவன் நிற்கிருஞ?'' என்று கேட்டாள் பாக்கியம்.

"காரைத் துடைத்துக் கொண்டிருக்கிருன். வெளியாலே போப்போருன் போலை கிடக்கு."

"கீதா!...கீதா!..." என்று அழைத்தாள் பாக்கியம். அவள் ஓடி வந்ததும், "ஓடு. ஓடிப்போய் பொன்னுத்துரை அண்ணுவை அக்கா கூட்டிக்கொண்டு வரச்சொன்னு ளென்று கூட்டிக்கொண்டோடி வா" என்று விரட்டினுள். கீதா தலையாட்டிவிட்டுப் பறந்தாள்.

"நான் அவன் வர முந்திப் போறன்" என்று இராசம்மாக் கிழவியும் புறப்பட்டு விட்டாள்.

பாக்கியத்திஞல் மனம் தரித்து ஒரு இடத்தில் நிற்க முடியவில்லை. நெசவு நிலையத்துக்குச் செல்வதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த சுந்தரியை, "பிறகு மினுக்கலாமடி போய் முதலிலே அடுப்பைப் பார்" என்று அதட்டிவிட்டு பரபரப்போடு வாசலருகே வந்து எட்டிப் பார்த்தாள். கறுத்த ஆண் பூனையொன்று அவளைக் கண்டதும் ஓடிப்போய் முஸ்தாபாவின் வீட்டுச் சுவரில் தாவி உள்ளே பாய்ந்தது.

"இன்றைக்கு வரட்டுமவன்" என்று முணுமுணுத்துக் கொண்டாள் பாக்கியம். ஏனே அவள் கண்கள் இரண்டும் கலங்கிவிட்டன.

"கடவுளே! ஐஞ்சு நாளாச் சாப்பிடாமே கிடக்கிருனுமே?" என்று வாய்விட்டே பிரலாபித்துக்கொண்டாள்.

பொன்னுத்துரை வந்ததும் பாக்கியம் ஆத்திரத்தோடு அவனிடம் கேட்ட முதல் கேள்வி இதுதான்:

"நீ ரொம்பப் பெரிய மனிஷனுவிட்டாய். இல்லையா?"

பொன்னுத்துரைக்கு மனதில் சந்தேகம் தோன்றினுலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்தான்.

"ஏனக்கா இந்தச் சந்தேகம் உனக்குத் திடீரென்று?"

"எத்தினை நாளா நீ வீட்டிலே சாப்பிடேல்லை?" பொன்னுத்துரையின் தலை தானுகவே கவிழ்ந்தது.

"ஆர் சொன்னது உனக்கு?" என்ருன் முனகும் குரலில்.

"ஆர் சொன்னுலென்ன?" பாக்கியம் வெடுக்கென்று அவனது நாடியில் கை கொடுத்து நிமிர்த்திஞள். "நீ சாப்பிடேல்லேத்தானே?"

பொன்னுத்துரை பதில் கூருமல் மௌனமாக நின்ருன். பாக்கியத்தின் கண்களில் குபு குபுவென்று கண்ணீர் பொங்கத் தொடங்கியது.

"இந்த வீடுதான் உனக்கு அதிக சொந்தமென்பாய். நீ உடன் பிறந்தவர்களுக்கு மேலானவளக்கா என்பாய். ஆனுல் துளிகூட உனக்கு என்மேலே பிரியமில்லே. இல்லாட்டி ஐஞ்சு நாளாப் பட்டினி கிடக்கிற நீ என்கிட்டே ஒரு வார்த்தை கூடச் சொல்லாமே கொலேப்பட்டினியா இருப்பியா?"

"நான் கடையிலே சாப்பிடுகிறனக்கா"

"பொய் சொல்லாதே" என்று கத்திஞள் பாக்கியம். "நீ பொய் சொல்லமாட்டாயெண்டு நம்பிக்கொண்டிருக்கிறன். அதைக் கெடுத்துப்போடாதை"

பொன்னுத்துரை அவளின் தலேயில் தொட்டுக் கூறிஞன்; "சத்தியமா கடையிலே சாப்பிடுகிறனக்கா".

பாக்கியத்தின் அழுகை குறைந்தாலும் அவளுக்கு மனப் பொருமல் தீரவில்லே.

"வீட்டிலே சரியில்லேயென்டு நேரா இங்கை வந்து சாப்பாட்டைத் தாடியக்கா என்று கேக்கவேண்டியவன் ஏன் வராமேக் கடைக்குப் போனுய்?"

பொன்னுத்துரை சங்கடத்தோடு பிடரியைத் தடவிஞன்.

"வீட்டிலே சாப்பிடாமே விட்டிட்டு இங்கை வந்து சாப்பிட்டா பாக்கிறவையளுக்கு நல்லா இருக்குமா?"

"கடையிலே சாப்பிட்டா நல்லதாக்கும்?"

வெடுக்கென்று அவள் கேட்டபோது பொன்னுத்துரையிஞல் அதற்குப் பதில் கூறமுடியவில்லே. அருகேயிருந்த

கதிரையொன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். ஐந்து நாட்களாக அடங்கியிருந்த மனக் கொதிப்பு மூடி திறக்கப்பட்ட சோடா புட்டியைப்போலப் பொங்கப் பார்த்தது. மெல்லப் பாக்கியத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தபடி, ''அக்கா!'' என்ருன் குரல் கரகரக்க. ''திங்கட்கிழமை இரா நான் சாகட்டோ என்று கூட நினைச்சனக்கா''.

''ஏன்!...ஏன் தம்பீ?'' என்று பதறிஞள் பாக்கியம்.

பொன்னுத்துரை எப்படிப் பதில் கூறுவான். நீண்டதொரு பெருமூச்சோடு தலையைக் குனிந்து கொண்டான்.

''சொல்லடா தம்பீ'' என்று அவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சிஞள் பாக்கியம். ''என்ன நடந்தது?''

தொடர்ந்து மேலும் மௌனம் சாதித்தால் அவள் வாய்விட்டு அழத் தொடங்கி விடுவாள் போலிருந்தது. ''அதற்காக உண்மையையும் அவளிடம் கூறமுடியாத இக்கட்டான நிலை''.

''அக்கா!'' என்று பாக்கியத்தைவிட அதிகமாகக் கெஞ்சிஞன் பொன்னுத்துரை. தயவு செய்து அதை மட்டும் என்கிட்டே கேக்காதே. சொல்லக்கூடிய கதையெண்டா நானே உனக்கு சொல்லியிருக்க மாட்டனு?''

பாக்கியம் அவனது முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். பின் வலது கையை அவன் முன்னே நீட்டிஞள்.

''சரி, நான் கேக்கேல்லே விடு. ஆனு, எனக்கு நீயொரு சத்தியஞ் செய்துதா. இனி ஒரு நாளுமே தற்கொலை செய்ய நினைக்கக் கூட மாட்டனெண்டு''

''நான் ஏனக்கா தற்கொலை செய்யப்போறன்...''

''சத்தியஞ் செய்'' என்று அவனை மேலே பேசவிடாமல் கத்திஞள் பாக்கியம். நீ எனக்கு சத்தியஞ் செய்து தரேல்லே. பிறகு வந்து என்னை உயிரோடே பாக்கமாட்டாய். இருக்கிற பெட்டைப் பொடியள் எப்பிடிப் போட்

டாலும் பரவாயில்லையெண்டு கல்லடிப் பாலத்திலேயிருந்து குதிச்சிடுவன்...''

அவளின் குரலில் தெரிந்த அன்பின் தீவிரம் பொன்னுத்துரையை மெய்சிலிர்க்க வைத்தது.

''சத்தியமா இனி நான் அப்பிடி நினைக்ககூட ஒரு நாளும் மாட்டனக்கா'' என்று அவளின் கையைப் பிடித்துச் சத்தியம் செய்தான். பிடித்த கையை பாக்கியம் உடனே விடவில்லை.

''நீயும் இல்லாட்டி எனக்கு இந்த உலகத்திலே ஆரடா துணைக்கிருக்கினம்'' என்றாள் தழுதழுத்த குரலில். அடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டு அவசரமாக எழுந்து கொண்டாள்.

''சரி, ஒரு ஐஞ்சு நிமிஷத்துக்கு நீ கீதாவோடையோ வாணியோடையோ கதைச்சுக் கொண்டிரு. சாப்பிட்டிட்டுப் போகலாம்''.

''தயவு செய்து இதிலைமட்டும் என்னை வற்புறுத்தாதேயக்கா'' என்று கெஞ்சினான் பொன்னுத்துரை. ஆயினும் அவன் குரலில் தீவிரமிருந்தது. ''அக்கா! வீட்டிலே சாப்பிடாமே இங்கை வந்து சாப்பிட்டா பாக்கிறவையளுக்கு நல்லாயில்லை என்றது மட்டுமில்லே, அப்பாவின்ரை மனசிலே நான் எதிர்பாக்கிற மாற்றமும் வராமேப் போயிடும். கடையிலே சாப்பிட்டாத்தான் அவருக்கு மனசிலே உறுத்திக்கிட்டிருக்கும்''

''கடைச் சாப்பாடு உனக்கு ஒத்து வருமா?'' என்றாள் பாக்கியம் பரிதவிப்புடன். பொன்னுத்துரை சிரித்தான்.

''இன்றைக்கு உலகத்திலே முக்கால்வாசி ஆக்களுடைய வாழ்க்கை கடைகளிலேதான் நடக்குதக்கா...''

''சரி, இன்றைக்கு மட்டுமாவது சாப்பிட்டிட்டுப்போ, என்ரை மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலா இருக்கும்'' என்றாள் பாக்கியம் கடைசியாக. பொன்னுத்துரையினால் அதற்கு மேலும் மறுக்கமுடியவில்லை.

சுந்தரி சமையலறைக்குள் அதுவரை இருந்து அவர்களின் உரையாடல்களைத்தான் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். திங்கட்கிழமைப் பிரச்சனையில் கந்தசாமியின் பெயரும் அடிபடுமோவென்று அவளுக்குக் கலக்கமாக இருந்தது. கடைசி வரை அது இல்லாமல் போகவே நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டாள் அவள்.

## 22.

ஒரு மாதம் ஆவதற்குள் ஏழெட்டுக் கடிதங்களுக்கு மேல் தமக்கையாருக்கு அனுப்பிவிட்டான் சுந்தரமூர்த்தி. உடைந்த இசைத் தட்டு திரும்பத் திரும்ப ஒரே வரியையே அலறுவதுபோல, ஐயாயிரம் ரூபாப் பணம் தந்தால் ஐந்து வருடங்களுக்குள் அதை ஐம்பதினுயிரம் ரூபாவாக பெருக்கக் கூடிய வியாபார வசதிகள் கொழும்பில் இருக்கின்றன என்று திரும்பத் திரும்பக் குறிப்பிட்டிருந்தான் அவன். பாக்கியம் கடைசி வரை கடிதங்களொன்றுக்கும் பதில் அனுப்பாமல் போகவே, பயமுறுத்தி ஒரு கடிதம் எழுதியிருந்தான் அவன். பணம் தராவிடில் தொழிலை விட்டுவிட்டு வீட்டில் வந்து இருந்து விடுவானும்.

அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் பாக்கியத்துக்கு உண்டான எரிச்சல் கொஞ்ச நஞ்சமல்ல. நாலே வரிகளில் தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டி அவனுக்கொரு பதில் அனுப்பியிருந்தாள்.

—'கொண்ணனைப் போல நீயும் ஒரு உணர்ச்சிகெட்ட பிறப்புத்தான் பிறந்திருக்கிருய். நீ விரும்பியதைச் செய்து கொள். ஆனுல், என்ரை முகத்திலே முழிக்காமல் விட்டாச் சரிதான். என்னேடே கூடப்பிறந்தது பொம்பிளைச் சகோதரங்கள் மட்டுந்தானென்று எண்ணிக்கொள்ளிறன்'—

இந்தக் கடிதத்தை அனுப்பி நாலைந்து நாட்களுக்குப் பின்புதான் தம்பியார் ஏன் பணம் கேட்டானென்ற

உண்மை பாக்கியத்துக்குத் தெரிய வந்தது. அவன் சிப்பந்தியாக நின்ற கடையின் முதலாளிதான் அந்த விபரத்தை முஸ்தாபாவுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

''பிள்ளை! சங்கதி தெரியுமா?'' என்று முஸ்தாபா கடிதமும் கையுமாக வந்து நின்றபோதே பாக்கியத்துக்குப் பகீரென்றுகிவிட்டது.

''என்ன நாநா?'' என்றுள் கலக்கத்தோடு.

''சுந்தரமூர்த்தியைக் கடையை விட்டு விலக்கியாச்சாம். ரொம்பக் கெட்ட சகவாசங்களாம் அவனுக்கு. குதிரை ரேஸ் எழுதி ஏகப்பட்ட கடனுமாம். தன்ரை கடைக்கே அவமானமாப் போச்செண்டு கவலைப்பட்டு எழுதியிருக்கிறுன் மனிஷன். நான் அனுப்பின ஆளென்றதாலேதானும் நம்பிக்கையா இருப்பானென்று இத்தினை காலமும் கவனியாமே இருந்திட்டாராம்...''

பாக்கியம் தலையைக் குனிந்து கொண்டாள். அவமானமும் கவலையும் அவளை மென்று தின்றுவிடும் போலிருந்தது.

''இப்ப புக்கி' நடத்திற ஒராளுக்கு கையாளாப்போய் இருக்கிறுனும்'' என்ற கடைசி விபரத்தையும் கூறிவிட்டு, ''என்ரை மானத்தையும் கப்பலேத்திப் போட்டான் இவன்'' என்று முணுத்தபடி திரும்பிச் சென்றுர் முஸ்தாபா.

அவரின் கடைசி வார்த்தை பழுக்கக் காய்ச்சிய கம்பியாகப் பாக்கியத்தின் இருதயத்தில் சுரீரென்று இறங்கியது. இப்படியான பொறுப்பற்ற சகோதரர்களைத் தந்த ஆண்டவனை மனதுக்குள் நொந்து கொண்டாள் அவள். அன்று பூராவும் அடிக்கடி கண்கள் கலங்கிக் கொண்டிருந்தாள் அவள்...

சுந்தரிக்கும் சுந்தரமூர்த்தியின் மீது பொல்லாத கோபமாகத்தான் இருந்தது. அவன் கெட்டுப்போகிறுனே என்ற கவலையல்ல அவளுக்கு. தன்னுடைய சொந்த விஷயமும்

அவனால் தடங்கலாகின்றதே என்ற கவலைதான் அவளுக்கு.

கந்தசாமி இப்போது அவளைத் தனிமையில் சந்திக்க இரவு வேளைகளில் வருவதில்லை. நடுநிசியில் ஒரு நாள் பொன்னுத்துரையைச் சந்தித்த அனுபவம் அவனுக்கு அத்தனை கலக்கத்தை கொடுத்திருந்தது. அவன் பல விஷயங்களிலும் வீரன்தான். ஆனால், உதை வாங்குமளவுக்கு அவன் தன் வீரத்தனத்தைக் காட்டிக் கொள்வதில்லை.

அன்றிரவு நிகழ்ச்சியால், சுந்தரியும் வெகுவாகப் பயந்து விட்டாள். கந்தசாமி அன்று அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பிக்கொண்டாலும் இன்னொருதடவை விஷப் பரீட்சை செய்து பார்க்க அவளுக்குத் துணிவுண்டாகவில்லை. பாக்கியம் அறிந்தாளென்றால் அடுத்து என்ன நடக்குமென்று எண்ணவே பயத்தினால் அவளது உடல் சில்லிட்டது. ஆயினும், பருவ உணர்ச்சிகளின் வேகத்தையும் அவளால் கட்டுப் படுத்திக்கொள்ள முடியவில்லை.

கந்தசாமியும் ருசி கண்ட பூனையாக சுந்தரியின் மனக் கொந்தளிப்பைக் கிளறிக் கொண்டிருந்தான். அவனது ஒவ்வொரு கடிதமும் விரகதாப வேதனையைத் தூண்டுவனவாக இருந்தன. எங்கே அவளைத் தனிமையில் சந்திக்கலாமென்று துடித்துக் கொண்டிருந்தான் அவன்.

கடைசியாகக் கந்தசாமி எழுதி அனுப்பியிருந்த கடிதத்தில், ஒரு வாரத்துக்குப் பின் நடைபெற இருக்கும் மாமாங்கக் கோயிலின் தீர்த்தத் திருவிழாவுக்கு அவளை வரும்படி எழுதியிருந்தான். இரவில் நடக்கும் நிகழ்ச்சி அது. வந்தால் தனிமையில் சந்தித்துக் கொள்ள தன்னால் வாய்ப்பை உண்டாக்க முடியுமென்று குறிப்பிட்டிருந்தான் அவன்.

சுந்தரிக்கும் இதொரு அருமையான யோசனையாகப் பட்டது. பொன்னுத்துரையைக் கெஞ்சினாளென்றால்அவன் மாமாங்கத்துக்கு அழைத்துப் போவான். அவனோடுபோவதென்றால் பாக்கியமும் மறுக்க மாட்டாள். கோயிலுக்குப்

போய்விட்டால் அவனை ஏமாற்றி விட்டுச் செல்வது சுந் தரிக்குப் பெரிய வேலையல்ல. கதை கண்ட இடத்தில் உட் காருகிறவன் அவன். யாராவது ஒரு நண்பன் கிடைத் தால் போதும் பொன்னுத்துரையை அவனோடு விட்டு விட்டு அவளும் ஒரு 'நண்பி'யைத் தேடிப் போவதுபோல் சென்றுளென்றால் நாலு மணி நேரம் தாமதமாகியும் வர லாம். அவன் உட்கார்ந்திருந்த இடத்திலேயே உட்கார்ந் திருந்து கதை பேசிக் கொண்டிருப்பான்.

சுந்தரியின் திட்டம் இதுதான். ஆனால், அதில் மண் ணைப் போடுவதுபோல்தான் சுந்தரமூர்த்தியின் விவகாரத் தைத் தீர்த்தத் திருவிழாவுக்கு முதல்நாள் காலையில் வந்து கூறியிருந்தார் முஸ்தாபா. வெந்து வெடித்துக் கொண்டி ருந்த பாக்கியத்திடம் பொன்னுத்துரை கூடப் போய் கோயிலுக்கு அனுமதி கேட்க விரும்பமாட்டானென்று அவளுக்குப் புரிந்திருந்தது. அவளும் போய்க் கேட்க முடி யாது. நிச்சயமாகத் தமக்கையிடம் அடி வாங்க வேண்டி யிருக்கும். ஒரு காலத்தில் கைக் கடிகாரம் கேட்கப்போய் வாங்கிய அறை இன்னும் அவளின் நினைவில் இருந்தது.

சுந்தரி என்ன செய்வதென்று தெரியாமல் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தாள். அடிவாங்கினாலும் தமக்கை யிடம் ஒரு முறைபோய்க் கேட்டுப் பார்த்து விடுவோமா என்று கூடக் கடைசியாக எண்ணினாள் அவள். அடித்து விட்டு அந்த இரக்கத்தினாலாவது பிறகு போய் வரும்படி அக்கா அனுமதி கொடுக்கமாட்டாளா?

ஆனால், சுந்தரியின் நல்ல காலமோ என்னவோ தீர்த் தத் திருவிழா நடப்பதற்கென்றிருந்த அன்று பின்னேரம் மல்லிகா என்ற சக ஆசிரியை ஒருத்தியோடு இந்த நிகழ்ச் சியைப் பார்ப்பதற்கென்றே அக்கரைப்பற்றிலிருந்து வந் திருந்தாள் மீனாட்சி.

சுந்தரிக்கு இது ஒரு வகையில் மகிழ்ச்சியாகவும் இன் னொரு வகையில் கவலையாகவும் இருந்தது. கோயிலுக்குப் போகும் சந்தர்ப்பம் தானாகவே கிடைத்தது சந்தோஷ

மென்றாலும், மீனாட்சியோடும் அவளது சிநேகிதியுடனும் சென்றால் அவர்களை விட்டு விலகி வெகுநேரம் நிற்க முடியாதென்று அவளுக்குத் தெரியும். சிறிது சந்தேகம் ஏற்பட்டாலே கண்குத்திப் பாம்புபோல் கவனிக்கக் கூடியவள் மீனாட்சி.

அப்படியிருந்தும் அன்றிரவு கோயிலுக்குச் சென்றபோது அங்கு வந்திருந்த சிநேகிதி ஒருத்தியோடு கோயிலைச் சுற்றிப் பார்க்கும் சாக்கில் தமக்கையைச் சாதுரியமாக ஏமாற்றிவிட்டுச் சென்ற சுந்தரி, அரை மணி நேரத்துக்கு மேலாகக் கந்தசாமியோடு ஒன்றாக நின்றுவிட்டுத்தான் திரும்பி வந்தாள். அவனோடு தனிமையில் கழிக்க வாய்ப்பேற்படாவிட்டாலும் சனநெருக்கத்தோடு நெருக்கமாக அவனை நெருங்கி அணைத்துத் திரிந்த சந்தோஷம் அவளுக்குப் பாதித் திருப்தியையாவது கொடுப்பதாக அமைந்தது.

## 23.

அடிபட்ட புலியை விடக் குரோதமான மனநிலையோடு சில நாட்களாக உள்ளூரக் கொதித்துக்கொண்டிருந்தான் பாருக்.

'ஒரு கழுதை அது. தினமும் பின்னாலே வந்து கத்திப் போட்டுப் போகுது. அதுகின்ரை மூஞ்சியும் முகரக்கட்டையும்' என்று சித்தி பரீதா கேலி செய்ததாக எப்போது அவன் அறிந்தானோ, அன்றிலிருந்தே அடிபட்ட புலியின் வெஞ்சினம் அவனிடம் தோன்றிவிட்டது. போதாததற்கு சுந்தரி தன்னோடு இழையும் ஐக்கியத்தை அவனிடம் கூறி அவனைச் சீண்டிக்கொண்டிருந்தான் கந்தசாமி.

சுந்தரியை அவன் படமாளிகைக்கு அழைத்துச்சென்று பழகிய நெருக்கம், பின்பு அவளின் வீட்டுக்குப் போய்

அந்த நெருக்கத்தைப் பூரணமாக்கிக் கொண்ட சாதுரி யம்...ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கூச்ச நாச்சமில்லாமல் ஒன்றுக்குப் பத்தாகக் கந்தசாமி விபரித்துக் கூறும்போது மனதிலெழும் குரோதத்தை அடக்கிக் கொள்ளவே பாரூக் குக்குச் சிரமமாக இருக்கும்.எப்படியும் ஒரு நாளைக்கு அந் தச் சித்தி பரீதாவைத் தனிமையாகக் கடத்திக்கொண்டு போய் இவன் அனுபவிக்கிறதை விட அதிகமாக அனுப விக்கவேண்டுமென்று உள்ளூர அவனுக்கொரு வெறி மூண்டுகொண்டிருந்தது.அந்த வெறி அன்றிரவு மாமாங் கத் திருவிழாவுக்குச் சென்றதோடு உச்சமாகிவிட்டது. கெட்டிக்காரத்தனமான விஷயமொன்றைச் சாதிப்பவன் போல சுந்தரி வந்து நின்ற அரைமணி நேரமும் பாரூக் கின் கண்கள் காணவே அவளை நெருக்கமாக அணைத்துக் கொண்டு சனக் கூட்டத்துக்குள் நடமாடிக்கொண்டிருந் தான் கந்தசாமி.

பாரூக்கினால் அதன் பின்பும் நிதானப்பட்டுக்கொள்ள முடியவில்லை. ஒரேயொரு எண்ணம்தான் அவன் மனம் பூராவும் வியாபித்து அவனைப் பேயாக ஆட்டிக்கொண்டி ருந்தது. 'சித்தி பரீதாவைக் கொண்டுபோய் இவன் சுந்தரி யிடம் அனுபவிக்கிறதை விட அதிகமாக அனுபவிக்க வேண்டும்.' அவ்வளவுதான்.

சுந்தரியை அனுப்பிவிட்டு வந்து அவன் முன்னால் வெற்றிப் பெருமிதத்துடன் நின்றான் கந்தசாமி.

''எப்பிடியடா என்ரை சரக்கு?'' பாரூக்கின் மனதில் குமைந்துகொண்டிருந்த வேகம் குபீரென்று பொங்கி வெடித்தது.

''உன்ரை சரக்குக் கிடக்கட்டும்.அந்தத் திமிர் புடிச்ச வளை நாளைக்குத் தூக்குவமா?''

''சித்தி பரீதாவையா?'' கந்தசாமி வியப்புடன் அவ னைப் பார்த்தான்.பாரூக்கின் மனதிலிருந்த வேகம் அவ னது கண்களில் பளிச்சென்று தெரிந்தது.

கந்தசாமிக்கு உற்சாகம் வந்துவிட்டது. இப்படியொரு சாகஸத்தைச் செய்து சித்தி பரீதாவைக் கடத்திச் சென்ருல், அவளை அனுபவிப்பதில் அவனுக்குமொரு பங்கு கிடைக்குமல்லவா?

''இன்றைக்குத்தானடா நீ சரியான ஆம்பிளை'' என்று அவனைத் தட்டிக் கொடுத்தான் கந்தசாமி.

''ஆம்பிளையள் நாங்கள் ஒரு பெம்பிளையை விரும்பினு அது என்ரை ஆள் மாதிரி பின்னுலே வரோணும். இல்லாட்டி இப்புடித்தான் அவளுகள் வாழ்நாளிலே மறக்காதது மாதிரி ஒரு பாடம் படிப்பிக்கோணும். இல்லாட்டி ஆம்பிளைக்கும் பெம்பிளைக்கும் என்னதான் வித்தியாசம் இருக்கப் போகுது?''

இதன் பின்பு சித்தி பரீதாவை எப்படிக் கடத்திப் போகலாம் என்பதைப் பற்றி மளமளவென்று திட்டம் போட்டான் அவன். இரவு அத்தனை நேரம் தூக்கம் விழிப்பதால் சுந்தரி மறுநாள் நெசவு நிலையத்துக்கு வரவில்லையென்று கூறிவிட்டுப் போனது அவனது திட்டத்துக்கு இலகுவாக இருந்தது. பாருக் அவன் என்ன கூறினுலும் பெருமாள் மாடு போலத் தலையை அசைக்கும் நிலையிலிருந்தான். அவனுக்குத் தேவையானது காரியசித்தி. செயற்படும் முறை எப்படியிருந்தால்தான் என்ன?

இருவரும் இரவோடிரவாகப் போய் நன்கு சிநேகிதமான கார் டிரைவர் ஒருவனையும் கண்டு பேசி இத்திட்டத்துக்குப் பங்காளியாக்கிக்கொண்டார்கள். பணமாக நூறு ரூபாவும் கொடுத்து சித்தி பரீதாவையும் அவன் பொறுப்பில் சிறிது நேரத்துக்கு விட்டுவிடவேண்டும் என்பது அவர்களின் ஒப்பந்தம்......

மறுநாள் காலையில் தையல் பயிற்சி வகுப்புக்கென்று தனியாக வந்துகொண்டிருந்தாள் சித்தி பரீதா. துணைக்குச் சுந்தரி இல்லாததால் விரைந்து போய்விடவேண்டுமென்ற எண்ணத்துடன் முக்காட்டை நன்ருக இழுத்துவிட்டபடி குனிந்த தலை நிமிராமல் விறுவிறுவென்று நடந்துகொண்

டிருந்தாள் அவள். வீட்டுக்கும் பிரதான ரேட்டுச் சந்திக்கும் இடையிலுள்ள ஒரு பகுதி வீடுகளற்ற, ஆட்கள் நடமாட்டம் குறைந்த ஒரு பகுதி. அந்த இடத்தைச் சித்தி பரீதா நெருங்கிக்கொண்டிருந்தபோது எதிர்ப்புறத் திசையிலிருந்து வந்த கறுப்பு நிறக் காரொன்று அவளைக் கடந்துபோய் சட்டென்று ஒரு அரை வட்டம் போட்டுக் கொண்டு வேகமாகத் திரும்பியது. சித்தி பரீதா அதைக் கவனிக்கவில்லை. கார் கிறீச்சென்ற ஓசையோடு அவளருகே நின்றபோதுதான் அவள் திகைத்துப் போய் திரும்பிப் பார்க்க முயன்றாள். அதற்குள் மின்னல் வெட்டுவதுபோல் காரியங்கள் துரிதமாக நடைபெற்றன.

அரையடி நீளமான 'இறீஸ்' கத்தியொன்றேடு படாரென்று பின் கதவைத் திறந்துகொண்டு குதித்திறங்கிய பாரூக், சித்தி பரீதாவின் வலது கையை எட்டிப் பிடித்தான். வாய்விட்டு அலறக்கூட முடியாத ஒரு ஸ்தம்பித மான நிலை. அடுத்த வினாடி அலங்கோலமாகக் காரின் பின்புற ஆசனத்தில் போய் விழுந்தாள் அவள். உள்ளேயிருந்த கந்தசாமியின் கரங்கள் இரண்டும் அசுர வேகத்தோடு அவளின் வாயையும் தோள்புறத்தையும் அமுக்கிக்கொண்டன. அடுத்த வினாடி கார் காற்றாக விரையத் தொடங்கி விட்டது.

சித்தி பரீதா தரையில் போட்ட மீனாகத் துடித்தாள். முடிந்த மட்டும் திமிறி தன்னை அவர்களின் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முயன்றாள். வாயைத் திறந்து அலறப் பார்த்தாள். கால்களால் உதைத்து, கைகளால் அவர்களைப் பிராண்ட முயன்றாள். ஒன்றுமே பலிக்கவில்லை. தலைப்புறம் கந்தசாமியின் பிடியும் கால்புறமாகப் பாரூக்கின் பிடியும் உடும்புப் பிடிகளாக அவளை அமுத்திக்கொண்டிருந்தன.

''குட்டி துள்ளுதடா மச்சான்'' என்று கண்களைச் சிமிட்டினான் கந்தசாமி. பாரூக் விகாரமாகச் சிரித்தபடி இடுப்புக்குச் சற்றுக் கீழாக அவளின் வலது பக்கப் பெருந் தொடையில் ஒரு கிள்ளுக் கிள்ளினான்.

"துள்ளட்டும் துள்ளட்டும்.இன்னும் எவ்வளவு நேரத் துக்கென்று தான் பாப்பமே."

கால்கள் தவறி நெருப்புக் குழம்பிற்குள் விழுந்துவிட் டாற்போல் சித்தி பரீதாவின் உடல் துடித்தது. கரகர வென்று கண்களிலிருந்து நீர் சொரிய, "ஆண்டவனே!... ஆண்டவமே!..." என்று உயிர்வார்தனையோடு தவித்தாள். அந்த விநாடி பாழாய்ப் போன உயிராவது போய்விடக் கூடாதா?

புதுமையானதொரு பொருளைக் கண்களின் முன்னால் கண்டுவிட்டால் சிறு குழந்தைகள் ஆசையோடு தொட்டுத் தொட்டுப் பார்க்குமே. அதைப் போல, அருகில் இருவர் இருக்கிறார்களே என்பதைக்கூட உணராதவன்போல கண் கள் மோக வெறியினால் பளபளக்க சித்தி பரீதாவின் எழுச் சியான உடல் பகுதிகளை அமுக்கி அமுக்கிப் பார்த்தான் பாரூக். உடலிலுள்ள ஒவ்வொரு உயிர் அணுக்களுமே சித்தி பரீதாவுக்குப் பதறித் துடித்தன. 'வாப்பா!...... உம்மா!......' என்று நெருங்கிப் பழகிய எல்லோரையுமே நினைத்துத் தவித்தாள் அவள். தெய்வ அற்புதத்தால் நடப்பதுபோல யாராவது ஒருவர் அங்கே வந்து இந்தப் பாவிகளிடமிருந்து அவளைக் காப்பாற்றக் கூடாதா?

திடீரென்று உடலில் மின்சாரம் பாய்ந்துவிட்டவன் போல விறைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் கந்தசாமி. பொன்னுத்துரையின் கறுப்பு நிறக் கார் எதிர்ப்புறத் திசையிலிருந்து வந்துகொண்டிருந்தது. மீனாட்சியும் மல்லிகாவும் பரீட்சைச் சமயமென்று அவசி யம் பாடசாலையில் நிற்கவேண்டுமென்பதால் காலையில் நேரத்துடனேயே அவர்களைக் கொண்டுபோய் அக்கரைப் பற்றில் விட்டுவிட்டு வருகிறான் பொன்னுத்துரை.

கந்தசாமி ஒரு நொடிக்குள் உஷாராகிவிட்டான். "டேய் பாரூக்!" என்று அருகிலிருந்த பாரூக்கின் தோள்புறத்தில் அவசரமாக இடித்தான். "பொன்னுத் துரை வாறான்.திமிறுமல் கவனமாப் பிடி."

சித்தி பரீதாவின் மனதினில் சரிந்து சரிந்துபோய்க் கொண்டிருந்த நம்பிக்கையெல்லாம் ஒரு விஞடிக்குள் மலையாக நிமிர்ந்துவிட்டது.

'அண்ணே!' என்று அந்த அவலத்துக்கு வாய்விட்டு அலறி, உதவி கோர விழியில்லாவிட்டாலும் அவளின் மன தில் மூண்டெழுந்த வேகம் அவளுக்கு அசுரத்தனமான சக்தியைக் கொடுப்பது போலிருந்தது. பலமெல்லாவற்றை யும் கூட்டி ஒரு திமிறல் திமிறினுள். இரு ஆண்களினது வலிமையான பிடிக்குள் அகப்பட்டிருந்த அவளது உடல் 'எகிறி' மேலெழுந்து காரின் 'கூட்டோடு' மோதிப் பின் கீழே விழுந்தது.

''இறுக்கிப் பிடியடா இந்தச் சைத்தானை'' என்று கத்தியபடி விருட்டென்று எழுந்து அவளின் வயிற்றுக்கு மேல் உட்கார்ந்துகொண்டான் பாரூக்.

சித்தி பரீதாவுக்கு மூச்சு முட்டிவிட்டது. கடைசி கடைசியென்று தோன்றிய நம்பிக்கையும் பொடிப்பொடி யாகச் சிதறி மறைய, பாரூக்கின் உடல் கனத்தைத் தாங் கிக்கொள்ள முடியாமல் உயிர் போவது போல் முனகத் தொடங்கினுள் அவள். அவளின் நினைவு தவறிக்கொண்டி ருந்தது.

''அவன் காரைத் திருப்புகிருனடா'' என்று கந்த சாமி பயத்துடன் கத்தியது எங்கோ தொலைதூரத்திலி ருந்து கேட்பதுபோல் அவளுக்குக் கேட்டது. சித்தி பரீதா முற்ருக இருளுக்குள் அமிழ்ந்துகொண்டாள்.

## 24.

பொன்னுத்துரை எதேச்சையாகவே சித்திபரீதாவைக் கடத்தி வந்த காரைக் கவனித்தான். காலையில் மீனாட்சியையும், அவளின் நண்பி மல்லிகாவையும் அழைத்துச் சென்றபோது மல்லிகா கூறிய ஒரு கதையைத்தான் அப்போது எண்ணித் தனக்குள் சிரித்துக்கொண்டு வந்தான் அவன்.

மல்லிகா நல்ல வாயாடி. குறும்புத்தனமும் அதிகமாக இருந்தது.

''மீனாச்சி! இன்றைக்கு 'எக்ஸாம்' பள்ளிக்கூடத்திலே இருந்தும் மாமாங்கத் திருவிழாவை நான் பாக்க ஆசைப்பட்டது பிழையாப் போச்சடி. உன்ரை அண்ணாவுக்கு எங்களாலை வீணாக் கஷ்டம்.'' பொன்னுத்துரை காரில் தங்களை அழைத்துவர நேரிட்டதைக் குறிப்பிட்டு மல்லிகா இப்படிக் கூறியபோது அத்தனை நேரம் அவளோடு கதைத்து வந்த சரளத்தில் பொன்னுத்துரை விளையாட்டாக அவளிடம் கேட்டான்:

''ஆடு மழைக்குள்ளே நனைஞ்சு போச்சென்று ஓநாய் அழுத கதை தெரியுமா உங்களுக்கு?''

''ஓ, நல்லாத் தெரியுமே!'' என்றவள் அடுத்து அதே கேள்வியை வைத்தே அவனை மடக்கினாள். ''பெரிசா பழமொழி சொல்ல வந்திட்டியளே, ஆடு நனைஞ்சுதெண்டு ஏன் ஓநாய் அழுதது தெரியுமா?''

''ஏன் அழுதது?...அதைத்தான் 'முட்டைக் கண்ணீர்' என்று சொல்றது. ஆட்டை அடிச்சுத் தின்னிற மிருகந்தானே ஓநாய்?'' பொன்னுத்துரை அலட்சியமாகக் கூற, அவள் ''ப்பூ...'' என்று குழந்தை போல் உதட்டைப் பிதுக்கியபடி கைகொட்டிச் சிரித்தாள். ''ஓநாய் ஏன்

அழுதது தெரியுமா? மழையிலே நனைஞ்சா ஆட்டின்ரை இறைச்சி வலிச்சுப் போமாம். அதுக்குத்தான்.''

மீனாட்சி விழுந்து விழுந்து சிரித்தாள். பொன்னுத்துரையும் சிரித்துவிட்டான்...

இந்த நிகழ்ச்சியை எண்ணியவாறு பொன்னுத்துரை வரும்போதுதான் எதிர்த்திசையிலிருந்து வந்துகொண்டிருந்த காரொன்றுக்குள் உருவமொன்று 'எகிறி' விழுவதை எதேச்சையாகக் கவனித்தான் அவன். அந்த உருவம் அணிந்திருந்த பஞ்சாபிப் பாணி உடையும், பக்கவாட்டில் தெரிந்த முகமும் மின்னல் வேகத்தில்தான் தெரிந்ததென்றாலும் அவனுக்குச் சட்டென்று சித்தி பரீதாவின் எண்ணம்தான் உண்டானது. அடுத்த விநாடி காரின் நான்கு சக்கரங்களும் வீரிட்டலற, பிரேக்கை அமுக்கிக் காரை நிறுத்தியவன், விறுவிறுவென்று வந்த வழியே காரைத் திருப்பினான். அதற்குள் அந்தக் கார் கண் பார்வையிலிருந்து மறையும் தூரத்துக்குப் போய்விட்டது.

பொன்னுத்துரை காரின் 'அக்சிலரேற்றரை' அதன் எல்லைக்கே அமுக்கினான். றேட்டில் போகிற, வருகிறவர்கள் அவசரம் அவசரமாக ஒதுங்கிக்கொண்டு நின்றார்கள். ஒதுங்கிய வேகத்தில் தவறி நிலத்தில் விழுந்துவிட்ட கிழவரொருவர் ''நாசமாப் போறவங்களுக்குக் காரிலே ஏறியிட்டா கண்மூக்குத் தெரியிறதேயில்லை'' என்று திட்டிக் கொண்டே சென்றார்.

சித்தி பரீதாவைக் கடத்திச் சென்ற கார் வலையிறவுப் பக்கம் திரும்பியது. இதற்குள் பொன்னுத்துரையும் ஓரளவுக்கு அந்தக் காரை அண்மித்துவிட்டான். கந்தசாமியும் பாரூக்கும் திகிலோடு திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்.

''வேகமாப் போடா மச்சான், வேகமாப் போடா'' என்று டிரைவரின் தோள்புறத்தை அடிக்கடி இடித்துக் கொண்டிருந்தான் கந்தசாமி. சித்தி பரீதாவைக் கவனிக்க வேண்டிய நிலை அப்போது அவனுக்கோ பாரூக்குக்கோ

இல்லை. உணர்வில்லாமல் அறுத்த, தரையில் விழுந்துவிட்ட மலர் மாலையைப் போலத் துவண்டுபோய்க் கிடந்தாள் அவள். உணர்வோடிருந்தபோது அவளின் மனதிலேற் பட்ட கிலியினுலோ என்னவோ முகம் இரத்தமற்றது போல் வெளுத்துப்போயிருந்தது.

பொன்னுத்துரையின் கார் மிகவும் நெருக்கமாக வந்துவிட்டது. சித்தி பரீதாவைக் கடத்திச் சென்ற காரின் டிரைவர் இதை முந்திக்கொண்டு போகவிடாமல் தனது காரைச் சாமர்த்தியமாக வளைத்து வளைத்து ஓட்டினுன்.

பொன்னுத்துரையிடம் அகப்பட்டுக்கொள்ளப்போகி ருேம் என்பதைவிட, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ என்பதுதான் பாருக்கின் கவலையாக இருந் தது. அந்தக் கலக்கத்தோடு தவித்துக்கொண்டிருந்தவன், திடீரென்று உணர்வற்றுக் கிடக்கும் சித்தி பரீதாவின் உடலை, தலையிலிருந்து கால் வரை வெறிக்க வெறிக்கப் பார்த்தான். அவனது முகம் விகாரமாக மாறி, தாடைகள் இரண்டும் இறுகின. அடுத்த கணம் அவனது கைகள் மள மளவென்று அவள் அணிந்திருந்த உடைகளைக் கிழித்துக் கொண்டு அவளின் சூடான உடல் பகுதிகளுக்குள் செல் லத் தொடங்கின. சமயம் தெரியாமல் அவனுக்கு வந்த வேகத்தைப் பார்த்துக் கந்தசாமியே வெலவெலத்துப் போய்விட்டான்.

அந்தச் சமயமென்று பார்த்துத்தாஞ சித்தி பரீதா வுக்கும் உணர்வு வரவேண்டும்? வீரிட்டுக் கத்திக்கொண்டே எழுந்தவள் கால்கள் இரண்டையும் பலமாக உதைத்துக் கொண்டு பாருக்கின் முகத்தைப் பிராண்டினுள். கந்தசாமி அவளின் கழுத்தைப் பற்றிக் கீழே அமுக்கிப் பார்த்தான். அது இலேசில் முடிகிற காரியமாகத் தெரியவில்லை. சித்தி பரீதா ஓங்கி உதைத்த உதையொன்று டிரைவரின் பிடரிப் புறத்தில் விழுந்தது. பொன்னுத்துரை பின்னுல் காரில் தொடர்ந்து வருகிருனென்பது சித்தி பரீதாவுக்குத்

தெரிந்துவிட்டது. ஆயிரம் யானைகளின் பலம் ஒரே சமயத்தில் அவளிடம் வந்துவிட்டாற்போலிருந்தது.

"அண்ணே!......அண்ணே!......" என்று வீரிட்டுக் கொண்டே ஓங்கி ஓங்கி உதைத்தாள். டிரைவரால் சமாளிக்கமுடியவில்லை. கார் ரோட்டிலிருந்து விலகிச் செல்லப் பார்த்தது. "நிறுத்தடா!" என்று பயத்தினால் அலறினான் கந்தசாமி. கார் கிரீச்சிட்டுக்கொண்டே நின்றது. மின்னல் போல் பொன்னுத்துரை தனது காரை மறு ஓரத்துக்குத் திருப்பி நிறுத்தாவிட்டால் அவனது கார் முதல் காரோடு மோதி இரண்டு கார்களும் சப்பையாகியிருக்கும்.

பாரூக் கிறீஸ் கத்தியோடு காரிலிருந்து கீழே குதித்தான். அவனைத் தொடர்ந்து வெளியே தாவிவர முயன்ற சித்தி பரீதாவைக் கந்தசாமியும் டிரைவரும் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டார்கள்.

பொன்னுத்துரையும் தனது காரிலிருந்து வேகமாகக் கீழே இறங்கிக்கொண்டான். பாரூக்கின் கையிலிருந்த கத்தியைக் கண்டதும், காலடியில் கிடந்த பந்துபோன்ற கல்லொன்றில்தான் அவன் கவனம் சென்றது.

பாரூக் கத்தியை ஓங்கிக்கொண்டு பாய்ந்ததும் சாதுரியமாக ஒதுங்கிக்கொண்ட பொன்னுத்துரை, அவன் சமாளித்துக்கொண்டு திரும்பி மறுபடியும் பாய்வதற்குள் அந்தக் கல்லை எடுத்து பலம்கொண்டமட்டும் அவனை நோக்கி வீசினான். "உம்மா!" என்று அலறிக்கொண்டே நெற்றியை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டான் பாரூக். அவனது கையிலிருந்த கிறீஸ் கத்தி 'சத்தத்தோடு தரையில் விழுந்தது.

குபுகுபுவென்று அவன் நெற்றியிலிருந்து பொங்கிய இரத்தத்தையோ, தள்ளாடி விழுபவன் போல் அவன் தடுமாறியதையோ பார்த்துப் பொன்னுத்துரை தயங்கிவிடவில்லை. அவனுக்கிருந்த வேகத்தில் அவை தெரியவுமில்லை. குபீரென்று தாவி கீழே கிடந்த அந்தக் கத்தியை எடுத்துக்

கொண்டவன், என்ன செய்கிறோமென்று புரியாமலேயே ஓங்கி பாருக்கின் வலது தோளில் குத்தினான். அந்தத் தடவை வாய்விட்டு அலறக்கூட அவனுக்கு வலு இருக்க வில்லை. அப்படியே அட்டையாகச் சுருண்டு விழுந்துவிட்டான் அவன்.

கந்தசாமியும் டிரைவரும் வெலவெலத்துவிட்டார்கள். சித்தி பரீதாவைப் பிடித்திருந்த அவர்களின் கைப்பிடிகள் எப்படி நழுவினவோ தெரியவில்லை.

''அண்ணே!'' என்று வீரிட்டுக்கொண்டே ஓடிவந்து பொன்னுத்துரைக்கு மேல் விழுந்தாள் சித்தி பரீதா. அவளின் முன்புற உடைகளெல்லாம் தாறுமாறாகக் கிழிந்து உடல் பகுதி அலங்கோலமாகத் தெரிந்தது.

பொன்னுத்துரைக்கு நெருப்புக்குள் குதித்த ஆவேசம் வந்துவிட்டது. சட்டென்று குனிந்து பாருக்கின் தோளிலிருந்த கத்தியை அவசரமாகப் பிடுங்கி எடுத்துக்கொண்டான். கந்தசாமிக்கும் டிரைவருக்கும் நொடிக்குள் நிலைமை புரிந்துவிட்டது.

''காரை எடடா, காரை எடடா'' என்று அலறினான் கந்தசாமி. டிரைவரும் உயிர்ப் பயத்தில் சுறுசுறுப்பாகிவிட்டான். பொன்னுத்துரை ஆவேசத்துடன் அருகே ஓடி வருவதற்குள் அவர்களின் கார் வேகமாகப் புறப்பட்டு விட்டது.

## 25.

சுற்றிவர ஆட்கள் நடமாட்டம் சற்றேனும் இல்லாத ஒரு பகுதியாக அந்த இடம் இருந்ததால் சித்திபரீதாவின் மானம் அந்த அளவிலாவது காக்கப்பட்டது.

முக்காடாகப் போடும் மெல்லிய சிறு துண்டை முன்புறமாக இழுத்துவிட்டு அது மறைக்க முடியாமல் மறைக்கும் அழகுகளை இரண்டு கைகளினாலும் மறைத்துப் பிடிக்க முயன்றபடி உயிர் போவதுபோலக் கதறி அழுதுகொண்

டிருந்தாள் சித்திபரீதா. அவமானத்தினுலும், வெட்கத்தினுலும் அவளின் உடல் கடுகாகச் சிறுத்துவிட்டாற்போல் கூசிக் குறுகியது.

கையில் எடுத்த கத்தியை வெறுப்போடு வீசி எறிந்துவிட்டுத் திரும்பிய பொன்னுத்துரை ஆத்திரம் தீராதவனுகப் பிணம் போலக் கீழே விழுந்து கிடந்த பாருக்கின் விலாப்புறத்தில் எட்டி உதைத்து விட்டு அவளருகே வந்தான்.

''வா பிள்ளை போவம்''. கழுத்து நெரிபட்ட பறவையாக விக்கினுள் சித்திபரீதா.

''அண்ணே! நான் இனி எங்கையண்ணே வர. என்னைக் கொண்டுபோய்க் கல்லடிப் பாலத்தாலையாவது தள்ளி விடுங்கண்ணே. மானங்கெட்டாப்பிறகு உசிரோட இருக்கக் கூடாது. நான் செத்துத் தொலையோணும்''.

பொன்னுத்துரையின் கண்கள் இரண்டும் கலங்கிவிட்டன. அந்தப் பெண்ணின் குழந்தை மனம் அந்தச் சமயத்தில் என்ன பாடுபடுமென்பது அவனுக்குத் தெரியாதா?

''தங்கச்சி!'' என்றுன் குரல் தழுதழுக்க. ''உனக்கு நடக்க இருந்த பயங்கரமொன்று நடக்காமப் போச்சென்று நினைச்சு மனசைத் தேற்றிக்கொள்ளம்மா. இதைவிடக் கேவலமாப் பயங்கரமா எத்தனையோ எல்லாம் நடந்தாப்பிறகும் இந்த உலகத்திலே மனிஷர் உயிரோடே வாழுறேல்லையா? எல்லாத்தையும் ஒரு கெட்ட கனவா மறந்திட்டு பேசாமே வாம்மா போவம்''.

சித்திபரீதாவின் சோகம் குறையவில்லை. உலகத்தில் யாருமேயற்ற ஒரு அனுதைக் குழந்தைபோல பரிதாபமாக அவனைப் பார்த்தாள். பொன்னுத்துரையின் உள்ளம் பாகாக உருகியது. ஒரு சிறு குழந்தையை அணைத்துக் கொள்வது போல அவளை ஆதரவாகப் பற்றியபடிமெல்ல அவளை அழைத்துச் சென்று காரின் பின்புற ஆசனத்தில் ஏற்றிவிட்டான். யாராவது அந்தச் சமயத்தில் வந்துவிட்

டால் நிலைமை இன்னும் மோசமாகி விடுமேயென்று அவனுக்குக் கவலையாக இருந்தது.

சித்திபரீதா குப்புற ஆசனத்தில் விழுந்து கிடந்து அழுது கொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த உடை முதுகுப்புறத்திலும் கிழிந்து அவளின் சிவந்த உடலைப் பளீரென்று வெளியே காட்டியது. பொன்னுத்துரை தான் அணிந்திருந்த சேட்டைக் கழற்றி அப்படியே அவளின் முதுகுப்புறத்தை மூடிவிட்டான். காரில் வந்து ஏறிக் கொள்வதற்கு முதல் அவனின் பார்வை வெறுப்போடும் ஆத்திரத்தோடும் பாரூக்கின் பக்கம் திரும்பியது. அப்போதும் அசைவெதுவும் இல்லாமல் உணர்வற்றுக் கிடந்தான் பாரூக். சில சமயம் அவன் பிணமாகவும் போயிருக்கலாம்.

பொன்னுத்துரைக்கு அதை எண்ணக் கொஞ்சமும் பயம் தோன்றவில்லை அப்போது. அவன் உணர்வோடிருந்தால் இன்னும் இன்னும் இரண்டு உதைகள் கொடுக்கலாமென்றுதான் அவனுக்குத் தோன்றியது.

''தூ!'' என்று பாரூக்கின் பக்கமாகக் காறித் துப்பி விட்டுக் காரில் ஏறிக்கொண்டான். கார் றோட்டில் ஒரு அரை வட்டம் போட்டுக்கொண்டு வந்த வழியே திரும்பியது.

சில பிரச்சினைகள் எதிர்நோக்கியிருப்பதை இதன் பின்புதான் சிந்திக்க ஆரம்பித்தான் பொன்னுத்துரை. சித்திபரீதாவை இத்தனை சிரமப்பட்டுக் காப்பாற்றியதல்ல பெரிது, நாலு பேர்களுக்கு இந்த விஷயம் தெரியாமல் வீட்டில் அவளைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதுதான் பெரிதென்று அவனுக்குத் தோன்றியது.

அவளைப் பலவந்தமாகக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டபோது யாராவது பார்த்திருந்தால் இதற்குள் ஊரே அல்லோல கல்லோலப் பட்டிருக்கும். முதலில் முஸ்தாபாவும் சித்தி உம்மாவுமே போதும் ஊரைக் கூட்ட. தலைதலையாக அடித்துக் கதறிக் கொண்டிருப்பார்கள்.

விஷயம் இதுவரை பொலீஸ் வரை கூடப் போயிருக்கலாம்.

அப்படி எவையுமே நடந்திருக்கக் கூடாதென்றுதான் பொன்னுத்துரைக்குக் கவலையாக இருந்தது. விஷயம் வெளியே வந்தால் பிறகு இந்தக் கேடுகெட்ட சமூகம் இந்த ஒன்றும் தெரியாத அப்பாவிப் பெண்ணை வாழ விடுமா?

பொன்னுத்துரை மனக்கலக்கத்தோடு பின்புறம் திரும்பிப் பார்த்தான். சித்திபரீதா அதே நிலையில் கிடந்து அழுதுகொண்டிருந்தாள். இவளைத் தேற்றி இவளின் அழுகையை நிறுத்துவதுதான் முதலில் செய்யவேண்டிய் புத்திசாலித்தனமான வேலையென்று அவனுக்குப்பட்டது. காரைச் சட்டென்று ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு அவளின் பக்கம் திரும்பி அவள் தோளை மெல்லத் தொட்டான்.

"பிள்ளை! இப்பிடியே அழுதுகொண்டிருந்தா எப்பிடி? மனசைத் தேற்றிக் கொண்டு இரண்டாம் பேருக்கும் தெரியாமல் வீட்டைபோற வழியைப் பாக்கவேண்டாமா?"

"எப்பிடியண்ணே மனசைத் தேற்றுகிறது" என்று தேம்பினாள் சித்திபரீதா. "இனிமே நான் மானமா வாழ முடியுமா? எப்பிடியோ செத்துத்தொலைய வேண்டியது தானே?"

"அப்பிடிச் சொல்லக்கூடாது பிள்ளை. ஆயிரம் துன்பம் வந்தாலும் அதை எதிர்த்து வாழப் பழகோணும். அதுதானே கெட்டித்தனம்." பொன்னுத்துரை அவளின் மனதைத் தேற்ற முயல முயல அவளின் சோகம் அதிகமாகிக் கொண்டுதான் இருந்தது. இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழத்தொடங்கினாள்:

"ஒரு பொண்ணுக்கு இப்பிடி நேர்ந்தாப் பிறகு எதை நினைச்சண்ணே மனசைத் தேற்றுகிறது. இருக்கிற மானத்

தைத் காத்துக்கிட்டு பேசாமே கல்லடிப் பாலத்திலே குதிக்க வேண்டியதானே?''

''வாயை மூடிக்கொண்டு இருக்கமாட்டியா?'' என்று திடீரென்று பொறுமை இழந்தவனாகக் கத்தினான் பொன்னுத்துரை. ''ஏன் சாகப்போறன், சாகப்போறனென்று துடிக்கிறாய். மனசறிஞ்சு நீயா ஏதும் தவறு செஞ்சியா? இல்லையே...ஏதோ உன்னை மீறிப்போய் நடந்த சங்கதி இது. இந்தளவிலையாவது நீ மானத்தோட தப்பியிருக்கிறியே அதுக்காகச் சந்தோஷப்பட வேண்டாமா நீ?''

''என்னாலே சந்தோஷப்பட முடியேல்லையே?'' என்று முகத்தில் அறைந்து கொண்டே கதறினாள் சித்திபரீதா. அவளின் கண்கள் இரண்டும் ஊற்றுக்களாக நீரைக் கொட்டின.

பொன்னுத்துரையின் நெஞ்சம் அவளுக்காகத் தேம்பி அழுதாலும், அந்த உருக்கத்தை வெளிக்காட்டாமல், ''அழுதது போதும், நிமிந்து உட்காரு'' என்று அதட்டி அவளை எழுந்து உட்கார வைத்தான். அவளோடு சேர்ந்து அழுது கொண்டிருந்தால் அடுத்த நடவடிக்கையை ஒழுங்காக கவனிக்க முடியாதென்று அவனுக்குப் புரிந்தது.

சித்திபரீதா தீனமாக அவன் முகத்தைப் பார்த்தாள். பொன்னுத்துரையின் கண்கள் கலங்கப் பார்த்தன. மனதைக் கல்லாக்கிக் கொண்டு கேட்டான்:

''இன்றைக்கு உன்ரை மானத்தை நான் காப்பாத்தியிருக்கிறனே, அந்த நன்றி உனக்கு என்றைக்கும் இருக்கும் தானே?'' சித்திபரீதாவினால் இதற்குப் பதில் கூற முடியவில்லை. ஒரு கேவலோடு அவனை நோக்கி இரண்டு கைகளையும் கூப்பினாள்.

''அந்த நன்றி உண்மையா உன்ரை நெஞ்சிலே இருக்குமென்றா ஒரு நாளும் நீ தற்கொலை செய்து கொள்ள மாட்டனெண்டு எனக்குச் சத்தியஞ் செய்துதா?'' சித்திபரீதா அப்போதும் வாயைத் திறக்கவில்லை. கண்ணீர் மட்டும் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது.

"செய்து தர மாட்டியா?" என்று தனது வலது கையை அவளின் முன்னே நீட்டியபடி கத்தினான் பொன்னுத்துரை. நீட்டிய அவன் கரம் உணர்ச்சி மிகுதியால் நடுங்கியது.

''உன்னை இவ்வளவு காலமா ஒரு தங்கச்சியைப் போலத்தான் நினைச்சுக் கொண்டிருந்தன். இன்றைக்கு என்ரை உடன் பிறந்தவளாயே நினைச்சு உன்ரை துன்பத்திலே பங்கு கேக்கிறதுக்காகக் கேக்கிறன். நீ சத்தியஞ் செய்து தரப்போறியா இல்லையா?''

''செய்யிறனண்ணே செய்யிறன்...'' சித்திபரீதா தேம்பியபடி; அவனது கையைப் பற்றிக் கொண்டாள். "நான் ஒரு நாளும் தற்கொலை செய்யமாட்டன்.''

பொன்னுத்துரைக்கு இதன் பின்பே நிம்மதியான மூச்சு வந்தது. உடன் பிறந்தவனின் பரிவோடு அவளின் கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டான்.

"இதோ பாரம்மா. அண்ணன் நானிருக்கிறன். கவலையை என்னெட்டைத் தந்திட்டனென்று நீ எல்லாத்தையும் மறந்திட்டு இருகோணுமம்மா. சரிதானே?'' சித்திபரீதா உயிரே இல்லாதவள் போல் தலையை மெல்ல ஆட்டினாள்.

பொன்னுத்துரை காரைக் கிளப்பிக் கொண்டே கேட்டான்:

''இது நடக்கேக்கை ஆராவது கண்டிருப்பினமா?'' சித்திபரீதாவின் மென்மையான உடல் காற்றில் நடுங்கும் மாந்தளிராக ஒரு முறை நடுங்கியது. கண்டத்திலிருந்து அழுகை வெடித்துவர, ''எனக்குத் தெரியேல்லையண்ணே'' என்று விம்மினாள்.

"அழாதை பிள்ளை. அப்பிடி ஆரும் பாத்திருந்தாலும் இப்ப உன்னை ஒருவரின்ரை கண்ணிலேயும் படாமே வீட்டிலை கொண்டுபோய் விட்டிட்டு, பிறகு அது நீயில்லையென்றமாதிரி ஏதும் கதை சொல்லிச் சமாளிச்சுக் கொள்ளலாம்''

சித்திபரீதா தலையை மெல்லத் தாழ்த்திக் கொண்டாள். அவன் கூறுவதுபோல் செய்யச் சாத்தியமில்லையென்றும் அவன் தன் மனத்தேறுதலுக்காக அப்படிக் கூறுகிருனென்றும் அவளுக்கு நன்ருகவே புரிந்தது.

''ஆரும் பாத்திருக்க மாட்டினமெண்டுதான் நம்பிறன். அப்பிடிப் பாத்திருந்தா வேறை காரைப் பிடிச்சுக் கொண்டு பின்னுலே துரத்தி இதுக்குள்ள வந்திருக்க மாட்டினமா?'' என்று பொன்னுத்துரை ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு பின்பு அவளின் பதிலை எதிர்பார்க்காமலேயே தொடர்ந்து கூறினுன்: ''அந்த அயோக்கிய நாய்களும் இதைப்பற்றி வாயைத் திறக்கவே துணிய மாட்டாங்கள் அப்பிடி வாயைத் திறந்து சொன்னுங்களென்ருல் அவளுக்குத்தான் அது பிழை...உம்...'' ஓரிரு வினுடிகள் யோசித்து விட்டு அவன் மறுபடியும் தொடர்ந்தான்; ''பிள்ளை! என்ரை நெஞ்சை ரண்டாய் பிளந்தாக்கூட நான் வாயைத் திறக்கமாட்டன். நீயும் ஜாக்கிரதையா இருக்கோணும். வீட்டிலே உம்மா வாப்பாக்குக் கூடத் தெரியாமே மூடிமறைச்சாக்கூட நல்லது''.

''அது எப்பிடியண்ணே முடியும். இப்ப நான் போற கோலத்திலே தான் எல்லாம் விளங்கிப் போகுமே?''என்று தேம்பினுள் சித்திபரீதா.

''அழாதை பிள்ளை, அழாதை'' என்ருன் பொன்னுத்துரை தவிப்புடன். நீ அழாமல் இப்பிடி இடைக்குள்ளே குனிஞ்சு இருந்து கொண்டு வா. வீடு போறவரைக்கும் உன்னை ஒருதரும் காணவேண்டாம். வீட்டைபோய் சமயம் பாத்து இறங்கிக் கொள்ளலாம். உம்மாக்குத் தெரியோணுமென்ருல் நான் சமாதானஞ் சொல்லி அவவைச் சமாளிச்சுக் கொள்ளிறன்''.

சித்திபரீதா அவன் கூறிய எல்லாவற்றிற்குமே பொம்மையைப்போல் தலையை ஆட்டினுள். கார் அப்போது அவர்களின் சுற்று வட்டாரத்தை நெருங்கிக் கொண்டிருந்

தது. அவள் பொன்னுத்துரை கூறியவாறே பின் ஆசனத்துக்கும் முன் ஆசனத்துக்கும் இடையேயிருக்கும் பகுதியில் குனிந்து உட்கார்ந்து கொண்டாள்.

பிரதான ரோட்டுச் சந்தியைக் கார் நெருங்கும் போதே பொன்னுத்துரையின் மனதில் நிம்மதி தோன்றத் தொடங்கிவிட்டது. சித்திபரீதாவைக் கடத்திச் சென்றது யாருக்குமே தெரிந்திருக்காதென்று நம்பத் தொடங்கினான். தெரிந்திருந்தால் இதற்குள் அப்பகுதிகளெல்லாம் எத்தனை களேபுளேயாக இருந்திருக்கும். ரோட்டோரங்களில் எத்தனை பேர்கள் இதைப் பற்றி கூடி நின்று பேசிக்கொண்டிருப்பார்கள்.

சந்தியில் காரைத் திருப்பி வீட்டை நோக்கிச் செல்லச் செல்ல பொன்னுத்துரையின் நிம்மதி அதிகப்படத் தொடங்கியது. எவ்வித பரபரப்பான சூழ்நிலையுமே இல்லை. காரை அதுவரை வேகமாகவே செலுத்திக் கொண்டுவந்தவன் விரைவை மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டான். முஸ்தாபாவின் வீட்டருகே வந்ததும் கார் ஓசையில்லாமலே நின்றது. சமயம் பார்த்து வருவதுபோல் சித்தி உம்மாவும் அந்த நேரத்தில்தான் உள்ளேயிருந்து ஏதோ தேவையாக வெளியே வந்து கொண்டிருந்தாள்.

"என்ன தம்பீ?" என்று பொன்னுத்துரையைக் கண்டதும் விசாரித்தாள் அவள். பொன்னுத்துரையின் புத்தி மின்னல் வேகத்தில் வேலை செய்தது.

கார் நின்ற ஓசையைக் கேட்டால் பாக்கியமோ, சுந்தரியோ வரலாம். சுந்தரி சில சமயம் திருவிழாவில் விழித்திருந்த அசதியில் தூங்கிக் கொண்டிருந்தாலும், மீனாட்சியையும் மல்லிகாவையும் விட்டு விட்டு வந்தாகிவிட்டதோ என்று அறிவதற்காகவாவது பாக்கியம் வருவாள். அதற்குள் சித்திபரீதாவை வீட்டுக்குள் அனுப்பிவிடவேண்டும். ஆனால், அவளின் தாயார் வாசலில் வந்து நிற்கிறாள். மக

ளின் கோலத்தை அவள் கண்டாளென்றால் வேறு வினையே வேண்டாம். அவளே ஊரைக் கூப்பிட்டு விடுவாள்.

''அக்கா! சரியான தண்ணித்தாகமா இருக்கு'' என்று புழுகினான் பொன்னுத்துரை. ''கொஞ்சத் தண்ணிகொண்டு வந்து தாறியளா?''

''அதுக்கென்ன தம்பி. கொஞ்சமிரு வாறன்.'' சித்தி உம்மா வெளிக்கு இப்படிக் கூறினாலும், இந்தத் தம்பி ஏன் ஒரு நாளும் இல்லாமே இன்றைக்கு வந்து, அதுவும் காரிலே, தண்ணி கேக்கிறானென்று உள்ளூர வியப்புடன் எண்ணிக் கொண்டு தான் உள்ளே சென்றாள் அவள்.

பொன்னுத்துரை சுறுசுறுப்பாக இயங்கினான். சட்டென்று கீழே இறங்கி முன்னும் பின்னும் பாதையில் ஒருவரும் வரவில்லையென்பதைக் கவனித்து விட்டு பின் கதவைத் திறந்தான்.

''இறங்கி கெதியா வீட்டுக்குள்ளே ஓடு பிள்ளை.''

சித்திபரீதா காருக்குள்ளிருந்து இறங்கிய வேகத்திலேயே மார்பில் ஒரு கையும் வயிற்றில் ஒரு கையுமாக முக்காட்டுத் துணியையும் சேட்டையும் விலகிவிடாமல் இறுகப்பிடித்தபடி உள்ளே ஓடினாள். பொன்னுத்துரையும் அவளின் பின்னால் வேகமாக வீட்டு வாசல்வரையும் சென்றான்.

உள்ளறைக்குள் போய்ப் புகுந்து கொண்டதும் கேவலும் விசும்பலுமாகச் சித்திபரீதா அழுவது கேட்டது. எல்லாவற்றையும் கெடுக்கப்போகிறாளே என்று பொன்னுத்துரை கலக்கத்துடன் யோசிப்பதற்குள், ''என்னது?'' என்று பதறிக்கொண்டு ஓடி வந்தாள் சித்தி உம்மா. அவள் வந்த வேகத்தில் அவளின் வலது கரத்திலிருந்த தண்ணீர்க் கிளாஸ் கதவின் மீது பட்டு எகிறிப்போய் விழுந்து சிதறியது.

அவளை அலறவிடாமல் விபரத்தைக் கூறிமுடிப்பதற்குள் பொன்னுத்துரைக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது...

சித்தி உம்மா முகத்தில் அறைந்து கொண்டு உள்ளே ஓடினாள். பிறகு ஓடிவந்து அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''ஆண்டவனே!...ஆண்டவனே!...'' என்று அரற்றியபடி சுவரோடு நெற்றியை மோதிக்கொண்டாள். அவளினால் ஒரு நிலையிலேயே இருக்க முடியவில்லை.

பொன்னுத்துரைக்குப் பார்க்கச் சகிக்கவே முடியவில்லை. ''அக்கா! நான் போட்டுப் பிறகு வாறன்'' என்று புறப்பட்டவன் அவளருகே சென்று இரகசியமாகச் சொன்னான்: ''தங்கச்சியைக் கவனமாப் பாத்துக் கொள்ளோணுமக்கா. அதுகும் உணர்ச்சி வேகத்தோட வேதனையைத் தாங்கமுடியாமே இருக்குது. நீங்களும் இப்படிப் பதறித் துடிச்சா அதாலை சகிக்க முடியாது. ஏதாவது இசகுபிசகாச் செய்து போட்டாலும் செய்து போடும்.''

''நான் வாயையே திறக்கமாட்டன் தம்பி'' என்று நடுக்கத்தோடு வாயை மூடிக்கொண்டாள் சித்தி உம்மா. அடுத்து ''தம்பீ!...'' என்று அவனைப் பார்த்துக் கெஞ்சினாள். ''பாக்கியத்தட்டை கூட இதைச் சொல்லிப் போடாதை தம்பி.''

''அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாமக்கா. தங்கச்சியின்ரை வாழ்க்கையிலே இப்ப உங்களைவிட எனக்கு அக்கறை அதிகம்.''

''அந்த அநியாயம் புடிச்சவன் செத்துப்போயிருப்பானு தம்பி'' அவளின் குரலிலிருந்த பயம் பொன்னுத்துரைக்குப் புரிந்தது.

''அப்பிடியொன்று ஆனுக்கூட பரவாயில்லையக்கா. தங்கச்சியின்ரை மானம் சந்திக்கு வர நான் கடைசிவரை விடமாட்டன்'' என்றான் உறுதியோடு.

சித்தி உம்மாவுக்கு எப்படி அவனுக்கு நன்றியைக் கூறுவதென்று புரியவில்லை. மறுபடியும் அவனைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டாள்.

## 26.

முஸ்தாபாவின் வீட்டிலிருந்து வெளியே வரும் போது பொன்னுத்துரைக்கு பாக்கியத்தின் வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை. வழமைபோல் காரோடு ரவுனுக்குப் போகவும் பிடிக்கவில்லை. அதுவரை அன்றைய காலை ஆகாரத்தை உண்ணவில்லையென்பதையும் மறந்து விட்டான் அவன். அவனுக்குச் சிறிது நேரத்துக்குத் தனிமையாக இருந்து யோசிக்க வேண்டும் போலிருந்தது. அதற்கு அப்போதைக்குச் சரியான இடம் அவனது வீடுதான்.

பொன்னுத்துரை இந்தத் தீர்மானத்துடன் வந்து காரில் ஏறி உட்கார்ந்ததன் பின்தான் வீட்டுப் படலையைத் திறந்தபடி லட்சுமி நிற்பதைக் கவனித்தான் அவன்.

''அக்காவைக் கொண்டுபோய்விட்டாச்சா அண்ணை?'' என்று விசாரித்தாள் லட்சுமி.

''ஓம்... நான் கொஞ்சம் பொறுத்து வாறனெண்டு அக்கா கிட்டச் சொல்லு.'' அதற்குமேல் அவளோடு பேச்சை வளர்த்துக்கொள்ளவில்லை அவன். அப்படியே காரைப் பின்புறமாகவே 'றிவேஸில்' தங்களது வீடுவரைக்கும் கொண்டு சென்று வாசலில் நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே சென்றான். பஞ்சாங்கத்தை வைத்துப் புரட்டிக் கொண்டிருந்த வேலாயுதம் தலையைத் தூக்கி அவனை ஒரு தடவை பார்த்து விட்டு மறுபடியும் பஞ்சாங்கத்தைப் பார்க்கலானார்.

பொன்னுத்துரை தகப்பனாரைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. கடந்த ஒன்றரை மாதங்களாக அவன் அப்படித்தான் நடந்து கொண்டான். நேராகத் தனது அறைக்குப் போய் கதவை மூடித் தாழிட்டுவிட்டு கட்டி

லில் சாய்ந்து கொண்டான் பொன்னுத்துரை. வலது கை தலையைக் கோதியபடி பிடரியில் போய்த் தங்கிக் கொண்டது. சித்தி பரீதாவைக் கடத்திச் சென்ற காரைக் கண்டதிலிருந்து அடுத்து நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அவனது புத்தியில் வலம் வரத் தொடங்கின.

பாருக் இறந்து போயிருப்பானோ என்று யோசித்தான். நெஞ்சிலிருந்து தலைவரைக்கும் ஜில்லென்று குளிர் பரவுவது போலிருந்தது. அவனையறியாமலேயே கைகள் நடுங்கத் தொடங்கின. எத்தனை பெரிய தவறொன்று செய்துவிட்டு வந்திருக்கிறோமென்பது அப்போதுதான் அவனுக்குப் புரியத் தொடங்கியது.

சித்தி பரீதாவுக்கு ஏற்பட்ட அலங்கோலத்தைக் கண்களின் முன்னால் கண்டதும் பாருக்கை கொலையே செய்ய வேண்டுமென்று உணர்ச்சிவசப்பட்டுத் துடித்தவன் இப்போது அப்படி ஆகியிருக்கக் கூடாதென்று துடிக்கத் தொடங்கினான். அவன் தன்னையே அந்தச்சமயம் கோபித்துக்கொண்டான். கல்லால் எறிந்தவன் அத்தோடு விட்டிருக்கக் கூடாதா? கத்தியால் ஏன் குத்தப் போனான்?

இனி எந்தவினாடியும் என்னவும் நேரலாமென்று அவனுக்குள் ஒரு கிலி பரவத் தொடங்கியது. பொலிஸ் வரலாம். அவனைக் கைது செய்து கொண்டு போகலாம். கொலையாக இருந்தால் தூக்குத் தண்டனை கிடைக்கும். இல்லாவிட்டால் சிறைத் தண்டனை கிடைக்கும்... எப்படியோ தண்டனை தண்டனைதான்.

பொன்னுத்துரை அதற்குமேலும் கட்டிலில் படுத்திருக்க முடியாமல் எழுந்து அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினான்.

ஆள்காட்டி குருவியொன்று கிரீச்சிடும் ஒலி எங்கிருந்தோ கேட்டது. பொன்னுத்துரை நடையைத் தளர்த்தியபடி யன்னலருகே சென்று கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே பார்த்தான். அவர்கள் வீட்டுப் பெட்

டைக் கோழியை முஸ்தாபாவின் வீட்டுச் சேவல் கோழி துரத்திக் கொண்டோடுவது தெரிந்தது. வேலி முடுக்குக் குள் சேவலிடம் வசமாக மாட்டிக்கொண்டு நின்றது பெட் டைக் கோழி.

பொன்னுத்துரை திரும்பி உள்ளே வந்து கட்டிலில் மறுபடியும் உட்கார்ந்து கொண்டான். மனக் கலக்கமும் பதட்டமும் மெல்ல மெல்லக் குறைய ஆரம்பித்தன.

'நான் ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறன். அதுக்காக சில துன்பங்களை அனுபவிச்சால்தான் என்ன?' என்று துணிச்சலோடு சிந்திக்க ஆரம்பித்தான். சித்தி பரீதா அலங்கோலமான நிலையில் அலறித் துடித்த படி காருக்குள்ளிருந்து குதித்து ஓடி வந்த காட்சி அவன் மனக் கண்ணில் புகைப்படம் போல் தோன்றியது. ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்ற எத்தனை பெரிய தண்டனையை அடைந்தால் தான் என்ன?'

பொன்னுத்துரைக்கு குழப்பங்கள் யாவும் தீர்ந்துவிட் டாற்போல் இருந்தது. இனம்புரியாத அமைதியொன்று மனதில் பரவ எழுந்து, வெளியே வந்தான். பாக்கியத்தின் வீட்டை நோக்கி அவன் கால்கள் நடந்தன. அவளோடு சிறிது நேரத்துக்கிருந்து எதையாவது கதைக்க விரும்பி ஞன் அவன். பொலிஸ் தேடி வந்து விட்டால் பிறகு அவ ளைக் காணவோ கதைக்கவோ இப்போதைக்குச் சந்தர்ப் பம் வரப் போகிறதா?'

முஸ்தாபாவின் வீட்டைக் கடந்து செல்லும் போது இலேசாக அந்தப் பக்கம் பார்த்தான் பொன்னுத்துரை. ஒரு நாளும் இல்லாத வழக்கமாக அன்றைக்கு அந்தவீட்டு வாசல் கதவு சாத்தப்பட்டிருந்தது. வீட்டின் எங்கோ ஒரு மூலைக்குள் சித்தி பரீதா அந்தச் சமய மிருந்து அழுது கொண்டிருப்பாளென்று எண் ணும் போது கண்களில் மண் விழுந்து உறுத்துகிறாற் போல் நீர் கசிந்து இலேசாக உறுத்தியது. ஒரு உயிருள்ள

உடலை மயக்க மருந்து கொடுக்காமலேயே தாறுமாருகக் கீறிக் கிழிப்பது போன்ற அனுபவத்தை அன்றைக்கு அந்தச் சிறுபெண்ணும் அனுபவித்திருப்பாளென்று நினைத்துக் கொண்டான். நெஞ்சு பொருமிப் பொங்கியது.

'பாவியள்! புழுத்துச் சாகிற பாவியள். பச்சைக் குழந்தையாட்டம் இருக்கிற ஒரு பிள்ளையை இத்தனை கொடுமையாய் நடத்த மனம் வந்ததே அவங்களுக்கு...'

"ஏன் நீ வெள்ளென முஸ்தாபா நாநா வீட்டு வரையும் வந்திட்டுப் போனுய்?" என்ற கேள்வியோடு பொன்னுத்துரையை வரவேற்ருள் சமையலறைக்குள்ளிருந்த பாக்கியம். ஒரு மூலையோடிருந்த ஆட்டுக்கல்லுக்கு முன்னுலிருந்து பின்னேர வடைக்கென்று உழுந்தாட்டிக் கொண்டிருந்த சுந்தரி முழங்காலுக்கு மேல் விலகியிருந்த பாவாடையை இழுத்துச் சீராக்கியபடி கொட்டாவி விட்டாள்.

"ஒரு அவசர வேலையக்கா. அதுதான் போனனன்" என்று சமாதானம் கூறியபடி சுவரருகேகிடந்த மணையை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான் பொன்னுத்துரை.

"தேத்தண்ணி போட்டுத் தரவா?"

"உம்..." பாக்கியம் அடுப்பிலிருந்த கறிச் சட்டியை கீழே இறக்கி வைத்து விட்டு கேற்றிலை அதில் தூக்கி வைத்தாள்.

"மீனுட்சியைக் கூட்டிப் போறப்போ பெரியவர் ஏதாச்சும் சொன்னுரா?" என்று விசாரித்தாள். அவள் குறிப்பிட்டது மீனுட்சி தங்கியிருக்கும் வீட்டின் உரிமையாளரான சிவகுருவை. பதில் கூற வாயைத் திறந்த போது பொன்னுத்துரைக்குச் சட்டென்று நெஞ்சு ஜில் லிடுவது பொல் இருந்தது. ஏதோ வாகனமொன்று வெளியே உறுமிக்கொண்டு வந்து நிற்கும் ஓசை அவனுக்குத் தெளிவாகவே கேட்டது. இருதயம் படபடக்கத்

தன்னை யறியாமலேயே இருந்த இடத்தை விட்டு எழுந்து கொண்டான், ''அண்ணு... அண்ணு... என்று மூச்சிரைக்க ஓடி வந்தாள் லட்சுமி. ''அண்ணு... உன்னைப் பொலிஸ் காரர் தேடி வந்திருக்கினம்''

பாக்கியம் பதறிப் போனவளாக தேநீர்போட எடுத்த கோப்பையை வைத்து விட்டு அவன் பக்கம் திரும்பினுள்.

''ஏன்... ஏன்...... என்ன நடந்தது தம்பி?''

ஏனு தெரியவில்லை. பொன்னுத்துரைக்குச் சட் டென்று எல்லாமே இலேசாகிவிட்டது போல் இருந்தது. மனக்கலக்கத்தின் உச்சியில் இனி வேறு மார்க்கமில்லை என்ற நிலையில் ஏற்பட்டதொரு உணர்ச்சியாக இருக்க லாம் அது.

''அதொரு சின்னக் கரைச்சலக்கா'' என்ருன் மெல் லிய குரலில்.

''கரைச்சலா?'' பாக்கியம் வெலவெலத்து விட்டாள். ''நீ ஏன் போனுய் கரைச்சலுக்கு?'' சுந்தரியும் பயத் தோடு வாரிச் சுருட்டிக்கொண்டெழுந்து அவனருகில் வந்து நின்ருள்.

பாக்கியத்துக்கு என்ன பதில் கூறுவதென்று பொன் னுத்துரை யோசிப்பதற்குள் வெளியே சிங்களத்திலும் தமிழிலுமாகப் பேசும் குரல்கள் கேட்டன.

''வீட்டிலே ஆர் இருக்கிறது?'' என்று முரட்டுத்தன மாக ஒரு குரலும் விசாரித்தது.

அதற்கு மேலும் தாமதிப்பது பொன்னுத்துரைக்கு நல்லதாகப்படவில்லை. விறுக்கென்று வெளியே வந்தான். பாக்கியமும் சுந்தரியும் பதட்டத்தோடு அவன் பின்னே ஓடி வந்தார்கள்.

வீட்டு வாயிலை மறைத்துக்கொண்டு பொலிஸ் சார் ஜன்ட் ஒருவனும் இரண்டு பொலிஸ்காரர்களும் நின்ருர் கள். அவர்களின் பின்புறமாக வேலாயுதமும் இராசம்மா வும் கலவரத்தோடு நிற்பதும் தெரிந்தது.

பொன்னுத்துரையைக்கண்டதும், ''நீதானே பொன்னுத்துரை?'' என்று அதட்டியபடி அருகே வந்தான் அந்த சார்ஜன்ட். அவனது வலதுகரத்தில் குண்டாந் தடியொன்று பயமுறுத்துவது போல்சுழன்றுகொண்டிருந்தது.

பொன்னுத்துரை அமைதியாகவே தலையை அசைத்தான்.

''ஓம்... நான் தான்.''

''நீ தானே பாருக்கைக் கத்தியாலே குத்தினது?''

பொன்னுத்துரை அதே நிதானத்துடனேயே மறுபடியும் தலையை அசைத்தான்.

''ஓம்... நான்தான்.''

''ஆ...'' என்றலறியபடி நெஞ்சில் கையை வைத்துக் கொண்டாள் பாக்கியம். சுந்தரி நடுங்கியபடி சுவரோடு சாய்ந்து கொண்டாள்.

பொன்னுத்துரை ஒருவரினது முகத்தையுமே பார்க்கவில்லை. பார்க்கவும் அவன் விரும்பவில்லை. முக்கியமாகப் பாக்கியத்தின் முகத்தைப் பார்த்தால் தன் மனம் பேதலித்து விடுமென்று அவனுக்குத் தெரியும்.

''நாங்கள் ஸ்ரேஷனுக்குப் போய் பேசிக்கொள்ளுவோமா?'' என்று சார்ஜனிடம் கேட்டான். சார்ஜனுக்கு அது விறைப்புத்தனமாகத் தோன்றியது.

''உம்... நட''என்று அதட்டினான் முரட்டுத்தனமாக.

அடுத்த இரண்டு நிமிஷங்களில் பொன்னுத்துரையையும் ஏற்றிக்கொண்டு ஜீப் புறப்பட்டபோது பாக்கியமும் அவளது தங்கைமார்களும் வாய்விட்டு அலறத்தொடங்கி விட்டார்கள்.

பொன்னுத்துரை சிறிதுமே மனம் கலங்கவில்லை. முஸ்தாபாவின் வீட்டை ஜீப் கடக்கும் போது அந்தப் பக்கம் பார்த்தான். இவனுக்கு இப்படியாகி விட்டதே என்ற கவலையோடும், இவன் உண்மையைக் கூறிவிடுவானோ

என்ற பயத்தோடும் சித்தி உம்மா வெளியே நிற்பதும், வாசல் கதவுக்கு பின்புறம் நின்று முகத்தை மட்டும் வெளியே காட்டியபடி சித்தி பரீதா கண்ணீர் வடிப்பதும் அவனுக்குத் தெரிந்தது. அவர்களுக்கு ஆறுதல் கூறுவது போல் புன்னகை செய்தான்.

ஜீப் பொலிஸ் நிலையத்தை நோக்கிப் பறந்தது.

## 27

பதின்மூன்று வயதில் இரண்டு தங்கைமார்களினதும் ஒரு தம்பியினதும் பொறுப்போடு குடும்பப் பாரத்தைத் தாயிடமிருந்து வலிந்து ஏற்றுக்கொண்டதிலிருந்து இதுநாள் வரைக்கும் எவ்வளவோ துன்பங்களையும் எத்தனையோ நெருக்கடிகளையும் எதிர்கொண்டிருக்கிறாள் பாக்கியம். எதற்கும் எந்தச் சமயத்திலும் அவள் மனம் தளர்ந்தது கிடையாது. சாதாரண ஒரு பெண்ணுக்கில்லாத அசாத்தியமான துணிச்சலோடு யாவற்றையும் எதிர்த்துச் சமாளித்திருக்கிறாள் அவள். அப்படியானவள் அன்றைக்குப் பொன்னுத்துரையைப் பொலிஸ்காரர்கள் வந்து அழைத்துப் போனதோடு மனம் பேதலித்தவள் போல் ஆகிவிட்டாள்.

சித்திஉம்மா உடனேயே கீதாவைக் கடைக்கு அனுப்பி முஸ்தாபாவை அழைப்பித்து அவரிடம் விபரத்தைக் கூறி அவரை பொலிஸ்நிலையத்துக்கு அனுப்பிவிட்டாலும் பாக்கியத்தின் கலக்கம் ஒரு துளி கூடக் குறையவில்லை.

''ஒரு ஈ எறும்புக்குக்கூடத் தீங்கு செய்யத் தெரியாதவன் அவன். கத்தியாலே குத்திறளவுக்கு எப்படித்தான் துணிஞ்சானோ......? என்னதான் அப்படி நடந்ததோ......? முருகா...!'' என்று தன்னையும் மீறி அடிக்கடி புலம்பிக் கொண்டவள் நொடிக்கொரு தடவை சித்தி உம்மாவிடம்

ஓடிப் போய், "அவனுக்கு ஒரு வில்லங்கமும் வராது தானேயக்கா" என்றும் தவிப்போடு விசாரித்துக் கொண்டாள். மீனாட்சியையும், மல்லிகாவையும் அழைத்துப் போன போது ஏதும் தவறாக நடந்து, அதனால்தான் பொன்னுத்துரை இப்படி நடந்து கொண்டானோ என்ற எண்ணம் வேறு தோன்றி அவளை நடுங்க வைத்துக்கொண்டிருந்தது.

இவ்வளவோடு வேலாயுதத்தின் நடவடிக்கையும் அவளுக்குப் பீதியை ஊட்டிக்கொண்டிருந்தது.

பொன்னுத்துரையை ஏற்றிக்கொண்டு பொலிஸ் ஜீப் புறப்பட்டதுமே வாயில் வந்தபடியெல்லாம் திட்டத் தொடங்கிவிட்டார் அவர்.

"வேசியொருத்தி பெத்துப் போட்டிட்டுப் போட்டாள். அது நேரத்துக்கு நேரம் தின்று கொழுப்பேறிப் போய் இன்றைக்கு கைமாஞ்சி போடப் போயிருக்குது. வரட்டும் திரும்பிப் பாப்பம். வாசல்படியிலே காலை வைச்சால் இரண்டா முறிச்சுத் தெருநாய்க்குப் போடிறன்."

"பெரியையா!" என்று கெஞ்சியபடி அவரைச் சமாதானம் செய்ய அருகே ஓடிச் சென்றாள் பாக்கியம்.

"ஒருதரும் எனக்கு ஒரு கதையும் சொல்ல வேண்டாம்" என்று காட்டுப் பூனை போல் உறுமிவிட்டு விறுவிறுவென்று போய்விட்டார் அவர்.

எல்லாவற்றையும் எண்ணி நிற்கவும் முடியாமல் உட்காரவும் முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள் பாக்கியம். "முருகா! நீதான் என்ரை தம்பியைக் காப்பாத்தோணும்" என்று அவளின் மனம் விடாமல் ஜபித்துக் கொண்டேயிருந்தது.

சுந்தரி தாவாரக் கம்பைப் பிடித்தபடி நட்ட மரம் போல் நின்று கொண்டிருந்தாள். வாணியும் லட்சுமியும் அழுதழுது அப்போதுதான் ஓய்ந்து போயிருந்தார்கள்.

பாக்கியத்தின் வீட்டு நிலைமை இதுவென்றால் அடுத்த வீட்டு நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. சுடு தண்ணி குடிச்ச பெட்டை நாயைப் போலத் தவித்துக் கொண்டிருந்தாள் சித்தி உம்மா. உள்ளறை ஒன்றிலிருந்து விடாமல் கேட்டுக்கொண்டிருந்த சித்தி பரீதாவின் அழுகை ஒலி ஈயக் குழம்பாக அவளின் காதுகளின் வழியாக உடலுக்குள் புகுந்து ஒவ்வொரு உயிர் அணுக்களையுமே பொசுக்குவது போலிருந்தது. எத்தனை அருமையாக, எத்தனை பதனமாக, எத்தனை செல்லமாக சிறுவயதிலிருந்து மகளை வளர்த்து ஆளாக்கியிருப்பாள் அவள். இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது அவளுக்கு? நினைக்கும் போதே சித்தி உம்மாவின் இருதயம் வெடித்து விடும் போலிருந்தது. 'அல்லா! அந்தக் கேடுகெட்டபாவியளை நீ தான் தண்டிக்கோணும்' என்று உள்ளூர புலம்பிக் கொண்டாள்.

பொன்னுத்துரையின் நிலையை எண்ண அவளின் கலக்கம் மேலும் அதிகமாகியது. பொலிசார் கொடுக்கும் அடி உதைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள் அவள். கணவரின் செல்வாக்கையோ, கெட்டிக்காரத்தனத்தையோ அவள் மட்டமாக நினைக்காவிட்டாலும் அவர் பொலிஸ் நிலையத்துக்குப் போக முன்பு என்னவெல்லாம் நடந்திருக்குமோவென்று எண்ண அவளுக்கு அடிநெஞ்சிலிருந்து நடுக்கம் பரவியது. பொன்னுத்துரை பிடிவாதக்காரன்தான். நினைத்ததைச் சாதிக்கக் கூடியவன்தான். ஆயினும், அடி உதைகளுக்கு முன்னால் அவனால் உண்மையைக் கக்காமலிருக்க முடியுமா? அப்படி அவன் கூறிவிட்டால்......? அப்படி எதுவும் நடக்கக் கூடாதென்று அல்லாவை மன்றாடுவதைத் தவிர சித்தி உம்மாவுக்கு வேறு வழியொன்றும் தெரியவில்லை. காப்பாற்றியவனுக்கு நேர்ந்த அவதியை நினைக்காமல் மகளுக்கு நேரவிருக்கும் அவப் பெயரைப் பற்றியே கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறோமே யென்று அவளுக்கு உறுத்தாமலும் இல்லை.

கரகரவென்று கண்களிலிருந்து கண்ணீர் பொங்க ''ஆண்டவனே...! ஆண்டவனே'' என்று மானசீகமாகப் புலம்பினாள். ''என்ரை மவளின்ரை மானத்தையும் காப்பாத்து. அவளின்ரை மானத்தைக் காப்பாற்றினவனையும் காப்பாத்து...''

பாக்கியத்தின் முருகனும், சித்தி உம்மாவின் ஆண்டவனும் அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றச் சிறிது சிரமப்படவேண்டித்தான் ஆகிவிட்டது.

பொலிஸ் நிலையத்தில் அப்போது பொறுப்பாக இருந்த அதிகாரி இன்ஸ்பெக்டர் தொழிலுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டவர். வயதிலும் மிகவும் இளைஞர். உத்தியோகமிடுக்கு அவரிடம் பரிபூரணமாக இருந்தது. பாரூக்கைக் கத்தியினுல் காயப்படுத்தியவன் தான்தானென்று ஒப்புக்கொண்டவன் ஏன் அப்படிச் செய்தானென்பதற்குக் சமாதானமும் கூருமல், அப்படிக் கூறவில்லை என்பதற்குக் கவலையும் படாமல் விறைப்பாக நின்றதைப் பார்க்க அவருக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது. ஆபாசமான ஒரு வார்த்தையைக் கூறி 'பூட்ஸ்' காலொன்றைத் தரை உதைத்தபடி எழுந்தவர் பளீரென்று பொன்னுத்துரையின் இடது கன்னத்தில் ஒரு அறை அறைந்தார். ''ராஸ்கல், வாயைத் திறக்க மாட்டியா? மூட்டு மூட்டாத் தட்டோணுமா?'' இதைச் சிங்களப் பாஷையில் கூறித்தான் இரைந்தார் அவர். தமிழ் அவருக்குத் தெரியாத பாஷை. ''உமக்கு என்னை அடிக்க அதிகாரமில்லை'' என்று கத்தினுன் பொன்னுத்துரை. ஆத்திரத்தாலும், அவமானத்தாலும் அவனது உடல் பதறியது. ''நான் சொல்றதை எழுதிப் போட்டுக் கையெழுத்தை வாங்க வேண்டியதுதான் உமது கடமை''

''கடமை கடமையென்று சொன்ஞ பிறகும் உதை தான்விழும்'' என்ருர் அருகே அதுவரை மொழிபெயர்ப்பாளராக நின்ற பொலிஸ்காரர். அதற்குள் இன்ஸ்பெக்

டரின் புறங்கை பொன்னுத்துரையின் மறு கன்னத்தில் பதிந்தது.

''கொண்டு போய் லாக்கப்பிலே போடு இவனே. நான் பிறகு வந்து விசாரிக்கிறப் போலே விசாரிக்கிறன்.''

அடி விழுந்த வேகத்தில் பொன்னுத்துரைக்குக் கண்களின் முன்னல் பூச்சி பறப்பது போலிருந்தது. அந்த இன்ஸ்பெக்டரை எதிர்த்துத் தாக்க வேண்டுமென்று பரபரத்த கரங்களையும், நெஞ்சையும் சிரமத்துடன் அவன் அடக்கிக் கொள்வதற்குள் பொலிஸ்காரர் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளாதகுறையாக அவனைத் தள்ளிக் கொண்டு போய் 'லாக்கப்' அறையினுள் தள்ளிவிட்டுக் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டார்.

அப்படியொரு இடத்துக்கு வந்து விட்டோமென்பதைவிட இன்ஸ்பெக்டரினல் ஏற்பட்ட அவமானந்தான் பொன்னுத்துரையின் மனதைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தது. 'பொதுமக்களின் பணத்தைக்கொண்டு பொதுமக்களின் நன்மைக்காக நியமிக்கப்பட்ட இந்தக் கடமை வீரர்கள் சமயங்களில் எத்தனை பண்பு கெட்டு நடந்துகொள்கிருர்கள்?'

இன்றைய ஜனநாயக நாடுகளிலே சர்வாதிகாரக் கோட்டைகளாகப் பொலிஸ் நிலையங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்று எப்போதோ ஒரு அரசியல்வாதி கூறியது அப்போது பொன்னுத்துரையின் நினைவுக்கு வந்தது.

இன்ஸ்பெக்டர் வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவருக்கொரு அவசர ஜோலியிருந்தது. நாலு நாட்களுக்கு முன்பு இரண்டு கொலைகளை ஒரே நேரத்தில் செய்த கொலையாளி ஒருவனின் உறவினரொருவர் அவருக்கென்று விசேஷமாக ஏற்பாடு செய்திருந்த 'சந்தோஷ' விருந்தொன்றுக்கு வாடி வீட்டுக்குப் போயாக வேண்டும் அவர்.

பொலிஸ் நிலைய வேலைகளை அவசரமாக முடித்துக் கொண்டு வெளியே ஜீப்பில் ஏற இன்ஸ்பெக்டர் வந்த சமயத்தில் முஸ்தாபா காரில் உள்ளே வந்து கொண்டிருந்தார். அவரோடு கூட வந்த மனிதரைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டருக்கு வியர்த்து விறுவிறுத்தது போல் ஆகிவிட்டது. அரசியல் வட்டாரத்திலேயே மிகவும் முக்கியமான பிரமுகர் அவர். அவரோடு முட்டிக்கொண்டால் மூன்று நாட்களுக்குள் தண்ணீரில்லாத காட்டுக்குத் தான் வேலை மாற்றம் கிடைக்கும்.

''வரவேணும், வரவேணும்'' என்ற வரவேற்போடு முகமெல்லாம் சிரிப்பாக காரருகே வந்தார் இன்ஸ்பெக்டர். ''என்ன நீங்களே வந்திட்டியள். ஒரு ரெலிபோன் செய்திருந்தா செய்ய வேண்டியதைச் செய்திருப்பேனே.''

முஸ்தாபா காரைவிட்டு வெளியே இறங்கினுரே அல்லாது அந்த மனிதர் அசையக் கூட இல்லை. பொன்னுத்துரையை விசாரிக்கும் போது இன்ஸ்பெக்டர் காட்டிய மிடுக்கை விட அவரிடம் மிடுக்கு அதிகமாக இருந்தது. அவர் மிகவும் சுருக்கமாக வந்த விபரத்தைப் பற்றிக் கூறினுர்.

''தம்பி! இவரின்ரை (முஸ்தாபாவைக் காட்டி) பொடியனெருத்தனை ஏதோ கரைச்சலிலே கொஞ்சத்துக்கு முந்தி அரெஸ்ட் பண்ணினியளாம். அதை ஒருக்கா கவனியுங்கோ. பொடியனைக் கையோடை வீட்டுக்குக் கூட்டிப் போவேணுமென்று விரும்பினுர் இவர். இவர் பெரிய முதலாளி. என்ரை நெருங்கிய சிநேகிதர்.''

கடைசி இரண்டு வார்த்தைகளையும் சற்று அழுத்தத்தோடு கூறிவிட்டு இலேசாக ஒரு புன்னகையும் செய்தார் அவர்.

இதன் பின்பு, இன்ஸ்பெக்டர் பம்பரமாகச் சுழன்ருர்.

பொலிஸ் நிலைய அறையினுள் போனதும் முஸ்தாபா இரகசியமாகக் கொடுத்த நூறு ரூபா நோட்டொன்று

வேறு அவரை அதிகமாகக் குழைய வைத்தது. அடுத்துச் செய்ய வேண்டியதை அவரே நுணுக்கமாகத் திட்டமிட்டுக் கூறினார்.

''முதலாளி! அந்த பாரூக்கின் நிலை கொஞ்சம் சீரியஸாகத்தானிருக்கு. தோள் மூட்டிலே ஆழமான குத்து. கையை எடுக்க வேண்டி வந்திடுமோ தெரியவில்லை. என்ன நடந்ததெண்டு உங்கடை ஆளும் வாயைத் திறக்கிறானில்லை. அவனும் வாயைத் திறக்கிறானில்லை. பொன்னுத்துரை தன்னை வழியிலே மறிச்சு நெத்தியிலேயும் காயப்படுத்தி கத்தியாலேயும் குத்தினான் என்று மட்டும்தான் அவன் வாக்குமூலம் சொல்லியிருக்கிறான். நாங்கள் ஒரு வேலை செய்யலாம். அந்தப் பாரூக் கொள்ளை அடிக்கிற நோக்கமா காரை நிப்பாட்டி கத்தியைக்காட்டி மிரட்டிறப்போ தற்பாதுகாப்புக்காக அவனைத் தாக்கி விழுத்தி அவன்ரை கத்தியைப் பறிச்சே குத்த வேண்டியும் வந்திட்டுது என்று பொன்னுத்துரையின்ரை வாக்குமூலத்திலே எழுதுவம்...... முதலாளி! எதுக்கும் நீங்கள் முதலிலே ஒருவேலை செய்யோணும். ஆஸ்பத்திரி டி. எம். மோவோடை கதைச்சு பாரூக் அந்த நேரத்திலே குடிவெறியோடை இருந்தானெண்டு றிப்போட்டிலை எழுதிக் கோணும்.''

''ஓ... அதைச் செய்யலாம்'' என்று தலையை ஆட்டினார் முஸ்தாபா.

''அப்ப மிஸ்டர் பொன்னுத்துரையை நீங்கள் கூட்டிப் போய் நாளைக்குக் கூட்டி வாங்க. வாக்குமூலம் பதிஞ்சா கோட்டிலே கொண்டு போய் வழக்குத் தாக்கல் பண்ண வேணும். அல்லாட்டி லாக்கப்பிலே வைக்க வேணும். அதுதான் சட்டம்.''

''நான் நாளைக்கு அவசியம் கூட்டி வாறன்'' என்றார் முஸ்தாபா.

அதன் பின்பு இன்ஸ்பெக்டர் சுணங்கவில்லை. அருகே நின்ற பொலிஸ்காரரொருவரை விட்டு பொன்னுத்

துரையை அழைப்பித்தவர், ''மிஸ்டர் பொன்னுத்துரை! நீங்கள் இந்த முதலாளிக்கு வேண்டியவரென்டு எனக்குத் தெரியாது'' என்று சமாதானம் கூறுவது போல் கூறி அவனின் முதுகில் அந்நியோன்னிய பாவத்துடன் தட்டியும் கொடுத்தார்.

பொன்னுத்துரைக்கு எரிச்சல்தான் வந்தது. வெறுப்பும் கசப்பும் மனதினில் குமைய முஸ்தாபாவோடு வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டான். முஸ்தாபாவோடு வந்த பிரமுகர் இன்ஸ்பெக்டரின் பக்கம் வலது கையைத் தூக்கிக் காட்டி, ''பிறகு சந்திப்போம் தம்பி'' என்றார் புன்னகையோடு. கார் புறப்பட்டது.

## 28.

முஸ்தாபா வெளிக்குச் சாதாரணமாகக் கவனிக்க வேண்டியவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் உள்ளூர அவர் எத்தனை தூரம் கலங்கிப் போயிருக்கிறாரென்பது அவரின் முகத்திலேயே தெரிந்தது. சாதாரணமாகவே உட்குழிந்த அவரது கண்கள் அதன் ஆழத்துக்கே போய்விட்டன போலிருந்தது. அடிக்கடி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வது போல் பொடி மட்டையைத் திறந்து வாயினுள் திணித்துக்கொண்டிருந்தார். அவரின் கரங்கள் நடுங்கிக்கொண்டிருப்பது அருகிலிருந்த பொன்னுத்துரைக்குத் தெளிவாகத் தெரிந்தது.

முஸ்தாபா பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டதிலிருந்தே அவனோடு ஒன்றும் பேசவில்லை. கூடவந்த மனிதரை அவரின் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பும்போதுதான்'' தம்பீ!'' என்று அவனின் கைகளைப் பிடித்தார். அதற்கு மேல் அவருக்குப் பேச்சு வரவில்லை. பொலபொலவென்று கண்களில் இருந்து நீர் உதிரத் தொடங்கிவிட்டது.

பொன்னுத்துரைக்கு நெஞ்சு கரைந்துகொண்டு வந்தது. கார் டிரைவர் முன் கண்ணுடியில் அவதானிக்கிருறென்பதையும் கவனித்துவிட்டான் அவன். ''நாநா பிறகு கதைப்பம்'' என்று பேச்சை அத்தோடு முடித்துவிட்டுப் பார்வையை வெளியே திருப்பிக்கொண்டான். அவனுக்கு அப்போது வேருெரு வேதனையும் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. இத்தனையும் நடந்திருந்தும் அவனைப் பெற்றவர் பதறிக்கொண்டோ, புலம்பிக்கொண்டோ ஓடி வரவில்லை. வீட்டிற்தான் இருக்கிருர் அவர். எத்தனை நெஞ்சுரம் அவருக்கு?

நினைக்கும்போது பொன்னுத்துரைக்குப் பெருமூச்சுத்தான் பொங்கிக்கொண்டு வந்தது. 'எப்படியோ தொலைந்து போகட்டும்' என்று எரிச்சலோடு பற்களைக் கடித்துக் கொண்டான். ஆனுலும், ஒழுங்கைத் திருப்பத்தைக் கடந்து அவனது வீட்டைத் தாண்டிக் கார் போகும் போது தகப்பனுரோ, இராசம்மாவோ வெளியில் இல்லாததை அவதானித்ததும் நெஞ்சில் நறுக்கென வலியெடுக்கத்தான் செய்தது.

முஸ்தாபாவின் வீட்டடியில் கார் நின்றதும் பாக்கியம் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தாள். அவளின் தங்கைமார்களும் பின்னுல் ஓடிவந்தனர். சுந்தரி மட்டும் மெல்ல நடந்து வந்து படலையைப் பிடித்துக்கொண்டு நின்ருள். பொன்னுத்துரை திரும்பி வந்துவிட்டானென்ற சந்தோஷத்தைவிட அவளின் முகம் வேறேதோ ஒரு கவலையால் இருண்டுபோயிருந்தது. அந்த நேரத்தில் அவளை அவதானிக்கும் நிலையில் ஒருவருமில்லை.

பாக்கியத்தின் கண்களில் அழுகையும் சிரிப்பும் ஒன்ருகத் தெரிந்தன. ''தம்பி!'' என்று அவனது வலதுகையைப் பிடித்துக்கொண்டாள். ''என்னடா இதெல்லாம்?'' என்ருள் அழாக்குறையாக. பொன்னுத்துரை அந்தநிலையிலும், அவள் விஷயத்தை இலேசாக எடுத்துக்கொள்ளவேண்டும்

என்பதற்காக வலிந்து ஒரு சிரிப்புச் சிரித்தான். ''இப்பவே எல்லாத்தையும் கேக்க வேணுமாக்கா. ஆறுதலாகக் கதைக்கக் கூடாதா?'' என்றும் கேட்டான்.

''சரி,வீட்டை வா,போயிருந்து கதைப்பம்...''

பொன்னுத்துரை வீட்டு வாசலில் நின்ற சித்தி உம்மாவையும் கதவுக்குப் பின்புறம் நின்று கலங்கிய கண்களோடு பார்த்துக்கொண்டிருந்த சித்தி பரீதாவையும் பார்த்து ஆதரவாகப் புன்னகை செய்துவிட்டு, பாக்கியத்தோடு அவளின் வீட்டுப் படலை வரைக்கும் வந்தவன், வீட்டிற்குப் போய் தகப்பனுர் என்ன மனநிலையோடிருக்கிருரென்பதைக் கண்கூடாகவே அறிந்துவிடவேண்டுமென்ற நோக்கத்தோடு, ''அக்கா! நான் ஒருக்கால் வீட்டை போட்டு வந்திடவா?'' என்ருன்.

பாக்கியம் பதறிப் போனவளாக அவன் கையைப் பிடித்துக்கொண்டாள்.

''வேண்டாம்,வேண்டாம். பிறகு போகலாம் அங்கை. இப்ப நீ வா.''

''என்ன விஷயமக்கா?'' என்ருன் பொன்னுத்துரை சந்தேகத்தோடு. பாக்கியம் தயக்கத்தோடு மெல்லச் சொன்னுள்: ''தெரியாதா தம்பி, பெரியையாவின்ரை குணத்தை. மானம் போச்சு அப்பிடி இப்பிடியென்று காச்சு மூச்சென்று கத்திஞர். உள்ளுக்கை தாங்கமுடியாத கவலையாயிருக்கும். அதுதான் இப்பிடி வெளிக்குப் பாஞ்சிருக்கிருர்...''

பொன்னுத்துரை வருத்தத்தோடு சிரித்தான்.

''என்னைப் பெத்தவரக்கா அவர். எனக்கு அவரைப் பத்தித் தெரியும். நீ ஏன் சமாதானம் சொல்ருய்?''

''சரி,அதை விட்டுத் தள்ளு. நீ உள்ளே வா.''

பொன்னுத்துரை மறுபேச்சில்லாமல் அவளின் பின்னே வந்து, கதிரையில் உட்காரப் பிடிக்காமல் வெறுந்தரையிலேயே சுவரோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். லட்

சுமியும், வாணியும், சீதாவும் ஒவ்வொரு பக்கமாக நின்று அவனை ஏதோ ஒரு வகையான பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''சுந்தரீ...! சுந்தரீ...!'' என்றழைத்துக் கொண்டே சமையலறைக்குள் சென்றுள் பாக்கியம். அடுப்பைப் பார்த்த படி நின்ற சுந்தரி வாரிச் சுருட்டிக் கொண்டு அவளின் பக்கம் திரும்பினுள்.

''என்னடி நின்ற நிலையிலேயே தூக்கமா?'' என்று சிடுசிடுத்த பாக்கியம் தேசிக்காய் ஒன்றை எடுத்து அவ ளின் கையில் திணித்தாள்.

''இந்தா விறுவிறுவென்று இதைக் கரைச்சுக் கொண்டு போய் பொன்னுத்துரைக்கிட்டக் குடு. நான் அதுக் குள்ளே சம்பலொன்று போடவேணும். கருவாட்டுச் சம்ப லென்றல் அவனுக்குப் பிடிப்பா இருக்கும்.''

சுந்தரி தலையைக் குனிந்து கொண்டு அவள் கூறிய படி தேசிக்காயைக் கரைத்துக் கொண்டு போய் பொன் னுத்துரையிடம் கொடுத்து விட்டு வந்தாள். அதற்குள் பாக்கியமும் தன் வேலையை முடித்து விட்டாள்.

''இந்தா எல்லாத்தையும் கூட்டி விறுவிறுவென்று ஒதுக்கி வை. அவன் வந்து ஆறுதலா இருந்து சாப்பிட வேணும்...'' சுந்தரி தலையைக் கூட ஆட்டாமல் அவள் சொன்ன வேலையைக் கவனிக்கத் தொடங்கினுள். அவள் ஏதோ பிரமையடைந்தவள் போல் மாறிப்போயிருக்கிறு ளென்று பாக்கியத்துக்குப் புரிந்தாலும் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. பொன்னுத்துரையின் பிரச்சினை தான் அவளின் குழந்தை மனதைப் பாதித்திருக்கிறது என்பது அவளின் எண்ணம்.

பாக்கியம் சமையலறைக்குள்ளிருந்து வெளியே வந் தாள். பொன்னுத்துரை மேலே கூரையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். சுந்தரி கொண்டு வந்து கொடுத்த

தேசிக்காய்த் தண்ணீர் அப்படியே அவன் முன்னல் கிடந்தது.

"நீ இன்னும் இதைக் குடிக்கேல்லையா?" பாக்கியம் கோப்பையை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு எதிரே உட்கார்ந்தாள்.

"என்ன யோசிக்கிருய்? பெரியையாவைப் பற்றியா?" பொன்னுத்துரை மறுக்கவுமில்லை. சம்மதிக்கவுமில்லை. தேசிக்காய்த் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கினுன்.

பாக்கியம் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு கெஞ்சுவது போல் கேட்டாள்:

"என்னெட்டைக்கூடச் சொல்லக் கூடாதா நீ? உனக்கும் பாருக்கென்றவனுக்கும் ஏன் கரைச்சல் வந்ததென்று..." பொன்னுத்துரை கையிலிருந்த கோப்பையை நிலத்தில் வைத்துவிட்டு, "அக்கா! நீ இதைப் பற்றி இப்ப என்னைக் கேளாட்டி பெரிய சந்தோஷமாயிருக்கும்" என்றுன் மெல்லிய குரலில். சட்டென்று பாக்கியத்தின் முகம் சுருங்குவதைப்பார்த்து விட்டுத் தொடர்ந்து சொன்னுன்: "சொல்ல வேண்டிய நேரத்திலே உன்னை விட்டு வேறே ஆரெட்டைச் சொல்லப் போறன் நான். அதுவரை நீ மனசைப் போட்டு அலட்டிக்கொள்ளாமே இருக்கவேணும்..."

"ஒன்றை மட்டும் சொல்லு" என்றுள் பாக்கியம் நடுங்கும் குரலில். "மீனுச்சியை கூட்டிக் கொண்டு போனியே, அவளாலை ஒரு பிரச்சினையுமில்லைத் தானே?"

அவள் அப்படி நினைத்துக் கலங்கிக் கொண்டிருக்கிருளென்று பொன்னுத்துரைக்கு அப்போதுதான் புரிந்தது.

"உனக்கென்ன பைத்தியமாக்கா" என்று சிரித்தான். "அப்பிடியென்று உனக்குச் சொல்லாமே இருப்பனு? இது வேறை பிரச்சினை."

பாக்கியத்துக்கு கொஞ்சம் நிம்மதியாயிருந்தது. சற்று நேரத்துக்கு மௌனமாக அவனைப் பார்த்துக்கொண்டி

ருந்து விட்டு, நேர் எதிரே சுவரில் தொங்கப் போட்டி ருந்த முருகன் படத்தையும் பார்த்தாள். பிறகு ஒரு பெரு மூச்சோடு சொன்னாள்:

"சரி தம்பி. எல்லாம் போகட்டும். நீயா ஒரு பிழைக் கும் போகமாட்டாயென்று எனக்கு நல்லாத் தெரியும். முருகன் சோதிக்கிறான் போலை இருக்கு. நீ நாலைஞ்சு நாளைக்கு வீட்டை போகாமே இங்கைதான் இரு. பெரி ணையயாவின்ரை மனம் மாறட்டும். பிறகு போகலாம். என்ன?'' பொன்னுத்துரை அவள் மனம் வருந்தக் கூடா தென்பதற்காக எங்கோ பார்த்தபடி தலையை ஆட்டி வைத்தான்.

"சரி, எழும்பு சாப்பிடுவம். இரண்டு வாயாவது நீ சாப்பிட்டாத்தான் எனக்கு நிம்மதியா இருக்கும்.''

மறுக்க முடியாமல் அவளோடு கூட எழுந்தான் பொன்னுத்துரை. அவர்கள் சமையலறைக்குள் போகும் போது சுந்தரி கொல்லைப்புறத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். எத்தனை பெரிய கவலையோடு அவள் அந்த நேரம் தவித்துக்கொண்டிருக்கிறாளென்பது ஒரு வருக்குமே தெரியாது.

பாரூக்கைப் பொன்னுத்துரை கத்தியால் குத்திவிட் டான் என்று அவனைத் தேடி வந்த சார்ஜன் சொன்ன போதே அவளுக்குப் பகீரென்றுகிவிட்டது. பாரூக்கின் நிழலைப் போல் எந்த நேரமும் கந்தசாமியும் அவனோடு கூட இருப்பதால் அவனும் இதில் சம்பந்தப்பட்டிருப்பா னோவென்று அவளின் யோசனை ஓடியது. நினைத்துக் கொண்டிருக்கும் போது மறுபடியும் நெஞ்சில் பகீரென்று ஒரு சந்தேகம் தலை தூக்கியது.

'ஒருவேளை சித்தி பரீதாவின்ரை விஷயமாத்தான் இந் தப் பிரச்சினையோ. அவளும் இன்றைக்குத் தனியாத் தான் தையல் வகுப்புக்குப் போனவள்...'

இதன்பின் அவளால் மனம்தரித்துக் கொண்டிருக்க முடியவில்லை. விழுந்தடித்துக்கொண்டு அடுத்த வீட்டுக்கு

ஓடினுள். வாசல் படியில் கால் வைக்கும் போதே மனம் படபடக்கத் தொடங்கி விட்டது. சித்தி பரீதாவின் அழுகைக் குரல் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. நாடி நரம்பெல்லாம் ஒரு விஞடிக்குள் ஜில்லிட்டு விட்டது.

சித்தி பரீதா அழுகிருளேயென்பதல்ல பிரச்சினை. பொன்னுத்துரைக்கு மேலுள்ள சகோதர வாஞ்சையால் அவள் அழலாம். ஆனல், தையல் வகுப்புக்கென்று போனவள் எப்படித் திரும்பி வந்தாள்...'

பொன்னுத்துரையின் கார் காலையில் முஸ்தாபாவின் வீடு வரைக்கும் வந்து விட்டுப் போனது பளீரென்று அவளின் நினைவுக்கு வந்தது. சுந்தரி தன்னை ஆசுவாசப் படுத்துவதற்காக அருகிலிருந்த அரைச் சுவரைப் பிடித்துக் கொண்டாள். இப்போ அவளுக்குத் தெளிவாகிவிட்டது போலிருந்தது. 'சித்தி பரீதா சம்பந்தப்பட்ட ஏதோ வொன்றுதான் நடந்திருக்கிறது?'

உள்ளேயிருந்து வந்த சித்தி உம்மா அவளைப் பார்த்து விட்டு, "என்ன சுந்தரீ?" என்று விசாரித்தாள். ஒன்றுமில்லை என்ற பாவனையில் தலையாட்டிவிட்டு மெல்லத் திரும்பி விட்டாள் அவள்.

அவளுக்கு சித்தி பரீதாவைப் பற்றியும் கவலையில்லை, அந்தப் பாருக்கைப் பற்றியும் கவலையில்லை. அவர்கள் எக்கேடு கெட்டுப் போனுலும் போகட்டும். கந்தசாமி எவ்வளவு தூரம் இதில் சம்பந்தப்பட்டிருக்கிருனென்பதில் தான் அவளின் கவலை இருந்தது. காலையில் தெசவுக்குப் போகாததற்காக அவள் அன்றைக்குப்பட்ட கவலை கொஞ்ச நஞ்சமல்ல. போயிருந்தால் உண்மை தெரிந்திருக்குமல்லவா? இப்போது யாரை விபரம் கேட்பதென்றுதான் அவளுக்குத் தெரியவில்லை. இனி மறுநாளோ அதற்கு மறுநாளோ கந்தசாமியைக் கண்டு உண்மையை அறியும் வரை அவளின் குழப்பமும் கவலையும் தீராது.

பின்னேரம் நாலரை மணியாகி விட்டது. பாக்கியத்தின் வீட்டில் வழக்கமான சுறுசுறுப்பு கொஞ்சமும்

இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலைக்குள் உட்கார்ந்திருந்தார்கள். சுந்தரி தலைவலி என்று அறைக்குள் போய்ப் படுத்துக் கிடந்தாள். அன்றைக்கிருந்த கரைச்சலால் வாடிக்கைக் கடைகளுக்குக் கொடுக்க வேண்டிய பின்னேரப் பட்சண வகைகளையும், மறுநாள் காலை ஆகாரத்தையும் நிறுத்த வேண்டுமென்று பாக்கியம் சொன்னது அவளுக்கு வசதியாகி விட்டது.

பொன்னுத்துரையைத் தனியாக விட்டால் யோசித்து மூளையைக் குழப்பிக் கொண்டிருப்பானென்ற பயத்தில் பாக்கியம் அவனோடிருந்து பழைய கதைகளெல்லாம் கதைத்து விட்டு மாலையாகும் போதுதான் குளிப்பதற்கென்று கிணற்றடிக்குப் போனாள்.

பொன்னுத்துரை சிறிது நேரம் அப்படியே இருந்து விட்டு எழுந்து வெளியே வந்து தன்னுடைய வீட்டை நோக்கிச் சென்றான். தகப்பனார் கோபத்தோடிருக்கிறார் என்பதைத் துளியும் லட்சியம் செய்யவில்லை அவன். அவன் அப்படி என்ன தவறு செய்து விட்டான் இப்போது? பெரியையா என்றழைக்கிற பெண்ணைப் பெண்டாள நினைத்த மனிதர் அவர். அவன் மூன்றும் சாதிக்கார பெண்ணொருத்தியின் மானத்தைக் காக்க வேணுமென்பதற்காக வலுவில் தானே கரைச்சல்களை ஏற்றுக்கொண்டவன். பிறகென்ன அவர் கோபிப்பதும், அவன் பயப்படுகிறதும்...

வீட்டு விறாந்தையில் சாய்வுக் கதிரையில் படுத்திருந்த வேலாயுதம் அவனைக் கண்டதும் வெறி பிடித்த நாய் போலாகிவிட்டார். அவர் விறுக்கென்று எழுந்த வேகத்தில் சாய்வுக் கதிரை சுவரோடு போய் முட்டிக்கொண்டு நின்றது.

''எங்கேயடா வந்தாய் நாயே. படுத்தின அவமானம்போதாதா?'' அவரைப் போல்பதிலுக்குக் கத்தவேண்டுமென்று பொன்னுத்துரைக்கு வேகமெழுந்தாலும் பெற்ற

தகப்பனென்ற ஒன்றுக்காக அப்படியொரு அவமானத்தை அவருக்கு உண்டாக்க விரும்பாமல் பற்களைக் கடித்துக் கொண்டு மௌனமாக நின்றான்.

''இனி இந்த வீட்டு வாசல்படியைக் கூட நீ மிதிக்கக் கூடாது'' என்று உறுமிவிட்டு, தொடர்ந்து வாயில் வந்த படியெல்லாம் திட்டிக்கொண்டிருந்தார் அவர். பவள மணி அம்மாள் தனக்கில்லாமல் வேறு யாருக்கோ அவனைப் பெற்று விட்டாளென்றும் எரிச்சலோடு கத்தினார்.

கோபம் வருகிற போது இப்படிப்பட்ட இழிந்த கதைகள் அவரின் வாயில் வருவது சகஜந்தானென்றாலும் பொன்னுத்துரையால் அதற்கு மேல் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. வெறிகொண்டவன் போல் தடதடவென்று அறைக்குள் ஓடிப் போய் கையில் அகப் பட்ட உடுப்புகளை ஒரு சூட்கேஸுக்குள் திணித்துக் கொண்டு வெளியே வந்தான்.

''இனி இந்த வீட்டுக்கு என்ரை பிணங்கூட வராது''

''போய்த் தொலை'' என்று கத்திவிட்டு சாய்வுக் கதிரையில் சாய்ந்து கொண்டார் வேலாயுதம். இராசம்மா சமையலறைப் பக்கம் நின்று நடப்பதைப் பயத்தோடு பார்த்துக்கொண்டு நின்றாள்.

பொன்னுத்துரை விறுவிறுவென்று வெளியே வந் தான். அப்போது அவன் பாக்கியத்தின் வீட்டுக்குப் போக நினைக்கவில்லை. வேறு தெரிந்த நண்பர்களிடமும் போக நினைக்கவில்லை. எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போய்த் தொலைந்தால் சரி என்றுதான் அவன் எண்ணம் இருந்தது.

வெளிக் கேற்றைத் திறந்து கொண்டு இரண்டு அடி கூட எடுத்து வைத்திருக்க மாட்டான் அவன். குளித்து விட்டு ஈரத் தலையைக் கூடத் துவட்டாமல் பாக்கியம் எதிர்த்தாற் போல் ஓடி வருவது தெரிந்தது.

## 29.

கிணற்றடியிலிருந்து திரும்பி வந்தபோது, ''அண்ணை வெளியிலே போட்டார்''என்று சீதா சொன்ன போதே பொன்னுத்துரை எங்கே போயிருப்பானென்று பாக்கியத்துக்குப் புரிந்துவிட்டது. அதனால்தான் பதறி யடித்துக்கொண்டு ஓடி வந்தாள். பொன்னுத்துரை வந்த வேகத்தைப் பார்த்ததும் அவளுக்கு நிலைமை புரிந்துவிட்டது. அவனை ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை அவள். அவன் கையிலிருந்த சூட்கேஸைப் பிடுங்கிக்கொண்டதன் பின்தான் அவளுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

''வா தம்பி, வீட்டுக்குப் போவம்'' என்றாள்.

''நான் வேறை எங்காவது போவேணும்.''

பாக்கியம் அவன் கோபத்துக்கு மசிந்துபோக ஆயத்த மில்லை.

''பேசிறதை ஒழுங்கையிலே நின்று பேசவேண்டாம். வா, வீட்டுக்குள்ளே போய்ப் பேசுவம்''என்று கூறிவிட்டு அவன் பதிலையும் எதிர்பார்க்காமல் திரும்பி விறுவிறு வென்று நடக்கத்தொடங்கினாள்.

பொன்னுத்துரைக்குப் பற்றிக்கொண்டுவந்தது. ஆனா லும் அவளை என்ன செய்கிறது அவன்? எரிச்சலோடு அப் படியே சிறிது நேரத்துக்கு நின்றவன் அவள் திரும்பிப் பார்க்காமல் போவதைப் பார்த்துவிட்டு, தலையைச் சொறிந்தபடி பின்னால் சென்றான்.

அவன் வருவதற்குள் பாக்கியம் சூட்கேஸை வீட்டுக் குள் வைத்துவிட்டு ஒன்றும் நடக்காததுபோல் தலையை ஒரு பழைய சேலைத் துண்டால் துவட்டியபடி வாசல் கத வோடு நின்றாள். அவன் அருகில் வந்தபோது கூட அவள் பரபரப்பெதையும் காட்டிக்கொள்ளவில்லை.

''தேநீர் போட்டுத் தரவா உனக்கு?'' என்ருள். பொன்னுத்துரைக்கு மனதில் குமைந்துகொண்டிருந்த ஆத்திரம் சட்டென்று வெடித்துவிட்டது.

''விளையாடாதையக்கா'' என்று கத்திஞன். ''சூட் கேஸைத் தா. நான் போகோணும்.''

''விளையாட்டா? உன்னேடையா?'' பாக்கியம் சிரித்து விட்டு பிறகு கேட்டாள்: ''சரி, எங்கை போப்போருய் நீ? சொல்லு.''

''எங்கையாவது போய்த் தொலைஞ்சால் சரிதான்.''

''எங்கையாவது போய்த் தொலையிற நீ, இங்கை இருந்து தொலைச்சாலென்ன?''

''என்னுலே முடியாது அது.''

''அப்ப ஒன்று செய்யடா தம்பி'' என்ருள் பாக்கியம் அமைதியாக. ''போற இடத்து அட்றஸைச் சொல் லிப்போட்டுப் போ. உடனே நீ திரும்பி வரவேண்டியிருக் கும். ஏன் தெரியுமா?''

''ஏன்?'' என்ருன் பொன்னுத்துரை எரிச்சலோடு. இவளேன் சமயம் தெரியாமல் வழவழத்துக்கொண்டிருக் கிருளென்று அவனுக்கு ஆத்திரமாக இருந்தது.

''எனக்கு நீ தானே வந்து கொள்ளிவைக்கோணும்'' பாக்கியம் அதே அமைதியோடு இதையும் சொன்னுலும் அவளின் குரலை அழுகை அடைத்துவிட்டது. திரும்பிச் சட்டென்று சமையலறைக்குள் போய்விட்டாள்.

''பொன்னுத்துரை கைகளைப் பிசைந்துகொண்டு அவள் போன திசையைப் பார்த்தான். கீதாவும் வாணி யும் சுவரோரமாக இருந்து அவனைப் பயத்தோடும் குழப் பத்தோடும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

''அக்காவுக்கு என்ரைநிலைமையே புரியாதாம்''என்று சலிப்போடு முனகியபடி சமையலறைக்குள் சென்ருன் பொன்னுத்துரை. பாக்கியம் சுவரோடு சாய்ந்து நின்ற படி ஓசை படாமல் அழுதுகொண்டிருந்தாள்.

''அக்கா!'' என்று மெல்ல அவளின் தோளைத் தொட்டான் பொன்னுத்துரை. ''இந்தச் சமயத்திலே நீயும் அழுது என்னைச் சித்திரவதைப்படுத்தவேணுமா?''

''நீ மட்டும் என்ன செய்யிருயாம்?'' திரும்பி வெடுக்கென்று கேட்டுவிட்டு விம்மினுள் பாக்கியம். ''அக்கா, அக்காவென்று சொல்ருயே அல்லாது இந்த அக்காவின்ரை மனம் எப்படித் துடிச்சுக்கொண்டிருக்கென்று உனக்குப் புரியேல்லையே?''

''வீட்டை விட்டு வெளிக்கிடிற நான் இங்கை வந்து தங்கிறது நல்லதென்று நினைக்கிறியா நீ?''

''வாயை மூடு'' என்று சீறினுள் பாக்கியம். ''ஊரைப் பற்றிக் கவலைப்படுறியா? உனக்கேன் அந்தக் கவலை? நான் வந்திருந்தால் உனக்குக் கரைச்சலாடி அக்கா என்று கேள். நான் அதுக்குப் பதில் சொல்றன். என்னைப்பற்றிக் கவலைப்படாயாம். ஊரைப்பற்றி பெரிசா நினைக்கிறியே?''

பொன்னுத்துரை சங்கடத்தோடு தலையைச் சொறிந்தான்.

''நான் இப்ப என்ன சொல்றனென்ருல்......''

''நீ ஒன்றும் சொல்லவேண்டாம்'' என்று முகத்திலடிப்பது போலக் குறுக்கிட்டாள் பாக்கியம். ''நான் சொல்றதைக் கேள் நீ. இல்லையென்று பிடிவாதம் பிடிச்சு நீ போறதென்ரு போ. ஆனு, நிச்சயமா அடுத்த தடவை வந்து என்னைஉயிரோடே பாக்கமாட்டாய்.இருக்கிற பெட்டைப் பொடியள் எக்கேடு கெட்டாலும் கெடட்டுமென்று கல்லடிப் பாலத்துக்குப் போய்......'' பொன்னுத்துரை அதற்குமேல் அவளைப் பேசவிடவில்லை.

''உனக்கு எப்பவும் இந்த இழவு பேச்சுத்தான்'' என்று அதட்டியபடி அவளின் வாயைப் பொத்தினுன். பாக்கியம் கண்கள் கலங்க அவனின் அந்தக் கையைப் பிடித்துக்கொண்டாள்.

"என்னை நீயும் கவலைப்படுத்தாதையடா தம்பி. வாழ்க்கையிலே நெடுகவுமே கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறவள் நான். நீ இங்கை நிக்கிறனெண்டு சொல்லு."

"சரி, நிக்கிறனக்கா" என்று மனமில்லாமலே தலையை ஆட்டினான் பொன்னுத்துரை. ஒரு விநாடிக்குள் பாக்கியத்தின் அழுத கண்கள் சிரித்தன.

"இப்பதானடா நீ என்ரை தம்பி" என்றாள்.

பொன்னுத்துரைக்கு அப்போதைய மனநிலைக்கு அங்கே உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை.

"நான் ஒருக்கால் வெளியிலை போட்டுவாறனக்கா" என்று சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டான். பாக்கியம் சந்தேகத்தோடு அவனைப் பார்த்தாள்.

"எங்கை போறாய்?"

"பயப்படாதையக்கா. உன்னை நோகச் செய்து போட்டு நான் ஓரிடமும் ஓடிவிடமாட்டன். சும்மா காலாற கொஞ்ச நேரத்துக்கு நடந்துபோட்டு வாறன்" பாக்கியம் அதற்குமேல் எதையும் வற்புறுத்தவில்லை.

"காலம் உனக்கு நல்லாயில்லை. கெதியிலை வந்திடு" என்று மட்டும் சொன்னாள்.

பொன்னுத்துரை வெளியே வந்து நடக்கத் தொடங்கினான். போய்ச் சிறிது நேரம் கல்லடிப்பாலத்தில் இருந்துவிட்டு வருவோமென்பது அவனின் எண்ணம். அவனுக்கு அப்போது தேவையாக இருந்தது தனிமை. ஆனால், அது நிறைவேற வாய்ப்பில்லாமல்போய்விட்டது.

முஸ்தாபாவின் வீட்டைக் கடக்கும்போது "தம்பீ!" என்று வாசலில் நின்று கூப்பிட்டார் முஸ்தாபா. அவனை உள்ளே அழைத்துக்கொண்டு போய்க் குமுறிக் குமுறி அழுதுவிட்டார் அவர்.

"உன்ரை காலாக நினைச்சு இதைப் பிடிக்கிறன் நான்" என்று அவன் கைகளிரண்டையும் பிடித்துக்கொண்டார் அவர். என்ரை பிள்ளையின்ரை மானத்தை

மட்டுமில்லைத் தம்பி இந்தக் குடும்ப மானத்தை, இந்தக் குடும்பக் கௌரவத்தை, எங்கள் எல்லாற்றை உயிரை... எல்லாத்தையும் காப்பாத்தி இருக்கிறாய் நீ'' என்று அவன் கையைப் பிடித்துக் கண்களிலும் ஒற்றிக்கொண்டார்.

ஒரு தகப்பனின் வேதனையை அந்த நேரத்தில் பொன்னுத்துரையால் சரியாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவனும் கண்கலங்கிப்போய்த்தான் இருந்தான். சித்தி பரீதா அப்போதும் உள்ளேயிருந்து விம்மி அழுவது கேட்டது. 'இந்தப் பெண் பழையபடி ஒரு கவலையற்ற பெண்ணாக ஆகுவாளா?' என்று நினைக்கிறபோது பொன்னுத்துரைக்கு வேதனையாக இருந்தது.

இருள் சூழத் தொடங்கிவிட்டதால் சித்தி உம்மா வந்து லைற்றைத் தட்டி எரியவைத்துவிட்டுப் போனாள்.

''அப்ப நான் போகவா நாநா?'' என்று எழுந்தான் பொன்னுத்துரை. முஸ்தாபா அவனோடு கூட வெளி வாசல்வரையும் வந்தார்.

''தம்பீ! எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. நான் பாத்துக்கொள்ளுவன். நீ பயப்பிடவேண்டாம்.'' பொன்னுத்துரைக்குச் சுருக்கென்று நெஞ்சில் உறுத்தினாற் போல் இருந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் தலையசைத்துவிட்டுப் பாக்கியத்தின் வீட்டுப் பக்கம் திரும்பினான். அதற்கு மேலும் கல்லடிப் பாலத்துக்குப் போய்ச் சுணங்கிவிட்டு வந்தால் பாக்கியம் பதறிக்கொண்டிருப்பாளென்று அவனுக்குத் தெரியும்.

வீட்டுத் திண்ணையில் லாந்தரோடு உட்கார்ந்திருந்த பாக்கியம் அவனைக் கண்டதும், ''சுந்தரிக்குக் காய்ச்சலாக் கிடக்குத் தம்பி?'' என்று கவலையோடு சொன்னபடி எழுந்தாள்.

''இன்றைக்கு நல்லாத்தானே இருந்தாள்.''

''இருந்தாள் தான். ராத்திரி முழிப்பு. இன்றைக்கு உன்ரை பிரச்சினையிலும் பயந்திட்டாள்போலே கிடக்கு,

முனங்கிக்கொண்டு கிடக்கிறாள். இப்பத்தான் கஷாயம் அவிச்சுக் குடுத்திட்டு வந்தன்......''

பொன்னுத்துரை அவளோடு கூட உள்ளே வந்து பார்த்தான். குப்புறப்படுத்துக்கிடந்த சுந்தரி காலடி யோசையைக் கேட்டு தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டாள். பொன்னுத்துரை போய் மெல்ல அவளின் நெற்றியைத் தொட்டுப் பார்த்து விட்டுத் திரும்பி வந்தான்.

''சுடுகுதுதானே தம்பி?'' என்றாள் பாக்கியம் கவலையோடு.

''லேசாச் சுடுகுதுதானக்கா. காலைக்குள்ளே மாறிப் போகும்.''

அவன் வைத்தியனில்லாவிட்டாலும் அவன் சொன்ன தன்பின் பாக்கியத்துக்கு ஆறுதலாக இருந்தது......

அன்றிரவு பொன்னுத்துரை தனது படுக்கையை வெளித் திண்டிலேயே போடுவித்துக்கொண்டான். தனி மையில் படுத்திருந்து யோசித்துக்கொண்டிருப்பது மன துக்குச் சிறிது சுகத்தைக் கொடுத்தது. ஒவ்வொரு சம்ப வங்களாக அவன் சிந்தையில் வலம் வந்துகொண்டிருந் தது.

''பாருக் ஆஸ்பத்திரியில் இறந்துபோனால் என்ன நடக்கும்?'' என்று யோசிக்கத் தொடங்கினான். அன் றைக்கு லாக்கப்பில் இருந்தபோது அந்த அறைக்குப் போடப்பட்டிருந்த கம்பிகளின் வரிசை அவன் கண்களில் தெரிந்தது. எப்போதோ ஒரு சமயம் நண்பனொருவனோடு போய்ப் பார்த்த தூக்குமேடைக் கட்டிடமும் நினைவுக்கு வந்தது. மனதில் பயம் தோன்றுகிறதா இல்லையா என்றே அவனுக்குத் தெரியவில்லை. ஏதோ இனம் பிரிக்கமுடியாத இரண்டுங்கெட்டான் நிலைமை...

காற்று திடீரென்று அதிகமாக வீசுவது போல் நடு முதுகில் குளிர் பரவியது. சரிந்து படுத்திருந்தவன் மல் லாக்காக நிமிர்ந்துகொண்டான்,

சுவரிலிருந்து ஒரு பல்லி 'ச்...ச்'சென்று சூழ் கொட்டியது. பாக்கியம் உள்ளே செருமும் சத்தமும் கேட்டது. அவளுக்கும் அன்றைக்குத் தூக்கம்பிடிக்காதென்று பொன்னுத்துரைக்குத் தெரியும். அவளுக்குத்தான் அவன் மேல் எத்தனை அன்பு......?

நினைத்துக்கொண்டிருக்கும்போதே பொன்னுத்துரையின் கண்கள் கலங்கிக்கொண்டுவந்தது. வீட்டில் நிற்காவிட்டால் கல்லடிப் பாலத்துக்குப் போய்க் குதித்துவிடுவேனென்று எத்தனை வேகத்தோடு சொன்னுள். அவளை நம்ப முடியாது. முரட்டுப் பிடிவாதக்காரி. சொன்னபடியே செய்துவிடுவாள்......

அவளுக்குக்கூட நடந்த உண்மையைச் சொல்லாமலிருக்கிறுேமென்பது பொன்னுத்துரையின் மனதை உறுத்த ஆரம்பித்தது. அவனுக்காக இன்றைக்கு எதையும் செய்யும் ஆயத்தத்தோடு இருக்கிற ஒரேயொரு ஜீவன் அவள் தானே. நாளைக்கு வழக்கில் இசகு பிசகாகி மறியலுக்குப் போகவேண்டி நேர்ந்துவிட்டால்... நல்லகாரியமொன்றுக்காகத்தானே தம்பி போயிருக்கிறுனென்று அவள் சந்தோஷப்படவேண்டாமா?

பொன்னுத்துரை ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்தவனுக எழுந்துகொண்டான். அவன் வெளியே படுத்திருந்ததால் பாக்கியம் வெளிக் கதவைப் பூட்டவில்லை. மெல்ல உள்ளே வந்து "அக்கா!" என்று கூப்பிட்டான். பாக்கியம் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"என்ன தம்பி?"

"இங்கை வா. உன்னேடே கொஞ்சம் தனியாக் கதைக்கோணும்." பாக்கியம் என்னவோ ஏதோவென்ற பதட்டத்தோடு அவனேடு கூட வெளியே வந்தாள்......

சுந்தரியும் அவர்களைப்போல்தான் அவ்வளவு நேரமும் தூக்கம் பிடிக்காமல் தவித்துக்கொண்டிருந்தாளென்பதோ, அல்லது அவளும் அப்போது எழுந்து பின்னுல் வருகிறுள் என்பதோ இருவருக்குமே தெரியாது......

# 30.

கொல்லைப்புறக் கிணற்றுக் கட்டின் மேலிருந்து பாக்கியத்திடம் நடந்த விபரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தான் பொன்னுத்துரை. வலதுபுறமாக இருந்த மாமரத்தின் அடியோடு, நெஞ்சு துடிக்க ஒட்டிஞற்போல் நின்ருள் சுந்தரி. சரியாக மூச்சு விட்டாலே கேட்டுவிடக் கூடிய தூரம்......

பாக்கியத்துக்கு பிரமை பிடித்துவிடும்போலிருந்தது.

"என்னடா தம்பி சொல்ருய்?" என்று கேட்கிற போதே அவளுக்கு மூச்சு வாங்கியது. "எங்கடை சித்தி பரீதாவுக்கா இப்பிடி நடந்தது?"

சுந்தரிக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றத் தொடங்கி விட்டது. விழுந்துபோகாமலிருப்பதற்காக எதிரேயிருந்த மாமரத்தை இரு கைகளாலும் இறுகப் பிடித்துக்கொண்டாள். ஏதோ ஒரு உண்மையைப் பொன்னுத்துரை சொல்லத்தான் தமக்கையை எழுப்பிக்கொண்டு போகிருனென்று புரிந்துகொண்டுதான் அவள் பின்தொடர்ந்து அங்கே வந்திருந்தாலும் அந்த உண்மையில் கந்தசாமி இத்தனை பயங்கரமாகச் சம்பந்தப்பட்டிருப்பானென்று அவளுக்குத் தெரியாது.

"அக்கா! இந்தக் கதைகளை மறந்துங்கூட நீ வெளியிலை சொல்லக்கூடாது. நான் ஜெயிலுக்குள்ளே போனலுங்கூட இது உன்ரை மனசுக்குள்ளேதான் இருக்கோணும். ஒரு பெண்ணின்ரை மானமென்கிறது எல்லாத்தையும் விடப் பெரிய விஷயம் என்கிறதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை..." என்று பாக்கியத்திடம் கூறிக் கொண்டிருந்தான். பொன்னுத்துரை.

மரண அடி விழுந்தவள்போல் உடலைச் சிலிர்த்துக் கொண்டாள் சுந்தரி. அதற்குமேல் அவளால் அங்கு

நிற்கமுடியவில்லை. பொன்னுத்துரை கூறிய கடைசி வார்த்தை இரைச்சலோடு இடைவிடாமல் காதுகளுக்குள் கேட்பது போலிருந்தது. ''ஒரு பெண்ணின்ரை மானமென்கிறது எல்லாத்தையும் விடப் பெரிய விஷயம் என்கிறதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை......'' மெல்லத் தள்ளாடியபடி திரும்பிய சுந்தரி எப்படி வந்து அறைக்குள் படுத்துக்கொண்டாளோ அது அவளுக்கே தெரியவில்லை......

பாக்கியமும், பொன்னுத்துரையும் கிணற்றடியிலிருந்து திரும்பி வரும்போதுகாய்ச்சலின் உச்சவேகத்தோடு கிடந்து வாய் பிதற்றிக்கொண்டிருந்தாள் அவள்.

அன்று பாக்கியம் அனுபவித்த பயமும் பதட்டமும் ஒரு நாளுமே அனுபவிக்கவில்லை. பொன்னுத்துரையின் பிரச்சினையில் கலங்கிப்போயிருந்த அவளை சுந்தரியின் நிலை அடுத்த கலக்குக் கலக்கிவிட்டது. இரவோடிரவாக வேலாயுதத்தைப் போய் எழுப்பி அவரிடம் மருந்து வாங்கி வந்து சுந்தரிக்குக் கொடுத்து... பக்கத்திலேயே உட்கார்ந்திருந்து... சுந்தரிக்கு விடியற்காலை நாலரை மணிபோல் நினைவு வரும்வரைக்கும் பாக்கியத்துக்கு உயிரே இல்லாததுபோல்தான் இருந்தது.

அவளுக்கு நினைவு வந்ததும் பாக்கியம் இன்னும் நெருக்கமாக உட்கார்ந்து அவளின் தலையையும் முகத்தையும் தடவினாள்.

''என்னடா குஞ்சு செய்யுது?'' என்று ஆதரவாகக் கேட்டாள். சுந்தரியின் கண்களில் குபீரென்று நீர் பொங்கி இரு கன்னங்களிலும் கோடாக வழிந்தது. இந்த அக்காவுக்கு எத்தனை பெரிய துரோகம் செய்திருக்கிறோமென்ற உணர்வு முழு வேகத்தோடு அவளின் மனதை உறுத்தியது.

பாக்கியம் அவளின் மனநிலையை உணராமல் பதட்டத்தோடு கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

''அண்ணுவுக்கு ஏதும் நடந்துபோயிடுமென்று பயந்து போனியா?'' என்று அடுத்த பக்கத்திலிருந்த பொன்னுத்துரையைக் காட்டிக் கேட்டாள். அடுத்து அவளே ஆறுதலும் சொன்னுள். ''அப்பிடியொன்றும் நடக்காதம்மா, நீ கவலைப்படாமே நிம்மதியா இரு.''

உனக்கு விசர்தான் பிடிச்சிருக்கு. எனக்கென்ன நடக்கப்போகிறதென்று பயப்படுகிறுய்?'' என்று பொன்னுத்துரையும் அதட்டுவதுபோல் கூறிவிட்டு அவளின் இடது கையை எடுத்து அன்போடு தடவிக்கொடுத்தான்.

சுந்தரிக்கு அவர்களின் வெகுளித்தனத்தைப் பார்க்க ஓவென்று அலறவேண்டும் போலிருந்தது. திரும்பி தலையணையில் முகம்பதியக் குப்புறப் படுத்துக்கொண்டாள். தலையணை அவளின் கண்ணீரை உறிஞ்சத்தொடங்கியது.

சிறுவயதிலிருந்தே துன்பமென்றுல் என்னவென்று தெரியாமல் வளர்ந்தவள் சுந்தரி. அன்றைக்குத் திடீரென்று ஏற்பட்ட அந்த எதிர்பாராத அதிர்ச்சியின் தாக்கத்தை அவளால் ஜீரணித்துக்கொள்ளமுடியவில்லை. அவள் பிரமைபிடித்தவள் போலிருந்தாள். காலையில் பொன்னுத்துரை முஸ்தாபாவோடு பொலிஸ் நிலையத்துக்குப் போனது, பிறகு மத்தியானத்துக்குப் பின் திரும்பி வந்து ஒரு மாதத்துக்குப் பின் ஒரு நாளைக் குறிப்பிட்டு நீதிஸ்தலத்தில் தவணை போட்டிருக்கிறுர்களென்றது எல்லாமே அவளுக்குக் கனவுபோல் இருந்தது......

நாலு நாட்களுக்குள் நாற்பது நாட்கள் காய்ச்சலில் கிடந்தவள்போல் ஆகிவிட்டாள் அவள். இரவில் அவளுக்குச் சரியான தூக்கமுமில்லை. பாக்கியத்திடம் கிணற்றடியில் வைத்துப் பொன்னுத்துரை கடைசியாகச் சொன்ன வார்த்தையை நினைக்கும்போதெல்லாம் அவளின் உடலெல்லாம் பழுக்கக் காய்ச்சிய ஊசியை ஏற்றுவது போன்ற வேதனையாக இருக்கும்.

இந்த வேதனை போதாதென்று அவளின் மனதைக் கலக்குவதற்கு இன்னெரு பயங்கரமும் சேர்ந்துகொண்

டது. முதல் மாதம் அவளுக்கு வரவேண்டிய மாதவிலக்கு அந்தத் தடவை வரவில்லை. சில சமயங்களில் அவளுக்கு நாட்கள் பிந்திப்போவது சகஜமாகையால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், இப்போது இரண்டாவது தடவையாகவும் அது இல்லையென்று ஆனபோதுதான் பகீரென்று அவளின் அடி நெஞ்சிலிருந்து பயம் கிளைவிட ஆரம்பித்தது. சித்திபரீதாவின் விஷயத்துக்குப்பிறகு பாக்கியம் அவளை நெசவுக்குவிடாமல் மறித்துவிட்டதால், கந்தசாமியைக் கண்டு கதைக்கக்கூடிய வாய்ப்பும் அவளுக்கு இல்லாமல்போய்விட்டது. போனாலும் அவனைக் காணலாமென்ற நம்பிக்கையும் அவளுக்கில்லை.

சுந்தரி நெருப்புக்குள் நிற்பவள்போல் ஒவ்வொரு வினாடியும் துடித்துக்கொண்டிருந்தாள். அப்படியொன்றும் விபரீதமாக உடலில் உற்பத்தியாகி இருக்காதென்று சமாதானம் கொள்ளவும் வழியில்லை. அவளின் உடலில் புதிதாகச் சில நாட்களாகத் தோன்றியிருந்த அயர்ச்சி... இருந்திருந்தாற்போல் அடிவயிற்றிலிருந்து குடல்களையெல்லாம் வாரிக்கொண்டு வருவதுபோன்ற குமட்டல்... புளிப்பான பதார்த்தங்களுக்கு ஆவலைத் தூண்டும் மசக்கையுணர்ச்சி... இந்த அறிகுறிகளையெல்லாம் கந்தசாமி கொடுத்த புத்தகங்களில் எத்தனைதடவைகள் படித்தவள் அவள்.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து எப்படித் தப்புவதென்று அவளுக்குத் தெரியவில்லை.

''ஆண்டவனே! இந்த ஒரு தடவை மட்டும் என்னைக் காப்பாத்து. இனி என்ரை வாழ்க்கையிலே நான் தவறே செய்யமாட்டன்'' என்று இரகசியமாக ஆண்டவனிடம் மன்றாடி அழுவதுதான் அவளுக்கு அப்போதைக்குச் செய்யக்கூடிய ஒரே வேலையாக இருந்தது.

இதற்கெல்லாம் எத்தனையோ மருந்துகள் இருக்கென்று அவளுக்குத் தெரிந்தாலும் அவைகளுக்கு என்ன பெயரைச் சொல்லி எங்கே போய் வாங்குவதென்று

அவளுக்குத் தெரியாது. தெரிந்தாலும் இளம்பெண்ணுன அவளால் போய் வாங்கத்தான் முடியுமா?......

பாக்கியத்தைப் பார்க்கிறபோதெல்லாமே அவளுக்கு ஒவ்வொரு உயிர்அணுக்களும் நடுங்கும். தங்கைகளின்மேல் எத்தனை நம்பிக்கையோடு இருக்கின்றவள் அவள். உண்மையைத் தெரிந்தால் உயிரை விட்டுவிடமாட்டாளா?...

இதற்குள் பொன்னுத்துரையின் வழக்குக்கு மறு தவணை வந்துவிட்டது.

அன்றைக்குக் காலையில் நீதி ஸ்தலத்துக்குப் போகும் போது கூட நிம்மதியான மனதோடுதான் போனுன் பொன்னுத்துரை. பாரூக்கை அந்த ஒரு மாத இடைவெளிக்குப்பின் அன்றைக்குத்தான் அங்கே வைத்துக் கண்டான் அவன். அவனின் காயம்பட்ட வலதுதோள் பக்கம் கையிருக்கவேண்டிய இடத்தில் வெறும் சேட் துணிதான் தொங்கிக்கொண்டிருந்தது. 'பாரூக்கின் கையை எடுத்துவிட்டார்களாம்' என்று முஸ்தாபா ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை நடந்தன்றே பொன்னுத்துரைக்கு வந்து சொல்லியிருந்தாலும் அன்றைக்கே நேரில் அவனை அப்படியொரு நிலையோடு காணுகிறபோது பொன்னுத்துரைக்குப் பெருத்த ஆறுதலாக இருந்தது. இவன்செய்த கொடுமைக்கு இந்தமட்டிலாவது என்னுல் இவனைத் தண்டிக்கமுடிந்ததேயென்று மகிழ்ச்சியோடு நினைத்துக்கொண்டான் அவன்.

அன்றைக்கு நீதி ஸ்தலத்தில் முதல் வழக்காக அவனின் வழக்கைத்தான் எடுத்திருந்தார்கள். வக்கீல்களின் திறமையான வாதப்பிரதிவாதங்களெல்லாம் முடிந்ததன் பின் நீதிபதி தீர்ப்பைக் கூறினுர்.

"...எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ஆறு மாதச் சிறைத்தண்டனை விதிக்கிறேன்..."

சிரித்த முகத்தோடு இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பொன்னுத்துரை விரும்பினுலும் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரையும் நடுக்கமொன்று ஊடுருவுவதை

அவனால் தடுக்கமுடியவில்லை. முஸ்தாபா கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக்கொண்டு நின்றார். பொன்னுத்துரை மிகவும் பிரயாசைப்பட்டு நீதிஸ்தலத்துக்கு வந்தவர்களின் முன் சற்றும் கலங்காதவன்போல் தன்னைக் காட்டிக்கொண்டான். அவனுக்கு அந்த நேரமிருந்த மிகப் பெரிய ஆறுதல், சித்திபரீதார்வின் சங்கதியெதுவும் விசாரணையின்போது வெளிவராததுதான்......

## 31.

மார்கழி மாதப் பனிக்குளிரின் விறைப்போடு இலைகளின் சலசலப்பையும் உணரக்கூடிய 'கருக்கல்' நேரம். முஸ்தாபாவின் வீட்டுக் கோழிச் சேவல் ஓங்கிக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. முற்றத்து வேப்ப மரத்தில் காகமொன்று கரையத் தொடங்கி பின் நாலைந்து காகங்கள் கரையத்தொடங்கின.

பாக்கியம் என்ற யந்திரம் வழமைபோல் சமையலறையில் இயங்கிக் கொண்டிருந்தது. இடியப்பம் அவிப்பது, தோசை வார்ப்பது எல்லாம் மள மளவென நடந்து கொண்டிருந்தன. சேலைத்தலைப்பால் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு நிமிரும் போது பாக்கியத்துக்குப் பொன்னுத்துரையின் நினைவு வந்தது.

''வெள்ளியோடை நாலு வெள்ளி இருபத்தொன்பது, சனி முப்பது ஞாயிறு முப்பத்தொன்று, இன்றைக்குத் திங்கள் முப்பத்திரண்டு'' என்று தனக்குள் கணக்குப் பார்த்துக் கொண்டாள். பொன்னுத்துரை சிறைக்குப் போனதிலிருந்தே அவளிடம் இந்தக் கணக்குப் பார்க்கும் வழக்கம் ஒட்டிக் கொண்டு விட்டது.

''முருகா!'' என்று பெருமூச்சோடு வேண்டிக் கொண்டாள். ''அவனுக்கு எந்தக் குறையும் வைச்சிடாதே.''

''டங்!'' என்று ஐந்தரை மணிக்காக வெளியேயுள்ள மணிக்கூடு ஒரு தடவை அடிப்பது கேட்டது. மாட்டுக் கொட்டில் பக்கம் மாடொன்று கத்துவதும் கேட்டது.

பொன்னுத்துரை வரும்வரையும் இந்த மாடு அழுது கொண்டுதான் இருக்க வேண்டுமென நினைக்க அவளுக்கு மறுபடியும் பெருமூச்சு வந்தது. மாடு ஏன் அழுகிறதென் பதைப் புரிந்து கொண்டு, ''தம்பி! சிவப்பி மாடு அழுது கொண்டிருக்கு'' என பொன்னுத்துரைக்குச் சொன்னாலே அவன் சின்னத் தம்பியாரிடம் அதைக் கொண்டு போய் விடுவான். இப்போது யாரிருக்கிறார்கள் அவளுக்கு இந்த உதவிகளைச் செய்ய?

பாக்கியத்துக்குக் கண்கள் கலங்கிவிட்டன. அவசர மாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு இடியப்பம் தோசைகளைப் பெட்டியில் அடுக்கத் தொடங்கினாள். அவள் அதை முடிப்பதற்கும் சுந்தரி சம்பலோடு வருவதற்கும் சரியாக இருந்தது ''சம்பலைப் போட்டிட்டு எல்லாத்தை யும் ஒதுக்கிவை'' என்று வேலைகளை அவளிடம் பொறுப் பித்துவிட்டு வரும்போது பொன்னுத்துரை மேலிருந்த கவலை பாக்கியத்துக்கு அவள்மேல் திரும்பிவிட்டது.

''இவளுக்கு என்னாகிவிட்டுது?'' என வேதனையுடன் நினைத்தபடி கூட்டுமாறை எடுத்துக் கொண்டு முற்றப் பக் கம் நடந்தாள். முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருக்கும் போதும் அதே கவலையில் தான் மனம் பின்னிக் கொண்டி ருந்தது.

அவளும் சில நாட்களாகச் சுந்தரியைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள், அவள் பழைய சுந்தரியாகவே இல்லை. விளையாட்டுத்தனம், வெகுளித்தனம், குறும்புத் தனம் இவைகள் தான் இருக்க வேண்டாம், முகத்தில் மகிழ்ச்சியாவது கொஞ்சம் இருக்கவேண்டாமா?

ஆரம்பத்தில் பொன்னுத்துரையின் பிரச்சினைதான் அவளின் குழந்தை மனதைத் தாக்கியிருக்கிறதென எண்ணியிருந்தாள் பாக்கியம். அது விரைவிலேயே தவ

றென்று அவளுக்குப் புரிந்து விட்டது. அவள் மலங்க மலங்க விழிப்பதும், பிரமை பிடித்தமாதிரி இருப்பதும் அதற்காக இருக்க முடியாதென்று அவளுக்குத் தோன்றியது.

"உனக்கு என்னடி ஆச்சு? ஏன் இழவு விழுந்தவளைப் போல இருக்கிருய்?" என்று கூட மனம்பொறுக்க முடியாமற் கேட்டுப் பார்த்து விட்டாள். சுந்தரி ஏதோ வாயில் வந்தபடி உளறினுளேயல்லாது சரியான பதிலெதையும் கூறவில்லை. அவளும் தான் எப்படிச் சொல்லுவாள் அதை.

பாக்கியத்துக்கு இது ஒரு வகையில் பெரிய மனக் குறைதான். தாய்க்குத் தாயாக இருந்து வளர்த்தும் சுந்தரி உள்மனதின் இரகசியத்தை அவளிடம் வாய்விட்டுக் கூறவில்லையே...

இதைத்தவிர, சுந்தரி உடல் ரீதியான தவறெதுவும் விட்டிருப்பாளென்று அவள் கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லை. அவள் வளர்த்த தங்கைமார்களில் அத்தனை நம்பிக்கை அவளுக்கு. மீனுட்சியைக்கொண்டுதான் 'நைசாக' அவளின் மனதை அறிய வேண்டுமென நினைத்துக் கொண்டிருந்தாள் பாக்கியம். இவளிடமுள்ள பயம் அவளிடம் இல்லாததால் சுந்தரி மனந் திறந்து அவளிடம் தன் குறைபாடுகளைச் சொன்னுலும் சொல்லலாமல்லவா....

பாக்கியம் இதற்காகவும் அடுத்த ஒரு வாரத்திற்குள் வரப்போகும் மீனுட்சியின் மார்கழி விடுமுறையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்...

அடுத்த வீட்டுச் சித்தி உம்மாவும் கடந்த சில நாட்களாக தீராத மனக் கவலைகளோடும், சில ஆவலான எதிர்பார்ப்புகளோடும் தவித்துக் கொண்டிருந்தாள். பாரூக்கால் சித்திபரீதாவுக்கு கரைச்சல் ஏற்பட்ட நாளிலிருந்து தொடங்கிய பிரச்சினைகள் தான் இவை.

சித்திபரீதாவின் மானத்தை சந்தி சிரிக்கவிடாமல் பொன்னுத்துரை காத்துவிட்டாலும்,எவ்வித கவலையுமற்ற

சிட்டுக்குருவியாக நடமாடிக் கொண்டிருந்த அவளது மனதை அந்த அதிர்ச்சி தாக்கியவிதம் சித்தி உம்மாவை நெஞ்சு பதைக்க வைத்தது.

அந்த குறுகிய இடை வெளிக்குள் துரும்பாக இளைத்து விட்டாள் சித்திபரீதா. அவளின் சிரிப்புச் சத்தமே அந்த வீட்டில் கேளாமல் போய்விட்டது. எந்நேரமும் அழுதபடி ஒரு மூலைக்குள் ஒடுங்கியிருப்பாள். ஒவ்வொரு வேளைச் சாப்பாட்டுக்கும் அவளைச் சித்தி உம்மா ஓராயிரம் தடவைகள் போய்க் கெஞ்சவேண்டியிருக்கும்.

''பாவிகள்! நாசமாப் போற பாவிகள்'' என்று மனம் நொந்து பாருக்கையும், கந்தசாமியையும் எந்நேரமும் திட்டிக் கொண்டிருப்பாள் சித்தி உம்மா.

மகளுக்கு ஒரு திருமணத்தைச் செய்து வைத்து விட்டால் அவளின் மனம் மாறுதலடைய ஒரு வாய்ப்பு உண்டாகுமென்று அவளுக்குத் தோன்றியது. இந்த எண்ணம் தொடங்கியதிலிருந்து அவள் கணவனைச் சீராக உறங்கக் கூட விடுவதில்லை. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு இடத்தைக் குறிப்பிட்டு அவரை விரட்டிக் கொண்டிருப்பாள்.

முன்பு தேடித் தேடி வந்தபோது—உதறி உதறித் தள்ளியவர்கள் அவர்கள். இப்போது அவர்களாகத் தேடித் தேடிப் போகிறபோது ஏதோ இசகு பிசகாக நடந்திருக்குமோவென்று எல்லோருமே பயந்து விலகினார்கள்.

கடைசியாக, இப்போது தான் ஒரு பையன் அமைந்து வந்துகொண்டிருந்தான். கிளறிக்கல் வேலை. இதுவே சித்தி உம்மாவுக்குப் பெரிதாகப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்புதான் பெண்ணை வந்து பார்த்துவிட்டு போய்க் கடிதமெழுதுவதாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தார்கள்.

''ஆண்டவனே!...இந்த இடத்தையாவது திகையச் செய்து என்ரை பிள்ளைக்கு ஒரு வாழ்வைக்கொடு'' என்று சித்தி உம்மா மன்றாடாத நேரமேயில்லை......

அன்றைக்கு மத்தியானம் பன்னிரண்டு மணி. காலையில் கடைக்குப் போயிருந்த முஸ்தாபா வியர்க்க விறுவிறுக்கக் காரொன்றில் வந்திறங்கினார். அவரின் முகத்திலிருந்த மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. சித்தி உம்மாவை அவசரமாகக் கூப்பிட்டு கையில் வைத்திருந்த கடிதமொன்றை உற்சாகமாகக் காட்டினார்.

''பாத்தியா கடிதம் வந்திருக்கு, மாப்பிள்ளை வீட்டார் போட்டிருக்கினம், நிக்காஹ்வைச் சீக்கிரம் வைக்கலாமாம். மற்ற விஷயங்களைப் பேச நேரிலே வரட்டாம்...''

''அல்லாஹ்! எல்லாம் உன்ரை செயல்'' என்று நன்றியோடு நினைக்கும்போதே சித்தி உம்மாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்து விட்டது.

''வாப்பா!'' சட்டென்று இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அறைக் கதவைப் பிடித்துக் கொண்டு சித்தி பரீதா நின்றாள்.

''என்னம்மா?'' என்றார் முஸ்தாபா பரிவோடு.

''எதுக்கும் பொன்னுத்துரையண்ணே ஜெயிலிலிருந்து வரட்டுமன்.''

''அதுக்கு இன்னும் எத்தனை மாசம் இருக்குத் தெரியுமா?'' என்றாள் சித்தி உம்மா எரிச்சலோடு. வந்ததையும் கைநழுவி விட அவள் ஆயத்தமில்லை.

நாட்களைத் தள்ளிப்போட முடியாத அவசரமான சூழ்நிலையென்றாலும் மகளின் நியாயமான உணர்ச்சியைப் புரிந்து கொண்டு அவளைச் சமாதானப் படுத்தினார் முஸ்தாபா.

''நான் போய்க் கதைக்கிறனம்மா. பையன்ரை வீட்டுக்காரரும் சம்மதிச்சால் பிந்தி வைப்பம். இல்லாட்டி என்ன செய்யிறது. நிக்காஹ் நடந்ததும் முதல்வேலையா பொன்னுத்துரையைப் போய்ப் பாத்திட்டு வந்திடலாம். என்ன?''

சித்திபரீதா இதை மறுக்கவுமில்லை. ஆமோதிக்கவுமில்லை. நத்தை ஓட்டுக்குள் தன்னைச் சுருக்கிக் கொள்வது போல் பின்வாங்கி அறைக்குள்போய் முடங்கிக் கொண்டாள். இப்போதெல்லாம் அவளின் உலகம் அதற்குள்ளேயே அடக்கமாகிவிட்டது.

மறுநாள் காலையிலேயே கல்யாணப் பேச்சின் மிகுதி விபரங்களைக் கதைக்கப் பையனின் வீட்டுக்குப் போன முஸ்தாபா, அடுத்த வாரத்தில் ஒரு நாளைக் கல்யாணத்துக்குக் குறித்துவிட்டு வெற்றிக் களிப்புடன் திரும்பி வந்தார்.

சித்தி உம்மாவுக்கு அதன்பின் நிலத்தில் கால்கள் பாவவேயில்லை. பாக்கியத்திடம் ஓடிப்போய் விபரத்தைச் சொன்னவள், அதே சுறுக்கோடு ஓடிப்போய் வேலாயுதத்துக்கும் இராசம்மாவுக்கும் சொல்லிவிட்டு வந்தாள். கணவனை அன்றைக்கு விரட்டுவிரட்டென்று விரட்டிவிட்டாள் அவள். ஒரு கிழமைக்குள் என்ன செய்கிறதென்று பேசாமல் இருந்துவிடக்கூடாதாம், ஒரே பெண்ணும், கல்யாணத்தை ஊரெல்லாம் சொல்லித்தான் நடத்தவேணுமாம்.

அப்போதைய சூழ்நிலையில் இந்த ஆடம்பரங்களுக்கு முஸ்தாபா விரும்பாவிட்டாலும் அவளின் ஆசையை நிராகரிக்கவும் அவளுக்குத் தைரியமில்லை...காரியங்கள் துரிதமாக நடக்கத் தொடங்கின...

இத்தனைக்கும் துளிகூட ஆர்வத்தையோ, ஆவலையோ காட்டாமலிருந்த ஒரேயொரு ஜீவன் சித்திபரீதா தான். அறைக்குள், கதவைத் தாழிட்டுக்கொண்டு உட்கார்ந்து அழுவதிலேயே அவளின் பொழுது போய்க்கொண்டிருந்தது. பொன்னுத்துரை சிறையிலிருக்கும்போது இந்தக் கல்யாண ஏற்பாட்டைச் செய்வது அவனுக்கு மட்டுமல்ல, ஆண்டவனுக்கே செய்கிற மிகப் பெரிய துரோகமாக அவளின் மனதை அறுத்துக் கொண்டிருந்தது...

# 32.

சித்திபரீதாவின் கல்யாண நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன் பாடசாலை லீவுவிட்டு அக்கரைப்பற்றிலிருந்து வந்திருந்தாள் மீனாட்சி. அவளோடு கூட அவளின் சிநேகிதி மல்லிகாவும் வந்தது பாக்கியத்துக்கு வியப்பாக இருந்தது.

''நீ வீட்டுக்குப் போகேல்லையாம்மா? லீவுக்கு'' என்று விசாரித்தாள். வெடுக்கென்று மல்லிகாவின் பதில்வந்தது.

''நான் இங்கை வந்தது உங்களுக்கு விருப்பமில்லையா?'' பாக்கியம் அவளின் மனதை நோக வைத்து விட்டோமே யென்று பதறிப்போய்விட்டாள்.

''நான் அப்படி நினைத்துக் கொண்டு சொல்லேல்லைப் பிள்ளை'' என்றாள் அவசரமாக, மல்லிகா கலீரென்று சிரித்தபடி அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''நான் சும்மா தமாஷுக்கு அப்பிடிக்கேட்டேனக்கா. இரண்டு நாளைக்கு இங்கை வந்து நிக்கவேணுமென்று ஆசையாக் கிடந்தது. அதுதான் வந்தன்.''

''இரண்டு நாள் என்ன கணக்கு, இரண்டு கிழமைக்கு நின்றாலும் எனக்குச் சந்தோஷந்தான்'' என்றாள் பாக்கியம்.

அவளுக்கிருந்த வியப்பு என்னவென்றால் மல்லிகாவும் மீனாட்சியும் எந்நேரம் பார்த்தாலும் கொல்லைப்புறக் கிணற்றுக் கட்டில் இருந்தோ, வெளித் திண்டிலிருந்தோ இரகசியம் பேசிக் கொண்டிருந்தது தான். இரண்டொரு தடவை எதேச்சையாக அவர்களிருந்த பக்கம் போனபோது அவர்கள் சட்டென்று பேச்சை நிறுத்திக் கொள்வதையும் அவதானித்திருக்கிறாள் அவள். பாக்கியம் விகற்பமாக எதையும் எண்ணவில்லை.

''அப்படி என்னதான் கதையோ'' என்று ஆச்சரியப்பட்டுக் கொள்வாள்.

அடுத்த வீட்டில் கல்யாண ஏற்பாடுகளெல்லாம் வெகு சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருந்தன. அழைப்பிதழ்கள் ஏராளமாக அச்சிட்டிருந்தார்கள். நாலு நாட்களாகத் தொடர்ந்து பட்சணவகைகளும் தயாராகிக் கொண்டிருந்தன. மத்தியான வேலைகளை முடித்துக்கொண்டு பாக்கியம் அங்கு போனால் சித்தி உம்மாவோடு கூட இருந்து உதவி செய்துவிட்டு மாலையாகும்போது தான் அநேகமாக திரும்பி வந்தாள்.

மல்லிகாவும் மீனாட்சியும் வந்த மறுநாள் அவள் அங்கு போய்விட்டுத் திரும்பும் போது மாலை ஆறு மணியாகிவிட்டது. வாணி விளக்குகளைத் துடைத்து எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தாள். முற்றத்து வேப்பமரத்தில் காகங்கள் கரைந்தவாறு கூடுவதைப் பார்த்தபடி வெளித்திண்டிலேயே உட்கார்ந்து கொண்டாள் பாக்கியம்.

கொல்லைப் புறத்தில் சிவப்பி மாடு விடாமல் கத்திக் கொண்டிருந்தது. இப்போது பொன்னுத்துரை என்ன செய்வானென்று யோசிக்கத் தொடங்கினாள் பாக்கியம். அவளைப் பற்றித் தான் அவனும் யோசித்துக் கொண்டிருப்பானோ, அல்லது...

''அக்கா!'' பாக்கியம் சிந்தனை கலைந்தவளாகச் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

''என்னக்கா யோசினை?'' என்று சிரித்தபடி அவளின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் மல்லிகா.

''யோசினைக்குக் குறைச்சலா பிள்ளை எனக்கு?'' பாக்கியம் சிரித்த சிரிப்பில் விரக்தியின் சாயல் தெரிந்தது.

வாணி லாந்தரோடு வெளியே வந்து அதைத் தாவாரக் கிடுகில் தொங்க விட்டுவிட்டுப் போனாள். அது ஆடுவதைப் பார்த்தபடி தொடர்ந்து சொன்னாள் பாக்கியம்:

''மூன்று குமர்ப் பிள்ளையள் வீட்டிலே இருக்குதுகள். அடுத்ததும் எப்போ தெரியாது. ஒவ்வொன்று மானமாக் கரை சேர்க்க வேணும். அம்மா அப்பா தேடிவைச்ச

சொத்துமில்லை, அதுகளின்ரை முதிசமுமில்லை. பெண் பிள்ளை நான். யோசினை வராமலிருக்குமா? துணைக்கிருந்த ஒருத்தனும் ஜெயிலுக்குப் போட்டான்.''

பாக்கியம் குரல் கர்கரக்க நிறுத்திக் கொண்டபோது அவளின் கண்களில் நீர் தோன்றி விளக்கு வெளிச்சத்தில் பளபளத்தது.

மல்லிகா அவளை நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டாள். அவளின் வலது கையைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு, ''அக்கா!'' என்றாள் அருமையாக. ''அக்கா! காதலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்?''

''மண்ணாங்கட்டி...'' மல்லிகா அதிர்ந்து போனவளாக அவளின் கையை விட்டுவிட்டு அவள் முகத்தைப் பார்த்தாள். பாக்கியம் இலேசாகச் சிரித்தபடி அவளின் புறம் திரும்பினாள். ''பிள்ளை! கை நிறைஞ்சு, மனம் நிறைஞ்சு, வயிறு நிறைஞ்சு எல்லாம் நிறைஞ்சிருந்தால் மனிஷருக்குக் காதலும் வரும் கல்யாணமும் வரும். எங்களைப்போல் இரண்டுங் கெட்டான்களுக்கு என்னம்மா காதலும் கத்தரிக்காயும்''

மல்லிகா தலையைச் சொறிந்தபடி சுவரில் ஓடிக் கொண்டிருந்த பல்லியொன்றைப் பார்த்தாள்.

''நான் நாளைக்குப் போகோணுமக்கா'' என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் தொடங்கினாள்.

''ஏன் பிள்ளை, இன்னும் இரண்டு நாளைக்கு நின்று போகக்கூடாதா? நின்றால் சித்தி பரீதாவின்ரை கல்யாணத்தையும் பாத்தது போலே இருக்கும்.''

''வீட்டிலே, பிறகு அம்மா அப்பா ஏசிவினமக்கா'' என்று சிரித்த மல்லிகா, ''ஏனக்கா! சித்திபரீதாவுக்கா மீனாச்சிக்கா வயசு அதிகம்'' என்று விசாரித்தாள்.

''மீனாச்சிக்கு அவளைவிட மூன்று வயசுகூட...'' மல்லிகாவின் அடுத்த கேள்வி வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல அத்தனை பதமாக இருந்தது.

''மீனுச்சிக்கு எப்பவக்கா கல்யாணஞ்செய்து வைக்கப் போறியள்?'' பாக்கியத்தின் முகத்தில் சோகம் கவிந்தது.

''அதுதானே பிள்ளை ஒன்றும் சரிவராதாம்'' என்று பெருமூச்சோடு சொல்லுகிறபோதுதான், திடீரென்று அவளுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது...மல்லிகா மீனுச்சியோடு கூட வந்தது, எந்நேரமும் இருவரும் இரகசியம் பேசிக்கொண்டிருந்தது, இப்போது இவள் வந்து இப்படிப் பட்டும் படாமலும் கதைப்பது...எல்லாமே ஏதோ ஒரு முக்கியமான சங்கதியைச் சொல்வதற்குத்தானோ?...

பாக்கியத்தின் நெஞ்சில் இனம் புரியாத சங்கடமொன்று—பாம்பு உடலில் ஊர்வதுபோல தோன்றத் தொடங்கியது. இருதயம் படபடக்க சட்டென்று மல்லிகாவின் பக்கம் திரும்பி நேருக்கு நேராகவே கேட்டாள்:

''மீனுச்சி உங்ககிட்டே என்னவும் சொல்லச் சொன்னாளா?''

மல்லிகா ஒரு கணம் தடுமாறிப்போனவளாக விழித்தாள். அடுத்த கணம் சமாளித்துக்கொண்டு, ''இப்படி வாங்கோ அக்கா கதைப்பம்'' என்று அவளை முன்புறம் அழைத்துக்கொண்டு போனாள். இருவரும் வேப்பமரத்தின் கீழ் வந்து நின்றார்கள். இப்போது பாக்கியத்தின் இதயத் துடிப்பு அவளின் காதுகளுக்கே கேட்டது.

''அக்கா!'' என்று தயக்கத்தோடு மென்று விழுங்கினாள் மல்லிகா. ''மீனுச்சி ஒருவரைக் காதலிக்கிறாளென்று வையுங்கோ, கூடப்படிப்பிக்கிற ஒருவரை, நீங்கள் அதை விரும்புவியளா, மாட்டியளா?''

'பட்'டென்று பாக்கியத்தின் உச்சந்தலையில் காகமொன்றின் எச்சம் விழுந்தது. அதைக்கூட உணரமுடியாத நிலையில் பிரமைபிடித்தவள்போல் நின்றாள் அவள். அவளின் தங்கையா... அவள் வளர்த்த பெண் மீனுச்சியா இப்படி நடந்து கொண்டிருக்கிறாள்...?

தொடங்கிய விஷயத்தைப் பூரணமாகச் சொல்லி முடித்துவிட வேண்டுமென்ற சுறுக்கோடு மல்லிகா தொடர்ந்து சொன்னுள்:

"டேவிட்டென்ற கிறீஸ்தவ ஆளக்கா. ரொம்ப நல்ல மாதிரி. சீதனங்கூட ஒன்றும் வேண்டாமென்று சொல்லிப் போட்டார்"...

"அதுவும் மூன்ரும் சாதிக்காரனு?" பாக்கியம் இதை வாய்விட்டுக் கேட்கவில்லை. அவளுக்கு மூச்சை அடைப்பது போலிருந்தது. பரபரவென்று முகமெல்லாம் வியர்த்து விட்டது.

"என்னக்கா பேசாமலிருக்கிறியள்?" என்று அவளின் கையைப் பிடித்தாள் மல்லிகா.

"ஒன்றுமில்லை...ஒன்றுமில்லை" பாக்கியம் தடுமாறிய படி தன் கையை உருவிக் கொண்டு திரும்பிப் போக முயன்ருள். மல்லிகா சட்டென்று அவளுக்குக் குறுக்கே வந்து நின்று கொண்டு, "அக்கா!" என்று கெஞ்சினுள். "உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறனக்கா, எனக்குமேலே ஆணையாச் சொல்றன், மீனுச்சியை ஒன்றும் கேட்டுப் போடாதையுங்கோ. அவள் நடுங்கிக் கொண்டிருக்கிருள். நான்தான் கேக்கிறனென்றன். உங்களுக்கு விருப்பமில் லாட்டி அவளொன்றும் செய்யமாட்டாள். சரியாக்கா?"

பாக்கியம் வேகமாகத் தலையாட்டிவிட்டுப் போய் வெளித்திண்டில் உட்கார்ந்து கொண்டாள். அருகே வந்து சிறிது நேரம் நின்று விட்டு, மெல்லத் தயக்கத்தோடு உள்ளே போய் விட்டாள் மல்லிகா.

பாக்கியம் பிரமை பிடித்தவளைப்போல் அரிக்கன் லாம்பின் சுடரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பனிக் காற்றின் ஜில்லிப்புக்கூட அவளுக்கு உறைக்கவில்லை. அவ ளின் தங்கை மீனுச்சியா இப்படி நடந்து கொண்டிருக் கிருள்? தரையதிர நடவாமல், ஒருவரோடும் அதிகம் பேசாமல், தானும் தன்பாடுமாகத் திரிவாளே; அந்த

அப்பாவிப் பெண்ணு இப்படியொரு காரியத்தைச் செய் திருக்கிருள்?...

அவளுக்கு அழுகை குமுறிக்கொண்டு வந்தது. கால் களை மடித்து முழங்கால் மூட்டுக்குள் முகத்தைப் புதைத்த படி, ஓசை படாமல் அழுதாள்.

அவள் வளர்ந்த சூழ்நிலைக்கும், அவளின் படிப்பறிவுக் கும் காதலிப்பது, அதுவும் இன்னொரு சமயக்காரனை, பெரிய தப்பாகத் தோன்றியது. தான் தலைகீழாக நின்ருல் கூட தேடமுடியாத ஒரு மாப்பிள்ளையைத் தான் மீனுச்சி தேடியிருக்கிருளென்ற நியாயமான உண்மையைப் புரிந்து கொள்ளும் மனப் பக்குவம் அவளுக்கில்லை. அவளுக் கிருந்த ஒரேயொரு கவலை இதுதான், பொன்னம்மாளின் பிள்ளைகள் அவளைப் போலத்தான் ஓடிப் பிடிக்கிருர் களென்று ஊரார் சொல்ல மாட்டார்களா...?

எழுந்துபோய் மீனுட்சியைப் பிடித்துக் கை ஓயும் வரையும் நையப்புடைத்து இனி அவளைப் பள்ளிக்கூடத் துக்குப் போகாமலும் தடுக்கவேண்டுமென்று சில சமயம் அவளுக்கு வேகமாக இருந்தது. அந்தச் சமயங்களில் பற் களை இறுகக்கடித்து சிரமத்தோடு தன்னை அடக்கிக்கொள் வாள் அவள். மல்லிகா அடிக்கடி வெளியே வந்து அவ ளைப் பார்த்துவிட்டுப் போனுள். பாக்கியம் அப்படியே தான் இருந்தாள்.

காலையில் அவளின் முகத்தைப் பார்க்கவே சகிக்க வில்லை. உயிர்க்களையே வற்றிவிட்டது போலிருந்தது. அவள் மல்லிகாவோடும்கதைக்கவில்லை; தங்கைமார்களோ டும் கதைக்கவில்லை. ஏதோ யந்திரம் எழுந்து நடமாடுவது போல் நடமாடிக்கொண்டிருந்தாள். அவளுக்குள் குமைந்துகொண்டிருந்த வேதனை அடிக்கடி கோபமாக வெடித்துக்கொண்டிருந்தது. ஒரு நாளும் கைநீட்டி அடிக் காதவள் பாத்திரத்தைஎடுத்துவைத்தது சரியில்லையென்று வாணிக்குத் தலையிலும் ஒன்று போட்டு,முதுகிலும் ஒன்று வைத்துவிட்டாள். எல்லோரும் நடுக்கத்தோடு மூலைக்கு

மூலையாக நின்றார்கள், அதிலும் மீனாட்சி அவளின் கண்ணெதிரிலேயே வரவில்லை. கூப்பிட்ட உடனே வரவில்லையென்று சுந்தரிக்கும் ஒன்று விழுந்தது. 'இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் உங்களோடே மாரடிக்கவேணுமோ, தெரியேல்லை' என்று வேறு கத்தினாள். சுந்தரி நடுங்கிப்போய்விட்டாள். தன் விஷயம்தான் இசகுபிசகாக அவளுக்குத் தெரிந்துவிட்டதோ என்ற கலக்கம் அவளுக்கு.

மல்லிகா அன்றைக்கு அங்கிருந்து போகும்போதும் காலில் விழுந்து கெஞ்சாத குறையாக, மீனாட்சியிடம் ஒன்றும் கேட்கவேண்டாமென்று அவளிடம் சொல்லிவிட்டுப் போனாள். மீனாட்சி அவளின் விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்யமாட்டாளென்றும் சொல்லியிருந்தாள் அவள்.

பாக்கியத்துக்கு அன்று பூராவும் எரிச்சல் எரிச்சலாகத்தான் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அருகில் பொன்னுத்துரை இல்லாததுதான் அவளுக்குப் பெரிய ஏக்கமாக இருந்தது. அவன் நின்றால் மனவேதனையை அவனோடு பகிர்ந்துகொள்ளலாம். அடுத்து என்ன செய்ய வேண்டுமென்றும் சொல்லுவான் அவன்.

பாக்கியத்துக்கு இந்த மன உபாதையைக் கொஞ்சங்கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வேலை செய்யும்போதும், இருக்கும்போதும், படுக்கும்போதும் இதையே எண்ணி எண்ணிக் கண்கள் கலங்கிக்கொண்டிருந்தாள்.

அடுத்தநாள் மத்தியானம் சமையலை முடித்துவிட்டு வந்து, வலது கையைத் தலைக்குக் கீழ் மடித்துவைத்தபடி திண்டின் மேல் படுத்திருந்தாள் பாக்கியம். கண்களில் திரண்டு பொங்கிய நீர் மூக்கு நுனியால் வடிந்துகொண்டிருந்தது......

திடீரென்று அடுத்த வீட்டில் ஏதேதோ சத்தங்கள் கேட்டன. முதலில் பாக்கியம் அதைக் கவனிக்கவில்லை. பிறகுதான் கவனித்தாள்.

''இப்பிடித் திடீரென்று எழுதினு எப்பிடி? எழுதலாமா...எழுதலாமா?'' என்று சித்தி உம்மா கத்துவதும் ''சத்தம் போடாதை, சத்தம் போடாதை'' என்று முஸ்தாபா கெஞ்சுவதும் கேட்டது.

சொந்தக் கவலைகளுக்காக இதைக் காதில் போட்டுக் கொள்ளாமலிருக்கப் பாக்கியத்தால் முடியவில்லை. எழுந்து முகத்தைத் துடைத்துக்கொண்டு வேகமாகஅங்கே சென்ருள்.

கையில் ஒரு கடிதத்தைப் பிடித்தபடி கண்ணீரும் கம்பலையுமாக நின்று கத்திக்கொண்டிருந்த சித்தி உம்மா, அவளைக் கண்டதும் அருகே ஓடிவந்தாள்.

''பாத்தியாடி இந்த அநியாயத்தை. எல்லாம் ஓமென்று இவ்வளவு ஏற்பாடும் செய்தபிறகு நிக்காஹு செய்ய விருப்பமில்லையென்று கடிதம் எழுதியிருக்கினம்.''

''ஏன்!...ஏன்?'' என்று பதறிய பாக்கியம் அவளின் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கிப்பார்த்தாள். சித்தி உம்மா கூறியது உண்மைதான். கல்யாணத்தை நிறுத்தச் சொல்லி எழுதிவிட்டு, அதன் கீழ் காரணத்தையும் குறிப்பிட்டிருந்தார்கள்.

—உங்களின் பெண்ணைப்பற்றி இரண்டு நாட்களுக்குள் எங்களுக்குப் பன்னிரண்டு மொட்டைக் கடிதங்கள் வந்திருக்கின்றன. பாருக்கென்ற ஒருத்தனும், பொன்னுத்துரையென்ற இன்னெருத்தனும், இவர்களோடு அவளுக்குந் தொடர்பாம். இன்னும் என்னென்னவோ எல்லாம் அசிங்கமாக எழுதியிருக்கிருர்கள். இதையெல்லாம் நினைக்கவே எங்களுக்கு மனமெல்லாம் கூசுகிறது.

ஆண்டவனுக்குப் பயந்து நாங்கள் நியாயத்தைக் கதைக்கவேணும். உங்களின் பெண் களங்கமில்லாதவளாக இருக்கலாம் ஆனுல், இப்படியான வதந்திகள் வந்தன்பின் கல்யாணப் பேச்சைத் தொடருவதற்கு எங்களுக்குத் துணிவு வரவில்லை. தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். அல்லா உங்களுக்கு நன்மையைச் செய்வார்—

பாக்கியத்தின் கையிலிருந்த கடிதம் அவளையறியாமலேயே நழுவிக் கீழே விழுந்தது.

முஸ்தாபா சித்தி உம்மாவைச் சமாதானப்படுத்த முயன்றுகொண்டிருந்தார். அறைக்குள்ளிருந்து சித்தி பரீதாவின் அழுகைக் குரல் இலேசாகக் கேட்டது. பாக்கியத்துக்கு யாரைத் தேற்றுவதென்று தெரியவில்லை. அவள் மரம்போல் அப்படியே நின்றாள். ஒரு வாரமாகக் கல்யாணக் களையோடு காட்சியளித்த அந்த வீடு, ஒரு நொடிக்குள் பிணவீடு நடந்த வீடுபோலாகிவிட்டது......

மீனாட்சியின் பிரச்சினையை மட்டுமல்ல, பாக்கியம் இதையும் எண்ணி இரவு தூக்கம் பிடிக்காமல் அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள். மொட்டைக் கடிதங்களை யார் எழுதியிருப்பார்களென்று அவளுக்குச் சந்தேகமில்லாமல் புரிந்திருந்தது. பாருக்கையும், கந்தசாமியையும் விட வேறு யார் இந்த அயோக்கியத்தனமான வேலையைச் செய்திருக்கப்போகிறார்கள்? பொன்னுத்துரையின் பெயரையும் சேர்த்து அவர்கள் எழுதியிருந்ததுதான் அவளுக்குத் தாங்கமுடியாத மனக்கொதிப்பைக் கொடுத்தது. அந்தப் பாவிகளுக்கு ஆண்டவன் இரண்டு கைகளையுமே ஊனமாக்கியிருக்கக் கூடாதாவென்று ஆண்டவனையே நொந்துகொண்டாள்...

மறுபடியும், மறுநாள் விடியக்காலையில் முஸ்தாபாவின் வீட்டுப் பக்கம் ஏதோ களைபுளையாக இருந்தது. இந்தத் தடவை முஸ்தாபாவின் குரல், சித்திஉம்மாவின் குரலை விட ஆவேசமாகக் கேட்டது.

"நாசமாப்போற சைத்தான்கள், அக்கா, தங்கையோடு சோரம்போறவங்கள்..." என்று வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டிருந்தார்.

ஏதோ பிரச்சினையொன்று புதிதாகத் தொடங்கியிருக்கென்று பாக்கியத்துக்கு உடனேயே புரிந்துவிட்டது. அவள் விழுந்தடித்துக்கொண்டு அங்கே ஓடினாள்.

வெளி மதில் சுவரை சேலைத் துண்டொன்றால் தேய்த்த படி திட்டிக்கொண்டிருந்தார் முஸ்தாபா.

''சித்தி பரீதாவின் கள்ளக் காதலன் பொன்னுத்துரை ...... முஸ்தாபாவே தற்கொலை செய்துகொள்...'' என்று வெள்ளைக் கட்டியினால் எழுதிய சில வார்த்தைகள் அப்போதும் தெரிந்தன.

பாக்கியத்துக்கு நெஞ்சை அடைத்துக்கொண்டு வருவதுபோலிருந்தது. யார் எழுதினதென்று கூட அவளுக்குக் கேட்க வாயெழவில்லை.

வழக்கத்தில் கதவுக்குப் பின்னால் நிற்கும் சித்திபரீதா அப்போது வாசலுக்குக் குறுக்கே நட்ட நடுவாக நின்று, பிரமை பிடித்தவள் போல் வெளியே பார்த்துக்கொண்டு நின்றாள். அவளின் முகத்தில் அப்போது தெரிந்த ஏதோ ஒரு உணர்ச்சி பாக்கியத்தின் அடி மனதில் ஒரு பயங்கரமான குறுகுறுப்பை உண்டாக்கியது. அந்தக் குறுகுறுப்பின் எதிரொலியை அன்றைக்கு மத்தியானத்துக்குள்ளேயே புரிந்துகொண்டாள் அவள்.

அன்றைக்கு மத்தியானம் மூன்றாவது தடவையாக அடுத்த வீட்டில் கூக்குரல் எழுந்து பாக்கியம் ஓடிய போது சித்திபரீதா அவளின் அறைக்குள் பிணமாகத் தொங்கிக்கொண்டிருந்தாள். அவளின் காலடியில் சிறிய சீட்டொன்று இருந்தது.

—இந்த உலகத்தில் என்னால் இனி மானமாக வாழமுடியாது. பொன்னுத்துரை அண்ணனுக்குக் கொடுத்த சத்தியத்தை மீறுகிறேனென்பதுதான் எனக்குள்ள பெரிய கவலை. ஆண்டவனும் அண்ணனும் என்னை மன்னித்துக் கொள்ளட்டும்—

சீட்டில் இருந்தது அவ்வளவே. வாழ்க்கையில் துன்பமென்பதே இன்னதென்று தெரியாமல் ஒரு சிட்டுக்குருவியின் உற்சாகத்தோடு வாழ்ந்த அந்தச் சிறிய பெண்,

இரண்டு மனித வல்லூறுகளின் கொடுமையான தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாமல் இப்படிச் சுருக்கமாகத் தனக்கொரு விடுதலையைத் தேடிக்கொண்டுவிட்டாள்...

## 33.

சித்தி பரீதாவின் காரியங்கள் முடிந்து ஒரு வாரமாகிவிட்டது. முஸ்தாபாவும், சித்தி உம்மாவும் நடைப்பிணங்களாகிவிட்டனர். பாக்கியம் நேரம் தவறாமல் வந்து அவர்களைக் கெஞ்சியும் பச்சைத்தண்ணீர் கூட வாயில் ஊற்றிக்கொள்ளவில்லை அவர்கள்.

மகளை இழந்த துயரம் ஒரு புறம்போக, விசாரணைக்கு வந்திருந்த மரணவிசாரணை அதிகாரி கேட்ட கேள்விகளும், அந்தப்பஞ்சு உடலை வெட்டிக் குதறிப்பரிசோதித்த கொடூரமும் அவர்களின் இருதயத்தை அணுவணுவாக வதைத்துக்கொண்டிருந்தன. போதாததற்கு பிரபல தினசரிப் பத்திரிகையொன்றில் கண் மூக்கு காதுகளெல்லாம் வைத்து சித்திபரீதாவின் தற்கொலையை முக்கியமானதொரு செய்தியாக வெளியிட்டிருந்தார்கள்.

பாக்கியமும் கொஞ்சமும் நிம்மதியில்லாமல்தான் தவித்துக்கொண்டிருந்தாள். கயிற்றில் பிணமாகத் தொங்கிக்கொண்டிருந்தபோது சித்திபரீதாவின் முகத்தில் தெரிந்த விகாரத் தோற்றமும், 'போஸ்ற்மோட்டத்'தின் போது அவளின் உடல் பட்டபாடும் எந்நேரமும் நினைவில் நின்று அவளைக் கலக்கிக்கொண்டிருந்தன. இரவில் நிம்மதியாக அவளால் உறங்கக்கூட முடியவில்லை. அடிக்கடி பயங்கரமான கனவுகள் ஏதாவதுதோன்றி அவளைப் பதற வைத்தது.

சித்திபரீதா இறந்த எட்டாம்நாள் இரவு... அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த பாக்கியம் திடுக்கிட்டுக் கண்

களைத் திறந்துகொண்டாள். ஒரு விணடிக்குள் அவளின் உடலெல்லாம் நடுங்கி வியர்த்துவிட்டது. அவளின் புத்தி செயல்படவே சிறிது நேரம் பிடித்தது.

மீனாட்சியை யாரோ ஒருவன் பிடித்துக் கண்டதுண்டமாக வெட்டுவதுபோன்ற ஒரு கனவு. அதுதான் அவளை அந்தப்பாடுபடுத்திவிட்டது.

''முருகா! என்ரை மீனாச்சியைக் காப்பாத்து. அவளுக்கு நல்லபுத்தியைக் குடு'' என்று மனமுருக வேண்டிக் கொண்டே திரும்பிப் படுத்தாள். அவளுக்குத் 'திக்'கென்றது. தலைப்புறமாக வைத்திருந்த அரிக்கன் லாம்பைக் காணவில்லை.

ஒரு விநாடிக்குள் அவளின் மனதில் ஓராயிரம் பயங்கரங்கள் தோன்றிவிட்டன. விளக்கு அணைந்திருக்கலாமென்ற சாதாரண எண்ணங்கூட அவளுக்குத் தோன்றவில்லை. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தவளுக்கு மறுபடியும் 'திக்'கென்றது. வெளிச்சமில்லாமல் இருட்டாக இருந்தாலும், மீனாட்சி படுத்திருந்த பக்கத்து அறையிலிருந்து வீசிய இலேசான வெளிச்சத்தில் அவளால் நன்றாகப் பார்க்கமுடிந்தது. அருகே படுத்திருந்த சுந்தரியைக் காணேம். கண்களில் நம்பிக்கையில்லாமல் பரபரவென்று தடவிப் பார்த்தாள். சுந்தரியின் பெரிய உடலுக்குப் பதிலாக சீதாவின் சின்ன உடல்தான் தட்டுப்பட்டது.

பாக்கியத்துக்கு பாதாதிகேசமாக நடுக்கம் பரவியது. 'எங்கே போய்விட்டாள் அவள்?' கொஞ்சநாட்களாக அவளின் போக்கும் நன்றாக இல்லை.

பாக்கியம் பரபரப்போடு எழுந்து மீனாட்சியின் அறைக்குள் எட்டிப் பார்த்தாள். அவள் தூங்கிக்கொண்டிருந்தாள். வாசல் கதவும் பூட்டினது பூட்டியபடியே கிடந்தது. பாக்கியம் கொல்லைப்புறமாக ஓடினாள். நெஞ்சில் சட்டென்று அமைதி பரவியது. கிணற்றடிக்குப் பக்கத்தில் குந்திய வாக்கில் உட்கார்ந்திருந்தாள் சுந்தரி. அவளின் எதிரே அரிக்கன் விளக்கிருந்தது.

பாக்கியத்துக்கு முதலில் ஆறுதல்; பிறகு சந்தேகம். இருந்து என்ன செய்கிருள் அவள்? அதுவும் இந்த நடுச் சாம நேரத்திலே! பாக்கியம் அப்படியே நின்றுகொண்டு பார்த்தாள். சுந்தரி நெஞ்சைப் பிடித்தபடி குமட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் உட்கார்ந்திருந்த முறை... குமட்டிக்கொண்டிருந்த விதம்......

பாக்கியம் மெல்ல மெல்ல அவளை நெருங்கிவந்தாள். கிட்டே வரவர சுந்தரியின் உருவத்தை அவளால் நன்ருகப் பார்க்கமுடிந்தது. அப்படியே பிரமை பிடித்தவள் போல் நின்றுவிட்டாள் பாக்கியம்.

பொன்னம்மாளை—அவளின் தாயை—இதைப்போன்ற நிலையில் எத்தனையோ தடவைகள் பார்த்திருக்கிருள் அவள். அவளின் முன்னுல் அப்போது உட்கார்ந்திருப்பது அவள் அருமை பெருமையாக வளர்த்த அவளின் தங்கை சுந்தரியல்ல, பொன்னம்மாளின் மகள் அவள்; அந்தக் கெட்டுப்போன பொன்னம்மாளின் மகள்.

உடல் அப்படியே பனிக்கட்டிக்குள் புதைந்துகொண்டிருப்பதுபோல் பாக்கியத்துக்கு உணர்ச்சியாக இருந்தது. தலைக்குள் பளீர் பளீரென்று எதுவோ மின்னிச் சிதறியது.

பாவாடையை இழுத்து வாயைத் துடைத்தபடி எழுந்த சுந்தரி வெலவெலத்துப்போய்விட்டாள்.

''அக்கா!'' என்று அவளின் வாய் குழறியது. அப்படியேவிழுந்து பாக்கியத்தின் இரண்டு கால்களையும்பிடித்துக்கொண்டு தேம்பினுள். ''தெரியாமல் நடந்து போச்சக்கா, தெரியாமல் நடந்துபோச்சு...''

பாக்கியம் கதறவுமில்லை, பதறவு மி ல் லை, அவளைத் திட்டவுமில்லை.

''போச்சு... எல்லாம் போச்சு...'' என்று அவளின் உதடுகள் முணுமுணுத்தன. அவ்வளவுதான். காலில்

ஊரும் எறும்பொன்றை உதறிவீசுவதுபோல சுந்தரியை உதறிவிட்டு வீட்டுக்குள் திரும்பினாள்.

அவளின் பார்வை அறைக்குள் ஒருக்கழித்துப் படுத்திருந்த மீனாட்சியிலும், தரையில் வரிசையாகப் படுத்திருந்த மற்றத் தங்கைமார்களிலும் மாறி மாறிப் பதிந்தது. ஏனோ அவளுக்கு அப்போது சித்திபரீதா பிணமாகத் தொங்கிய கோலந்தான் கண்களில் தெரிந்தது. அந்தச் சின்னப் பெண்ணுக்கிருந்த மான உணர்ச்சியில் ஒரு துளியாவது இவர்களுக்கில்லையே?

பாக்கியத்தின் அடிமனதிலிருந்து வெறுப்பும் கசப்பும் அசுர வேகத்தோடு மூளத் தொடங்கியது.

எல்லாம் அவர் வளர்த்து ஆளாக்கிய உடல்கள்தான். ஆனால், பொன்னம்மாளின் வார்ப்புகள்.

தூக்கத்தில் கீதா ஏதாவது கனவுகண்டாளோ என்னவோ ''அக்கா!'' என்று வாய் பிதற்றியபடி திரும்பிப் படுத்தாள்.

''அக்கா! உம்...'' பாக்கியம் பற்களைக் கடித்தாள். ''வளத்து ஆளாக்கும் வரைக்கும் அக்கா; பிறகு பொன்னம்மாளின் பிள்ளையளென்று காட்டிவிடுவியள்...ம்...''

சுந்தரி நடுக்கத்தோடு சுவரோரமாகஒன்றிக்கொண்டு நின்றாள். பாக்கியம் அவளைப் பார்க்கவில்லை. அவளின் மனதில் திருதிருவென்று உணர்ச்சித் தீ பரவிக்கொண்டிருந்தது. கனவில் நடப்பவளைப்போல் வெளியே வந்து திண்டில் உட்கார்ந்துகொண்டாள். அவளின் பார்வை இருட்டை ஊடுருவியது. அந்த இருளிலும் கல்லடிப்பாலம் வெள்ளிக் கோடுகளாக மின்னுவது போன்ற பிரமை...

என்ன அழகான பாலமது. அதன்மேலிருந்து பாய்ந்து ஒரு குட்டித் தேவதையைப் போல் காற்றிலே மிதந்து மெல்லக் கீழே போய் தண்ணீருக்குள் தவழ்ந்தபடி பாடும் மீன்களின் கானத்தைக்கேட்டுக்கொண்டிருந்தால் எத்தனை ஆனந்தமாக இருக்கும்.

பாக்கியம் நறநறவென்று பற்களைக் கடித்துக்கொண்டாள். இந்தக் குடும்பத்துக்காக எவ்வளவு சுகங்களைத் தியாகம் செய்திருக்கிருள் அவள், எவ்வளவு கஷ்டங்களைப் பட்டிருக்கிருள், எவ்வளவு வேதனைகளைச் சகித்திருக்கிருள்... எல்லாமே மண்தான். இனியும் இந்த வெட்கங்கெட்ட குடும்பமிருப்பது அவசியந்தான?

பொறியாக எழுந்த கேள்வி விநாடி நேரத்திற்குள் பெரும் அக்கினியாகிவிட்டது.

பாக்கியம் மறுபடியும் பற்களை நறநறவென்று கடித்தாள். வலது கையை முஷ்டியாக்கி இடதுகையில் ஓங்கிக் குத்திஞள். கால்களைத் தரையில் உதைத்தாள். அவளின் கண்கள் வெறிநாயின் கண்களைப்போல் பளபளத்தன.

''இந்தக் குடும்பம் அழியத்தான் வேணும்'' என்று அவளுக்குள் ஒருகுரல் உறுமியது. தொடர்ந்து கடல் அலையின் இரைச்சலைப்போல் அந்தக் குரல் உறுமிக்கொண்டே இருந்தது.

—இந்தக் குடும்பம் அழியத்தான் வேணும்... அழியத்தான் வேணும்...

யந்திரத்தால் முடுக்கிவிட்ட பொம்மைபோல் எழுந்துகொண்டாள் பாக்கியம். அவளிடம் ஒரு அசுர வேகம் தெரிந்தது. விறுவிறென்று உள்ளேபோய் வாசற் கதவையும், கொல்லைப்புறக் கதவையும் பூட்டிச் சாவிகளை இடுப்பிற் சொருகிக்கொண்டாள். பழைய காலத்துத் தனிக்கதவுகள் அவை. கோடரி போட்டுப் பிளந்தாலும் இலேசில் அவைகளைப் பிளக்கமுடியாது.

பாக்கியத்துக்குப் பொன்னுத்துரையின் ஞாபகமே அப்போது வராதது துரதிஷ்டம்தான். அவள் விநாடி நேரம் கூடத் தாமதிக்கவில்லை. சமையலறைக்குள் போய் மண்ணெண்ணெய் ரின்னை எடுத்தவள் வெறிபிடித்தவள் போல் சுவர்களிலும், கூரைக் கிடுகுகளிலும் படுமாறு கைக்கு வந்தபடியெல்லாம் மண்ணெண்ணெயை விசிறிவிசிறி ஊற்றிஞள்.

''அழிஞ்சு போகோணும்...அழிஞ்சு போகோணும்...'' என்று அவளின் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. மூளைக்குள் அந்த அசுர இரைச்சல் உறுமிக்கொண்டு அவளைப் பொம்மையாக ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்தது.

சுந்தரி நடுக்கத்தோடு அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள். அளவுக்கதிகமான பயம் அவளைப் பனிச் சிலையாக உறையவைத்துக்கொண்டிருந்தது.

மண்ணெண்ணெய் முடிந்ததும் வெற்று ரின்னை வீசிவிட்டு தீப்பெட்டியைப் போய் எடுத்துக் கொண்டாள் பாக்கியம். ஒரு குச்சி சீறிக்கொண்டு பறந்தது. குப்பென்று தீ பரவுவதற்கும் சுந்தரி வீரிட்டலறுவதற்கும் சரியாக இருந்தது.

''எல்லாம் துலைஞ்சுபோங்கோ'' என்று வெறியோடு சிரித்தபடி சமையலறைக்குள் போய்க் கதவைத் தாழிட்டுக்கொண்டாள் பாக்கியம். கூரைக் கிடுகுகளில் மளமள வென்று பற்றிக்கொண்டிருந்த தீ அவளின் கண்களிலும் தெரிந்தது.

வெளியே சுந்தரியின் அலறலோடு மற்றத் தங்கைமார்களின் அலறல்களும்சேர்ந்துகொண்டன. எல்லோரும் பயத்தோடு அவளைக் கதறியழைத்தபடி அங்குமிங்குமாகத் தறிகெட்டு ஓடிக் கதவுகளை இடித்தார்கள்.

''அக்கா......! அக்கா......! அக்கா......'' எங்குமே இந்த அக்காவென்ற அவலக் குரல்தான் எதிரொலிப்பது போன்ற பிரமை.

அக்காவாகப் பிறந்து அன்னையைவிட அருமையாகத் துங்கைமார்களை வளர்த்தவள் அப்போது மனதில் கொஞ்சமும் ஈரமில்லாதவள் போல் வெறிச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு நின்றாள்.

முற்றத்து வேப்பமரத்திலிருந்த காகங்கள் திகிலோடு அலறியபடி வீட்டைச்சுற்றிப் பறந்துகொண்டிருந்தன......

மறுநாள் ஆறு கருகிய உடல்களைத்தான் அந்த வீட்டிலிருந்து எடுக்க முடிந்தது.

புலன்விசாரணைக்கு வந்த அதிகாரிகள் இதை தற்செயலாக நடந்த தீ விபத்து என்று முடிவெடுத்தார்கள்.

''பொன்னம்மாள்தான் கெட்டழிஞ்சவள். ஆனா, அவள் பெத்த பொம்புளைப் பிள்ளையள் எல்லாம் தங்கக் கம்பிகள். பாக்கியமும் இந்தக்குடும்பத்தை தலையெடுக்கவைக்க வேணுமெண்டு ரெம்பத்தான் பிரயாசைப் பட்டவள். அதுகளுக்கு அநியாயமா இப்படியொண்டு ஆயிருக்கவேண்டாம்'' என்று இந்தக் குடும்பத்தை அறிந்த, தெரிந்த எல்லோருமே வருத்தப்பட்டுக்கொள்கிறார்கள்.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான படைப்புக்கள் மாதாமாதம் வீரகேசரி பிரசுரமாக நூலுருவில் வெளிவருகின்றன.

தவருமல் இவைகளைப் பெற்று உங்கள் இல்லத்தில் ஓர் 'குடும்ப நூல் நிலையத்தை' ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கிஞல், ஏழாவது புத்தகம் இஞமாக அனுப்பி வைக்கப்படும். இப் பரிசுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத்துக்கு மேற்பட்ட வாசகர்கள் இஞமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவதில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த. பெ. 160,
கொழும்பு.

உடன் பிறப்புக்களை
வாழவைப்பதற்காக
தன் வாழ்க்கையை
தியாகம்செய்துகொண்
டாள் ஒருகன்னிப்பெண்
அவளின்
எதிர்பார்ப்புக்கள்
என்னவாயிற்று?

'புயலுக்குப்பின்'
"யாத்திரை"
வெற்றி நாவல்களை
அளித்த
பிரபல நாவலாசிரியர்
பொ. பத்மநாதனின்
உணர்ச்சிப்
படைப்பு.

3951